விவேகானந்த விவரணம்



இயற்றியவர்
ஸ்ரீமத் சுவாமி சித்பவானந்தர்

விவேகானந்த விவரணம்

இயற்றியவர்
ஸ்ரீமத் சுவாமி சித்பவானந்தர்

ஸ்ரீ ராமகிருஷ்ண தபோவனம்
திருப்பராய்த்துறை-639 115
திருச்சி ஜில்லா
1984

தபோவனத் தொடர் 97

முதற் பதிப்பு 1977
இரண்டாம் பதிப்பு 1984

திருப்பராய்த்துறை ஸ்ரீ ராமகிருஷ்ண தபோவனம்
காரியதரிசியால் பிரசுரிக்கப்பட்டது

தபோவன அச்சுப்பள்ளி, திருப்பராய்த்துறை.

பொருளடக்கம்



சுவாமி விவேகானந்தர்

1. நிறை மனிதன்

'மனித வடிவத்தில் பிறப்பெடுத்திருந்தால் மட்டும் போதாது. மனிதனாகப் பிறந்திருக்கிறவனிடத்து மனுஷத் தன்மைகள் எல்லாம் பொருந்தியிருக்கவேண்டும். அப் பொழுதுதான் அவனை மனிதன் எனலாம். நரேந்திரனிடத்து மனுஷத்தன்மைகள் எல்லாம் பரிபூரணமாக அமைந்திருக் கின்றன. இங்ஙனம் ஸ்ரீ ராமகிருஷ்ண பரமஹம்ஸர் பகர்ந் தருளியுள்ளார். அவர் நரேந்திரன் என்று குறிப்பிட்டது தமக்குப் பிரதம சிஷ்யராக வாய்த்த சுவாமி விவேகானந் தரைப்பற்றியேயாம். அவரிடத்திருந்த மனுஷத்தன்மைகளை யெல்லாம் துருவியாராய்ந்து பார்க்குமளவு மனுஷத்தன்மை யைப் பற்றிய நல்லறிவு நமக்கும் வருகிறது. மனிதனாகப் பிறந்து மனித வடிவில் வாழ்ந்திருந்தால்மட்டும் போதாது. என்னென்ன விதங்களில் மனிதன் தன்னை மேலோனாக மாற்றியமைத்துக் கொள்ளவேண்டும் என்பதை மக்கள் எல் லாரும் அறிந்திருத்தல் வேண்டும். எல்லா விதங்களிலும் மேன்மையுற்று மிளிரும் மனிதனையே நிறை மனிதன் என் கிறோம். சுவாமி விவேகானந்தரை ஒரு நிறை மனிதர் என்று நவிலுவது முற்றிலும் பொருந்தும். அவரிடத்திருந்த நிறை நிலைகளையெல்லாம் நாம் கற்று அறியுமளவு நாம் நிறைநிலை யெய்துதற்கு அவ்வறிவு நன்கு உதவும்.

நிறைநிலை யெய்துதல் அலாதியாக மனிதனுடைய செயல் என்று நாம் எண்ணலாகாது. ஒவ்வோர் உயிரும் அதனதன் நிலையில் உயர்வையும் நிறைவையும் எய்தி வரு கிறது. எதனிடத்து நிறைவு காணப்படுகிறதோ அது தனது வாழ்க்கையை நன்கு பயன்படுத்துவது ஆகிறது. அதைப்பாராட்ட நாம் கடமைப்பட்டிருக்கின்றோம். நிறைநிலை

யெய்தியுள்ள காளை சிவபெருமானுக்கு வாகனமாகிறது, காளையை வடமொழியில் ரிஷபம் என்கிறோம். இறைவனூர் ஊர்ந்து செல்லுதற்கு அது தகுதி வாய்ந்திருக்கிறது என்னு மிடத்துத் தெய்வப்பெற்றியும் அதனிடத்துப்பெரிதும் அமைந் திருக்கிறது என்பது சொல்லாமலேயே விளங்குகிறது. கட் டும் உறுதியும் வாய்க்கப்பெற்ற இளைஞன் ஒருவனைக் காளை என்கிறோம். சம்ஸ்கிருதத்தில் அவன் நர ரிஷபன் என அழைக்கப்படுகிறான். ஏறு என்னும் சொல்லும் திட்பம் வாய்க்கப்பெற்ற காளையையே குறிக்கிறது. சிவபெருமான் 'அமரர் ஏறே' என அழைக்கப்படுகிறார். தேவர்களுள் தலை சிறந்தவர் என்பது அதன் பொருள். ஆதலால் அவர் மகா தேவன் எனப்படுகிறார். மக்களுள் சிறந்தவன் காளை எனக் கூறப்படுவது போன்றே நரோத்தமன் எனவும் நவிலப்படு கிறான். விவேகானந்தருக்கு அமைந்திருந்த நரேந்திரன் என் னும் பிள்ளைத் திருநாமம் முற்றிலும் பொருத்தமானது. நரர் களுக்கு இந்திரன் அல்லது தலைவன் என்பது அதன் பொருள். தேவர்களுக்கு இந்திரனாக வாய்ப்பவன் தேவேந் திரன். நரர்களுக்கு இந்திரனாக வாய்ப்பவன் நரேந்திரன். பெயருக்கேற்ற பண்பும் நரேந்திரநாதனிடம் பொலிவதா யிற்று. அவரிடம் மிளிர்ந்த மானுட மாண்புகளை ஆராயுமளவு அப்படி ஆராய்கிறவர்களுக்கும் நலன் மிக வாய்க்கும்.

கொஞ்சகாலத்துக்கு முன்பு அமெரிக்கப் பேராசிரியர் ஒருவர் மனிதன் என்னும் தலைப்புத் தாங்கிய புத்தகம் ஒன்றை வெளியிட்டார். அது இப்பொழுது அச்சில் இல்லை. அதில் அடங்கியிருந்த விஷயம் ஆராய்ச்சிக்குரியதாம். சிற்றுயிர் பேருயிராகப் பரிணமித்து வருகிறது என்ற கோட்பாட்டை விளக்குவதற்கென்று அந்நூல் அமைந்திருந் தது. புழு பூச்சி நிலையிலிருந்து உயிரானது படிப்படியாக

மேல் நிலைக்குப் பரிணமித்து வந்துகொண்டிருக்கிறது என்ற இயற்கைத் தத்துவத்தை ஐயம் திரிபு அற அந்நூலில் அவர் நன்கு விளக்கியிருந்தார். உயிர் வகைகளின் உருவப் படங்கள், அவைகளின் எலும்புக் கூடுகளின் படங்கள் ஏராளமாக அப்புத்தகத்தில் இடம் பெற்றிருந்தன. இயற்கையின் இடையருத நடைமுறையை அவர் தெளிவுற விளக்கி வந்ததால் அவர் நூலில் இழுக்கு இருக்கிறதென்று அதற்கு ஆட்சேபம் சொல்ல யாருக்குமே இயலவில்லை. பெருநிலைக்குப் பரிணமித்து வருகிற உயிர் மானுட வடிவத்தை எட்டுகிறது என்பது அந்நூலின் கோட்பாடு. மானுடனிடத்து இருக்கிற சிறப்புக்களை யெல்லாம் அவர் எடுத்து விளக்கிக் காட்டியிருக்கிருர். எண்ணரிய பிறவி தனில் மானுடப் பிறவிதான் யாதினும் அரிதிலும் அரிது என்னும் பழைய கோட்பாட்டைப் புதிய முறையில் அவர் பகர்ந்திருக்கிருர். நிறை மனிதன் ஒருவனுக்கு இருக்கவேண்டிய உடல் அமைப்பு, அளவு, எடை, உயரம் ஆகியவைகளைப் புள்ளி விவரங்களுடன் அவர் தெரிவித்திருக்கிருர். அடுத்த படியாக மனிதனது மனபரிபாகம் எத்தகைய பெருநிலையெய்தவேண்டும் என்பதை அவர் நன்கு எடுத்துரைத்திருக்கிருர். பிறகு சீலத்திலே மனிதன் எத்தகைய மேன்மையுற்றிருக்கவேண்டும் என்பதையும் அவர் மொழிந்திருக்கிருர். இறுதியாக மனிதனிடத்து ஞானம் எவ்வளவு தூரம் மேலோங்க முடியும் என்பதையும் அந்த ஞானமே பரம்பொருளைப் பற்றிய பரஞானமாக வடிவெடுக்க வல்லது என்பதையும் அவர் விளக்கியுள்ளார். இத்தனைவித மானுட லட்சணங்களுக்கெல்லாம் உறைவிடமாக விளங்கியவர் விவேகானந்த சுவாமிகள் என்று இயம்பித் தமது நூலை அவர் முடிவுக்குக் கொண்டு வந்திருந்தார். விவேகானந்த சுவாமிகள்

அமெரிக்காவில் இருந்தபொழுது அவருடைய உயரம், எடை, கால் அளவு, கை அளவு, நெஞ்சு அளவு, கழுத்து அளவு, நெற்றி அளவு ஆகிய புள்ளி விவரங்களை யெல்லாம் மேல் நாட்டவர்கள் குறித்து வைத்திருந்தார்கள். அப்புள்ளி விவரங்கள் அனைத்தையும் அப்பேராசிரியர் நன்கு பயன்படுத்திக்கொண்டார். அம்முறையிலே மனிதன் ஒருவனுடைய அமைப்பையும் மாண்பையும் துருவி ஆராய்கின்ற மனப்பான்மையை இந்தியர்களாகிய நாம் இன்னும் பெற்றிருக்கிறோம் அல்லோம். திரண்டு உருவெடுத்துத் தெள்ளத் தெளிந்த பான்மையை இக்காலத்தில் அடையப் பெற்றுள்ள பெருமகன் விவேகானந்தர் என்பது அந்த நூலின் முடிவு. அவர் ஒரு நிறை மகன் என்பதுதான் அதன் கருத்து. விவேகானந்தர் எப்படி யெல்லாம் நிறை மனிதனாக இலங்கினார் என்பதை நாம் ஆராய்ந்து பார்ப்போம்.

மானுட அமைப்பில் மேனி, மனம் ஆகிய இரண்டும் முக்கியமானவைகளாகக் கருதப்படுகின்றன. நிறை மனிதன் ஒருவனிடத்துத் திட்பம் வாய்ந்த தேகமும் திண்ணிய மனதும் இயல்பாக அமைந்திருக்க வேண்டும். ஒருவேளை உடல் அமைப்பில் ஏதேனும் குறைபாடு நேர்ந்திருக்குமாகில் அதில் குற்றம் மிக இல்லை. ஆனால் மன அமைப்பிலோ எல்லாவிதமான மேன்மைகளும் பொருந்தியிருக்கவேண்டும். சுவாமி விவேகானந்தர் நரோத்தமன் என்று இயம்புதற்கு முற்றிலும் பொருத்தமானவர். உடல் உள்ளம் ஆகிய இரு கூறுகளிலும் அவர் நிறைவு மிக வாய்க்கப் பெற்றிருந்தார். அவருடைய மேனியமைப்பைச் சிறிது எடுத்து விளக்குவோம். பலவிதமான உடற்பயிற்சிகளைச் செய்து உறுதியும் வலிவும் வாய்க்கப்பெற்ற உடலை அவர் உடைத்திருந்தார். உயரத்தில் அவர் ஐந்தடி, எட்டரை அங்குலம் இருந்தார்.

அவருடைய தோள்கள் திட்பத்துக்கு எடுத்துக்காட்டாகத் திகழ்ந்தன. அவருடைய நெஞ்சு அகன்று உறுதி வாய்ந் ததாய் இருந்தது. மேனி முழுதுமே வண்ணத்தில் சற்றுத் தடித்திருந்தது. கைகளில் நரம்புத் தசைகள் உறுதிக்கு உறைவிடமாக ஒளிர்வனவாயின. ஆண்மகன் ஒருவனிடத்து அமைந்திருக்க வேண்டிய விளையாட்டு வன்மைகளிலெல்லாம் விவேகானந்தர் மேன்மையுற்று விளங்கினர். குஸ்தி பிடிப் பது, சிலம்பம் விளையாடுவது ஆகிய இரண்டும் அவருடைய உடற்பயிற்சிகளில் தனிச் சிறப்பெய்தியிருந்தன. அவருடைய மேனி சற்றுப் பழுத்த மாநிறமாய் இருந்தது. அவர் முக விலாசத்திலோ தனி மகிமை மிளிர்ந்து கொண்டிருந்தது. முகத்தைமட்டும் தனியாக எடுத்து மொழியுமிடத்து அத னிடத்து அலாதியாக நிறைவு பொலிந்திருந்தது எனலாம். அகன்ற நெற்றி அம்முகத்துக்கு அழகு கொடுத்தது. தாழ் வாய்க்கட்டை உறுதிக்கு உறைவிடமாய் இருந்தது. மாட்சி மையும் வசீகரமும் நிறைந்தவைகளாக அவருடைய கண்கள் ஜொலித்துக்கொண்டிருந்தன. அவைகள் வண்ணத்தில் சற்றுப் பெரியவைகளே. கமலக்கண்ணன் என்று அவரைக் கூறுவது பொருந்தும். கண்மணிகளோ மை தீட்டியவைகள் போன்று கன்னங்கரேலென்று இருந்தன. அலர்ந்த தாமரை போன்று சற்று முன்னுக்குப் பிதுங்கியவைகளாக அவைகள் இருந்தன. கண் இமைகளும் வண்ணத்தில் பெரியவை களாய் இருந்தன. தாமரை இதழ்களோடுதான் அவ் இமை களை ஒப்பிடலாம். அவருடைய கம்பீரமான கண்ணோட்டத் துக்கு இலக்காகாதது எதுவுமில்லை. அக்கண்கள் இரண்டுமே அலாதியான மகிமைகள் வாய்க்கப்பெற்றிருந்தன. யாரை யும் அன்பு வலையில் கட்டியிழுக்கும் திறமை அக் கண்களுக்கு இருந்தது. உள்ளத்தினுள்ளே ததும்பிக்கொண்டிருந்த

நுண்ணறிவை ஒளிரச்செய்ய வல்லவைகளாக அக் கண்கள் இருந்தன. விவேகானந்தர் சந்தித்த மக்களிடத்துத் தென் பட்ட சிறுமைகளைச் சொல்லாது விளக்கிக்காட்டுதற்கு அவருடைய கண்பார்வையே போதுமானது. என்றைக்கும் மாருத அன்பிலே பிணைத்தெடுப்பதற்கும் அவருடைய கண் பார்வையே போதுமானது. ஆழ்ந்து பாரமார்த்திகத்தில் பரவசநிலை அடைந்திருப்பதையும் அவருடைய கண்களே நன்கு விளக்கிக் காட்டுவனவாயின. ருத்ராம்சமாக மாறி விவேகானந்தர் தமது சினத்தை வெளிக்காட்டுவதற்கு வேறொன்றும் தேவையில்லை. அவருடைய கண்பார்வையே உலகனைத்தையும் காய்ந்து விடுவதுபோன்று ஒளிரவல்ல தாயிருந்தது. இதற்கெல்லாம் மேலாக மன்னனது மாட்சிமை சர்வகாலமும் அவரிடத்து மிளிர்ந்துகொண்டிருந்தது. அவர் ஒரு வேந்தனுக இவ்வையகத்தில் பிறந்து வந்தவர் என்று பகர்வது மிகையாகாது. இந்தியாவில் ஆனாலும் சரி, மேல் நாடுகளில் ஆனாலும் சரி விவேகானந்தரோடு பழகியவர் யாருக்குமே மாட்சிமை தங்கிய அவர் முன்னிலை யில் தலை வணங்காதிருக்க முடியவில்லை.

உலகிலே யாராலும் அறிமுகப்படுத்தப்படாத வேற்ரு ளுக விவேகானந்த சுவாமிகள் 1893ஆம் ஆண்டு செப்டம்பர் மாதம் சிகாகோ நகரிலே நிகழ்ந்த சர்வமத மகாசபையில் பிரசன்னமானுர். மேடையில் தோன்றி அவர் திருவாய் மலர்ந்தருளியது தான் பாக்கி. சூரியோதயத்தில் சந்திரனும் நட்சத்திரங்களும் தாமாகத் தமது சோபைகளை இழப்பது போன்று விவேகானந்தர் முன்னிலையில் மற்ற மதப் பிரசங்கி களை யெல்லாம் சபையோர் எப்படியோ மறந்துவிட்டனர் என்றுதான் மொழியவேண்டும். உறுதிப்பாடும் அழகும் ஒன்றுகூடி அவர் சொருபத்தில் மிளிர்வனவாயின.

அவர் எழுந்து நின்றதிலும் சில அடிகள் எடுத்து வைத்து முன்னுக்கு வந்து நின்றதிலும் காம்பீரியமும் மகிமையும் ஒன்று சேர்ந்து மிளிர்வனவாயின. அவருடைய கருவிழிகளிலே ஒளி வீசியது; அவருடைய பொலிவோ அவரைப் பார்த்தவர்கள் உள்ளத்தைக் கவர்ந்தது. அவர் வாய்திறந்து பேச ஆரம்பித்தவுடனே சபையோர் அனைவரும் அவர் குரலின் இனிமையில் வசப்படலாயினர். குரலோசை என்றால் அதுதான் குரலோசை. பண்பட்ட ஓசை கேட்பதற்கு எவ்வளவு வசீகரமானது! கருத்தை எடுத்து வழங்குதற்கு எத்தகைய அற்புதமான கருவி! உள்ளத்தைக் கொள்ளைகொண்டு போவதற்கு அவ்வோசையின்கண் அமைந்திருந்த தெய்வீகம் தான்என்னே! தெய்வ சாந்நித்தியமே அம்மேடையின் மீது பிரசன்னமாயிருந்தது போன்று அவர் காட்சி கொடுத்தார். கீழ்நாட்டினின்று வந்துள்ள கறுப்பு மனிதன் என்று முதலில் அலட்சிய புத்தி கொண்டிருந்தவர்கள் இப்பொழுது தங்களை அறியாது விவேகானந்தருக்கு அடிமைகளாய் மாறிப் போயினர். அருள் துறையிலே ஓர் ஒப்பற்ற அருட்பேராளராக விளங்கிய விவேகானந்தர் அமெரிக்க நாட்டவர்கள் உள்ளத்திலே ஆழ்ந்து இடம் பெறலாயினர். இறைவனால் நியமிக்கப்பட்ட ஓர் அருள் வீரன் என்று இவரைப் பார்த்தவர்கள் வாய்பேசாது மௌனமாக ஒத்துக்கொண்டனர். ஆளவந்தான் என்று இந்த அண்ணலைத்தான் இயம்பலாம். இப்படி அவர் அமெரிக்காவில் பிரசன்னமாவதற்கு முன்பு இமயமலையில் சிறிது காலம் சஞ்சரித்துக்கொண்டிருந்தார். அம்மலைப் பிரதேசத்திலே இவரைக் காணலுற்ற பக்தன் ஒருவன் ‘சிவ சிவ’ என்று சொல்லித் தலை வணங்கினான். இதுதான் விவேகானந்தரைப்பற்றிய உண்மை. அவர் முன்னிலையில் யார்தாம் தலை வணங்கமாட்டார்!

உடலமைப்பில் நிறைநிலை எய்தியிருப்பதற்கிடையில் மன அமைப்பில் மிகக் கீழோராயிருப்பவர்களை உலகில் வேண்டியவாறு காண்கிறோம். ஆனால் ஒருவனை நிறை மனிதன் என்று நவிலுதற்கு அவனுடைய உடலின் பொலிவை விட உள்ளத்தின் பக்குவம் மிக முக்கியமானது. சுவாமி விவேகானந்தரின் மனபரிபாகத்தை எவ்வளவுதான் விரித்தெடுத்து விளக்கிக்கொண்டு போனாலும் அதற்கு முடிவேயில்லை. ஈண்டு நாம் எடுத்துள்ள தலைப்பின்கீழ் அவருடைய மனபரிபாகத்தின் இரண்டு பகுதிகளை மட்டும் ஆராய்ச்சிக்கு எடுத்துக் கொள்வோம். அவர் எத்தகைய மேன்மகன் என்பதற்கு இவ்விரண்டு பேரியல்புகளே போதுமானவைகளாம். சுவாமி விவேகானந்தர் ராம உபாசகர். சாதகன் ஒருவன் எந்தத் தெய்வத்தை உபாசிக்கிறானோ அந்தத் தெய்வத்தின் இயல்புகளெல்லாம் உபாசகனுக்கும் வந்தமைவது உபாசனையைப்பற்றிய உண்மையாம். ஒரு மனிதனுடைய வாழ்வில் உடைமையும் வறுமையும் மாறி மாறி வருவது இயல்பு. அத்தகைய மாறுதல் திடீரென்று ஸ்ரீ ராமனுக்கு வந்தது போன்று வேறு யாருக்குமே வந்ததில்லை யெனலாம். தான் இளவரசு பட்டாபிஷேகம் செய்துகொண்டு இன்புற்று வாழ்ந்திருப்பதைப்பற்றிய எண்ணத்துடன் அவன் முந்திய இரவு அயோத்தியில் அரிய பட்டுமெத்தையில் சயனித்திருந்தான். பிந்திய இரவோ தலைமைப் பட்டணத்தினின்று வெளியே அனுப்பப்பட்டவனாக வெட்டவெளியில் ஒரு மரத்தடியில் சருகுகளை விரித்து அதன்மீது அயர்ந்து படுத்து உறங்கினான். ஒரு மனிதனுடைய வாழ்விலே இவ்வளவு பெரிய மாறுதல் ஒரே நாளில் வாய்க்கக்கூடியதா, என்று லட்சுமணன் வியப்படைந்தான். அவ்வளவு பெரிய மாறுதலை மனதில் சிறிதேனும் வாங்கிக் கொள்ளாது அயர்ந்து

நித்திரை போகும் பேரியல்பு படைத்தவனுக அண்ணன் இருக்கிருனே! என்று தம்பி மேலும் வியப்புற்ருன். தனக்குத் திடீரென்று வந்து வாய்த்த வறுமை வாழ்வை ஸ்ரீ ராமன் வறுமையாக மனதில் வாங்கிக் கொள்ளவில்லே. உடைமையும் வறுமையும் சூழ்நிலேயைப் பொறுத்தவை களல்ல; அவ்வேறுபாடுகளெல்லாம் மனநிலேயைப் பொறுத்த வைகள் என்பதற்கு ராமனுடைய வாழ்வு நல்லதொரு எடுத் துக்காட்டு. நிறை மனது படைத்திருந்த அப்பெருமகனுக்கு ராஜபோகமும் வனவாச துக்கமும் ஒரே பாங்குடையவை களாகத் தென்பட்டன. ஸ்ரீ ராமனது நிறை மனதுக்கு இந் நிகழ்ச்சியானது சிறந்ததொரு எடுத்துக்காட்டு ஆகும்.

ராம உபாசனே செய்து வந்த விவேகானந்த சுவாமி களுக்கும் இத்தகைய சோதனே ஒன்று நேர்வதாயிற்று. அது ஒரு விதத்தில் அவர் வழிபடு தெய்வமாகிய ராமனுக் கேற்பட்ட சோதனேயை விட மிகக் கடினமானது. தமது சின்னஞ்சிறு வயதில் நரேந்திரநாதன் என்னும் பிள்ளேத் திருநாமம் படைத்து அவர் ராஜ போகத்தில் மூழ்கியிருந் தவர். ஒரு ராஜ குமாரனுக்கு ஒப்பாகவே அவர் வளர்க்கப் பட்டார். அதற்கு ஏற்ற வசதிகள் அனேத்தையும் அவரு டைய தந்தையார் உடைத்திருந்தார். அப்படிச் சீரும்சிறப்பும் பெற்றுச் சிறுவனுய் அவர் வாழ்ந்திருந்தகாலே, தமது அன்னே யாரால் தூண்டப்பெற்றுத் தமதுபிதாவிடம் பிரச்னே ஒன்றை அவர் கிளப்பினுர்: 'அப்பா, எனது எதிர்கால நன்மையின் பொருட்டு எனக்காகவென்று நீங்கள் தேடி வைத்துள்ள செல்வம் எது?'—என்பதே சிறுவன் கிளப்பிய கேள்வி யாகும். 'பிள்ளாய், உன் பொருட்டு நான் தேடி வைத்திருப் பது நீயே. நீ எத்தகைய நிறை நிலே வாய்க்கப்பெற்றவன் என்பதை முகக்கண்ணுடி ஒன்றன்முன் போய்ப்பார்,' என

விடைவிடுத்து அக்கேள்வியைப் பிதா அப்பொழுதே புறக் கணித்துவிட்டார். அவர் கொண்டிருந்த கொள்கையொன்றை அறிவுடையோர் எல்லாருமே ஏற்றுக்கொண்டாகவேண்டும். தகுதி வாய்ந்த நிறை மனிதன் ஒருவனை வெறும் ஆளாக எந்தச் சூழ்நிலையில் வைத்தாலும் அவன் ஆங்குப் பலப் பல பொலிவுகளுடன் முன்னேறித் திகழ்வது திண்ணம். ஆகவே ஆற்றலும் அறிவும் படைத்துள்ள ஆண்மகன் ஒருவனுக்கு அவனைத் தவிர வேறு செல்வம் எதையும் சேகரித்து வைக்க வேண்டிய அவசியமில்லை. அவனுடைய நிறை மனமே யாண்டும் குறையாத செல்வமாக அவனைச் சார்ந்திருக்கிறது. இக்கோட்பாட்டுக்கு ஒப்ப நரேந்திரனுக்குத் தந்தையார் செல்வம் எதையும் சேமித்து வைக்கவில்லை. தாம் ஏராளமாகச் சம்பாதித்த செல்வத்தை எல்லாம் அப்போதைக்கப்போது ராஜரீதியில் 'நல்வழியில் அவர் செலவழித்து வந்தார். தெய்வாதீனமாக அவர் ஒருநாள் திடீரென்று மாரடைப்பால் மாண்டு போனார். அத்துடன் குடும்ப வருவாய்க்கும் முற்றுப்புள்ளி வைக்கப்பட்டது. தன் தாயையும் தமக்கைமார் இருவரையும் தம்பிமார் இருவரையும் பராமரிக்கும் பொறுப்பு நரேந்திரனை வந்து சார்ந்தது. சட்ட கலாசாலையில் மாணுக்கனாயிருந்த பொழுதே இத்தகைய கொடிய சோதனைக்கு அவன் ஆளானான்.

காலஞ்சென்ற தந்தைக்கு மகன் ஆற்றுதற்கிருந்த உத்தரக்கிரியைகள் இன்னும் பூர்த்தியாகவில்லை. பிதா மறைந்ததை முன்னிட்டுப்புதல்வன் சோகத்தில் மூழ்கிக்கிடந்தது இன்னும் சிறிதேனும் ஆறுதல் பெறவில்லை. அத்தகைய கொடூரமான நெருக்கடியில் குடும்ப சம்ரக்ஷணையின்பொருட்டு அவன் ஏதாவது உத்தியோகம் தேடுகிற நிர்ப்பந்தத்துக்கு உட்பட்டான். அவ்வளவு பெரிய சோதனைக்கிடையில்

நரேந்திரன் தளரா நெஞ்சம் படைத்திருந்தது ஆண்மகன் ஒருவனுக்கு வாய்க்கின்ற வாய்ப்புக்களிலெல்லாம் மிக மேலானது எனலாம். பெற்றெடுத்த தாய்க்கு அவன் ஆறுதல் ஊட்டினுன். தம்பிமார் கல்விக்கு இடைஞ்சல் ஒன்றும் வாராதபடி அவன் பார்த்துக்கொண்டான். அதற்கு வேண்டிய ஏற்பாடுகளை யெல்லாம் அவன் முறையாகச் செய்து வைத்தான். வறுமையின் கொடுமை எத்தகையது என்பது இப்பொழுது அவன் சொந்த அனுபவமாயிற்று. தன்னை வந்து தாக்கிய வறுமையை அவன் அமைதியோடு ஏற்றுக்கொண்டதே வியப்புக்குரிய விஷயமாகும்.

முன்பு குதிரை வண்டியில் பள்ளிக்கூடத்துக்குப் போய்க்கொண்டிருந்த நரேந்திரன் இப்பொழுது கால் நடையாகக் கல்லூரிக்குப் போக வேண்டியதாயிற்று. நெடுந் தூரம் கால் நலிய நடப்பதைத் தவிர அவனுக்கு வேறு வழியில்லை. அவன் அணிந்து கொண்டிருந்த உடை நாளடைவில் கந்தலாக மாறியது. காலில் பாதரட்சை போட்டுக்கொள்ளுதற்கு வகையில்லை. மழையிலும், வெயிலிலும் நடக்கும் பொழுது குடையொன்றுமில்லாமலேயே அவன் போக வேண்டியதாயிற்று. அவற்றையெல்லாம் அவன் சிறிதேனும் பொருள்படுத்தவில்லை. ஆனல் வீட்டில் இருந்தவர்களுக்கு உண்ணுதற்குப் போதிய அளவு உணவு கிடையாதிருந்தது தான் அவனுக்குப் பெரு வருத்தத்தை உண்டுபண்ணியது. உடன் பிறந்தவர்கள் வயிருர உணவு உண்ணவேண்டும் என்னும் எண்ணங்கொண்ட நரேந்திரன் பலதடவைகளில் தன் நண்பர்களின் வீட்டில் உணவருந்தி வந்ததாகத் தாயிடம் நொண்டிச் சாக்குச் சொல்லி வீட்டிலுள்ள சாப்பாட்டைச் சகோதரர்களுக்காக மிச்சப்படுத்துவான். குடும்பத்தை எப்படித்தான் நிர்வகித்து வந்தார்களோ என்பது

தாய்க்கும் மகனுக்கும் தவிர வேறு யாருக்கும் தெரியாது. 'வறியோர்க்கு அழகு வறுமையில் செம்மை' என்பதற்கு அவர்களே எடுத்துக்காட்டு ஆயினர்.

சுவாமி விவேகானந்தர் பரிவ்ராஜக பரமஹம்ஸராக இந்தியா முழுதையும் சுற்றிப் பார்த்து வந்தபொழுது காசு பணம் எதையும் தொடுவதில்லை என்னும் விரதம் பூண்டிருந்தார். அடுத்த வேளைக்காகவென்று முற்கூட்டியே உணவைக் கையில் வாங்கி வைத்திருக்கும் வழக்கத்தையும் அவர் ஒதுக்கி வைத்திருந்தார். தெய்வாதீனமாகக் கிடைத்த உணவை அருந்திப் பசியாறி விட்டு அடுத்தவேளை உணவைப் பற்றிக் கவலையற்றிருந்ததே அவர் பூண்டிருந்த விரதமாகும். அவ்விரதத்தின் விளைவாகப் பல நாட்கள் அவர் பட்டினி கிடந்ததுண்டு. ஆனால் அதைக் குறித்து ஒரு நொடிப்பொழுதுக்கேனும் அவர் மனதில் அன்னவிசாரம் வந்தது கிடையாது. தெய்வத்திடத்து அதைப் பற்றிப் பிரார்த்தனை பண்ணியதும் கிடையாது. எத்தகைய தீவிர மனம் படைத்திருந்தால் இத்தகைய நெருக்கடிகளில் மனச் சோர்வு கொள்ளாது வாழ்ந்திருக்க ஒரு வீரனுக்கு இயலும் என்பதை எண்ணிப் பார்த்தால் ஒரு சிறிதளவு விளங்கும். அதை எண்ணிப் பார்க்கவே சிலர்க்கு இயலாது. ஆனால் தமது வாழ்க்கையில் பட்டினிகிடந்து நலிந்திருப்பது என்றால் என்ன என்பதை எத்தனையோ தடவைகளில் நேரே அனுபவித்த வீரர் என்று விவேகானந்தரைச் சொல்ல வேண்டும். இமயமலையில் உறைபனிப் படலத்தில் தம் உடலின் மீது போதிய அளவு உடையில்லாதிருந்தபொழுதும் தமது உடல் ஞாபகத்தை அறவே ஒதுக்கி வைத்துவிட்டுப் பாரமார்த்திகப் பெருநிலையில் மனதை நாட்டி வைத்திருந்த பரமயோகி ஆவார் அவர். சுருங்கச் சொல்லுமிட.த்து வறுமை நோயின்

உச்ச நிலையைக் கண்டவர் அவர். சுகஜீவனத்தின் உயர் நிலையையும் தமது வாழ்க்கையில் அனுபவித்துப் பார்த்தவர் அவர். ஆக, இப்பூவுலக வாழ்வில் உள்ள வசதிகளையும் கஷ்ட நஷ்டங்களையும் கொடுமைகளையும் அவர் முற்றிலும் சுவானுபவத்தில் அறிந்தவர் ஆவார். ஆக்கம் நிறைந்த உடைமையில் அவர் பந்தப்படாதிருந்தது போன்று துன்பம் நிறைந்த வறுமையிலும் அவர் சிறிதேனும் மனம் குழம்பியது கிடையாது. மனபரிபாகத்தில் எத்தகைய உச்சநிலைக்குப் போயிருந்தால் இவ் இருமைகளையும் பொருள்படுத்தாத பெருநிலை வந்தெய்தும் என்பதை ஆத்ம சாதகர்கள் ஆழ்ந்து எண்ணிப் பார்க்கக் கடமைப்பட்டிருக்கின்றனர்.

சிருஷ்டியின் நடைமுறையில் உயிர்கள் அனைத்துக்கும் பொதுவாயுள்ள நிலைமை யொன்று உண்டு. ஒவ்வோர் உயிர்க்கும் ஏதேனும் ஒருவிதத்தில் பகைகள் பல அமைந்துள்ளன. அவைகளை அந்தந்த உயிர்க்குரிய ஜன்ம சத்துரு என்கின்றோம். சத்துருக்களால் கேடு ஒருபுறம் இருக்க நலனும் ஒருபக்கம் அமைந்திருக்கிறது. சத்துருக்கள் இருப்பதால்தான் உயிர்கள் தங்களைப் பாதுகாப்பதிலும் முன்னேற்றம் அடைவதிலும் ஊக்கம் மிகக் கொள்கின்றன. பகையே இல்லாது போனால் உயிர்களிடத்துச் சோம்பலும் வீண் உறக்கமும் அதிகரிக்கும். பகைகளிடத்திலிருந்து தங்களைப் பாதுகாத்துக்கொள்ளுதற்கு உயிர்கள் அல்லும் பகலும் எச்சரிக்கையாயிருப்பதே அவைகளின் முன்னேற்றத்துக்கு முகாமையாகிறது. மனிதனுக்கு எத்தனையோ உயிர்கள் பகைகள் ஆகின்றன. இனி மனிதனுக்கு மனிதன் பகை பூணுதலும் இயல்பு. பகைவனை எதிர்த்துச் சமாளிப்பது வாழ்க்கையில் ஒரு பகுதியாய் அமைந்திருக்கிறது.

சான்றோர்கள் யாருடனும் பகைப்பதில்லை. அவர்களை அஜாத சத்துருக்கள் எனலாம். ஆயினும் அன்னவர்கள்மீது

பகைகொள்ளும் பாங்குடையவர்கள் இருக்கிறார்கள். அப்படிப் பகைப்பவர்களைச் சான்றோர்கள் கையாளும் முறையில் நாம் கற்றுக்கொள்ளவேண்டிய பாடங்கள் பல இருக்கின்றன. பிறரைப் பகைக்கும் இயல்பு ஸ்ரீ ராமனிடத்து இல்லை. ஆனால் அவனுக்குப் பெரும்பகையாக வாய்த்தவன் ராவணன். அந்த அரக்கனிடத்து ராமன் வைத்திருந்த மனப்பான்மை, அவன் செய்த அபராதத்துக்கு ராமன் எடுத்துக்கொண்ட நடவடிக்கை, தீவிரமான நடவடிக்கைக்கிடையில் ராவணனைத் திருத்தியமைக்க ராமன் முயன்றது, அவனை அழிக்கும் வரையில் ஒவ்வொரு படித்தரத்திலும் ராமன் அவன்மீது காட்டிய கருணை முதலியன பெருவாழ்வுக்குரிய பல கோட்பாடுகளை நமக்கு நன்கு புகட்டுகின்றன. சின்னஞ் சிறுவயதிலிருந்து ராம உபாசகராயிருந்த சுவாமி விவேகானந்தர் யாரையும் பகைக்கவில்லை. ஆயினும் அவரிடத்துப் பகைவர்களாகப் பலர் நடந்துகொண்டனர். அப்படி முறை தவறி நடந்துகொண்டவர்களிடத்தும் விவேகானந்தர் எத்தகைய மனப்பான்மை கொண்டிருந்தார் என்பதை நாம் ஆராய்ந்து அறிந்துகொள்ள வேண்டும். அப்படி அறிந்து கொள்ளுதலின் மூலம் பெருவாழ்க்கைத் தத்துவத்தை நாம் அறிபவர் ஆகின்றோம். அத்தத்துவத்தை நடைமுறையில் கொண்டுவருமளவு நிறை மனிதனுடைய நிலையை நோக்கி நாம் முன்னேறுபவர் ஆவோம்.

நரேந்திரரது தந்தையார் காலமானவுடனே வறுமை நோய் அவரை வந்து தாக்கியது ஒருபுறமிருக்க, தாயாதிகள் அவர் வசித்துவந்த வீட்டில் பெரும்பகுதி தங்களுக்குரியது என்று நீதிமன்றத்தில் வழக்குத்தொடுத்தனர். நரேந்திரர் நீதிமன்றத்தில் கொடுத்த வாக்கு மூலத்தில் அவரது பரந்த மனப்பான்மை வெளியாயிற்று. அதை வழக்கறிஞர்

அனைவரும் பாராட்டினர். பொதுவாக எதிரிகள் மீது எத்தனை யெத்தனையோ விதங்களில் குறைகூறுவது உலகத்தவர் இயல்பு. எதிரிகளிடத்துள்ள ஊழல்களை நீதிமன்றத்தில் மிகைப்படுத்திப் பேசுவதும் உலக 'வழக்கு. ஆனால் நரேந்திரர் மட்டும் அப்புல்லிய போக்கில் போகவில்லை. தாங்கள் வசித்துவந்த வீடு தங்களுக்கே உரியது என்பதற்கேற்ற ஆதாரங்களையும் புள்ளி விவரங்களையும் தெளிவுற அவர் நீதிமன்றத்தில் எடுத்து விளக்கினர். தாயாதிகள் தொடுத்த வழக்கு அக்கிரமம் என்பதைப்பற்றிய பேச்சே அவர் வாயினின்று வரவில்லை. அப்பரந்த பான்மையை நியாயாதிபதியும் மிகப்பாராட்டினர். ஒரு நிறை மனிதனுடைய மேலாம் இயல்பு சின்னஞ்சிறு வயதிலேயே அவர்பால் மிளிர்வதாயிற்று.

பரமஹம்ஸதேவர் தேகத்தை உகுத்தான பிறகு இளம் சிஷ்யர்கள் தத்தம் போக்கில் கல்லூரிகளில் மேற்படிப்பில் ஈடுபட முயன்றனர். ஆனல் அத்தகைய படிப்பு அவர்களுக்குத் தேவையில்லை யென்று எடுத்துக்காட்டி அவர்களையெல்லாம் திரட்டிப் பாரமார்த்திக வாழ்வில் ஈடுபடச் செய்தவர் இளந்துறவி விவேகானந்தர். மற்ற இளைஞர்களுடைய பெற்றோர்கள் அவரவர் மக்கள் துறவியர்களாய்ப் போனதற்கு மூல காரணமாயிருந்தவன் நரேந்திரன் என்று குறைகூறி அவன்மீது பெரும் பழியைச் சுமத்தினர். அவனுடைய பகைவர்களாகவே அவர்கள் நடந்து கொண்டனர். ஆனல் அந்த இளம் துறவியோ சாந்த மூர்த்தியாயிருந்து அவர்களுக்குச் சமாதானம் கூறியதும் அவர்களிடத்து அனுதாபம் காட்டியதற்கிடையில் லட்சியத்தினின்று இம்மியளவும் பிசகாதிருந்ததும் அவருடைய நிறை நிலைக்கு நல்ல எடுத்துக்காட்டு ஆகும்.

சமுதாயத்தில் சீரிய அந்தஸ்தைப் பெற்றுச் சிறப்புடன் வாழ்தற்கிருந்த நரேந்திரன் துறவியாய்ப் போனது தௌர்ப் பாக்கியமென்று அவனுடைய நண்பர்களில் பலர் கருதினர். பிறகு சில ஆண்டுகளாக அவர் வாழ்ந்துவந்த சந்நியாச வாழ்க்கை உலகசம்பத்து எதிலும் சம்பந்தப்படாதது. உலக வாழ்க்கையில் வாய்த்துள்ள பெருமைகளை யெல்லாம் கருத்தில் வைத்துக்கொண்டு விவேகானந்தருடைய வாழ்வை விமர்சனம் செய்து பார்த்தால் அவர் செத்தாரைப் போன்று ஆய்விட்டார் என்றே சொல்லலாம். ஆனால் தெய்வாதீனமாக அமெரிக்காவில் அவருடைய வாழ்க்கையில் திடீரென்று மாறுதல் ஒன்று உண்டாயிற்று. சர்வமத மகாசபையில் அவர் இந்து மதத்தைப்பற்றிப் பிரசங்கம் செய்ததின் விளைவாக ஒரே நாளில் அவருக்கு உலகப் பிரசித்தி வந்து குவிந்தது. எண்ணிறந்த அறிஞர்களும் செல்வந்தர்களும் அவரோடு இணக்கம் கொள்ள முன் வந்தனர். விவேகானந்தரோ அந்த வாய்ப்பையெல்லாம் ஓர் உயர்ந்த லட்சியத்துக்கே பயன்படுத்தி வந்தார். மக்களைப் பாரமார்த்திகப் பெருவாழ்வில் திருப்புவது அவருடைய பெருங்கடமையாயிருந்தது. அவ் அருட்பணியை நன்கு நிறைவேற்றுவதற்கான பரமாச்சாரியராக அவர் திகழ்ந்தார். ஆனால் அதே வேளையில் அவர்க்குப் பகைவர்களும் பலர் தாமாகத்தோன்றுபவர் ஆயினர். அவருடைய கீர்த்தியைக் கண்டு சகிக்க ஒரு சிலர்க்கு இயலவில்லை. அவர் வழங்கி வந்த அறநெறி சில சமயவாதிகளுக்கு முட்டுக் கட்டையாய் முன்வந்து நின்றது. யாரெல்லாம் ஒன்றுகூடி அவர்க்குப் பகைவர்கள் ஆனார்கள் என்பதைப் புள்ளி விவரத்துடன் வெளிப்படுத்துவது பொருந்தும். பிரதாப்சந்திர முஜும்தார் என்னும் பேரறிஞர் ஒருவர் பிரம்ம சமாஜத்தின் பிரதிநிதியாக

வங்காளத்திலிருந்து அமெரிக்காவில் சர்வமத மகாசபைக்குச் சென்றிருந்தார். அப்பெருமகனுர் சின்னஞ்சிறு வயதிலிருந்து விவேகானந்தரிடத்து நட்பு பூண்டு ஒழுகியவர். இப்பொழுது விவேகானந்தரின் புகழ் உலகெங்கும் பரவியதைக் குறித்து பிரதாப்சந்திர முஜும்தார் பெருமை பாராட்டுதற்குப் பதிலாகப் பகைமை பூண ஆரம்பித்தார். ஒருவன் உடலில் தோன்றுகிற நோய் அவன் உயிர் வாழ்க்கைக்கே ஆபத்தாய் அமைவது போன்று விவேகானந்தரது சொந்த நாட்டில் தோன்றியிருந்த ஒருவர் புறநாட்டில் வந்து அவருக்குப் பெரும்பகைவனுய் மாறினுர். இந்தியாவுக்கு என்னென்னவோ நன்மைகளையெல்லாம் செய்துவந்ததாகத் தம்மைப் பற்றிப் பெருமை பாராட்டிக்கொண்டிருந்த தியாசாபிகல் சொஸைட்டி Theosophical society (பிரம்மஞான சபை) அங்கத்தினர்கள் விவேகானந்தருக்கு விரோதிகளாக வெளிக்கிளம்பினர். தங்கள் சபையின் தனிச்சிறப்புக்கு விவேகானந்தர் புகட்டிய வேதாந்தம் இடைஞ்சலாகத் தென்பட்டது. ஆதலால் அன்னவர்கள் அவரைப் பகைக்க ஆரம்பித்தனர். மூன்ருவதாக கிறிஸ்தவ மதப்பிரசாரகர்கள் விவேகானந்தருக்கு விரோதிகளாக வெளிவந்தனர். தங்கள் மதப்பிரசாரத்துக்கு விவேகானந்தர் பேரிடைஞ்சலாக வந்துள்ளார் என்று அக்கிறிஸ்தவப் பாதிரிமார்கள் கருதினுர்கள். விவேகானந்தரை எதிர்த்தல் பொருட்டு இந்த மூன்று இயக்கத்தினர்களும் அமெரிக்காவில் ஒன்றுகூடினர். இவ் அருளாளரை எதிர்ப்பதைத் தவிர வேறு எந்தவிதமான பொது லட்சியமும் அம்மூவர்க்கிடையில் இல்லை. இப்பரமாச்சாரியரை எப்படியாவது பள்ளத்தில் தள்ளி ஆழ்த்தவேண்டும் என்று அம்மூவரும் படாத பாடுபட்டு வந்தனர்.

விவேகானந்தரிடத்துக் கூடாத ஒழுக்கங்கள் ஏதேதோ இருந்ததாக அவர்கள் பத்திரிக்கைகளில் கட்டுரைகள் எழுதலாயினர். இந்தியாவில் அவர்க்கு அஸ்தஸ்து ஒன்றுமில்லே; இந்திய சமுதாயம் அவரை ஒரு சந்நியாசி ஆக அங்கீகரிக்கவில்லே; அவர் ஓர் ஆதரவற்ற நாடோடி—இப்படியெல்லாம் அவரைப்பற்றி எழுதவும் பேசவும் அம் மும்மூர்த்திகள் முன்வந்தனர். ஏதேனும் ஒரு வீட்டில் விருந்தினராக விவேகானந்தர் தங்கியிருந்தால் அந்த வீட்டில் ஒழுக்கம் தவறி நடந்ததை முன்னிட்டு அவர் வெளியே அனுப்பப்பட்டார் என்று பத்திரிக்கைகளில் பிரசுரித்தார்கள். வேருெரு வீட்டுக்கு அவர் விருந்தினராய் அழைக்கப்பட்டிருக்கிருர் என்று இப்பகைவர்கள் அறியவந்தால் அந்த வீட்டாரிடம் சென்று விவேகானந்தரைப் பற்றிப் பொருந்தாதவைகள் பலவற்றைச் சொல்லி அவர்களுடைய மனதைக் கலேத்து வந்தார்கள். அதன் விளேவாக விவேகானந்தர் அவ்வீட்டுக்கு விருந்தினராய்ப் போகும்பொழுது அவரை அவமானப்படுத்தி அவ்வீட்டார் விருந்துக்கு வந்தவரை வெளியே ஓட்டினர்கள். பிறகு உண்மையை அவ்வீட்டார் உள்ளபடி அறிந்துகொள்ள நேரிட்டால் விவேகானந்தரிடம் நேரில் வந்து மன்னிப்புக் கேட்டுத் திரும்பவும் அவரைத் தங்கள் வீட்டுக்கு அழைத்துச் செல்வார்கள். விவேகானந்தர் ஒழுக்கம் கெட்டவர் என்று பத்திரிகைகளில் பிரசுரம் செய்துவிட்டு, அப்பத்திரிக்கைகளே அந்த எதிரிகள் இந்தியாவுக்குத் தங்கள் கூட்டத்தார்களுக்கு அனுப்பி வைப்பார்கள். அமெரிக்காவில் அவருக்குச் செல்வாக்கு ஒன்றுமில்லேயென்று இந்தியாவில் சிலர் பேசியும் எழுதியும் வந்தனர்.

இத்தனேவிதமான அல்லல்களுக்கிடையில் தம்மை எதிர்த்தவர்களேக் குறித்து சுவாமி விவேகானந்தர் ஒரு

கணப்பொழுதும் நொந்துகொண்டது கிடையாது. தாம் மனம் நொந்தால் அது பிறர்க்குத் தீங்காய் முடியும். பிறர் செய்த தீங்குக்குப் பிரதி தீங்கு செய்வது தமது தர்மம் அன்று என்று உணர்ந்து அவர் சாந்தமும் பொறுமையுமே வடிவெடுத்திருந்தார். சத்தியத்தையும் சீலத்தையும் யாருமே தாக்கிக் கெடுக்க முடியாதென்பது விவேகானந்தரது சித்தாந்தம். பொறுமையுடன் தமது அறப்பணியை அவர் புரிந்துவந்தார். சிலர் சுவாமி விவேகானந்தரிடத்து நண்பர்கள் போன்று நடந்து கொள்வார்கள். ஆனால் மறைமுகமாக அவரைத் தாக்குவது அவர்களுடைய செயலாய் இருந்து வந்தது. அத்தகைய துரோகிகளை மற்றவர்கள் சுட்டிக் காட்டுவார்கள். ஆனால் சுவாமிகளோ அந்த நயவஞ்சகர்களிடத்தும் பேரன்பு பூண்டவராகவே நடந்து கொண்டார். அவருக்கு வந்த எதிர்ப்புக்களெல்லாம் தாமாக நாளடைவில் பின்வாங்குவனவாயின. நிறைநிலையில் உறுதியாக நிலை நின்ற விவேகானந்தர் அன்பின் மூலமாகவும் நேர்மையின் மூலமாகவும் உலகிலுள்ள கேடுகளைக் களைந்துவந்தார். நேர்மை பிறழாத நிறை மனிதன் ஒருவர் இக்காலத்தில் உலக நன்மைக்காகத் தோன்றிவந்தார் என்றால் அது விவேகானந்தரேயாம்.

2. துறவி வேந்தன்

நான்கு ஆச்ரமங்களுள் தலையாயது சந்நியாச ஆச்ரமம். அது பாரமார்த்திக வாழ்வுக்கென்றே அமைந்தது. பரத்தினை அடைதற்கு அது முற்றிலும் இன்றியமையாதது. இல்லம் துறத்தல் சந்நியாச ஆச்ரமத்துக்கு முதற்படி. உள்ளம் துறத்தல் அதன் முடிவானநிலை. "அந்தக்கரண மடங்கத் துறப்பதுவே எந்தத்துறவினும் நன்று எந்தாய் பராபரமே" என்பது தாயுமானவர் வாக்கு. இனி, இல்லம் துறத்தலில் மூன்று படித்தரங்கள் இருக்கின்றன. மனைவி மக்கள், உற்றார் உறவினரோடு பிணங்கிக்கொண்டோ அல்லது பொருளையெல்லாம் இழந்து இல்வாழ்வில் தோல்வியுற்றோ துறவியாக முயலுவது கடைத்தரமானது. இல்வாழ்வைச் செவ்வனே நடாத்திய பிறகு வானப்பிரஸ்த ஆச்ரமத்தின் மூலம் சந்நியாச ஆச்ரமத்துக்குப் போவது இடைத்தரமானது. நேர் பிரம்மசரிய ஆச்ரமத்தினின்று இளம் வயதிலேயே துறவறம் பூணுவது தலையாயது. உலகுக்குப் பெருநன்மை புரிந்தவர்களெல்லாரும் இங்ஙனம் தலையாய துறவறம் பூண்டவர்களேயாவர். சுவாமி விவேகானந்தர் ஒரு தலைத்தரமான துறவி. அவரைத் துறவி வேந்தன் என்று பகர்வது முற்றிலும் பொருந்தும்.

தாம் துறவறம் பூணுவதைப் பற்றித் தமது தாயாரோடு கலந்து பேசி அவருடைய ஆலோசனையைக் கேட்கும் நெருக்கடி சுவாமி விவேகானந்தருக்கு நேர்ந்தது. அவர் மாணுக்கராயிருந்தபொழுதே தந்தையார் தேகவியோகமானர். எனவே வீட்டுக்குத் தலைவராகத் திகழ்ந்தவர் நரேந்திரர். சொத்தை இழந்து அக்குடும்பம் வறுமை நோய்வாய்ப்பட்டிருந்தது. தமது இளைய சகோதரர்கள்

இருவரைப் பராமரித்து அவர்களைப் படிக்க வைக்கும் பொறுப்பு நரேந்திரருடையதாயிருந்தது. தாயாரோ முற்றிலும் தமது தலைமகனையே சார்ந்திருந்தார். அத்தகைய சூழ்நிலையில் நரேந்திரர் தமக்கு ஏற்பட்டிருந்த கடமையைத் தாயாரிடம் தெளிவுற எடுத்தோதினர். உலக நன்மையின் பொருட்டுப் பரமஹம்ஸதேவர் தம்மைத் துறவறத்துக்குத் தூண்டி அழைத்ததாக அவர் அன்னையிடம் அறிவித்தார். குடும்பப் பொறுப்போ மிகப் பெரியதாகத் தம்மீது தெய்வாதீனமாக வந்து சேர்ந்திருக்கிறது என்பதையும் தம்மைப் பெற்றெடுத்தவரிடம் அவர் பகர்ந்தார். குடும்ப நலத்தின் பொருட்டுத் தமது பெரிய பொறுப்பை ஒதுக்கி வைப்பதா, அல்லது பொதுநலத்தின் பொருட்டு உற்றூரைப் பரிபாலிக்கும் பொறுப்பைப் புறக்கணிப்பதா என்னும் ஐயம் நரேந்திரர் உள்ளத்தில் ஊசலாடிக்கொண்டிருந்தது. தமது உள்ளக் கிடக்கையை ஒளிக்காது அவர் அன்னையாரிடம் அறிவித்தார். அன்னையாரோ "மகனே, உனக்கு எது மேலானதென்று தோன்றுகிறதோ அதை நீ மேவுவாயாக. என் பொருட்டும் உன் உடன் பிறந்தார் பொருட்டும் நீ உள்ளம் குழைந்திருக்க வேண்டாம். உன் சகோதர சகோதரிகளை நல்ல முறையில் வளர்த்து மேல் நிலைக்குக் கொண்டுவரும் திறமையும் உறுதியும் எனக்குண்டு. நீ வாழ்க்கையில் கொண்டுள்ள லட்சியத்துக்கு நான் ஒருக்காலும் இடைஞ்சலாக நிற்கமாட்டேன்," என்று எடுத்துரைத்தார். தாய் சொல் மிக்க வாசகம் இல்லை. இங்ஙனம் தாயார் கூறியதை நரேந்திரர் தேவானுக்கிரகம் என ஏற்றுக்கொண்டார். அன்னையின் ஆசியையும் விடையையும் பெற்றுக்கொண்டு அவர் துறவறத்தில் பிரவேசித்தார்.

நரேந்திரரைப் பார்த்த நாள் முதற்கொண்டு தாம் ஒரு துறவி வேந்தனைத் தமக்குரியவனாக அடையப்பெற்றதாகவே

பரமஹம்ஸதேவர் கருதி வந்தார். தமக்குரிய சுகதேவன் என்று இவ்விளைஞரை அவர் போற்றி வந்தார். உலகத்தவர்களுக்கிடையில் அருள் விருந்தை வழங்குதற்கு இல்லறத்தாரை விடத் துறவறத்தாரே சாலச் சிறந்தவர்கள் என்பது பரமஹம்ஸதேவரது கருத்து. சான்றோர் அனைவருடைய கருத்தும் அதுவேயாம். தமக்கு ஓர் அருட்செல்வன் வாய்க்கவேண்டும் என்று பரமஹம்ஸர் பலகால் அன்னை பராசக்தியிடம் பிரார்த்தனை பண்ணி வந்தார். அப்பிரார்த்தனைக்குச் செவி சாய்க்க சக்திதேவி துறவி வேந்தனாகிய நரேந்திரரை அவருக்கு ஒரு வரப்பிரசாதமாகக் கொடுத்தருளினாள்.

பண்டு ஒரு காலத்தில் பரதகண்டத்தில் தோன்றியிருந்த சுகப்பிரம்மம் போன்று நரேந்திரர் சின்னஞ்சிறு வயதிலிருந்தே தேகாத்ம புத்தியைத் தாண்டியிருந்தார். அதாவது உடலைத் தான் என்று கருதும் எண்ணத்துக்கு அப்பாற்பட்ட நிலையில் அவர் யாண்டும் ஊறியிருந்தார். தமது சிஷ்யரிடத்து இயல்பாய் அமைந்திருந்த அத்தகைய பெருநிலை தான் பரமஹம்ஸருக்குப் பரமானந்தத்தை ஊட்டியது. இவ்வுலகம் மிகப் பெரியதே. இதனுள் வாய்ப்புகள் பல உள. அவ்வாய்ப்புகளை யெல்லாம் நன்கு பயன்படுத்துகிறவனும் நேர்மை பிறழாது வாழ்கிறவனும் ஆகிய இல்வாழ்பவன் போற்றுதலுக்குரியவனேயாம். சமுதாயத்துக்குரிய லட்சியங்களும் போற்றுதலுக்கு உரியனவாம். சமுதாயம் ஒன்றிலே அமைகிற முன்னேற்றம் பாராட்டுதற்குரியதாம். ஆனால் துறவறத்தோடு இவை யாவையும் சீர்தூக்கிப் பார்க்குமிடத்துச் சூரியன் முன்னிலையில் உள்ள நட்சத்திரங்கள் போன்று இவையாவும் ஒளியை இழக்கின்றன. உலக சம்பத்துக்கள் யாவையும் துச்சமென ஒதுக்கித் தள்ளியவனே

துறவி. துறவியின் வாழ்வோ தெய்வ சாந்நித்தியத்திலேயே திளைத்திருப்பதாம். ஈசனது அருளையும் மகிமையையும் துறவியினிடத்தல்லாது வேறு எங்குக் காண்பது? பந்த பாசங்களையெல்லாம் தகர்த்தெறிந்துவிட்டு ஆத்ம ஸ்சொரூபத்தின் சுதந்தரத்தில் தோய்ந்திருப்பவன் துறவி. சுவாமி விவேகானந்தர் அத்தகைய துறவுக்கென்றே மண்ணுலகில் பிறந்து வந்தார்.

சுவாமி விவேகானந்தர் பூண்டிருந்த பரிவ்ராஜக பரம ஹம்ஸ வாழ்க்கையானது துறவறத்துக்கு நல்லதொரு விளக்கமாகிறது. சித்தன் போக்கு சிவன் போக்கு என்பது பழமொழி. பரிவ்ராஜக பரமஹம்ஸன் ஆகிய விவேகானந்தருக்கு அது முற்றிலும் பொருந்தும். எந்த இடத்தில் எத்தகைய வசதிகளை அமைத்துக்கொண்டு வாழ்ந்திருப்பது என்னும் திட்டம் பரிவ்ராஜகன் ஒருவருக்கும் கிடையாது. தேசமெங்கும் தமக்குத் தோன்றுகிற வண்ணம் சஞ்சரித்துக் கொண்டிருப்பவர் பரிவ்ராஜகர். எந்த ஊரில் எத்தகைய தங்குமிடம் தற்செயலாய் வாய்க்கிறதோ அதை ஒரு பெருங் கோயிலாகக் கருதுவது கடுந்துறவியின் இயல்பு. விவேகானந்தர் சில நாட்களில் பரம ஏழைகளின் குடிசைகளில் இருப்பார்; வேறு சில நாட்களில் மரத்தடியில் இராத் தங்குவார்; இன்னும் சில நாட்களில் பண்டிதர்களால் வரவேற்கப்பட்டு அவர்களுடன் பாண்டித்திய உலகில் உறைந்திருப்பார்; ஏதோ சில நாட்களில் மன்னர்களின் அதிதியாக அவர்களின் மாளிகைகளில் உடல் வாழ்க்கைக்குரிய எல்லாவிதமான வசதிகளுடன் தங்கியிருப்பார். ஆனால் அத்தகைய மாறுபடுகிற சூழ்நிலைகள் அவருடைய மனதில் எவ்விதமான மாறுதலையும் உண்டுபண்ணமாட்டா. அவருடைய மனது எப்பொழுதும் பாரமார்த்திகப் பெருநிலையிலேயே

உறைந்திருக்கும். அவருடைய திருமேனிமட்டும் பொருந்தியவைகளும் பொருந்தாதவைகளுமாகிய பலப்பல சூழ்நிலைகளில் வதிந்துவரும். எந்தச் சூழ்நிலையில் சரீரம் தங்கியிருந்தாலும் அதைக் கருத்தில் வாங்கிக்கொள்ளாத பாரமார்த்திகப் பெருநிலையானது விவேகானந்தருக்கு யாண்டும் சொந்தமாயிருந்தது. வடகோடியில் ஹிமாலய பர்வதத்தினின்று தென்கோடி குமரிமுனை பரியந்தம் எத்தனை யெத்தனையோ வாசஸ்தலங்களிலும் வனாந்தரங்களிலும் விவேகானந்தர் வதிந்து வருவாராயினர்.

கையில் காசு எதையும் தொடுவதில்லை என்னும் விரதம் பூண்டிருந்தார் விவேகானந்தர். யாரிடத்திலும் எதையும் யாசிப்பதில்லை என்பதும் அவர் பூண்டிருந்த விரதமாகும். தம்மை ஒரு வெறும் சந்நியாசி என்று சொல்லிக்கொள்வதைத் தவிர வேறு எவ்விதத்திலும் உலகுக்குத் தம்மை அவர் அறிமுகப்படுத்துவதில்லை. இன்றைக்கோ அல்லது நாளைக்கோ தமக்கு எது ஆகாரமாக வந்து வாய்க்கப் போகிறது என்பதை அவர் சிறிதும் சிந்தையில் வாங்கிக்கொள்வதில்லை. தற்செயலாய் வந்து சேரும் பிக்ஷான்னத்தை அருந்துவது, அது வந்து வாய்க்காதகாலை அதைப்பற்றி ஒன்றுமே எண்ணாதிருப்பது எத்தகைய துறவிக்குச் சாத்தியமாகும் என்பதை உன்னிப்பார்த்தால்தான் அது ஓரளவு விளங்கும். விவேகானந்தர் அறுசுவையுடன் உணவு அருந்திய நாட்களுண்டு; எளிய உணவை ஏற்ற நாட்களும் இருந்தன; அன்றாடக் கஞ்சிக்கு உழைத்து வந்த மக்கள் நிறைகை அளாவிய கூழ் பருகிய நாட்களுண்டு. அப்படிப் பலதரப்பட்ட உணவுகளை யெல்லாம் அவர் சமதிருஷ்டி பூண்டு அருந்தி வந்தார்; பட்டினிகிடந்த நாட்களும் பலப்பல. அத்தனை விதமான வாழ்வு வேறுபாடுகளுக்கிடையில் அவர் பரம்பொருள் சொரூ

பத்திலேயே ஒன்றித்திருந்தார். அன்னபானமின்றிப் பிருந்தா வனத்துக்கு அண்மையில் அவர் ஒரு வனாந்தரத்தில் போய்க் கொண்டிருந்தபொழுது அவருக்குப் பிக்ஷையளிக்க யாரோ ஒருமனிதன் ஓடோடி வந்தான். ஆனால் தம்மை அணுகுதற்கு இடந்தராது விவேகானந்தர் வேண்டுமென்றே விரைந்து நடந்தார். ஆயினும் அந்த வேற்றான் விவேகானந்தரை அணுகி அவரை வழிமறித்து உணவேற்கும்படி வணங்கி வேண்டியதை இத் துறவி வேந்தன் தெய்வச் செயல் எனக் கருதினர். அன்னவன் படைத்த பிக்ஷையைப் பிரசாதமாக ஏற்றுக்கொண்டார். மற்றுமோர் நிகழ்ச்சி வேறு ஓர் இடத்தில் நேர்வதாயிற்று. இருப்புப்பாதை வண்டி ஒன்றிலே இவர் அன்ன ஆகாரமின்றிப் பட்டினி கிடந்துகொண்டு பிரயாணம் பண்ணியபொழுது விதவிதமான உணவுவகைகளைத் தான்மட்டும் அருந்திக்கொண்டிருந்த வணிகன் ஒருவன் திட்பம் படைத்த இத்துறவி பொருள்படையாதிருந்த பரிதாபகரமான நிலையைப் பகடி பண்ணினன். அச்செயலும் விவேகானந்தருக்குத் தெய்வச் செயலாகவே விளங்கிற்று. இவ் இரண்டுவிதமான நிகழ்ச்சிகளுக்கிடையில் அவருடைய மனது பரத்தில் ஊன்றி நடுவுநின்றது போற்றுதற்குரிய பெருநிலையாம்.

யோகபூமியாகிய பரதகண்டத்தை முற்றிலும் சுற்றிப் பார்த்தான பிறகு போகபூமியாகிய அமெரிக்காவிலும் அவர் சில ஆண்டுகள் வதிந்திருந்து வேதாந்தத்தை எடுத்துத் தக்கார்க்கு வழங்கிவந்தார். அந் நாட்டிலே நாரியர்களுடைய சூழ்நிலையும் போகப் பொருள்களின் பெருமிதமும் எம் மனிதனையுமே மயங்கிடச் செய்வனவாயிருந்தன. இந்திர போகங்களெல்லாம் மண்ணுலகில் வந்து குவிந்து கிடக்கின்றனவென்றால் அதுதான் அமெரிக்கா. ஆனால் அந்தப் போக

பூமியிலும் விவேகானந்தர் யாண்டும் நெறிபிறழாத துறவி வேந்தனுகவே திகழ்ந்து வருவாராயினர். பண்டைக் காலத்தி லிருந்த சுகதேவர் ஏதோ சிற்சில வேளைகளில் மையலூட்டும் சூழ்நிலையில் வதிந்திருந்து அதில் தட்டுப்படாதிருந்தார். ஆனல் சுவாமி விவேகானந்தரோ அமெரிக்காபோன்ற மேல் நாடுகளில் சில ஆண்டுகளாக மையலூட்டும் சூழ்நிலையில் மயங்கிடாதிருந்தார். தீர்க்கதரிசி ஒருவருக்கே அவ்விதம் பெருநெறி பிடித்தொழுகுவது சாத்தியமாகும்.

துறவி ஒருவன் உடல் தாங்கி உலகில் வாழ்ந்திருப் பதை விழைவதில்லை; உடலை உகுத்துவிட்டு மாய்ந்து போவதை முன்னிட்டு அவன் மருளுவதும் இல்லை. வாழ்ந் திருப்பதையும் அழிந்துபட்டுப் போவதையும் சமதிருஷ்டி யுடன் காண்பவனே நல்ல துறவியாகிறுன். சுவாமி விவே கானந்தருக்கு இந்தியாவிலும் மேல் நாடுகளிலும் சுகஜீவ னத்துக்கு ஏதுவான சூழ்நிலைகள் வாய்த்திருந்தன. ஆனல் அவைகளிடத்து அவர் சிறிதேனும் பற்று உடையவராகத் தென்படவில்லை. இமயமலையில் நோய்வாய்ப்பட்டு பிரக்ஞை இழந்து அவர் சாகும் தறுவாயிலிருந்தார். அப்படிச் சாவதை எண்ணி அவர் சிறிதேனும் சஞ்சலப்படவில்லை. இங்கிலாந்திலே ஒரு கிராமத்திலிருந்த கழனி ஒன்றிலே காளைமாடு ஒன்று மூர்க்கத்தனமாக இவரைத் தாக்க விரைந்தோடி வந்தது. அதனிடத்திருந்து தப்பித்து ஓட அவர் எண்ணங்கொள்ளவில்லை. காட்டெருமை போன்ற அக்காளையானது தம்மை வந்து தூக்கி எறிந்தால் தாம் எவ் விதம் தலைகீழாகக் குப்புற விழவேண்டி நேரிடும் என்பதை நகைச்சுவையோடு அவர் எதிர்பார்த்து நின்ருர். ஆனல் தாம் ஆயத்தமாயிருந்ததற்கேற்ப இவர் தாக்குண்டு சாக வில்லை. ஏனென்றுல் இவரைத் தாக்க வந்த காளை இவரை

ஏறிட்டுப் பார்த்து விட்டு ஓட்டம் பிடித்தது. மரணபயம் உலகத்தவனுக்கு உண்டு. ஞானிக்கோ வாழ்வதும் சாவதும் ஒன்றே. இருப்பதையும் இறப்பதையும் ஒரே பாங்குடன் கருதி வந்தார் விவேகானந்தர்.

இக்காலத்திய உலகம் லௌகிகத்தில் ஊறிக் கிடக்கிறது. சந்நியாச ஆச்ரமத்துக்கு ஏற்ற மரியாதை காட்டும் காலம் இது அன்று. கால நிலைக்கு ஒப்பத் தகுதி வாய்ந்த சந்நியாசிகளைக் காண்பதும் அரிதிலும் அரிதாய்ப்போயிற்று. இத்தகைய விபரீதமான உலகிலே துறவி ஒருவனுடைய தகைமையை உலகத்தவர்க்கு உள்ளத்தில் ஊன்றிப் பதியும் படி இடித்துக்காட்டும் பொறுப்பு விவேகானந்தப் பெருந் தகைக்கு ஏற்பட்டிருந்தது. உலகத்தவர் தாம் தாம் படைத்துள்ள பதவிகளைக் குறித்துப் பெருமை பாராட்டுவது போன்று துறவறத்தைக் குறித்து விவேகானந்தர் யாண்டும் பெருமை பாராட்டி வந்தார். அந்த ஆச்ரமத்தின் பவித்திரத்தை அறிந்து கொள்ளாதவர்கள் அதை அலட்சியப் படுத்திய பொழுதெல்லாம் அதன் மகோன்னத நிலையை அவர் மாந்தர்க்கு எடுத்துக்காட்டி வந்தார். சமயங்கள் அனைத்தும் நேராகவோ, மறைமுகமாகவோ துறவுக்கே வழிகாட்டி வருகின்றன என்பது விவேகானந்தரது துணிபு. புலனடக்கம் பழகாது உலக போகங்களில் உழன்றுகொண்டிருந்தவர்களைக் கயவர்கள் என அவர் ஒதுக்கி வைத்தார். அழுகிப் போகிற பிணம் ஒன்றன்மீது பூக்களைச் சொரிந்து மூடிவைப்பதில் பயனென்றுமில்லை. அழுகிய புண் ஒன்றைத் தங்கத்தகட்டால் மூடி வைப்பதில் நலன் ஒன்றுமில்லை. அதே விதத்தில் உடலின் மூலம் நுகரும் இன்பத்தை எவ்வளவுதான் தூக்கி வைத்துப் பாராட்டினாலும் அதில் சிறப்பு ஒன்றுமில்லை. உடல் இன்பத்தைத் துறக்கத் தெரிந்து

கொண்டவனே மேன் மகன் ஆகிருன் என்பது விவேகானந்தரது சீரிய சித்தாந்தம். தூய பாரமார்த்திக வாழ்வு வாழ முயலாதவன் மானுடன் அல்லன் என்று அவனை அவர் ஒதுக்கி வைத்தார்.

தாம் பூண்டிருந்த துறவறத்துக்கு ஒப்ப சுவாமி விவேகானந்தர் சிருஷ்டி முழுதையும் தெய்வ சொரூபமாகக் கருதி வந்தார். அப்படிக் கருதுவதற்கிடையில் உயிர் வகைகள் அனைத்திடத்தும் ஒரே விதமான இணக்கம் அவர் வைத்திருந்தார் என்று நாம் கருதலாகாது. ஸ்ரீ ராமகிருஷ்ணர் கோட்பாட்டின்படி புலி நாராயணனுக்கு எட்ட இருந்து நமஸ்காரம் செய்யவேண்டும். சமுதாயத்திலுள்ள போக்கிரி நாராயணனிடத்து அவனுடைய தரத்துகேற்ற நடவடிக்கை யெடுத்துக் கொள்ளவேண்டும். நாடாளும் வேந்தர்களோடு விவேகானந்தர் எத்தகைய இணக்கம் வைத்திருந்தார் என்பதையும் நாம் அறிந்துகொள்ள வேண்டும். நெறி பிறழாது நேர்மையாக ஆட்சிபுரிந்த கேத்திரி மகாராஜா போன்றவர்களை ராஜ ரிஷிகளுக்கு ஒப்பானவர்கள் எனக் கருதி அன்னவர்களை அவர் பாராட்டினர். ஆனல் நெறி வழுவியிருந்த மன்னர்களிடத்து அவர் மிகக் கண்டிப்பாக நடந்து கொண்டார். துறவிக்கு வேந்தன் துரும்பு என்பது கோட்பாடு. வேந்தர்களையெல்லாம் வேண்டுமென்றே துரும்பு போன்று அலட்சியப்படுத்த வேண்டும் என்பதன்று அதன் கருத்து. பொதுப்பட வேந்தனிடத்து உலகத்தவர் வணங்கி நடந்துகொள்வார்கள். வேந்தனிடத்துள்ள குறைபாட்டைத் துணிந்து அவர்கள் வாய்விட்டுப் பேச மாட்டார்கள். ஆனல் ஆள்வார் மகாராஜர் தமது நாட்டின் ஆட்சியைச் சரியாகக் கவனிக்கவில்லையென்று அறியவந்த சுவாமிகள் அவரைத் திருத்தியமைக்கின்ற முறை

முறையில் திரஸ்கரித்தார். மைசூர் சமஸ்தானத்தில் விவே கானந்த சுவாமிகள் மன்னனது அதிதியாயிருந்தபொழுது ராஜ நேசர்களைப் பற்றி அவர் கருதியது யாது என்று அப் பொழுதிருந்த மைசூர் மகாராஜா வினவினர். 'ராஜநேசர்கள் யாண்டும் ராஜநேசர்களே! அரசனைப் புகழ்ந்து பேசித் தங்கள் சொந்தக் காரியங்களை நிறைவேற்றிக் கொள்வது ராஜநேசர்களுடைய போக்கு' என்று துறவி வேந்தன் பகிரங்கமாக எடுத்துரைத்தார். அப்படிப் பேசுவது தமது உயிருக்கே ஆபத்தாக வந்து முடியலாம் என்று மகாராஜா வானவர் சுவாமிகளைத் தனியாக அழைத்து எடுத்துரைத் தார். "வேந்தே, உயிருக்கஞ்சி துறவியொருவன் உள்ளதை உள்ளவாறு எடுத்துரைக்காது மூடி வைப்பது பொருந்தாது" என சுவாமிகள் விடை விடுத்தார்.

மனோதத்துவத்தைப் பற்றிய விந்தையொன்றை உலகம் எளிதில் அறிந்துகொள்வதில்லை. மனம் ஒடுங்குமிடத்து உலகம் மறைகிறது. மனிதன் அபிமானத்தோடு பற்றிப் பிடித்திருக்கிற உலகம் முற்றும் மனதைச் சார்ந்திருக்கிறது. அயர்ந்த உறக்கத்தில் மனது செயலற்றிருக்கிற பொழுது அவன் ஆழ்ந்து பற்றிப் பிடித்திருக்கிற உலகம் போனவிடம் அவனுக்கு விளங்குவதில்லை. அப்படியிருந்தும் அந்த நிலை யற்ற உலகை அவன் நாடியலைந்து திரிவதுதான் விந்தையுள் விந்தை. பல பிறவிகளுக்கு வித்தாயிருப்பது மனது. ஓர் உடலை உகுத்தான பிறகு மற்றோர் உடலை உள்ளம் எடுத்துக் கொள்கிறது. மனதில் உண்டாகிற மாறுதலுக்கு ஏற்பப் புதிதாக எடுக்கிற உடலும் மாறியமைகிறது. ஜீவன் ஒரு வன் மனிதனாகவோ அல்லது பறவையாகவோ விலங் காகவோ பிறப்பது மனநிலையைப் பொறுத்திருக்கிறது. விவேகம் படைத்த மனிதன் தனது மனதை ஓர்ந்து ஆராய்

கிருன். மனேவேகம் இருக்கும் வரையில் பிறவிக்கு ஓய் வில்லே. மனதுக்கு வேகம் கொடுப்பது ஆசை. அந்த ஆசையை அழித்தால் மனது ஒடுங்குகிறது. மனதை முற்றி லும் ஒடுக்கி ஒதுக்கி வைப்பது துறவறத்தின் முடிந்த செய லாகும். மனதற்ற நிலேயே பரிபூரணநிலே. மனது உற்றநிலே வியவகாரங்களுக்கு இடங்கொடுக்கிறது. மனது அற்று இருப்பதும் மனது உற்று இருப்பதும் விவேகானந்த சுவாமி களுக்கு விளேயாட்டுப் போன்றது. விரும்பிய மாத்திரத்தில் தமது மனதை ஒரு நொடிப்பொழுதில் ஒதுக்கி வைத்து விட்டுப் பாரமார்த்திகப் பெருநிலேயில் மூழ்கி அவர் திளேத் திருப்பார். மீண்டும் தமது மனதை அவர் செயலுக்குக் கொண்டு வரும்பொழுது அதை உலக நன்மையின் பொருட்டே பயன்படுத்தினர். அங்ஙனம் அவரது துறவு வாழ்வு இகம் பரம் ஆகிய இரண்டுக்கும் முற்றிலும் பொருந் தியதாகத் திகழ்ந்து வந்தது. துறவியர்களுள் அவரைத் தான் துறவி வேந்தன் என்று போற்ற வேண்டும்.

3. தவராஜன்

மனிதன் மேலாம் வாழ்க்கையுள் செல்லுதற்குத் தவம் ஒன்றே உற்ற உபாயமாகிறது. மதங்கள் அனைத்திலும் தவம் இழைத்தலைப் பற்றிய கோட்பாடு வெவ்வேறு விதங் களில் அமைந்திருக்கிறது. தவத்துக்குத் தேவர் கொடுத் துள்ள விளக்கங்களுள்

தவம் செய்வார் தம்கருமம் செய்வார் மற்றல்லார்
அவம்செய்வார் ஆசையுள் பட்டு

என்பது ஒன்று. இக்கோட்பாட்டைச் சரியாக அறிந்து கொள்ளுதல் அவசியம். தம் கருமம் எது என்பது முதல் கேள்வி. மனிதன் உண்மையில் ஆத்ம சொரூபம். அவன் உடல் சொரூபம் அல்லன். உடலைப் பேணுதல், உடலின் வாயிலாக இன்பத்தைப் பெறுதல் ஆகியவைகள் அவமாகும். அது முற்றிலும் அக்ஞானத்தினின்று பிறந்துள்ள ஆசையின் விளைவு ஆகும். பெருந்துன்பத்தில் அச்செயல் மனிதனைக் கொண்டு சேர்க்கும். தன் ஆத்ம சொரூபத்தை மனிதன் அறிந்து அதை இறைவனோடு இணைத்து வைக்கச் செய் கின்ற செயலே நல்ல தவம் ஆகிறது. விவேகானந்த சுவாமி கள் அந்த நல்ல தவத்தையே உடல் தாங்கியிருந்த கால மெல்லாம் செய்து வந்தார்.

தம் கருமம் என்பது விவேகானந்தர் விஷயத்தில் இன் னும் பரந்த கருத்துடையதாயிருக்கிறது. பரமஹம்ஸதேவர் பகர்ந்துள்ளபடி தாம் உய்வதற்காகவென்று விவேகானந்தர் உலகில் உடலெடுத்து வந்தவர் அல்லர். உலக மக்களை உய் விக்கவந்தவர் அவர். ஆதலால் உலகத்தவரை உயர்நிலைக் குக்கொண்டு வருவதே அவர்க்குரிய கர்மமாயிருந்தது. கண் ணனுக்குக் கோபாலன் என்பது ஒருபெயர். ஆடு மாடுகளைக்

காப்பாற்றுபவன் என்றும் ஆத்மாக்களைக் காப்பாற்றுபவன் என்றும் அப்பெயர் பொருள்படுகிறது. ஆட்டு இடையன் அக்கறையுடன் ஆடுகளைக் காப்பாற்றி வருகின்றான். அப்படிச் செய்வது அவன் கர்மம். அது அவன் புரிகிற தபசு ஆகிறது. உலகிலுள்ள மாந்தரை உய்விப்பது கோபாலனுக்கு அமைந்துள்ள பெருங்கடமையாயிற்று. ஒருவிதத்தில் விவேகானந்தருக்கும் அதே கடமை வந்து வாய்த்தது. ஆதலால் அவரையும் கோபாலன் என்று அழைப்பது பொருந்தும். உலகில் ஆங்காங்குள்ள ஆத்மாக்களைப் பரிபக்குவப்படுத்தி உயர் நிலைக்கு அவர்களை எடுத்து உய்வித்தது விவேகானந்தருடைய கருமமாயிற்று. அதை அவர் செவ்வனே செய்து முடித்தார். ஆதலால் அது அவர் புரிந்துவந்தது அரும்பெரும் தவமாகும். உலக ஆசை எதற்கும் அவர் உட்படவில்லை. ஆதலால் அவம் செய்வதற்கும் அவருக்கும் வெகுதூரம். தவத்தின் வடிவாகத் திகழ்ந்தவர் விவேகானந்தர்.

தவம்புரிதல் என்னும் தெய்விகச் செயலை மக்களுள் பெரும்பான்மையோர் முறைதவறிப் பொருள்படுத்துகின்றனர். உடலை வாட்டுதல், இந்திரியங்களை ஒறுத்தல் ஆகிய கொடூரச் செயல்கள் தவம் என அவிவேகிகளால் கருதப்படுகிறது. விவேகானந்தர் புரிந்த தவத்தை அறிந்துகொள்பவர் தவத்தின் நேரான பாங்கையும் அறிந்துகொண்டவர் ஆவர். தவம்புரிதலில் இடையறாப் போராட்டம் நிறைந்திருக்கிறது என்றும் மாந்தார் கருதுகின்றனர். ஆனால் விவேகானந்தருக்குப் போராட்டமென்பது ஏதும் இல்லை. தமது பாரமார்த்திகப் பெருநிலையில் இயல்பாக அவர் இன்புற்று அமர்ந்திருந்ததே அவர் புரிந்த தவமாயிற்று. தமது சொருபத்துக்கு அவர் யாண்டும் அதிபதியாயிருந்து வந்தார். அவருடைய கருவிகரணங்கள் அவருடைய ஆணையை மீறி

நெறிவழுவிப் போகமாட்டா. அவைகளை நன்கு ஆண்டு வந்தது அவர் புரிந்த தபசு. ஸ்ரீ ராமகிருஷ்ண பரமஹம்சருடைய திருவடிகளில் அமர்ந்துகொண்டு அவர் தம் தெய்வீகப் பெற்றியில் சொக்கியிருந்தார். பின்பு வாரநகர் மடத்தில் வாழ்ந்திருந்தபோதும் அப்பெருநிலையிலேயே உறுதியுடன் அவர் ஊறியிருந்தார். தொடர்ந்து தேச சஞ்சாரம் செய்த பொழுதும் அப்பாரமார்த்திகப் பெருநிலையே அவரது சொந்த இயல்பாக இலங்கிற்று. இந்திரிய நிக்கிரகம் என்பது சாமானியமான சாதகர்களுக்குச் செயற்கரிய செயலாயிற்று. ஆனால் விவேகானந்தருக்கோ இந்திரிய நிக்கிரகம் உயிர் வாழ்க்கை போன்று மிக எளியதாய் அமைந்திருந்தது. தூய்மையில் நிலைநிற்க அவர் பாடுபடவில்லை. அவருடைய சொரூபமே தூய்மைக்கு விளக்கமாயிற்று. தூய்மையே வடிவெடுத்திருந்த விவேகானந்தரிடமிருந்து அறச்செயல் அல்லது தர்மம் தானாக உருவெடுத்து வந்தது. ஏதேனும் ஒரு செயல் மனத்தகத்துக் கோணல் எதையேனும் உண்டுபண்ணுமாகில் அல்லது தெய்வீகக் காட்சிக்கு அது ஊறு செய்யுமாயின் இடுக்கணாக அமைந்துள்ள அச்செயலே அதர்மம் என விவேகானந்தரால் கருதப்பட்டடது. அவர் கருத்துப்படி வீண்கர்வம் கொள்வது, சினந்து கொள்வது, வெறுப்பது, விழைவது, அதர்மமாகும். அத்தகைய பொருந்தாத மன நிலைகளெல்லாம் மனதை மாசுறச் செய்கின்றன. உலக மக்கள் எவ்வளவுக்கெவ்வளவு காமத்தையும் காசு ஆசையையும் துடைத்து வைக்கிறார்களோ அவ்வளவுக்கவ்வளவு அவர்கள் தவ நெறியில் நிலைத்திருப்பவர்கள் ஆகின்றனர் என்பது விவேகானந்தரது கோட்பாடு. அப்பெருநிலையை நோக்கி வரும்படி உலக மக்களை அவர் தூண்டியதும் அவர் புரிந்த தவமாகும். மனதிலே உதிக்கின்ற ஆசைகள் அனைத்தும் பாரமார்த்திகப்

பெருநிலைக்கு உகந்தவைகளாக இருக்க வேண்டும். பெரு நிலையுடன் ஒத்திருக்கிற ஆசைகளை வளர்ப்பதும் தவமாகும் என்பது இத் தவராஜரது கோட்பாடு. பரமாச்சாரியன் ஒருவன் தூய்மைக்கு இருப்பிடமாக இலங்கவேண்டும். உள்ளத்தினுள்ளே புதைந்து கிடக்கிற சிற்றியல்பு எதனேடாவது ஒருவன் போராடிக்கொண்டிருக்கும்பொழுது அவன் ஆச்சாரிய ஸ்தானத்தை வகிக்கத் தகுதியற்றவனுகிருன். உள்ளத்தினுள் இருக்கும் சிற்றியல்புகளையெல்லாம் துடைத்துத் தள்ளுவது விவேகானந்தர் வகுத்துள்ள தவமாகும்.

பஞ்சேந்திரியங்கள் மூலமாக நுகரும் இன்பம் இரண்டு படித்தரங்களில் இருக்கிறது. ஒன்று உடலை ஒட்டியது; மற்றது ஆத்ம சொரூபத்தோடு சம்பந்தப்பட்டது. உடலை ஒட்டிய இன்பங்களையெல்லாம் விவேகானந்த சுவாமிகள் தவ நெறிக்கொவ்வாதவைகள் எனத் தள்ளி வைத்தார். பஞ்சேந்திரியங்கள் வாயிலாக ஆத்மானந்தத்தை அணுகுவது சாத்தியம். அத்தகைய ஆனந்தத்தை அவர் முற்றிலும் ஆதரித்தார். அழகுக்கு உண்மையான உறைவிடம் ஆத்ம சொரூபம். ஆத்மாவின் அழகை உடலின் மூலமாக உணர்ந்து ரசிக்கலாம். ஆனல் உடல் அழகில் உழல்வது தவசியின் போக்கன்று என அவர் கருதினர். உடலில் அழகைக் கண்டு அதை ரசிக்கிறவன் அவ் அழகைத் தனக்குரியதாக்க முயலுகிருன். ஆனல் ஆத்ம சொரூபத்தில் அழகைக் காண்பவன் உரிமை ஒன்றும் பாராட்டுவதில்லை. "பிரபஞ்சத்தில் தென்படும் அனைத்துக்கும் அழகை நல்குபவன் ஆத்ம சொரூபியாகிய நான்" என்பது இறைவனுடைய கோட்பாடு. வெறும் தோற்றமாயிருக்கிற பாகிய பிரபஞ்சத்தின்கண் இவ்வளவு அழகு பொலிகிறது என்ருல் அதற்கு மூல வஸ்துவாயிருக்கும் ஆத்மாவின் அழகு இன்னும் எவ்வளவு பெரியது என்பதை

உணர்வது தபசு ஆகும். உண்மையில் ஆத்மாவே அழகன். ஆத்மாவின் அழகு இயற்கையில் மிளிர்கிறது. ஆத்மனே அழகன் என்று உணர்வது தபசு.

இயற்கையில் எதையும் வெறுத்து அதினின்று விலகி யிருப்பது தபசு ஆகாது. மனிதனை மயக்கிக் கெடுக்கக் கூடியது இயற்கையில் ஒன்றும் இல்லை. பார்க்கின்ற அனைத்தையும் பரம்பொருள் சொரூபமாக உணர்பவனை எதுவும் கெடுக்கமாட்டாது. இயற்கையை அவர் ஒதுக்கித் தள்ளவில்லை. அவருடைய கருத்துப்படி உடலையும் இந்திரி யங்களையும் ஒறுப்பதில் பயன் ஒன்றுமில்லை. உள்ளத்தைத் திருத்தியமைப்பது தபசு. உலகில் தீமை இருக்கிறதென்று எண்ணுபவன் தீமையை உண்டுபண்ணுகிறான். தீமை எதையும் எண்ணுதிருப்பது தபசு. கொடியவைகளுள் காம நோய் மிகக்கொடியது என்பது உலகத்தவர்களது கொள்கை. ஆனால் பரம்பொருளை நோக்கிப் பெருங் காமம் கொண்டிருப்பது தவம் என்பது சுவாமிகளது கருத்து. ஊசி காந்தத்தைச் சார்ந்திருப்பதுபோன்று மனதானது சர்வகாலமும் பரம்பொருளை நாடியிருப்பது தவம் என இத்தவராஜர் கருதுவாராயினர். ராமன் உள்ள இடத்தில் காமன் இல்லை; காமன் இருக்குமிடத்தில் ராமன் இல்லை என ஸ்ரீ ராமகிருஷ்ணர் பகர்வதுண்டு. சுவாமி விவேகா னந்தர் சர்வகாலமும் ராம நாட்டத்திலேயே திளைத்திருந்த தனால் காமனுக்கு அவருடைய உள்ளத்தைப் பற்றிப்பிடிக்க இயலாது போயிற்று. யாண்டும் வெளிச்சத்தில் இருப்பவன் இருளோடு போராடுவதில்லை. அங்ஙனம் பாரமார்த்திகத் தில் ஊறியிருக்கும் தவசிக்குச் சிற்றியல்போடு போராட வேண்டிய நிர்ப்பந்தம் வருவதில்லை. சாதாரணமாகத் தவ சிகள் எனக் கருதப்படுபவர்கள் சர்வகாலமும் தங்களுடைய

சிற்றியல்போடு போராடிக்கொண்டிருப்பவர் ஆகின்றனர். அப்போராட்டத்தில் வெற்றியும் தோல்வியும் அவர்களுக்கு மாறிமாறி அமைகின்றன. ஆனால் சுவாமி விவேகானந்தரோ பரத்தை நினைத்துப் ப ர த் தி லே யே ஊறியிருந்ததினால் போராட்டம் அவருக்குப் புறம்பாய்ப் போயிற்று.

தவமும் தவமுடையார்க்கு ஆகும் என்பது ஐதிகமாக வந்துள்ள கொள்கை. ஆனால் சுவாமி விவேகானந்தரோ தவமும் ஆற்றல்மிகப் படைத்திருப்பவனுக்கே ஆகும் எனக் கருதி வந்தார். உறுதியற்றவனை சிற்றியல்பு தோற்கடிக்கிறது. ஆனால் முற்றிலும் உறுதி படைத்திருப்பவனிடம் சிற்றியல்பு தலையெடுப்பதில்லை. உறுதிப்பாடே வடிவெடுத்திருப்பது தவம் என இத் தவராஜர் கருதிவந்தார். உறுதி படைத்திருப்பவன் உலகில் எதற்கும் அஞ்சுவதில்லை. மெலிந்திருப்பவனே மருண்டு ஓடவேண்டியதாகிறது. மருண்டோடியும் அவன் தோல்வியுறுகிறான். நல்லார் பொல்லார் ஆகிய எல்லாருடனும் சின்னஞ்சிறு வயதிலிருந்தே விவேகானந்தர் பழகிவந்தார். பொல்லாருடன் கூடியிருந்ததைக் குறித்து இவரும் கீழ்நிலைக்கு இறங்கியுள்ளார் என்று பலர் பொருள் படுத்தினர். பரமஹம்ஸ தேவரிடத்தும் இவர் செயலைப் பரிந்து பேசினர். ஆனால் எந்தச் சூழ்நிலையிலிருந்தாலும் நரேந்திரன் கீழ்நிலைக்கு இறங்கி வரமாட்டான் என்று ஸ்ரீ ராமகிருஷ்ணர் உறுதி கூறினார். பிறகு தமது இயல்பைக் குறித்து விவேகானந்த சுவாமிகளே பகர்ந்திருக்கிறார். அவர் மாணாக்கராயிருந்தபொழுது கல்கத்தாவில் சிறு நெறிக்குப் பெயர் பெற்றிருந்த சில வீதிகள் பக்கம் கால் எடுத்து வைக்கமாட்டார். ஆனால் நாளடைவில் தாம் பெற்றிருந்த உறுதிப்பாட்டைக் குறித்து “இப்பொழுது நான் வேசிகள் வசிக்கும் அதே வீட்டில் குடியிருக்க முடியும். அப்படிக்

குடியிருப்பதற்கிடையில் அவர்களுடைய வாழ்க்கை முறையைப் பற்றி அலட்சியப்படுத்தும் எண்ணம் எதையுமே எண்ணுதிருக்கும் திறமை எனக்குண்டு" எனத் தெரிவித்தார். தவமே உருவெடுத்தவர் விவேகானந்தர். அவர் தவத்தில் எதிர்மறைச் செயல் எதுவும் இடம்பெறவில்லை. தெய்விகத்தில் திளைத்திருந்ததே அவர் புரிந்த தவமாகும்.

சுவாமி விவேகானந்தர் அமெரிக்காவில் வாழ்ந்திருந்த பொழுது அவருடைய போக்கு சில வேளைகளில் அந்நாட்டு மக்களுக்கு இக்கட்டை உண்டுபண்ணக் கூடியதாய் இருந்தது. இயல்பாக அவருடைய மனது பாரமார்த்திகத்தில் தைலதாரை போன்று போய்க்கொண்டிருந்தது. மற்றவர்களோடு பேசிக்கொண்டிருப்பதற்கிடையில் அவர் மனது ஆழ்ந்து அந்தர்முக திருஷ்டியில் மூழ்கிப்போம். அப்பொழுது என்ன செய்வதென்று தெரியாது அமெரிக்க அன்பர்கள் திகைத்திருப்பார்கள். அவரைப் பார்த்து அவரோடு உரையாட ஏற்கனவே ஏற்பாடு செய்துள்ள சில அன்பர்கள் வந்து சேர்வார்கள். ஆனல் சுவாமிகளின் சன்னிதிக்கு வந்ததும் அவர்கள் திகைத்துப் போவார்கள். சுவாமிகளின் மேனி அவர்கள் முன்னிலையில் கம்பீரமாக வீற்றிருந்தது. ஆனல் அவருடைய மனதோ அதீதத்தில் எங்கேயோ ஆழ்ந்து கிடக்கும். அவரைப் பார்த்துப் பிரமித்த வண்ணமாக வந்தவர்கள் காத்துக்கொண்டிருப்பார்கள். அது அவர்களை அலட்சியப்படுத்திய செயல் அன்று. ஆனல் யாண்டும் அதீதத்தில் திளைத்திருப்பது விவேகானந்தரது இயல்பு. மக்கள் நலத்தின் பொருட்டு அவர் வலிந்து இடையிடையே கீழ்நிலைக்கு இறங்கி வருகிருர் என்பதை நாளடைவில் அவர்கள் அறிந்துகொண்டனர். இன்னும் சில வேளைகளில் அவரைக் காண வந்தவர்கள் அவர் முன்னிலையில் தாமாக

மௌனம் சாதிக்கத் தொடங்குவார்கள். ஏனென்றால் சுவாமிகள் மௌனமுற்று இருந்தபொழுது அவருடன் பேச்சு எதையும் பேச யாருக்குமே நா எழாது. அவரது தவ வலிவு அத்தகையது.

ஆத்மசாதகன் ஒருவன் சதா தன்னைப் பண்படுத்தும் செயல் தவம் எனக் கருதப்படுகிறது. தவம் புரிகின்றவனுக்கும் சமுதாயத்துக்கும் தொடர்வு எதுவும் வாய்ப்பதில்லை. இதுவே தொன்று தொட்டு வந்துள்ள தவ வாழ்வின் போக்கு ஆகும். ஆனால் சுவாமி விவேகானந்தர் இம்முறையைச் சற்றுத் திருத்தியமைக்கின்றார். தத்துவப்படி தனி வாழ்க்கைக்கும் சமுதாய வாழ்க்கைக்கும் இடையில் வேற்றுமை சிறிதும் இல்லை. இவையிரண்டும் ஒன்றையொன்று சார்ந்திருக்கின்றன. ஆதலால் சுவாமிகள் தவ வாழ்வைச் சமுதாய வாழ்வோடு இணைத்து வைக்கின்றார். அவருடைய சிஷ்யர்களில் ஒருவர் சுவாமி கல்யாணனந்தர். அவர் கல்லூரியில் மருத்துவப் பயிற்சி பெற்று டாக்டர் உத்தியோகத்துக்கு ஆயத்தமானவர். அவர் கற்றிருந்த கல்வியை ஆத்ம சாதனத்துக்கும் சமுதாய சேவைக்கும் பயன்படுத்தும்படி சுவாமி விவேகானந்தர் அவரைத் தூண்டினர். காசியிலே விருத்தாப்பிய தசையில் நோய்வாய்ப்பட்டுக் கிடந்தவர்களுக்கு மருத்துவப்பணிவிடை செய்வதைத் தவமாக ஏற்றுக்கொள்ளும்படி தம் சிஷ்யனை அவர் தூண்டினர். குகைக்கும் ஏகாந்த வாசத்துக்கும் சென்று ஐம்பொறிகளை அடக்கி ஆத்ம சொரூபத்தில் ஊறியிருப்பது தவமென இதுகாறும் கருதப்பட்டு வந்துள்ளது. நோய்வாய்ப்பட்டிருக்கும் நரர்களை நராயண சொரூபமாகக் கருதி அவர்களுக்கு மருத்துவப் பணிவிடை செய்வதில் ஐம்பொறிகளைப் பயன்படுத்துவதும் தவமாகும் என அவர் புகட்டியருளினர். சிஷ்யரும் இப்

புதிய கோட்பாட்டைத் தீவிரமாகப் பழக்கத்தில் கொண்டு வந்தார். தவம் புரிந்து பெறுகிற முன்னேற்றத்தை மக்களுக்குப் பணிவிடைசெய்து அவர் பெறுவாராயினர். அவர் புரிந்த பணிவிடையானது நோயாளிகள் பலர்க்கு நன்கு பயன்பட்டது அத்தவத்தின் புதிய பயனாகும். தனி நலன் பொது நலனை யாண்டும் அடிப்படையாகக் கொண்டுள்ளது என்பது வேதாந்தக் கோட்பாடு. பேச்சளவிலிருந்த இக்கோட்பாட்டை நடைமுறையில் கொண்டுவந்து காட்டியவர் சுவாமி விவேகானந்தர்.

---

4. யோகீசுவரன்

மக்களுடைய உடல் வாழ்க்கையை மூன்று படித்தரங்களில் பிரித்து வைக்கலாம். அம்மூன்றும் முறையே மானுட வாழ்க்கையின் பண்பை ஒட்டியிருக்கின்றன. அம்மூன்று படித்தரங்களுக்கும் பொருத்தமான பெயர்கள் மூன்று அமைந்துள்ளன. ரோகம், போகம், யோகம் என்பன அம் மூன்று பெயர்கள். ரோகத்துக்கு ஆளாயிருப்பவன் ரோகி என்று அழைக்கப்படுகிறான். ரோகம் என்பது நோய். அது உடலையும் உள்ளத்தையும் சார்ந்திருக்கிறது. நோய்வாய்ப் பட்டிருக்கிறவனுக்கு வாழ்வு துன்பம் நிறைந்ததாயிருக்கிறது. நோயைக் களைந்தாலொழிய இன்பத்தை ரோகி அனுபவிக்க முடியாது. போகி என்பவன் போகத்தில் ஈடு பட்டவன். எது போகம் என்பதை இப்பொழுது நாம் அறிந்துகொள்ள வேண்டும். பஞ்சேந்திரியங்கள் வாயிலாக அடைகிற உடல் இன்பம் போகம் எனப்படுகிறது. போகம்

யாண்டும் இன்பமாகத்தொடங்கித் துன்பமாகமுடிவுறுகிறது. போகியானவன் ரோகியை விட சற்று உயர்ந்த நிலையில் இருக்கிறான். ஆனால் தலையாய நிலையிலிருப்பவன் யோகி. யோகத்தை அனுஷ்டிக்கிறவன் யோகி என அழைக்கப்படுகிறான். எது யோகம் என்பதை இப்பொழுது நாம் ஆராய வேண்டும்.

பொறிவாயில் ஐந்தவித்தான் பொய்தீர் ஒழுக்க
நெறிநின்றார் நீடுவாழ் வார்

என்பது பொய்யாமொழி. யோகத்தை விளக்குதற்கும் இப் பொய்யாமொழி பயன்படுகிறது. ஐப்பொறிகளுக்குச் சுக ஜீவனத்தில் செல்ல அனுமதி கொடுத்திருக்கிறவன் போகி. ஐம்பொறிகளைச் சிற்றின்ப வாழ்வில் செல்லவிடாது தடுத்து ஆளுபவன் யோகி. ஐம்பொறிகளை அடக்கி ஆளுமளவு யோகியானவன் அலாதியான ஆத்மசக்தியைப் பெறுகிறான். அவனுடைய வாழ்வு இன்பகரமாகத் தொடங்கி இன்பத்திலேயே நிலைபெற்றிருந்து, பேரின்ப சொரூபமாகப் பூர்த்தியாகிறது. மானுடனாகப் பிறந்துள்ள ஒருவன் யோகத்தை முறையாக அனுஷ்டிப்பானாகில் அவன் செயற்கரிய செயலைச் செய்தவன் ஆகிறான். ஐம்பொறிகளை அடக்கி ஆளுதற்கேற்ப பரஞானத்துக்குரிய பக்குவம் யோகிக்கு வருகிறது.

तां योगमिति मन्यन्ते स्थिराम्
इन्द्रिय धारणां अप्रमत्तस्तदा भवति

தாம் யோகமிதி மன்யந்தே ஸ்திராம்
இந்த்ரிய தாரணும் அப்ரமத்தஸ்ததா பவதி

என்பது யோகத்தைப் பற்றிய உபநிஷத வாக்கியமாகும். பஞ்சேந்திரியங்களைப் பாங்குடன் அடக்கி ஆளுதலே யோகம் எனப்படுகிறது. அதை அனுஷ்டிக்கிறவன் மயக்கம்

தெளிந்து ஞானவான் ஆகிறான். இப்படி யோகி ஆவதே மானுட வாழ்க்கையின் சீரிய குறிக்கோளாகும்.

சுவாமி விவேகானந்தர் பிறந்தது முதற்கொண்டு ஒரு தீவிர யோகியாகத் திகழ்ந்து வந்தார். பூர்வஜன்ம வாசனை யென்றே அவருடைய போக்கைப் பகரவேண்டும். அவர் விளையாட்டுப் பிள்ளையாயிருந்தபோது தியானம் பயிலுவது அவருக்கு மிக விருப்பமான விளையாட்டாய் இருந்தது. அவர் விளையாட்டாகச் செய்த தியான நிலையை எட்டுதற்கு எத்தனை யெத்தனையோ யோக சாதகர்கள் அல்லும் பகலும் முயன்று வருகின்றனர். தியானம் எல்லார்க்கும் எளிதில் கைகூடுவதன்று. மனது கட்டுக்கடங்காத காட்டுக் குதிரை போன்று புறவுலகிலுள்ள போகப் பொருள்களை நாடி ஓடும் தன்மையுடையது. சாதாரண மக்கள் பல ஜன்மாந்தரங்களில் தங்கள் மனதைப் புறவுலகில் உலவவிட்டு வைத்தவர்கள் ஆகின்றனர். யோகப் பயிற்சியில் ஈடுபடும்பொழுது, புறத்தில் ஓடுகிற மனதை அகத்துக்குத் திருப்பும் பொழுது, அது உள்ளே அடங்கியிருக்க மறுக்கிறது. அதனால் போராட்டம் வருகிறது. இது யோக சாதகர்கள் காணும் அனுபவமாகும். ஆனால் சுவாமி விவேகானந்தர் பாலகனா யிருந்தது முதற்கொண்டு மனதை உள்முகமாகத் திருப்பி உள்ளத்தினுள்ளே ஆத்மானந்தத்தில் லயித்திருப்பது அவருடைய இயல்புக்கு முற்றிலும் ஒத்த செயலாய் இருந்து வந்தது. மீன் குஞ்சு ஒன்று நீரினுள் இன்புற்று நீந்தி விளையாடுவது போன்று அவர் அந்தர்முக திருஷ்டியில் ஆனந்த முற்றிருப்பார். காலையிலும் மாலையிலும் மனதை ஆத்ம தியானத்தில் ஈடுபடச் செய்வது பல்லாயிரம் ஆண்டுகளாக நம் நாட்டுப் பண்பாக இருந்து வந்திருக்கிறது. இப்பண்புக்கு இலக்காக இலங்கியவர் சுவாமி விவேகானந்தர்.

உறக்கமானது உயிர்கள் அனைத்துக்கும் பொதுவாக வந்துள்ள ஒரு நிலை ஆகும். கனவற்ற உறக்கத்தை மேற்போக்காக ஆராயுமிடத்து அதை ஓர் ஒடுங்கிய நிலை என்று இயம்பலாம். பிரளயம் போன்று பிரபஞ்சத்தின் தோற்றமெல்லாம் உறக்கத்தில் மறைந்து போகின்றன. இனி மன பரிபாகத்துக்கு ஏற்ப உறக்கத்தில் மூன்று படித்தரங்கள் இருக்கின்றன. முற்றிலும் தமோகுணத்தில் ஊறிக்கிடக்கும் உயிர்கள் உணர்வற்று ஜடம் போன்று கிடப்பது அவ்வுயிர்களுக்கு உறக்கமாகும். ரஜோகுணத்தில் நிலைத்திருக்கின்ற உயிர்கள் அதைவிட ஒருபடி மேலே இருக்கின்றன. உறக்கத்திலும் ஏகதேச உணர்வு அவ்வுயிர்களுக்கு உண்டு. பின்பு சத்துவகுணத்தில் தோய்ந்திருப்பவர்களுக்கு வாய்க்கிற உறக்கம் மிக உயர்ந்தது. ஒடுக்கத்திலும் உணர்வானது தெளிந்திருப்பதே சத்துவகுணத்தில் இருப்பவர்களுடைய உறக்கமாகும்.

ஆங்காரம் உள்ளடக்கி ஐம்புலனைச் சுட்டறுத்து
தூங்காமல் தூங்கிச் சுகம்பெறுவ தெக்காலம்?

என்பது யோகம் பயிலுகிறவர்களுடைய குறிக்கோளாகும். அவர்களுடைய உறக்கமானது யோக நித்திரை எனப் பகரப்படுகிறது. அறிதுயில் என்றும் இது இயம்பப்படுகிறது. தெளிந்த அறிவு அல்லது உணர்வோடு கூடிய உறக்கம் என இது பொருள்படுகிறது. சுவாமி விவேகானந்தருக்குச் சின்னஞ்சிறு வயதிலிருந்து வாய்த்திருந்தது யோக நித்திரை. சாதாரண மக்களுடைய நித்திரைக்கும் அவருடைய நித்திரைக்கும் வித்தியாசம் மிக இருந்தது என்பதை நெடுநாளைக்குப் பிறகே அவர் அறிந்துகொண்டார். சிறுவனாகை அவர் படுக்கப்போன பொழுது கோளம் போன்ற ஜோதி ஒன்று அவரை நோக்கி உருண்டு வந்தது. அந்த

ஜோதி மயமான கோளத்துக்குள் அவர் மகிழ்வுடன் எட்டிக் குதிப்பார். தம்மை மறந்து பரமானந்தமுற்றுக் கிடப்பார். அதை விட்டுத் தெளிந்த மனதுடன் அவர் உலக ஞாபகத்துக்கு வருவார். அதுவே அவருடைய துயில் எழுச்சியாகும். இங்ஙனம் யோக நித்திரையானது யாண்டும் அவருக்குச் சொந்தமாயிருந்ததுதான் பிறவியிலிருந்தே அவர் ஒரு யோகீசுவரன் என்பதற்குச் சான்று ஆகும்.

முறையாக யோகம் பயிலுதற்கு ஏற்ப யோகி ஒருவன் மனத்திட்பம் வாய்க்கப்பெற்றவனாகிறான்; அவன் நுண்ணறிவாளனாகிறான். ஒருமுகப்பட்ட மனது அவன் பெற்றுள்ள பேறு ஆகும். ஓர் உபமானத்தைக் கொண்டு ஒருமுகப்பட்ட மனதை ஸ்ரீ ராமகிருஷ்ணர் விளக்குகிறார். நூலின் இழைகள் நாலாபக்கமும் பிளவுபட்டிருந்தால் அந்நூலை ஊசியின் காதினுள் செலுத்த முடியாது. ஆனால் நூலின் நுனியை முறுக்கி இழைகள் எல்லாம் ஒன்றுபட்டிருக்கும்படி செய்தால் அந்நூலை எளிதில் ஊசியின் காதில் கோக்கலாம். முறுக்கி ஒன்றுபடுத்தப்பட்ட நூல் போன்றது யோகப் பயிற்சியின் மூலம் ஒருமுகப்பட்ட மனது. அதற்கு அலாதி ஆற்றல் வருகிறது. சுவாமி விவேகானந்தர் அச்சிறந்த யோக நிலைக்கு நல்ல எடுத்துக்காட்டு ஆவார். ஏதேனும் ஒரு புஸ்தகத்தை அவர் ஆழ்ந்து படிக்க ஆரம்பித்தால் உலகிலுள்ள பாக்கி அனைத்தும் அவர் மனதுக்கு அப்பாற்பட்டவைகள் ஆகும். அத்தகைய ஆழ்ந்த ஏகாக்ர சித்தத்தை அல்லது குவிந்து ஒருமுகப்பட்ட மனதை அவர் யாண்டும் உடைத்திருந்தார். பரிவ்ராஜக பரமஹம்ஸராக இந்தியாவை அவர் சுற்றிப் பார்த்துக்கொண்டிருந்த பொழுது ராஜபுதனத்தில் ஒரு சமஸ்தானத்தில் ஒரு நூல் நிலையத்தில் இருந்த சம்ஸ்கிருதப் புஸ்தகம் ஒன்றை ஆராய்வதில் அவர் கவனம்

முழுதையும் செலுத்தியிருந்தார். அப்பொழுது ஒருவர் அவரை வந்து அழைத்தார். ஆனால் அந்த அழைப்பு அவர் காதில் விழவில்லை. சுவாமிகள் படிப்பில் மூழ்கியிருப்பவர் போன்று பாசாங்கு பண்ணுகிறார் என அழைத்தவர் முடிவு கட்டினர். அப்பொழுது சுவாமிகளை மேலும் சோதிப்பதற்கு அவருக்குப் பின்புறத்தில் துப்பாக்கி வேட்டு ஒன்று எழுப் பப்பட்டது. பக்கத்தில் எதிர்பாராது துப்பாக்கி வேட்டுக் கிளம்பினல் நாம் அனைவரும் திடுக்கிடுகிறோம். ஆனல் சுவாமிகளோ அசையாது தம் படிப்பிலேயே கருத்தைச் செலுத்தியிருந்தார். கடிகாரம் அடிப்பது நம் காதில் படாதிருப்பது போன்று துப்பாக்கி வேட்டு அவர் காதில் விழவில்லை! மனதை ஒருமுகப்படுத்துதலில் அவர் எத்தகைய யோக சித்தராய் விளங்கினர் என்பதற்கு அச்செயல் நல்ல தோர் எடுத்துக்காட்டு ஆகும். எப்பொழுதுமே மனதை ஒருமுகப்படுத்திப் புஸ்தகங்கள் படிப்பதால் ஒரு தடவை படித்தது காலமெல்லாம் அவர் ஞாபகத்தில் இருக்கும். அத்தகைய ஞாபக சக்தியும் யோகீசுவரனுகிய அவருக்கு வாய்த்திருந்தது.

அமெரிக்காவில் சில மாணவர்கள் துப்பாக்கிக் குறி பிடித்துப் பழகுவதைச் சுவாமிகள் தமது சிஷ்யர்களுடன் கூடிவேடிக்கை பார்த்துக்கொண்டிருந்தார். அசைந்துகொண் டிருந்த இலக்கை அடிக்க மாணவர்கள் எல்லாரும் தவறிப் போனர்கள். அதைப் பார்த்து சுவாமிகள் புன்னகை பூத் தார். ஆனல் சுவாமிகளின் புன்னகையோ மாணக்கர்களுக் கிடையில் எரிச்சலை ஊட்டியது. “சுடத் தோல்வியுற்றதைக் குறித்துப் பரிகாசம் பண்ணுவதுபோன்று உங்கள் முகக் குறியைக் காட்டுகிறீர்கள். எங்கே நீங்கள் நாங்கள் வைத் துள்ள இலக்கைச் சுடுங்கள் பார்க்கலாம்” என்று மாணக்

கர்கள் சபதம் கூறினர். துப்பாக்கியைச் சுவாமிகள் கையில் வாங்கினர். குறியை நோக்கிச் சுட்டார். குண்டு அதைத் துளைத்துக்கொண்டு போயிற்று. அதைப் பார்த்த மாணக் கர்கள் அவர் துப்பாக்கிச் சுடும் பயிற்சியை வேண்டியவாறு பெற்றிருக்கிருர் என்று முடிவு கட்டினர்கள். ஆனல் அன்று தான் தாம் துப்பாக்கி ஒன்றை முதல் முதல் கையாண்ட தாகச் சுவாமி விவேகானந்தர் சொன்னர். அப்படியானல் அவ்வளவு திறமையுடன் இலக்கை அடிப்பது அவருக்கு எப்படிச் சாத்தியமாயிற்று என்று மாணக்கர்கள் கேட்டார் கள். மனதை ஒருமுகப் படுத்தப் பயின்றவனுக்கு அதில் சிரமம் ஒன்றுமில்லை என்று சுவாமிகள் மறுமொழி சொன்னர். ஒருமுகப்பட்ட மனதை உடையவனுக்கு எதை வேண்டு மானலும் சாதிப்பது மிக எளிது என்பதற்குச் சுவாமி விவேகானந்தரே நல்ல எடுத்துக்காட்டு ஆவார்.

சுவாமி விவேகானந்தர் ஒரு யோகீசுவரர் என்பதை மற்ருெரு நிகழ்ச்சி நன்கு நிரூபித்துக் காட்டுவதாயிற்று. அமெரிக்காவில் ஒரு மேடையின் மீது நின்றுகொண்டு யோகத்தின் சிறப்பைப்பற்றிச் சுவாமிகள் சொற்பொழிவாற் றிக்கொண்டிருந்தார். பண்பட்ட யோகி ஒருவன் எத்தகைய நெருக்கடியான சூழ்நிலையிலும் மனத்தடுமாற்றம் அடைவ தில்லை, மனக்குழப்பம் அடைவதில்லை, மனதின் நடுநிலை கலைவதில்லை, மனதின் தெளிவு அகலுவதில்லை—இப்படி யெல்லாம் அவர் யோகப் பயிற்சியைச் சிலாகித்துப் பேசிக் கொண்டிருந்தார். அப்படிப் பேசுகிறவரிடத்து எவ்வளவு தூரம் மனபரிபாகம் வாய்த்திருக்கிறது என்பதைச் சோதிப் பதற்குச் சிலர் அவரைச் சுற்றிலும் சுழல் துப்பாக்கிகளால் தொடர்ந்து சுட்டனர். குண்டுகள் தம்மைச் சுற்றிலும் சீறிக் கொண்டு போவதை சுவாமிகள் உணர்ந்தார். ஆனல் அத்

தகைய ஆபத்தான சோதனையைச் சிறிதேனும் பொருள் படுத்தாது தமது பேச்சிலேயே அவர் முற்றிலும் மூழ்கியிருந் தார். சுவாமிகளைச் சோதித்த அமெரிக்கர்கள் அவர் பெற்றி ருந்த யோக சித்தியைக் குறித்துப் பெரு வியப்படைந்தனர்.

யோக சாதனத்தில் சுவாமி விவேகானந்தர் அடைந் திருந்த முன்னேற்றத்தில் நூறில் ஒருபங்கு சாதகன் ஒருவ னுக்கு வாய்க்குமாகில் அவன் ஜன்ம சாபல்யமடைவான். எப்பொழுதெல்லாம் சுவாமிகள் தியானத்தில் அமர்ந்தாரோ அப்பொழுதெல்லாம் அவரது தியானம் சமாதி நிலையை எட்டும். அகண்ட சச்சிதானந்தத்தில் அவர் ஆழ்ந்து மூழ்கி யிருப்பார். அவர் தியானம் பண்ணியபொழுது அவர் அமர்ந் திருந்த இடத்துக்கே புதியதொரு மகிமை வருவதாகும். அவருக்கு அருகில் அமர்ந்து தியானம் பயிலுகிறவர்களுக் கெல்லாம் அது மிக எளிதில் கைகூடும். சுவாமிகள் முன் னிலையில் கீழான எண்ணத்தை யாருமே எண்ண முடியாது. அவர் மனதில் எண்ணுகிற எண்ணமானது அக்கம் பக்கத் தில் இருப்பவர்களையும் உயர்நிலைக்கு உயர்த்தி வைக்கும். தாம் உணவு அருந்துவதில்லை அல்லது நீர் பருகுவதில்லை என்று சில சந்தர்ப்பங்களில் சுவாமிகள் ஆழ்ந்து சங்கற்பித்த துண்டு. அவர் செய்த சங்கற்பத்தின் வேகத்தால் அவருடன் கூடியிருந்தவர்களுக்கும் அப்பொழுது பசியும் தாகமும் இல்லாது போயின. காந்தக்கல்லினிடத்து இரும்புத் துண்டு கள் கவர்ந்து இழுக்கப்படுவது போன்று இந்த யோகீசுவர னிடத்து மற்ற ஆத்ம சாதகர்களெல்லாம் கவர்ந்திழுக்கப்படு பவர் ஆயினர்.

பிறப்பும் இறப்பும் உயிர்களுக்கு வேதனையை உண்டு பண்ணுகின்றன. பிறவியைப் பெரியோர்கள் பிணி என்கின் றனர். பிறவாமையும் என்றைக்கும் இறவாமையும் ஆத்ம

சாதகர்களுடைய குறிக்கோள். ஆனல் பண்பட்டயோகி ஒருவன், "யான் ஏதும் பிறப்பு அஞ்சேன், இறப்பு அதனுக்கு என்கடவேன்" என்கிருன். பிறப்பு எடுப்பதும், பிறந்து வாழ்ந்திருப்பதும், பிறகு உடலை உகுத்துவிட்டு மரணத்தின் வாயிலாக மறைந்து போவதும் எல்லாம் யோகிக்கு வெறும் விளையாட்டாக இருக்கிறது. சுவாமி விவேகானந்தருடைய வாழ்வும் மறைவும் இதற்கு நல்லதொரு எடுத்துக்காட்டு ஆகும். வாழ்நாள் முழுதிலும் அவர் செயற்கரிய செயல்கள் பலவற்றைச் செய்தார். ஆயினும் அவையாவும் அவருக்கு விளையாட்டாகவே விளங்கின. இனிப் போகத்தில் ஆழ்ந்திருப்பவர்கள் பலருக்கு வாழ்வு விளையாட்டாக இருக்கிறது. ஆனல் சாவு அன்னவர்களுக்கு அளவு கடந்த அச்சத்தை ஊட்டுகிறது. மரணத்தைக் குறித்து அவர்கள் படும் வேதனை நரக வேதனைக்கு ஒப்பானது. ஆனல் சுவாமி விவேகானந்தரோ நான்கு ஆண்டுகளுக்கு முன்பே தாம் உடலினின்று விடுதலையடைதற்கிருந்த நன்னளைக் குறித்து வைத்தார். மரணத்துக்காகவென்று முறையாகத் தம்மை ஆயத்தப் படுத்தினர். தாம் போட்டுவைத்திருந்த திட்டப்படி உடலை ஒதுக்கித் தள்ளிவிட்டுப் பரத்தில் கலந்தார். யோகி ஒருவன் அடைகிற பெரிய பேறதனுக்கு அவரே நல்லதொரு பிரமாணமானர்.

---

5. ஆசார்ய புருஷன்

பெருவாழ்வை ஒருவன் ஒழுக்கத்துடன் வாழ்ந்து வருவானகில் அவனுடைய வாழ்வு ஆசாரம் நிறைந்தது என்று இயம்பப்படுகிறது. ஆசாரம் நிறைந்த வாழ்வு வாழ்வதே

மக்களுக்குக் குறிக்கோள் ஆகிறது. ஆசாரத்தில் இயல்பாக முற்றிலும் ஊறியிருப்பவன் ஆசாரியன் எனப்படுகிறான். அவனைக் குரு என்றும் கூறலாம். ஆசாரிய ஸ்தானம் வகிக்கத் தகுதி வாய்ந்திருப்பது எளிதன்று. ஆத்ம தத்துவத்தைப் புகட்ட வல்ல ஆசாரியன் ஒருவனைக் காண்பது அரிதிலும் அரிது. சிஷ்யனை அக்ஞான இருளினின்று விடுவித்து ஞானத்தின்கண் நடாத்துபவன் ஆசாரியன். சுவாமி விவேகானந்தரைத் தகுதிவாய்ந்த ஆசாரியன் எனநவிலுவது பொருந்தும். தாம் வாழ்ந்துவந்த பெருவாழ்வையே அவர் உலகுக்கு எடுத்துப் புகட்டினார். அப் பெருவாழ்வோ ஒப்பு உயர்வு அற்றது. பாரமார்த்திகப் பெருவாழ்வு முழுதும் உருவெடுத்து வந்தவர் விவேகானந்தர். அத்தகைய குரு ஒருவரை அலர்ந்த மலர் எனலாம். மலர் ஒன்றை நாடி வண்டுகள் தாமாக வருகின்றன. அவைகளைக் கூவியழைக்க வேண்டிய அவசியமில்லை. தெய்விகத்தில் ஊறியுள்ள குரு ஒருவரை நாடிச் சிஷ்யர்கள் தாமே வந்து சேருகின்றனர். இந்தியாவிலிருந்தும் மேல் நாடுகளிலிருந்தும் விவேகானந்தரை நாடிப் பரிபாகம் அடைந்துள்ள சிஷ்யர்கள் வந்து சேர்ந்தார்கள். அவர்களோடு சுவாமி விவேகானந்தர் வைத்த இணக்கம் குரு சிஷ்ய தொடர்புக்கு நல்லதொரு எடுத்துக்காட்டு ஆகும். அவ்விணக்கத்தில் இனிமையும் மென்மையும் ஆர்வமும் தெய்விகமும் ஒன்று கூடித் திகழ்வனவாயின. வடிவத்தில் குரு வேறு, சிஷ்யர் வேறு எனத்தென்பட்டனர் எனினும் தன்மையிலும் குறிக்கோளிலும் அவர்கள் ஒன்றுபட்டு இருந்தனர். மானுட நிலையில் இருக்கும் அன்பைக் கடந்து தெய்விக நிலையில் திகழும் அன்பிலே அவர்கள் ஊறியிருந்தனர். உற்றார் உறவினர் கொள்ளுகிற அன்பு பந்தபாசத்தை உண்டுபண்ணுகிறது. ஆனால் சுவாமி விவேகானந்தருக்கும்

அவருடைய சிஷ்யர்களுக்கும் இடையில் பொலிந்த அன்போ பந்த பாசங்களுக்கெல்லாம் அப்பாற்பட்டது. பாரமார்த்திகப் பெருநிலையில் உள்ள சுதந்தரத்தை அடிப்படையாகக் கொண்டது அவர்கள் பரஸ்பரம் பராட்டிய அன்பு. உலகத்தவருடைய அன்பு ஒருவரை மற்றொருவருக்கு உரியவராக்க முயலுகிறது. ஆனால் பாரமார்த்திக அன்பின்கண் தனி உரிமைக்கு இடமில்லை. உலகத்தவர் அன்பு சுயநலத்தில் உருவெடுத்தது. தனக்கென்று தேடிகொள்ளும் தன்மையது அது. ஆனால் விவேகானந்தர் பாராட்டிய தெய்வீக அன்போ தம்மிடத்திருப்பதை யெல்லாம் சிஷ்யர்களுக்கு எடுத்து வழங்கச் செய்தது. அப்படி வழங்கிய வள்ளல் கைம்மாறு எதையும் கருதவில்லை. தாம் பெற்றிருந்த பாரமார்த்திகப் பேறு அனைத்தையும் கரவாது சிஷ்யர்களுக்கு எடுத்து விவேகானந்த வள்ளல் வழங்கினார்.

சுவாமி விவேகானந்தருக்குப் பலர் சிஷ்யர்களாக வந்து வாய்த்தனர். அன்னவர்களுக்கிடையில் எந்தவிதமான வித்தியாசத்தையும் அவர் உண்டுபண்ணவில்லை. அவரை நாடி வந்தவர்களுள் ஏழையர் இருந்தனர், பணக்காரர் இருந்தனர், சமுதாய அந்தஸ்தில் உயர்ந்தவர்கள் இருந்தனர், தாழ்ந்தவர் இருந்தனர், கற்றவர் இருந்தனர், மற்றவர் இருந்தனர், முதியவர்கள் இருந்தனர், இளைஞர் இருந்தனர், ஆடவர் இருந்தனர், மகளிர் இருந்தனர். அவர்கள் அனைவரையும் ஒரே பாங்கில் விவேகானந்தர் கருதி வந்தார். தாய் ஒருத்தித் தனதுநொண்டிக் குழந்தைக்கு அதிக ஆதரவு கொடுக்கின்றாள். அதே விதத்தில் சுவாமி விவேகானந்தர் தம் சிஷ்யர்களுள் தகைமையில் கடை நிலையில் இருந்தவர்களுக்கே அதிகமான ஆதரவு கொடுத்தார். ஆனால் சிஷ்யர்கள் அனைவரிடத்திலும் அவர் காட்டிய அன்பில் தனி மகிமை ஒன்று இருந்தது. ஒவ்வொரு

சிஷ்யரும் அல்லது சிஷ்யையும் தாம்மட்டும் சிறப்பாகத் தம் குருநாதரால் நேசிக்கப்பட்டதாக எண்ணி வந்தனர். தமக்கு உரியவர்கள் என்று சிஷ்யர்களை அவர் அங்கீகரித்தான பிறகு அவர்கள் யாண்டும் சுவாமிகளுக்குச் சொந்தமாகத் திகழ்ந்தனர். தந்தைக்கும் மைந்தனுக்கும் இடையிலுள்ள தொடர்வை எக்காரணத்தை முன்னிட்டும் யாருமே அழிக்க முடியாது. அத்தகைய இணக்கம் தான் சுவாமி விவேகானந்தருக்கும் அவருடைய சிஷ்யர்களுக்கும் இடையில் இருந்தது. மரணமே குறுக்கிடுவதாயிருந்தாலும் அவர்களுடைய இணக்கம் அதனால் தடைப்படாதிருந்தது. ஐதிகமாக வந்துள்ள பழமொழி ஒன்றை இப்பரமாச்சாரியர் அடிக்கடி பகர்வார். "யானைக்குத் தந்தங்கள் வெளிக்கிளம்பி வருகின்றன. ஆனால் அவைகள் திரும்பி உள்ளே போவதில்லை. அதே பாங்கில் குரு சிஷ்யனை ஏற்கின்றார். ஏற்ற சிஷ்யனை எக்காரணத்தைக் கொண்டும் குரு புறக்கணிப்பதில்லை." தாம் பெற்றிருக்கும் பாரமார்த்திகப் பேறு அனைத்தும் தமது சிஷ்யர்களுக்கு உரியது என்றும், தமது சிஷ்யர்கள் பொருட்டுத் தாம் ஆயிரந்தடவை சாகவும் நரகத்தில் இடர்ப் படவும் ஆயத்தமாயிருப்பதாகவும் அவர் இயம்பினர். தம்மைச் சிஷ்யர்களாக வந்தடைந்தவர்களிடத்து உண்மையான ஊக்கமும்முன்னேற்றத்தில் ஆர்வமும் இருக்கிறதா என்பதை மட்டும்சுவாமிகள் கருத்தில் வைத்துக் கொண்டார். ஊக்கம் கொண்டிருப்பதைத் தவிர வேறு தகைமைகள் தம்மிடம் வருகிற முமுக்ஷுக்களிடத்து இருக்கின்றவா, என்று அவர் ஆராய்ந்து பார்ப்பதில்லை. தம்மை வந்து நாடியவர்கள் பின்பு தம்மிடமிருந்து பிரிந்து போவதையும் அவர் பொருள் படுத்துவதில்லை. தமக்கு எதிரிகளாகவே அவர்கள் மாறிய விடத்தும் அதைப்பற்றிச் சுவாமிகள் கவலைப்படுவதில்லை.

அவரவர் முன்னேற்றத்தில் சிஷ்யர்களுக்குச் சரியான சிரத்தை வாய்த்திருந்தால் அந்த வாய்ப்பு ஒன்றே சுவாமிகள் கருத்துப்படி போதுமானதாகும். மேல்நாட்டில் சிலர் சுவாமிகளுடைய சிஷ்யர்களாகிப் பிறகு அவரிடமிருந்து விலகிக்கொண்டனர். அச்செயலைக் குறித்துச் சுவாமிகள் சிறிதேனும் ஏமாற்றம் அடையவில்லை; அல்லது வருந்தவும் இல்லை. தாற்காலிகமாகத் தம்மை வந்து சார்ந்திருந்தவர்கள் வாயிலாகவும் ஓரளவுக்கு வேதாந்தப் பிரசாரமும் அனுஷ்டானமும் நடைபெற்று வந்ததையே சீரிய தெய்விகச் செயலாக அவர் கருதுவாராயினர். தம்மைவிட்டு ஒரு சிலர் பிரிந்து போனதற்குக் காரணம் அவர்களிடத்து இடையில் குறுக்கிட்ட பொருந்தாத கர்மமாகும் என்றும் நாளடைவில் அப்பொருந்தாத கர்மமானது வேகத்தை இழந்த பிறகு அந்த ஆத்மசாதகர்கள் நல்வழிக்குத் திருப்பி வருவார்கள் என்பதும் சுவாமிகளது துணிபு.

स्वल्पमप्यस्य धर्मस्य त्रायते महतो भयात्

ஸ்வல்பமப்யஸ்ய தர்மஸ்ய த்ராயதே மஹதோ பயாத்

பாரமார்த்திகத் தர்மத்தைச் சிறிதளவாவது அனுஷ்டித்தால் அது பெரும் பயத்தினின்று மனிதனைக் காப்பாற்றும் என்றனும் கோட்பாட்டில் சுவாமிகள் முழுநம்பிக்கை வைத்திருந்தார். அதற்குமேல் மற்றொரு முடிவான உண்மை அவருடைய உள்ளத்தில் ஒளிர்ந்து கொண்டிருந்தது. குரு சிஷ்யன் என்கின்ற இணக்கமும் முடிவான பெருநிலையினின்று பார்க்குமிடத்து அவ்விணக்கம் வெறும் பிராந்தியேயாம். ஆதலால் யார் தம்மை ஆயுள்காலம் முழுதிலும் சார்ந்திருக்கின்றனர், யார் தம்மிடமிருந்து பிரிந்து போகின்றனர் என்பவற்றையெல்லாம் இப் பரமாசாரியர் பொருள்படுத்துவதில்லை. தம் கடன் பாரமார்த்திகப் பணிவிடை புரிவது. அதன்

விளைவு எது ஆயினும் ஆகுக என்னும் எண்ணத்தில் அவர் உறுதி பெற்றிருந்தார்.

சுவாமி விவேகானந்தரிடத்துப் பொலிந்துகொண்டிருந்த தெய்வப் பெற்றியே போதனைகளுக்கெல்லாம் மேலான போதனையாக விளங்கிற்று. பூரண சுவானுபூதி பெற்ற தீர்க்கதரிசியாக சுவாமிகள் திகழ்ந்திருந்ததனால் அவருடைய சொரூபமே வேதாந்த ஞானத்துக்கு இடையருத விளக்கமாக விளங்கிற்று. ஆத்ம சாதகர்கள் பலர்க்கு அவருடைய சாந்நித்தியம் போதுமானது. அவர் மௌனமுற்றிருக்கிற பொழுதும் வேதாந்த தத்துவங்கள் அவரிடத்திருந்து தாமாசத் தோன்றிக் கொண்டிருக்கும். ஸ்ரீ ராமகிருஷ்ண பரமஹம்ஸர் எத்தகைய பரமாசாரியராக விளங்கினரோ அதே போன்று அவருடைய பிரதம சிஷ்யரும் விளங்கினர். சங்கற்பத்தின் மூலமாகவே பிறர்க்குப் பாரமார்த்திகத்தை ஊட்டும் திறமை அவர்கள் இருவருக்கும் இருந்தது. சிலவேளைகளில் அவருடைய கண்ணோட்டம் பெரிய கருத்துக்களை விளக்குவதாயிற்று. இன்னும் சில வேளைகளில் அவர் செய்த சைகைகள் முத்திரைகளுக்கு நிகராயிருந்து ஞானமூட்டுவனவாயின. அவரே ஒரு ஞானக் களஞ்சியமாக இலங்கியதனால் அவரிடத்திருந்து எவையெல்லாம் எப்படியெப்படி யெல்லாம் வெளியாயினவோ அவை யாவும் ஞானோபதேசங்கள் ஆயின. மற்றவர்கள் வாக்கியங்களின் மூலம் விளக்கிய கோட்பாடுகளைச் சுவாமிகள் தமது சொருபத்தின் மூலம் விளக்கினர். ஞானக்கனலை மூட்டும் முறைகளைப்பற்றி மற்றவர்கள் பேசுவார்கள். ஆனால் சுவாமிகளோ ஞானக்கனலை ஜுவாலை விட்டெரியும்படி மூட்டி வைப்பார். சுவாமிகளுடைய சத்சங்கத்தால் பாவிகள் பலர் புனிதவான்களாக மாறியமைந்தனர். மத வெறியும்

குறுகிய மனப்பான்மையும் கொண்டிருந்த வேறுபலர் பரந்த பாங்குடையவர்களாக மாறியமைந்தனர். ஞானக்கனலே சுவாமி விவேகானந்தராக உருவெடுத்து ஒளிர்ந்து கொண்டிருந்தமையால் அவர் வாயிலாகத் தத்துவங்களையும் பாரமார்த்திகப் பெருநிலையையும் பலப் பலர் உள்ளவாறு தரிசிக்கப் பெற்றனர். சூரிய தேவன் தனது ஒளியாலும் வெப்பத்தாலும் உலகுக்கு உயிர் வழங்கி வருவது போன்று சுவாமி விவேகானந்தருடைய சொரூபமும் எண்ணமும் உள்ளமும் உடலும் அன்பும் அனுபூதியும் உலகத்தவர்களுடைய நன்மைக்காகவென்றே இடையருது பயன்பட்டு வந்தன. தம் சொரூபம் வேறு; தமது சிஷ்யர்களின் சொரூபம் வேறு என்று அவர் ஒரு பொழுதும் பிரித்து உணரவில்லை. குரு சிஷ்ய வடிவங்களில் ஒளிர்ந்தது ஏகமாய் உள்ள ஆத்ம சொரூபமே என்பது அவருடைய சித்தாந்தம். தமது சிஷ்யர்களின் முன்னேற்றத்தைப் பற்றிய பொறுப்பு முழுதையும் அவர் முழு மனதோடு ஏற்றிருந்தார். தமது சிஷ்யர்களில் சிலருடைய குடும்பத் தொல்லைகளைச் சரிப்படுத்துவதையும் தமது கடமையாக அவர் ஏற்றிருந்தார். எத்தகைய பேரன்போடு தங்களுடைய குருநாதர் தங்களை நேசித்து வந்தார் என்பதையும் தங்களுடைய சாதனங்களைப்பற்றி அவர் எவ்வளவு பெரிய பொறுப்பு வகித்து வந்தார் என்பதையும் சிஷ்யர்கள் நன்கு உணர்ந்திருந்தனர். அவருடைய அன்பு வலையில் பட்டுத் தாங்களும் அன்பு மயமாக மாறியமைந்ததே சிஷ்யர்கள் செய்து வந்த கைம்மாறாகும். பாரமார்த்திகப் பெருவாழ்வைப் பாரினுள் பரப்புதற்கு இப் பரமாசாரியர் என்னென்ன பாகுபாடுகளை யெல்லாம் திட்டப்படுத்தி வைத்திருந்தாரோ அப்பாகுபாடுகளிலெல்லாம் அவருடைய சிஷ்யர்கள் முழுமனதோடு ஈடுபட்டனர். குருவே பல வடி

வெடுத்துத் தமது அருட்பணியை நிறைவேற்றியதற்கு ஒப்ப சிஷ்யர்கள் தங்கள் குருவிடம் கருவிகளாக வாய்த்தனர். விவேகானந்தர் வெளியிட்டு வந்த தத்துவ தரிசனங்களைக் கற்கும் பொறுப்பை ஒரு சிலர் ஏற்றுக்கொண்டனர். அவர் என்னென்ன அறப்பணிகளை யெல்லாம் துவக்கி வைத்தாரோ அப்பணிகளெல்லாம் நன்கு நடைபெற்று வருவதற்குச் சிலர் தங்கள் வாழ்வை ஒப்படைத்தனர். இன்னும் சிலர் தங்களை ஆட்கொண்டவர்க்குக் குற்றேவல் புரிவதையே குறிக்கோளாகக் கொண்டிருந்தனர்.

தமது சிஷ்யர்களுக்குச் சுவாமி விவேகானந்தர் நல்கிய சுதந்தரமானது மிக அற்புதமானது. எத்துறையில் ஆயினும் சரி, மனிதன் முன்னேற்றம் அடைதற்குச் சுதந்தரம் ஒன்றே இன்றியமையாத நிபந்தனை என்பதைச் சுவாமிகள் நன்கு அறிந்திருந்தார். தமது சிஷ்யர்கள் புரிந்துவந்த அறப் பணிவிடைகளில் அவர் ஒருபொழுதும் தலையிடமாட்டார். சில வேளைகளில் சுவாமிகளுடைய போதனையையும் மேற்பார்வையையும் சிஷ்யர்கள் நாடி நிற்பார்கள். ஆனால் எதையும் போதிக்க அவர் மறுத்துவிடுவார். மேற்பார்வை யிடுதற்கும் அவர் முன்வரமாட்டார். 'உங்களுக்குத் தோன்றியதைத் தோன்றியபடி செய்யுங்கள்' என்று பொறுப்பு முழுதையும் சிஷ்யர்கள் கைவசத்தில் அவர் விட்டு வைப்பார். நீந்தத் தெரியாதவர்களுக்கு ஒருவிதமான உதவியும் செய்யாதிருப்பதற்கு நிகராகும், சில வேளைகளில் சுவாமிகள் நடந்து கொண்ட போக்கு. ஆனால் அப்படிச் சுவாதீனம் முழுதும் சிஷ்யர்களிடத்திலேயே ஒப்படைத்து வைத்ததனாலேயே அவர்கள் பெருமுயற்சி யெடுத்துத் தங்கள் பொறுப்பை இனிது நிறைவேற்றினர். சுயநம்பிக்கை அவர்களிடத்து நன்கு உருவெடுத்தது. செயலின் மூலமாக வந்த அனுப

வமோ வெறும் போதனையின் மூலமாக வந்த அனுபவத்தை விட மிகச் சிறந்ததாக விளங்கிற்று. நீந்தக் கற்றுக்கொள்ளுகிற ஒருவனுக்குச் சர்வகாலமும் உதவி புரிந்து கொண்டிருந்தால் அப்பயிற்சியைப் பெறுதற்கு அவன் நெடுங்காலம் எடுத்துக்கொள்ளுகின்றான். ஆனால் கற்றுக்கொள்ளுதற்கு இருப்பவனை நீருக்குள் தூக்கிப் போட்டு விட்டால் திணறித் திண்டாடி அவன் நீந்த முயலுகிறான். அப்படி மூன்று நான்கு தடவை செய்தால் நீந்தப் பழகுகிறவனுக்குப் பயம் போகிறது. பயிற்சியும் விரைவில் வருகிறது. சுவாமி விவேகானந்தர் அத்தகைய தீவிர முறையைக் கையாண்டு தம் சிஷ்யர்களுக்குச் சுயநம்பிக்கையையும் சுபப்பிரயத்தனத்தையும் ஊட்டி வந்தார். சிஷ்யர்கள் சில தடவைகளில் தாம் எடுத்துக்கொண்ட கருமங்களில் பிழை செய்ததைச் சுவாமிகள் சிறிதும் பொருள்படுத்தவில்லை. பிழைகளின் வாயிலாகவும் பலவிஷயங்களை அவர்கள் தாங்களே முயன்று கற்றுக்கொள்ளுதல் மேல் என்று சுவாமிகள் கருதிவந்தார்.

சுவாமி விவேகானந்தர் தாமே சிஷ்யர் ஆனபொழுது அவருக்கும் பரமஹம்ஸ தேவருக்குமிடையில் கருத்து வேறுபாடுகள் பல இருந்தன. அவைகளை முன்னிட்டுக் குருவுக்கும் சிஷ்யருக்கும் இடையில் சம்வாதங்களும் தர்க்கங்களும் திரும்பத் திரும்ப நிகழ்வனவாயின. இறுதியில் தாம் கொண்டிருந்த கொள்கைகளும் அபிப்பிராயங்களும் பரமஹம்ஸ தேவரது பாரமார்த்திகப் பரிபூரண நிலைக்கு உட்பட வேண்டியவைகளாயின. ஆனால் தாம் தம் குருநாதரோடு வேறுபட்ட முறையில் சுவாமிகளுடைய சிஷ்யர்களில் பலர் அவரோடு கருத்து வேற்றுமை எதையும் கொள்ளவில்லை. சுவாமிகளுடைய அருள் பராமரிப்புக்கு அவர்கள் யாண்டும் அடிபணிந்து நடந்துகொண்டனர். ஆயினும் அவருடைய

மேல் நாட்டுச் சிஷ்யர்களில் சிலர் இந்திய ஐதிகங்களையும் கொள்கைகளையும் கருத்துக்களையும் எளிதில் புரிந்துகொள்ள வில்லை. அவைகளை முன்னிட்டு விவாதங்களும் ஆராய்ச்சி களும் பல நேர்வனவாயின. புறநாட்டு ஐதிகத்தில் போய்க் கொண்டிருந்தவர்களை இந்தியப் பண்பிலும் வாழ்க்கை முறையிலும் மாற்றியமைப்பதற்குச் சுவாமிகள் பகீரதப் பிரயத்தனம் எடுத்துக்கொள்ளவேண்டியதாயிற்று. ஆனால் தம்மோடு முரண்படுகிறவர்கள் மீது குரு என்கிற முறையில் அவர் தமது அதிகாரத்தைச் செலுத்தவில்லை. சிஷ்யர்கள் வாயடங்கியிருந்து தாம் சொல்லுவதை யெல்லாம் அப்படி அப்படியே ஏற்றுக்கொள்ள வேண்டும் என்று அவர் வற் புறுத்தவில்லை. தங்களுடைய சந்தேகங்களையும் அபிப்பிராய வேற்றுமைகளையும் தாராளமாகச் சிஷ்யர்கள் வெளியிடலாம் என்றும், ஒரு கோட்பாட்டில் முற்றிலும் நம்பிக்கை வருவ தற்கு முன்பு அதை அனுஷ்டானத்தில் கைப்பற்றவேண்டிய தில்லை யென்றும் சிஷ்யர்களுக்குப் பூரண சுதந்தர உணர்வை அவர் ஊட்டிவந்தார். ஒவ்வொரு ஆத்ம சாதகனுக்கும் மனத்தெளிவு வரும் வரையில் அவன் தன் குருவுடனும் தத்துவ விஷயத்தில் போராடி உண்மையை ஓர்ந்து உணர வேண்டும் என்பது சுவாமிகளது துணிபு. தனது அறிவும் தன் கையுமே தனக்கு உதவி என்னும் கோட்பாட்டை ஆத்மீ கத் துறையில் தீவிரமாகக் கையாளுதற்குத் தாராளமாக இடங்கொடுத்தவர் சுவாமி விவேகானந்தர்.

எந்த மனிதனுமே தனது அதிகாரத்தை மற்றவர்கள் மீது செலுத்தாதிருப்பது சாலச் சிறந்தது. ஆத்மீகத்துறை யிலோ இக் கோட்பாட்டினின்று இம்மியளவும் யாரும் பிசகலாகாது. தான் குரு ஸ்தானத்திலிருப்பதை முன் னிட்டு ஒருவன் தனது ஆதிக்கத்தை மற்றவர்கள் மீது

செலுத்த முயலுவானாகில் அம் முயற்சியின் வாயிலாக அவன் தனக்குத்தானே கேடு விளைவித்துக்கொள்கிறான் என்பது சுவாமி விவேகானந்தரின் தெள்ளியெடுத்த கோட்பாடாகும். பல தடவைகளில் அறியாமையும், பேரும் புகழில் ஆசையும், தற்பெருமையும் ஒருவன் உள்ளத்தில் புகுந்திருந்து கொண்டு அதிகாரம் செலுத்தும் முறையில் அத் தீமைகள் தாண்டவமாடுகின்றன. ஆனால் சுவாமிகள் மட்டும் அக்குறைபாடுகளுக்கு ஒருபொழுதும் இடம் தரவில்லை.

மற்றொரு அரிய விஷயத்தைச் சிஷ்யர்களுக்கு அவர் ஞாபகமூட்டினார். அவர்கள் புரிந்து வந்த பாரமார்த்திகப் பெரும் பணிகளெல்லாம் பாரமார்த்திகப் பெரு வாழ்வை அடிப்படையாகக் கொண்டவைகளாக இருக்க வேண்டும். ஸ்ரீ ராமகிருஷ்ண பரமஹம்சருக்காகவென்றோ, சுவாமி விவேகானந்தருக்காகவென்றோ தொண்டு புரிவது தலையாய முறை அல்லவென்று அவர் ஞாபகமூட்டினார். பெருநெறியின் பண்பின் பொருட்டுப் பணிவிடை புரிவதே ஒப்பற்ற சேவையாகும். பல தடவைகளில் வாழையடி வாழையாக வந்த சிஷ்யர்கள் குரு புகட்டிய மேலாம் தத்துவங்களைப் புறக்கணித்து விட்டுக் குருவுக்கு முதன்மை தரும் பிழைகளைச் செய்து வந்திருக்கின்றனர். குரு என்னும் மனிதனிலும் மேலானது அக்குரு புகட்டியுள்ள பாரமார்த்திகத் தத்துவம். பாரமார்த்திகத் தத்துவத்துக்கு முதன்மை தருவதும் அத்தத்துவங்களைப் புகட்டிய புருஷர்களுக்கு அடுத்தபடியாயுள்ள ஸ்தானத்தைத் தருவதும் விவேகம் படைத்துள்ள மேலோர்களுடைய போக்கு என்று சுவாமிகள் புகட்டி வந்தார். தத்துவத்தை ஒதுக்கித் தள்ளிவிட்டு மனிதனுக்கு முதன்மை தருகிற அருளியக்கம் விரைவில் க்ஷீணதசையடையும் என்பதையும் தமது சிஷ்யர்களுக்குச் சுவாமி விவேகானந்தர் ஞாபகமூட்டி வந்தார்.

6. தகை மிகு தலைவன்

ஒரு கூட்டத்துக்கு, ஒரு சங்கத்துக்கு, ஓர் இயக்கத்துக்குத் தலைமை வகிக்கப் பலர் விரும்புகின்றனர். தலைமை வகிப்பது பாராட்டத் தக்கதொரு பதவியாம். ஆனால் அதற்குப் பொறுப்பு மிகவுண்டு. தலைமை வகிக்கும் திறனைத் தெய்வீகப் பெற்றியென்றே பகரலாம். அப்பெரிய பொறுப்பை நிறைவேற்றப் பலர் முந்துகின்றனர். எனினும் அதற்குத் தகுதிவாய்ந்தவர்கள் மிகச் சிலரே. கூர்ந்து ஆராயுமிடத்துத் தலைமைக்குத் தகுதி வாய்ந்திருப்பது பிறவிக்கூறு எனக் கூறலாம். தேர்ந்தெடுப்பதாலேயே ஒருவன் தலைவன் ஆக முடியாது. தலைமைக்கேற்ற தகுதியுடன் அவன் பிறந்திருக்க வேண்டும் என்பது பொதுக்கோட்பாடு. பிறக்கும் பொழுதே ஒருவனுக்குத் தலைமை வகிக்கத் தகுதி இயல்பாக அமைந்திருக்கிறதென்றால் அது அவன் முற்பிறப்பில் முயன்று பெற்ற பேறு ஆகும். ஆக முற்பிறப்பிலோ இப்பிறப்பிலோ தன்னைத் தலைமைக்குத் தகுதியாக்கிக் கொள்ளுகின்றவனுக்கே அப்பதவி வாய்க்கிறது.

தலைமைவகிப்பதற்கான முழுத் தகுதியுடன் பிறப்பெடுத்தவர் என்று சுவாமி விவேகானந்தரைப் பற்றிப் பகரலாம். தமது ஆயுட்காலம் முழுதிலும் தலைமை வகிக்கும் பதவியை அவர் நாடியது கிடையாது. ஆனால் அப்பதவி தானாக அவரை நாடி வந்து சேர்ந்தது. அதற்கெல்லாம் காரணமாயிருந்தது அவரது தகைமையேயாம். அவர் விளையாட்டுப் பிள்ளை நரேந்திரனாயிருந்த பொழுது தம் தோழர்கள் அனைவருக்கும் தமது இயல்பையொட்டித் தலைவராகத் திகழ்ந்தார். எந்த விளையாட்டு ஆனாலும் சரி, அல்லது வேறு எத்தகைய பொழுதுபோக்கு ஆனாலும் சரி, சிறுவர்கள்

எல்லாரும் நரேந்திரனது சொற்படி நடந்துகொள்ள யாண்டும் அவனைச் சார்ந்திருப்பார்கள். விளையாட்டுப் பிள்ளைகளுக்கிடையில் அவன் வகுத்தது சட்டம், அவன் புரிந்தது ஆட்சி. சில வேளைகளில் அவன் ராஜ தர்பார் நடாத்துவான். ராஜனாக வீற்றிருந்தது அவனுடைய இயல்பு. அவனுடைய செங்கோலுக்கு உட்பட்டு ஏனைய சிறுவர்கள் மந்திரிகளாகவும் பிரதானிகளாகவும் சிப்பந்திகளாகவும் வெவ்வேறு ஸ்தானங்கள் வகித்தார்கள். ஆக நரேந்திரன் நிறைவேற்றிய தலைமைக்குப் போட்டியாக யாரும் துணிந்து முன்வரவில்லை. அவனுடைய விளையாட்டாலேயே அவனுடைய தகைமை தெற்றெனத் திகழ்வதாயிற்று. சண்டை சச்சரவுகளெல்லாம் நரேந்திரனுடைய தீர்ப்புக்கு உட்பட்டு முடிவு பெறும். சிறுவர்கள் சண்டையிட்டுக் கைகலந்து கொள்ளுவதை நரேந்திரன் ஒருபொழுதும் ஆமோதியான். அடித்துக் கொள்ளுகிறவர்களுக்கிடையில் வலியப் புகுந்து அவர்களுடைய சச்சரவை அவன் தீர்த்து வைப்பான். அது போழ்து சில வேளைகளில் தன்மீது அடிபடுவதையும் அவன் பொருள்படுத்தான். பள்ளிக்கூடத்திலும் கலாசாலையிலும் மாணாக்கர்களுக்கிடையில் நரேந்திரன் எப்பொழுதுமே தலைவனாகத் திகழ்ந்தான். தலைவனைத் தேர்ந்தெடுத்தல் என்றால் எல்லாரும் ஏகோபித்து நரேந்திரனைத் தங்களுக்குத் தலைவனாக நியமிப்பார்கள். அந்த ஸ்தானத்துக்கு அவனே முற்றிலும் பொருந்தியவன் என்பதை மற்ற மாணாக்கர்கள் ஓதாது உணர்ந்தனர். மாணாக்கர்களுக்கிடையில் தேகப் பயிற்சி இயக்கங்களுக்கும், கலைஞான இயக்கங்களுக்கும் நரேந்திரனே தலைவனாகத் தேர்ந்தெடுக்கப்படுவான். இயல்பாக அவனிடத்து அமைந்திருந்த பண்புக்கும் தகுதிக்கும் அந்நிகழ்ச்சிகள் நல்ல எடுத்துக்காட்டுகள் ஆயின.

நரேந்திரனைப் பார்த்ததும் தமது பேரியக்கத்துக்குத் தகுதி வாய்ந்த தலைவன் ஒருவன் வாய்த்துள்ளான் என்று பரமஹம்சதேவர் இனிது எண்ணினார். அவர் எண்ணியது பிறகு எண்ணியாங்கு நிறைவேறியது. பரமஹம்சதேவருக்கு வாய்த்த சிஷ்யர்களுள் வயது முதிர்ந்தவர்கள் பலர் இருந்தனர். ஆனால் தாம் வயதில் முதிர்ந்தவர் என்பதைப்பற்றிய எண்ணம் அத்திருக்கூட்டத்தில் சேர்ந்திருந்த யாருடைய உள்ளத்திலும் எழவில்லை. நரேந்திரனது தலைமையில் எல்லாம் திறம்பட நடைபெறும் என்னும் ஓர் எண்ணமே எல்லார் உள்ளத்திலும் உதிப்பதாயிற்று. தங்களையறியாது அத்திருக்கூட்டத்தார் அனைவரும் இந்த இளம் துறவியையே தங்கள் தலைவன் என மதித்து வந்தனர். பரமஹம்சதேவருக்கு அடுத்த ஸ்தானத்தை அவர்கள் எல்லாரும் ஏகோபித்து விவேகானந்தருக்கு மனமுவந்து நல்கினர். விவேகானந்தர் சொற்படி நடந்துகொள்வதும் பரமஹம்சதேவர் ஆணைக்கு உட்பட்டு நடந்துகொள்வதும் ஒன்று என அவர்கள் அனைவரும் உணர்ந்தார்கள். தம்மீது தமது குரு சகோதரர்கள் எத்தகைய ஒப்பற்ற நம்பிக்கையையும் விசுவாசத்தையும் வைத்திருக்கிறார்கள் என்பது விவேகானந்தருக்கு நன்கு தெரியும். தமது குரு சகோதரர்களுடைய சீரிய மனப்பான்மையைக் குறித்து அவர் பல தடவைகளில் பகர்ந்திருக்கிறார். தாம் வாழ்விலே நெறி தவறிப்போக நேர்ந்தாலும் தமது குரு சகோதரர்கள் தம்மை ஒரு நாளும் புறக்கணிக்கமாட்டார்கள் என்று அவர்களை அவர் பாராட்டியிருக்கிறார். "நான் நலமே செய்திடினும் கேடே புரிந்திடினும் உயிர் இருக்கும் வரையில் என்னை முற்றிலும் சார்ந்திருந்து என் பொருட்டு உயிரைக் கொடுக்க ஆயத்தமாயிருக்கும் திருக்கூட்டம் ஒன்று உளது. அது தெய்வாதீனமாக எனக்கு

வாய்த்துள்ள அருள் சேனையாகும். அந்தச் சேனையானது ஏகோபித்து என்னைப் பின்பிற்ற ஆயத்தமாயிருப்பதால் எனக்குக் குறையொன்றும் இல்லை. நான் தொடங்கியுள்ள இயக்கத்தை அத் திருக்கூட்டத்தைக்கொண்டு வலிவுறச் செய்ய எனக்கு இயலும்" என்று அவர் பகர்ந்துள்ளார்.

தம்மைத் தலைவனாகக் கருதியிருந்த குரு சகோதரர்களுக்கும் சிஷ்யர்களுக்கும் வாழ்க்கைத் தத்துவம் ஒன்றை விவேகானந்த சுவாமிகள் தெளிவுற எடுத்துக்காட்டினார். வெறும் அதிகாரம் செலுத்துவதால் ஒருவன் தலைவன் ஆக முடியாது. தனது வாழ்வனைத்தையும் தன்னை நம்பியிருப்பவர்கள் பொருட்டுத் தியாகம் பண்ணுபவனுக்கே தலைமை ஸ்தானம் தானாக வந்து வாய்க்கிறது. தாய் ஒருத்தி குடும்பத்துக்குத் தொண்டுபுரிதலிலேயே கண்ணுங் கருத்துமாயிருக்கிறாள். தனக்குப் பதவி ஏதாவது வேண்டும் என்று அவள் கனவிலும் கருதுவதில்லை. தனக்குச் சொந்தமாயிருப்பவர்களுக்கெல்லாம் அவள் மனமுவந்து தொண்டு புரிவதால் வீட்டுக்குத் தலைமை வகிக்கும் வாய்ப்பு அவளுக்குத் தங்கு தடையின்றி உண்டாகிறது. அதே விதத்தில் துறவி ஒருவன் நல்ல திருத்தொண்டன் ஆவானாகில் தன்னையறியாது அவன் இறுதியில் தலைவனாகின்றான். அப்பொறுப்பை அவன் ஏற்க மறுத்தாலும் அது அவன்மீது உள்ளன்புடன் சமர்ப்பிக்கப்படும். ஆதலால் யாண்டும் பணிசெய்து கிடப்பதே துறவி ஒருவனுடைய செயலாயிருக்க வேண்டும் என்பதைச் சுவாமி விவேகானந்தர் வற்புறுத்திச் சொல்லியிருக்கிறார். அவர் எதைத் தமது வாழ்வில் செய்து வந்தாரோ அதைத்தான் மற்றவர்களுக்கும் எடுத்துப் புகட்டினார். தம்மைச் சார்ந்திருந்தவர்களுக்கெல்லாம் முழுமனதோடு அவர் நானாவிதமான குற்றேவல்கள் புரிந்து வந்தார். தாய் தன் குழந்தைகளுக்கு

என்னென்ன விதங்களிலெல்லாம் பணிவிடை செய்கின்ருளோ அந்தந்த விதங்களிலெல்லாம் சுவாமி விவேகானந்தர் தமது குரு சகோதரர்களுக்கும் சிஷ்யர்களுக்கும் பணிவிடை புரிந்துவந்தார்.

தமது ஆயுள் முழுதிலும் விவேகானந்தர் எத்தகைய தொண்டராக இருந்தார் என்பதற்குச் சான்ருக ஒப்பற்ற ஒரு நிகழ்ச்சியை எடுத்துக் கூறுவது பொருந்தும். சுவாமிகள் பரிவ்ராஜக பரமஹம்சராகப் பரதகண்டம் முழுதிலும் சுற்றுப் பிரயாணம் செய்துகொண்டிருந்தார். வட இந்தியாவில் ஒரு இருப்புப் பாதை நிலையத்தில் அவர் தங்கியிருந்தபொழுது அந்த நிலையத்துக்கு நிர்வாகியாயிருந்த ஸ்டேஷன் மாஸ்டர் குப்தா என்பவர் சுவாமிகளோடு சிறிதுநேரம் உரையாடினர். அப்பொழுது சுவாமிகளின் மகிமை ஒரு சிறிது அந்த ஸ்டேஷன் மாஸ்டருக்கு விளங்கிற்று. தம்மோடு ஒருநாள் அங்கே தங்கியிருக்க வேண்டும் என்று ஸ்ரீமான் குப்தா என்னும் ஸ்டேஷன் மாஸ்டர் வேண்டிக்கொண்டார்.

“ஒரு நாள் பழகினும் பெரியோர் கேண்மை
இருநிலம் பிளக்க வேர் வீழ்க்குமே”

என்னும் பழமொழிக்கு ஒப்ப இவ் இருவர்க்கிடையில் நட்பு முதிர்ந்தது. தானும் ஒரு துறவியாகி விவேகானந்தரைப் பின்பற்ற வேண்டும் என்று ஸ்டேஷன் மாஸ்டர் விரும்பினர். அவருடைய வைராக்கியத்தைச் சோதிக்க விரும்பிய விவேகானந்தர் அவரிடம் போர்ட்டர்களாகவும் இருப்புப்பாதைப் பணியாளர்களாகவும் வேலை புரிந்தவர்கள் வீடுகளுக்குச் சென்று தமக்காகவென்று பிக்ஷையேற்று வரும்படி ஏவினர். தாம் வகித்த ஸ்டேஷன் மாஸ்டர் பதவியைப் பொருள் படுத்தாது தமது வேலையாட்கள் வீட்டிலிருந்து அவர் பிக்ஷ

யேற்றுவந்து சுவாமிகளுக்குப் படைத்தார். பிறகு தக்க ஏற்பாடுகளைச் செய்துகொண்டு சுவாமிகளின் சிஷ்யராக அவர் புறப்பட்டுப் போனார். இருவரும் சேர்ந்து கால்நடையாகத் தேச சஞ்சாரம் செய்தார்கள். இரண்டு மூன்று நாட்களுக்குப் பிறகு பாதையில் நடந்துபோய்க் கொண்டிருந்த பொழுது புதிதாகச் சேர்ந்த சிஷ்யருக்குக் கடும் ஜுரம்வந்தது. உடல் வண்ணத்திலோ சிஷ்யர் விவேகானந்தருக்குப் பின் வாங்கியவர் அல்லர்! அத்தகைய பருத்த மேனியை விவேகானந்தர் தூக்கித் தம் தோளில் போட்டுக்கொண்டு மூன்று மைல் தூரம் நடந்து ஓர் ஊர் போய்ச் சேர்ந்தார். சில நாட்களுக்கு முன்பு அவர்கள் இருவரும் ஒருவரையொருவர் அறியாதிருந்த வேற்றூர்களாயிருந்தனர். சில நாட்களுக்குப் பிறகு குருவும் சிஷ்யரும் ஒருவர் பொருட்டு ஒருவர் உயிரைக் கொடுக்க முன் வந்தனர். இம்முறையில் தொண்டு புரிகின்றவர்களே தலைவர்களாகத் தகுதியுடையவர்கள் ஆகின்றனர்.

தமது சிஷ்யர்களுக்கும் குரு சகோதரர்களுக்கும் அரிய விஷயம் ஒன்றை அவர் திரும்பத் திரும்ப ஞாபகமூட்டி வந்தார். அதாவது தாம் எப்பொழுதுமே பிறர்க்கு அதிபதியாயிருக்க விரும்பவில்லையென்றும், தமது சொந்த அனுபவங்களையும் தெள்ளியெடுத்த கோட்பாடுகளையும் பிறர்க்குப் பாங்குடன் எடுத்து வழங்குதலில் தம்கடமை முடிகிறது என்றும், அப்படி அவர் வழங்கிய நன்மைகளை ஒவ்வொருவரும் அவரவர் அறிவுக்கும் ஆற்றலுக்கும் ஏற்றவாறு வாங்கிப் பயன்படுத்திக்கொள்ளவேண்டும் என்றும் அவர் விளக்கி வந்தார். சுவாமி விவேகானந்தர் செத்துப்போனதாகவே கருதும்படியே சிஷ்யர்களுக்கு அவர் சொல்லி வந்தார். அதாவது மறைந்துபோன பிறகு எத்தகைய பொறுப்பையெடுத்துக்கொண்டு சிஷ்யர்கள் தம் கடமைகளை

ஆற்றி வருவார்களோ அவை யாவையும் சுவாமிகள் உயிரோடிருக்கும்பொழுதே அவர் தங்களுக்கிடையில் உயிருடன் இல்லையென்று கருதித் தம் கடனாற்றி வரவேண்டும் என்று அவர் வற்புறுத்தி வந்தார்.

தமது சிஷ்யர்களுக்குச் சுவாமி விவேகானந்தர் வேதாந்த பாடம் புகட்டி வந்தபொழுது சில அரிய கோட்பாடுகளை அவர்களுக்கு எடுத்து இயம்பினர். அடிபணியத் தெரிந்து கொள்வது சிஷ்யன் ஒருவனுடைய முதல் கடமையாகும். குரு சொல்லைத் தட்டாது நடந்து கொள்ளவேண்டும். சில வேளைகளில் குரு இடுகிற கட்டளையில் அவர் பிழை போயிருக்கலாம். அவர் செய்த பிழையைப்பற்றிச் சிஷ்யன் ஒன்றும் பேசலாகாது. இட்டகட்டளையை முழு மனதுடன் நிறைவேற்ற வேண்டும். பிறகு சந்தர்ப்பம் வாய்த்தால் தத்துவ விசாரம் செய்கிற முறையில் குரு செய்த பிழையைச் சிஷ்யன் எடுத்துக்காட்டலாம். அப்படி எடுத்துக்காட்டுதற்கிடையிலும் முற்றிலும் குருவை அடிபணிய அவன் ஆயத்தமாயிருக்கவேண்டும். "நதியில் மிதந்துகொண்டிருக்கின்ற முதலை ஒன்றின் வாயில் குதிக்கும்படி நான் உங்களுக்குக் கட்டளையிட்டால் அதை அப்படியே துணிந்துசெய்ய நீங்கள் ஆயத்தமாயிருக்க வேண்டும். இப்படிக் கட்டளையிடுவது பொருந்துமா என்று வாதாடுபவன் சிஷ்யனாகத் தகுதியற்றவன். உங்களைப் பயிற்றுவிக்கிற முறையில் நான் மிகவும் கண்டிப்பாயிருக்கிறேன். தேவையானால் உங்கள் கழுத்தில் சுருக்குப்போட்டு ஒரு மரத்தில் தூக்கிக் கட்டிவிடுவேன். அடுத்தக்ஷணத்தில் உங்கள் நலத்தின் பொருட்டு என் உயிரைக் கொடுக்கவும் நான் ஆயத்தமாயிருக்கிறேன்."— இங்ஙனம் சுவாமி விவேகானந்தர் புகட்டியருளினர். தலைவன் ஒருவனிடத்து இருக்கவேண்டிய பண்புகளுக்கு இக்கூற்று நல்லதொரு எடுத்துக்காட்டு ஆகிறது.

தலைவன் ஒருவனுக்குத் தற்பெருமை தகாது. தான் மற்றவர்களுக்கெல்லாம் தலைவனாய் இருப்பதைப் பற்றிய உணர்ச்சி அவன் உள்ளத்தில் புகலாகாது. தொண்டர்க்குத் தொண்டன் என்று இறைவன் இயம்பப்படுகிறார். இறைவனது இறைமை தொண்டினின்று தோன்றியதாம். தாங்கள் உடல் பொருள் ஆவியனைத்தையும் தம்மிடம் ஒப்படைத்த சிஷ்யர்களுக்குச் சுவாமி விவேகானந்தர் இறைவன் ஆனார். அவருடைய இறைமையும் தொண்டினின்று உருவெடுத்ததாம். பெயரையும் புகழையும் முன்னிட்டுத் தலைமை தாங்குபவன் அறிந்தோ அறியாமலோ கீர்த்திக்கு அடிமையாகிறான். புகழை முன்னிட்டுத் தனக்குக் கீழ் இருப்பவர்களுக்கு அவன் ஏதாவது பொல்லாங்கு செய்பவன் ஆகிறான். சுவாமி விவேகானந்தருக்கு வாய்த்த கீர்த்தியோ ஒப்பற்றது. ஆனால் அவர் அதில் மயங்கவில்லை. அதைக் குறித்து அவர் மனம் நொந்தார். பரமஹம்ஸதேவர் திரட்டிய திருக்கூட்டத்துக்குத் தாம் ஒரு பணிவான வேலைக்காரனாய் இருந்தால் போதும் என்பதுவே அவர் உள்ளத்தினுள் ஊறியிருந்த அவாவாகும். அந்த உணர்வு இடையறாது அவர் உள்ளத்தில் இருந்தமையினால்தான் அவர் தம்மை வந்தடைந்தவர் யாருக்கும் ஒரு தீங்கும் செய்ததில்லை. யாண்டும் நலமே புரிந்து வந்தார்.

பல தடவைகளில் சுவாமி விவேகானந்தர் தமது சிஷ்யர்களுக்கு ஒரு கருத்தைப் பகரவும், கடிதங்களில் எடுத்து எழுதவும் செய்தார். தாம் பெற்றுள்ள தகுதி மிகச் சாமானியமானதென்றும், தம்மைவிட நூறு மடங்கு பெரியவர்களாகத் தமது சிஷ்யர்கள் ஒவ்வொருவரும் ஆகவேண்டும் என்றும் அவர் வற்புறுத்திக் கூறினார். மனமார அவர் கொண்டிருந்த விருப்பமும் அதுவே. அவரிடத்து அகங்காரம்

சிறிதேனும் இல்லையென்பதற்கு அது நல்ல எடுத்துக்காட்டு ஆகும். சிஷ்யருடைய நலத்தில் அவர் எத்தகைய ஊக்கம் கொண்டிருந்தார் என்பதையும் அது நன்கு எடுத்துக் காட்டுகிறது. திரிகரண சுத்தியுடன் நன்கு தொண்டு புரிகின்றவனே தகைமிகு தலைவன் ஆகிறான். தன்னை வந்து சாருகிறவர்களெல்லாம் முன்னேறுதற்கு முறை வகுத்து வைப்பவனே தகைமிகு தலைவன் ஆகிறான். சுவாமி விவேகானந்தர் பிறவித்தலைவர். தமது ஆயுட்காலம் முழுதிலும் தமது தலைமையின் தகைமையை எல்லாச் செயல்களின் வாயிலாகவும் அவர் விளக்கிய வண்ணமாயிருந்தார்.

---

7. பல்கலை வல்லுநர்

கலைஞானத்துக்கும் பரஞானத்துக்கும் இடையில் வேற்றுமை உண்டு. நித்தியமாயுள்ள பரம்பொருளை அறிவதற்கு உறுதுணையாவது பரஞானம். ஆனால் கலைஞானமோ அநித்தியமாயுள்ள பிரபஞ்சத்தைப் பற்றியது. ஆயினும் பலர் கருதுகிறபடி பரஞானத்துக்கும் கலைஞானத்துக்கும் இடையில் முரண்பாடு இல்லை. கலைஞானத்தைச் சரியாகக் கையாளாதவர்கள் பிரபஞ்சத்திலேயே உழல்பவர் ஆகின்றனர். அவர்களுடைய அறியாமைக்கு ஏற்ப உலக வாழ்க்கையை அவர்கள் சரியாகப் பயன்படுத்தத் தெரியாதவர்களும் ஆகின்றனர். ஆனால் சரியாகக் கையாளுகிற கலைஞானத்தின் ஒவ்வொரு பகுதியும் உலக வாழ்க்கைக்குப் பயன்படுவதுபோன்று பரஞானத்துக்கும் துணைபுரிவதாகும். சிவபெருமானே அறுபத்துநான்கு கலைஞானங்களின்

சொரூபம் என விளக்கப்படுகிறார். அன்னை பராசக்தியைப் பற்றிய கோட்பாடும் இதுவேயாம். இனி, சிவ சக்தி பல விதப்பட்ட கலைஞான சொரூபமாக இருப்பதால் அக்கலை ஞானங்கள் ஆத்ம சாதனத்துக்கு இடைஞ்சல்கள் ஆக மாட்டா. சிவனாருடைய அம்சங்களில் பல சுவாமி விவே கானந்தரிடம் திகழ்வன வாயின. அவர் பலவிதமான கலை ஞானங்களின் சொரூபமாகவே இருந்தது அதற்குச் சான்று ஆகும். பற்பல கலைஞானங்களை ஆத்ம சாதனத்துக்கு எப்படிப் பயன்படுத்தலாம் என்பதைச் சுவாமிகளிடமிருந்து நாம் நன்கு அறிந்து கொள்ளலாம்.

கலை ஞானங்கள் அனைத்தையும் தொகுத்து இயல், இசை, கூத்து என்னும் மூன்று பகுதிகளுள் அடக்கி வைக்க லாம். இயலானது மேலோங்கி வரும்பொழுது அது இசை யாக வடிவெடுக்கிறது. பிறகு இசை கூத்தாகப் பூர்த்தியா கிறது. சிவபெருமானே ஆனந்தக் கூத்தன் என அழைக்கப் படுகிறார். கலைஞானங்கள் அனைத்துக்கும் அவரே உறை விடமாகிறார் என்பது அதினின்று நன்கு புலனாகிறது. இயல் என்னும் பகுதி பொதுவாக மொழிக்கு வழங்கப்படுகிறது. பேசுகிற மொழியானது மேலும் மேலும் திருந்தியமையு மிடத்து அம்மொழியில் இயல் உருவெடுக்கிறது. திருந்திய மொழி எது என்னும் கேள்வி ஈண்டு எழுகிறது. கருத்தை ஐயம் திரிபு அறத் திருந்திய மொழி வெளியாக்குகிறது. அம்மொழியைப் பயன்படுத்துகிறவர்களுக்கு அதில் சிரமம் ஒன்றும் இருக்கலாகாது. நல்லுணவை உண்டு செமிப்பதில் சிரமம் இல்லை. அது வாழ்க்கைக்கு இன்றியமையாதது. காற்றைச் சுவாசித்து வாழ்க்கைக்குப் பயன்படுத்துவதில் சிரமம் ஒன்றுமில்லை. அது இயல்பாக அமைகிறது. அங்ஙனம் பகர்தலிலும் பகரக் கேட்பதிலும் பொருள்படுத்துதலிலும்

சிரமம் இல்லாது அமைகிற மொழி இயல்பிலே மேன்மை யடைந்துள்ளதாம். மொழியை இயலுக்கு ஒப்ப வளர்ப்பது ஒரு கலைஞானம் ஆகிறது. கலை கற்கிறவன் ஒருவன் கையாளுகிற மொழியிலே வல்லுநன் ஆகிருன். அவன் கற்றுள்ள மொழியை நன்கு பயன்படுத்துவதன் மூலம் தன் வாழ்வையே அலங்கரிக்கிருன். அவனது வாழ்வு தனக்கும் மற்றவர்களுக்கும் நன்கு பயன்படுவதாகிறது. சமுதாயத்தை நேர்வழியில் திருப்புதற்கு இயலில் ஓங்கியுள்ள மொழி நன்கு உதவுகிறது. கலை வல்லுநன் கையிலுள்ள ஒப்பற்ற ஆயுதம் என்று அவனுடைய திருந்திய மொழியைப்பற்றிப் பகரலாம். உலக மக்களையெல்லாம் தமது நல்வழிக்கு விவேகானந்த சுவாமிகள் இனிது அழைத்துக்கொண்டு வந்து சேர்ந்தார். அதற்கு அவரிடம் கருவியாயிருந்தது அவர் தெளிவுற கற்றிருந்த சில மொழிகளாம். அம்மொழிகளை அவர் பயிலாது புறக்கணித்திருப்பாராகில் அல்லது அம்மொழிகளை அவர் அரைகுறையாகப் பயின்றிருப்பாரகில் உலகத்தவரைத் தமது நல்வழிக்குக் கொண்டுவர அவர் தகுதியற்றவராயிருப் பார். மொழியைக் கசடறக் கற்றல் என்னும் கலைஞானம் அருள் துறையில் தாம் செல்லுதற்கும், அருள் துறையில் மற்றவர்களை இனிது நடாத்துதற்கும் விவேகானந்த சுவாமி களுக்கு நன்கு பயன்பட்டது.

இயல் என்னும் பகுதி மொழிக்கு மட்டும் உரியதன்று. மொழியை விட மானுட வாழ்க்கைக்கு அது பன்மடங்கு உரியதாகிறது. விவேகானந்த சுவாமிகளின் வாழ்வானது இயல் என்னும் கலை ஞானமே வடிவெடுத்தது எனலாம். இயற்கையில் அமைந்திருப்பவைகள் அனைத்தும் இயல் ஆகின்றன. இயற்கையில் அமைந்திருப்பவைகளெல்லாம் உண்மையில் இறைவனுர் சொரூபம். ஆதலால் அவைகளி

டத்துப் பண்பும் பயனும் ஏராளமாகப் புதைந்திருக்கின்றன. இயற்கையில் உள்ளவைகளின் பண்பை வெளிப்படுத்துவது கலை ஞானம். இயற்கையில் இருப்பவைகளை மேலான வழி களில் பயன்படுத்துவது கலை ஞானம். இயற்கையில் இருப் பவைகளின் அழகை மக்களுக்கு அறிவுறுத்துவது கலை ஞானம். மானுட வாழ்வில் பண்பும் பயனும் அழகும் வேண்டியவாறு புதைந்து கிடக்கின்றன. அதற்கு நல்ல எடுத்துக்காட்டாக இலங்கினவர் சுவாமி விவேகானந்தர். கலை ஞானங்களிலே வல்லுநன் ஆகாதவன் பரஞானத்தை எட்ட முடியாது என்று விவேகானந்த சுவாமிகள் பகர்ந்த தில் பொருள் மிகவுண்டு. அவருடைய வாழ்வே அதற்கு எடுத்துக் காட்டாகிறது. விவேகானந்தருடைய நடை உடை பாவனையில் கலையே யாண்டும் திகழ்வதாயிற்று. அவர் கிடப் பதிலும் இருப்பதிலும் நிற்பதிலும் நடப்பதிலும் மகிமை பொலிவதாயிற்று. கிடப்பதில் அழகு காட்டுபவன் அரங்க நாதன். இருப்பதில் அழகு காட்டுபவன் கணேசன். நிற்பதில் அழகு காட்டுபவன் முருகன். நடப்பதில் அல்லது அசைவதில் அழகு காட்டுபவன் அம்பலக் கூத்தன். இங்ஙனம் தெய்வ சொரூபங்கள் அனைத்தும் கலைக்கு விளக்கங்கள் ஆகின்றன. விவேகானந்தரைக் கூர்ந்து ஆராய்ந்தவர்கள் அவர் தமது மேனியைப் பயன்படுத்தியதிலேயே அழகும் இனிமையும் பொலிவனவாயின எனப்பகர்ந்திருக்கின்றனர். புகைப்படம் பிடிப்பதற்கு அவரை இப்படித் திரும்பி உட்காரும், அப்படிப் பார்த்து நில்லும் என்றெல்லாம் இயம்பவேண்டிய அவசியம் புகைப்படம் பிடிப்பவனுக்கு உண்டாகவில்லை. அவர் எப்படி யிருந்தாலும் அதில் அழகு சொட்டியது. ஆத்ம சொரூபி யாகிய அவர் ஆக்கை என்னும் ஆயுதத்தைக் கையாண்டதி லேயே இடையறாது கலை திகழ்வதாயிற்று. அந்தரங்கமாக

ஒரு மனிதன் அடைந்திருக்கின்ற ஆத்ம பரிபாகம் பகிரங்க மாக அவனது மேனியின் மூலம் மிளிர்கிறது என்றால், அதற்கு விவேகானந்தரே நல்ல எடுத்துக்காட்டு ஆவார்.

பயில்வான்

மனிதன் நல்ல முறையில் உடற்பயிற்சி பெறுவது கலை களில் ஒன்றாகிறது. இயலில் இது இடம் பெறுகிறது. திட்பமும் தகுதியும் வாய்க்கப்பெறாத தேகம் எக்காரியத் துக்கும் உதவாது. சுவர் இல்லாது சித்திரம் எழுத முடி யாது என்னும் கோட்பாட்டுக்கு ஒப்ப உறுதிப்பாடான மேனி படையாது இருப்பவன் மேலான காரியம் எதையும் சாதிக்க வல்லவன் ஆகான்.

नायमात्मा बलहीनेन लभ्यः

நாயமாத்மா பலஹீனேன லப்ய:

இந்த ஆத்மன் பலஹீனனால் அடையப்படுவதன்று என்பது வேதவாக்கு. தேகப்பயிற்சியில் விவேகானந்தர் ஊக்கம் மிகக் கொண்டிருந்தார். மற்றவர்களுக்கும் அக்கோட் பாட்டை அவர் வற்புறுத்திப் பகர்ந்திருக்கிறார். சிலம்பம் விளையாடுவதும் மற்போர் புரிவதும் அவருக்கு மிக விருப்ப மான தேகப்பயிற்சிகளாகும். சிலம்பம் வீசி விளையாடுவதில் தனி மகிமையும் அழகும் இருக்கிறது. அதிலிருக்கிற அழகைக் கண்டு ரசிக்க இயலாதவர்கள் இயற்கையில் எதனிடத்தும் அழகைக் கண்டு ரசிக்கமாட்டார்கள். அதற் கேற்றவாறு அவர்களுடைய ஞானம் குறைபாடுடையதாகும். விவேகானந்தர் மற்போர் புரிந்ததிலும் தனி மகிமையொன்று இருந்தது. வயதிலும் உடல் திறனிலும் தமக்கு மிக்கார் சிலரை அவர் எளிதில் தோற்கடித்திருக்கிறார். அன்னவர் களை இவர் எதிர்த்து விளையாடியபொழுது அக்காட்சியைக்

காண வந்தவர்கள் இளைஞராயிருந்த நரேந்திரரிடத்து அனுதாபம் மிகக் காட்டினர். ஆனால் நரேந்திரரோ அக்கலைகளிலே கைதேர்ந்த நிபுணராயிருந்தமையினால் பெரியவர்களை எளிதில் தோற்கடிக்க அவருக்கு இயன்றது. மாணாக்கராயிருந்த பொழுதே அவரிடத்து மற்றொரு மகிமை மிளிர்வதாயிற்று. தமக்கு ஒப்ப அல்லது திறமையில் தமக்குச் சற்று கீழ்மையிலிருந்த மாணாக்கரோடு இவர் சிலம்பவிளையாட்டோ அல்லது மற்போரோ புரியவேண்டி நேரிட்டால் அந்த இளைஞனுடைய திறமைகளை யெல்லாம் முன்னணிக்குக் கொண்டு வருகிற முறையில் நரேந்திரன் நடந்துகொள்ளுவான். இறுதியில் வெற்றிபெற்ற திருப்தி தம்மை எதிர்த்தவனுக்கு இருக்கவேண்டும் என்று எண்ணி இவர் தோல்வியைத் தம்மீது வருவித்துக் கொள்வார். அப்படி இவர் செய்வதிலும் கலையழகே பொலிவதாயிற்று. தமது உடல் திட்பத்தை வெளிப்படுத்த வேண்டிய நிர்ப்பந்தம் நேர்ந்தகாலை அதற்கேற்றவாறு இவர் நடந்து கொள்ளுவார். இவர் ஒரு தடவை இருப்புப்பாதை வண்டிப் பிரயாணம் செய்தபொழுது இவருடன் பிரயாணம் பண்ணிய ஆங்கிலேயர்கள் இருவர் இவருக்கு ஆங்கிலம் தெரியாதென்று கருதி எள்ளி நகையாடினார்கள். அதையெல்லாம் இவர் பொருள்படுத்தாதிருந்ததில் ஒரு கலையழகு மிளிர்ந்தது. பிறகு முறை வழுவி வசனங்கள் பேசியவர்களிடம் இவர் இயம்பிய ஒரு கடுஞ்சொல்லை முன்னிட்டு அவ்விரு ஆங்கிலேயர்களும் இவரைத் தாக்க முன் வந்தார்கள். அந்த நெருக்கடியிலே விவேகானந்தர் தமது கைவலிவை வெளிப்படுத்தியதிலும், அவ் ஆங்கிலேயர் இருவரையும் இரண்டொரு அடிகளில் அடக்கி விட முடியும் என்று தமது உடல் வலிவை இவர் விளக்கிக் காட்டியதிலும் கலையழகு திகழ்வதாயிற்று. சுருங்கச்

சொல்லின் சிறுர்களுடன் தாமும் ஒரு சிறுராக இவர் விளையாடியதிலும், சான்றோர்கள் முன்னிலையில் இவர் சாந்த மூர்த்தியாக வீற்றிருந்ததிலும், மூர்க்கர்களை எதிர்த்து வெல்ல இவர் முற்பட்டதிலும் அந்தந்தச் சந்தர்ப்பங்களில் இவர் நடந்துகொண்ட விதங்களிலும் உடலைப்பற்றிய இயல் அல்லது கலை திகழ்வதாயிற்று. கலையே உருவெடுத்துப் பிறந்தவர் விவேகானந்தர்.

இசை

கவி என்னும் சொல் ஆதியில் சிருஷ்டி கர்த்தாவாகிய பிரம்மதேவனைக் குறித்தது. நாளடைவில் யாப்பு இலக்கணத்தோடு மொழியை அமைப்பவன் கவி என்று அழைக்கப்படுகிறுன். அவன் மொழியை அழகுற ஒழுங்குப்பாட்டுடன் அமைப்பதால் அவனைக் கவி என்று கூறுதலில் பொருள் உண்டு. மொழியிலே இயலானது பண்பட்டு மேல் நிலைக்கு வரும்பொழுது அது இசையாக வடிவெடுக்கிறது. ராகமும் தாளமும் தாமாக இசையில் இடம் பெறுகின்றன. சுவாமி விவேகானந்தரை ஒரு சிறந்த கவிஞன் எனக் கூறலாம். ஏனென்ருல் பிரம்மதேவனுடைய இயல்பும் கவிவாணனுடைய இயல்பும் சேர்ந்து அவரிடம் அமைந்திருக்கின்றன. ஸ்தூலமாகத் தென்படுகிற பிரபஞ்சம் முழுதும் உண்மையில் ஆத்ம சொரூபத்தின் புறத்தோற்றம் என்பதைப் பிரம்மதேவன் தெளிவுறுத்துகிருர். தமது ஒவ்வொரு செயலின் வாயிலாகவும் விவேகானந்த சுவாமிகளும் அவ்வுண்மையைத்தான் விளக்கியுள்ளார். ஆத்ம சொரூபத்தின் அழகைப் பஞ்சேந்திரியங்கள் மூலமாக நுகர்ந்து ரசிப்பதற்கு ஏதுவாயிருக்கிற மொழியை அவர் கவிதை என்கிருர். அவர் தாமே கவிதைகள் பலவற்றை இயற்றியிருக்கிருர். அக்கவிதைகள் வாயிலாக அவர்

இயற்கைத் தெய்வத்தோடு உறவாடுகிறார். பாய்ந்தோடுகிற நதிகளிலும், வானளாவி இருக்கின்ற வனங்களிலும், பரந்து விரிந்திருக்கின்ற கடல்களிலும், விண்ணுலகைக் கட்டிப்பிடிக்கின்ற பர்வதங்களிலும், உலகுக்கு உயிர் வழங்குகின்ற சூரியனிடத்தும், மௌனமாகத் தமது மகிமைகளை விளக்கிக்கொண்டிருக்கும் நட்சத்திரங்களிலும் தெய்விகம் பொலிவதை அவருடைய கவிதை உலகுக்கு எடுத்துப் புகட்டுகிறது. இயற்கையின் ஸ்தூல நடைமுறைகளைப் பயன்படுத்தி இன்பம் பெறுவதை அவர் ஒருங்கே ஒதுக்கி வைத்ததனால் அவர் ஒரு கடும் துறவியாகிறார். அதே ஸ்தூல உலகில் ஆத்மீகம் பொலிவதை அறியாதவர்களும் அறிந்து கொள்ளும்படி அவர் விளக்கிக் காட்டுவதால் அவர் கவிஞர் ஆகிறார். பஞ்சேந்திரியங்களுக்குப் புலனாகின்ற புறவுலகிலே அவர் தமது சொரூபத்தை இழக்கவில்லை. ஸ்தூல உலகுக்கு அவர் யாண்டும் சாட்சியாகத் திகழ்ந்தார். அதைக் குறித்து அவர் ஆழ்ந்து தியானங்கள் புரிந்தார். பருத்த பிரபஞ்சமாகக் காட்சி கொடுத்துக் கொண்டிருப்பது உண்மையில் பரம்பொருளே என்பதை அவர் சுவானுபவத்தில் அறிந்தார். அப்படித் தாம் அறிந்ததை மொழியில் அமைத்து மக்களுக்கு வழங்கினார். வடிவம் உடைத்திருப்பது போன்று பிரபஞ்சம் தென்படுகிறது. பெயரளவில் அதற்கு வடிவம் இருக்கிறது. உண்மையில் அது வடிவங்கள் யாவையும் கடந்திருக்கும் பரம்பொருளேயாம். இவ்வுண்மையை மனிதனுக்கு ஞாபக மூட்டுகிற இசையே பண்பாடடைந்துள்ள இசை என்பது விவேகானந்த சுவாமிகளின் கொள்கை. இவ்வுண்மையை எடுத்து வழங்குதற்கென்று அமைந்துள்ள மொழியே நன்கு அமைந்துள்ள மொழியாகிறது.

சுவாமி விவேகானந்தரை ஒரு தலைசிறந்த சங்கீத வித்வான் எனலாம். இந்தியாவில் வழக்கத்தில் இருந்து

வருகிற சங்கீதத்தில் அவர் நிபுணர். மேல்நாட்டு இசையின் அடிப்படைத் தத்துவங்களையும் அவர் பெரிதும் ஆராய்ந்து அறிந்திருந்தார். மேல்நாட்டு இசைகளுள் பிராஞ்சு தேசத்து இசையில் விசேஷக் கருத்தைச் செலுத்தி அவர் ஆராய்ந்திருந்தார். இனி, அவர் பாடக் கேட்பது மற்றவர் களுக்குப் பரம வாய்ப்பு ஆகும். அவருடைய குரலின் இனிமையோ, அதற்குச் செவி கொடுப்போரை எல்லாம் இவ்வுலகை மறந்து பாரமார்த்திகப் பெருநிலைக்கு எடுத்துச் செல்லவல்லதாம். உலகிலே வெவ்வேறு நாடுகளிலே வெவ் வேறு பாங்குடைய இசைகளைக் கேட்டு ரசித்த ரசிகர் ஒருவர் தாம் ரசித்து அறிந்த சங்கீத வித்வான்களுள் சுவாமி விவேகானந்தரே தலைசிறந்தவர் எனக் கூறினர். விவேகா னந்தரைக் குறித்து அவர் வரைந்துள்ளதாவது: "சுவாமி கள் பாடும்பொழுது ஓசையின் இனிமை எத்தகைய உச்ச நிலைக்குப் போகக் கூடும் என்பது வெளியாகிறது. ராகம் தானக வடிவெடுக்கிறது. பாடுகிறவரது அந்தராத்ம சொரூபம் புறத்தில் இருப்பவைகளையெல்லாம் அமைதியுறச் செய்து தம்மகத்து எடுத்து அடக்கிக்கொள்கிறது. செவி கொடுக்கின்றவர்களெல்லாம் தங்களை மறந்து பாடுகிறவரது சொரூபமாக மாறுகின்றனர். இப்பிரபஞ்சத்துக்கு அப்பா லுள்ள பரமானந்தப் பெருநிலைக்குத் தமக்குச் செவிகொடுப் போரைச் சுவாமிகள் சேர்த்தழைத்துக் கொண்டுபோய் விடு கிறுர்." இங்ஙனம் அந்த ரசிகர் ஒருவர் குறித்து வைத்துள் ளது மட்டும் நமக்குப் போதிய பிரமாணம் ஆகாது. இசை வல்லுநர் நூற்றுக்கணக்கானபேர் சுவாமி விவேகானந்தரின் இன்னிசைக்கு ஆட்பட்டவர்கள் ஆயினர். எப்பொழுதெல் லாம் விவேகானந்த சுவாமிகள் பாட ஆரம்பித்தாரோ அப் பொழுதெல்லாம் அவரது ஆத்ம சொரூபம் ஆனந்த பரவச

மடைந்திருக்கும். எத்தனையோ தடவைகளில் உணவு உறக்கம் முதலியவைகளை யெல்லாம் மறந்துவிட்டு இடை யருத இன்னிசை பாடுதலிலேயே அவர் சொக்கியிருந்தார். மணிக்கணக்காக ஆனந்த பரவசத்துடன் அவர் பாடுவார். ஆயாசம் என்பது அணுவளவேனும் அவருடைய உடலையோ உள்ளத்தையோ தாக்கித் தொடுவதில்லை. திரும்பத் திரும்ப ஸ்ரீ ராமகிருஷ்ண பரமஹம்சரைச் சமாதியில் மூழ்கியிருக்கச் செய்தது விவேகானந்தருடைய பக்தியும் இன்னிசையும் கலந்த பாடல்களாம். பாடுதலில் அவர் திறமை மிகப் பெற்றிருந்தது போன்று இன்னிசைக் கருவிகளை மீட்டுதலி லும் அவர் சமர்த்தராயிருந்தார். ஓசையற்று உயிரற்றுக் கிடக்கின்ற இன்னிசைக் கருவிகள் விவேகானந்தரது கை பட்டவுடன் உயிர் பெற்று எழுந்திருக்கும். உள்ளத்தைக் கவர்ந்து கொள்ளைகொண்டு போகின்ற ஓசைகள் அவை களிடத்திருந்து வடிவெடுக்கும்.

அஞ்ஞானத்தில் உழல்பவர்களுக்கு இயற்கை வேறு, இறைவன் வேறு. ஆதலால் இறைவனை அடைதற்கு இயற்கையைப் புறக்கணிப்பது அன்னவர்களுக்கு உபாயம் ஆயிற்று. ஆனல் தீர்க்கதரிசிகளுக்கோ இயற்கையே இறை வன்; இறைவனே இயற்கை. இவ்வுண்மையை ஆத்ம சாதகர்களுக்கு அறிவுறுத்துதல் பொருட்டுச் சுவாமி விவேகா னந்தர் பகர்ந்ததாவது: "இயற்கை முழுதிலும் மகிமையோடு கூடிய ஒழுங்குப்பாடு பொலிந்துகொண்டிருக்கிறது. இப் பெருமையை இயற்கையினூடு கண்டு ரசிக்க இயலாதவன் எங்ஙனம் இறைவனைக்கண்டு ரசிக்கப்போகிருன்? உண்மை யில் இறைவனே பிரபஞ்சம் என்னும் ஆடையணிந்து அதன் மூலம் இலங்குகின்றார். அவர் அணிந்திருக்கிற ஆடையை முன்னிட்டு அவருடைய சொரூபம் மாறிப்போமா? அவர்

ஒழுங்குப்பாட்டுக்கும் மகிமைக்கும் அழகுக்கும் உறைவிடம். இயற்கையிலே இம் மேன்மைகளைக் காண்பவன் உண்மையில் தெய்வத்தைத் தரிசித்தவன் ஆகிறான்." அவர் கல்லூரி மாணுக்கராயிருந்த பொழுது ஸ்ரீ ராமகிருஷ்ண பரமஹம்ஸரிடம் அடிக்கடி போய்க்கொண்டிருந்தார். அக்காலத்தில் பரமஹம்ஸதேவர் பிருந்தாவன வாசிகளாகிய கோபிமார்களைப் பற்றிப் பகர்ந்ததற்கு நரேந்திரர் செவிசாய்க்க மறுத்தார். ஆத்ம சாதகன் ஒருவனுச்கு அந்த ஆயர்பாடி மடந்தையர்கள் பூண்டிருந்த அன்பு பொருந்தாது என்பது அன்று அவர் கொண்டிருந்த கருத்து. ஆனல் நாளடைவில் அன்பைப்பற்றி அவர் பூண்டிருந்த அபிப்பிராயத்தை அடியோடு மாற்றிக்கொண்டார். அதன் விளைவாக ஜயதேவர் இயற்றியிருக்கும் கீதகோவிந்தத்தை அவர் பக்தி பரவசத்துடன் பாடுவார். இன்னும் எத்தகைய பரந்த மாறுதல் அவருடைய வாழ்க்கையில் உண்டாயிற்று என்பதை ஆராய்வது உசிதம். முன்பு நிர்க்குணப் பிரம்மத்தின் சொரூபத்தை மட்டும் பக்தி பரவசத்துடன் அவர் பாடி வந்தார். ஆனல் தாம் பண்பாடு அடைந்ததன் அறிகுறியாக எந்தக் காதல் பாட்டையானலும் சரி, அவர் உள்ளம் உருகிப் பாடுவார். காதல் பாடல்கள் உலகத்தவர்களுக்கு இந்திரிய சுகத்தை ஞாபகமூட்டுகின்றன. ஆனல் அதே காதல் பாடல்களும் அவைகளில் அடங்கியிருக்கின்ற தேனினும் இனிய கருத்துக்களும் விவேகானந்தர் என்று பெயர் பூண்டிருந்த இத்துறவியார்க்கு ஜீவாத்ம பரமாத்ம பேரிணக்கத்துக்கு நன்கு பயன்பட்டன. ஒரு சந்தர்ப்பத்தில் அவர் பகர்ந்ததாவது: "காதல் பாடல் ஒன்றை ரசிக்க இயலாதவன் மனபரிபாகம் அடையாதவன். அத்தகையவனை நான் இம்மியளவும் பொருள்படுத்தேன்." அப்படி அவர் பகர்ந்ததற்குத் தக்க

காரணம் உண்டு. அன்பினால் குழைகின்ற மனதே மனிதனைப் படிப்படியாக மேலோனாக மாற்றியமைக்கிறது. அன்பு உள்ளத்தில் ஊற்றெடுப்பதற்கு ஏற்ப விலங்கு நிலையிலிருக்கும் மனிதன் தெய்வ நிலைக்கு மாறியமைகிறான். அவன் உள்ளத்தினுள் உறையும் பேருணர்வானது அன்பின் மூலமாகவே அருள்நிலை யெய்துகிறது. பாரசீக பாஷையில் காதல் பாடல்கள் வேண்டியவாறு இடம்பெற்றிருக்கின்றன. அப்பாடல்களை விவேகானந்தர் பெரிதும் பாராட்டி வந்தார். காதலர்களை இருமை நிலையினின்று ஒருமைக்கு உயர்த்தெடுத்துச் செல்லும் சிறப்பு அப்பாடல்களில் இருந்தன என்று அவர் இயம்பினார். ஜீவாத்மா பரமாத்மா இணக்கத்துக்கு அப்பாடல்களுக்கு நிகரான தூண்டுகோலைக் காண முடியாது என்பது அவருடைய கருத்து.

மானுடன் ஒருவனிடத்து ஏதேனும் ஒரு கலைஞானம் சிறப்புற்று ஒளிருமாகில் அதன் மூலம் ஏனைய கலைஞானங்களையெல்லாம் வருவித்துக்கொள்ள அம்மனிதனுக்கு இயலும் என்பது சுவாமிகளது கருத்து. கலை வல்லுநன் ஒருவன் காவியம், கலை, இசை, பேச்சுத்திறன் ஆகியவைகளை எளிதில் ஒன்று சேர்க்க வல்லவனாவான். அச் செயலைத் தான் விவேகானந்த சுவாமிகள் செய்து சாதித்தார். அவர் பரபோதத்தை உணர்ந்து அதில் ஊறியிருப்பவர். ஆதலால் எக்கலையை அவர் கையாண்டாலும் அக்கலைக்கு அலாதி சிறப்பை நல்குவார். பரமஹம்ஸதேவர் பகர்ந்திருந்த உபமானக்கதை ஒன்று விவேகானந்தருக்கு நன்கு பொருந்தும். துணிகளுக்குச் சாயம் தோய்ப்பவன் ஒருவன் தன் கடையில் ஒரே சாயத்தொட்டியை வைத்திருந்தான். யார் வந்து தன் வேஷ்டிக்கு என்ன சாயம் தோய்க்கவேண்டும் என்கின்றாரோ அந்தச் சாயத்தை அந்த ஒரே தொட்டி

யினின்று அவ் வேஷ்டியில் அவன் ஏற்றிக்கொடுப்பான். பிரம்மஞானி அந்தச் சாயவேலைக்காரன் ஆகிறான். அவன் படைத்துள்ள பிரம்மஞானம் அவனது ஒற்றைச் சாயத் தொட்டியாகும். மாந்தர் வேண்டுகின்ற எல்லா விதமான கலை ஞானங்களையும் மாண்புடையவைகளாக அமைத்து அந்த ஒரு தொட்டியினின்று வெளியாக்கலாம். விவேகானந்தர் அவ்வரிய செயலை இனிது ஆற்றுவாராயினர். எக் கலையை எடுத்து அவர் கையாண்டாலும் அக்கலையில் அவர் முற்றும் மூழ்கியிருப்பார். அக் கலைக்குப் புதிய மகிமையை அவர் நல்குவார். அதனிடத்துப் பொலிகிற தெய்விகத்தை அவர் உலகுக்கு எடுத்து வழங்குவார். ஆதலால்தான் அவர் நிகழ்த்திய சம்பாஷணைகளில் கவிதை ரசம் பொலிவதாயிற்று. உலகுக்கு அவர் வழங்கிய வேதாந்த தரிசனத்தில் கவிதை ரசம் பொலிவதாயிற்று. அவர் எத்தனை யெத்தனையோ உபந்யாசங்கள் செய்தார்; அரிய விஷயங்களைப் பற்றிக் கட்டுரைகள் எழுதினர். அவையாவும் பாரமார்த்திகத்தைப் பற்றியவைகளேயாம். மகோன்னதமான மகிமைகளை அவரது பேச்சிலும் எழுத்திலும் காணலாம். பாலர்களுக்கும் விளங்குகிற எளிமையையும் அதே பேச்சுக்களிலும் எழுத்துக்களிலும் காணலாம்.

அமெரிக்காவினின்று இந்தியாவில் தமது சிஷ்யர் ஒருவருக்கு விடுத்த கடிதத்தில் அவர் எழுதியிருந்ததாவது:

"ஹிந்துக்களுடைய கருத்துக்களை ஆங்கில மொழியில் ஏற்றுவது எளிதன்று. இந்தியாவின் தத்துவ தர்சனமோ மற்ற நாட்டு மேதாவியிடத்தும் மனக்குழப்பத்தை உண்டு பண்ணிவிடும். இந்தியாவின் புராணக் கதைகளிலோ விடுவிக்க முடியாத சிக்கல்கள் புதைந்து கிடக்கின்றன. மனோ தத்துவத்தைப்பற்றி ஹிந்துக்கள் பேசுவதெல்லாம் மற்ற

வர்களுக்கு விபரீதானவைகளாகத் தோன்றும். ஹிந்துக்களின் தத்துவக் கூற்றுக்களைக் கேட்டு வெளிநாட்டவர்கள் திகிலடைவர். இத்தகைய நூல்களினின்று புதியதொரு மதபோதனையை உலகத்தவர்களுக்கு எடுத்து வழங்க வேண்டியிருக்கிறது. உண்மையில் அது புதியது அன்று; பழைய வேதாந்தத்துக்குப் புதிய வடிவம் கொடுத்தாக வேண்டும். கேட்பதற்கும் கற்பதற்கும் அது மிக எளியதாக இருக்கவேண்டும். கற்க விரும்புகிறவர்கள் எல்லார்க்கும் அது உரியதாக வேண்டும். அதே வேளையில் தத்துவ விசாரத்திலும் தத்துவ ஞானத்திலும் உயர்நிலை யெய்தியுள்ள மேலோர்களுக்கும் அது ஏற்புடையதாக வேண்டும். இது எத்தகைய பகீரதப்பிரயத்தனம் என்பது இம்முயற்சியில் ஈடுபட்டிருக்கிறவர்களுக்கே விளங்கும். கிரகிப்பதற்கரிய அத்வைத வேதாந்தம் புதிய உயிர்பெற்றுப் பொலியவேண்டும். அதில் கவிதை ரசம் கமழவேண்டும். பொதுமக்களது அன்றாட வாழ்க்கைக்கு அது முற்றிலும் உதவவேண்டும். நகைப்புக்குரிய புராணச் சிக்கல்களினின்று சீலத்தில் சீரிய முறைகள் உருவெடுத்தாக வேண்டும். சாதாரண மனிதனுக்கு மதிமயக்கத்தை ஊட்டுகிற யோகசாஸ்திரங்களிலிருந்து பௌதிக விக்ஞானத்துக்கு உடன்பாடான கோட்பாடுகள் உருவெடுத்தாக வேண்டும். படிப்படியாக மனதை நல்வழியில் பயிலுவித்து அம்மனதை வெல்லுதற்கான யோக சாதனங்கள் நவீன முறையில் வழங்கப்படவேண்டும். இவை யாவையும் தொகுத்தெடுத்துப் பாலர்களுக்கும் விளங்கக் கூடிய பொருத்தமான படிவத்தில் அமைத்துக் கொடுத்தாக வேண்டும். எனது வாழ்நாளில் நான் சாதித்தாக வேண்டிய அரும்பணி இதுவேயாம்.''

இசையானது மனிதனால் கற்பிக்கப்பட்டதன்று. அது இயற்கையிலேயே சதா ஒலித்துக் கொண்டிருக்கிறது.

என்பது சுவாமிகளது அனுபவம். ஓங்காரம் என்னும் தொனி இடையருது ஒலித்துக்கொண்டிருக்கிறது என்பது யோகியர் களது அனுபவம். அந்த ஓங்காரத்தின் பலப்பல கிளை களாக எத்தனை யெத்தனையோ ராகங்கள் இயற்கையில் உருவெடுக்கின்றன. பழங்காலத்து ரிஷிகள் அந்த இசைகளை யெல்லாம் கேட்டறிந்தது போன்று சுவாமி விவேகானந் தரும் தமது சுவானுபவத்தில் கேட்டறிந்தார். பறவைகள் கூவுவதில், அருவிகள் வீழ்வதில், மரச் சோலைகள் காற்றில் ஓசையை உண்டுபண்ணுவதில் ராகங்கள் உருவெடுக்கின் றன வென்று அவர் உணரலாயினர். எந்தெந்த வேளையில் எந்தெந்த ராகங்களைப் பாடவேண்டும் என்னும் கோட்பாடு இயற்கையில் நிகழ்ந்து வருகிற ஒலி வேற்றுமைகளை அனு சரித்து அமைந்தவைகளாம். ஆகவே, இயற்கையாக இலங்கு கிற தெய்வத்தை இசையின் மூலமாக மனிதன் நன்கு வழுத் தலாம் என்பது விவேகானந்தரது கருத்து. இறை வழி பாட்டுக்கு இசை உதவாது என்று கருதுகிறவர்கள் ஆத்மீகத்துறையில் மிகக் கீழ்நிலையில் இருப்பவர்களாம். ஓசையை முறையாக எழுப்புமிடத்து மனது அகண்டாகாரத் தில் லயமாகிறது. ஸ்ரீ ராமகிருஷ்ண பரமஹம்சரும் சுவாமி விவேகானந்தரும் இசையின் மூலம் பரத்தைச் சார்ந்து சமாதி நிலை எய்தியவர்கள். பிருந்தாவனக் கிருஷ்ணன் தனது குழல் ஓசையின் மூலம் உயிர்கள் அனைத்தையும் பாரமார்த்திகத்திலுள்ள அதீத நிலைக்கு அழைத்துச் சென் ருன். ஆக இசை என்னும் கலையைத் தெய்வ வழிபாட்டுக்கு நிகராக வைத்து விவேகானந்தர் போற்றியதில் வியப் பொன்றுமில்லை.

ஓவியம் : சில்பம்

நாடு ஒன்று பலப்பல கலைஞானங்களில் அடைந்துள்ள நிலை அந்நாட்டின் நாகரிகத்துக்கு நல்ல எடுத்துக்காட்டாகும்.

உலகில் வெவ்வேறு நாடுகளில் இருக்கும் ஓவியங்களை யும் சில்பங்களையும் விவேகானந்தர் ஊக்கத்துடன் ஆராய்ச்சி செய்தவர். இத்துறைகளில் மேல் நாட்டுக் கலைகளையும் இந்தியக் கலைகளையும் அவர் நன்கு சீர்தூக்கி நமக்குக் காட்டியுள்ளார். இயற்கையை, அது இருக்கிறபடி விளக்கிக் காட்டுவது மேல்நாட்டு ஓவியமும் சில்பமும் செய்து வருகிற செயல்களாம். ஆனால் இந்தியக் கலையின் போக்கு அத் தகையதன்று. படம் ஒன்று வரைந்தால் அது பிரபஞ்சத்தை மறந்து மனிதனுடைய மனதை அதற்கு அப்பால் எடுத்துச் செல்லுவது இந்திய ஓவியம். கல்லிலே வடிவம் ஒன்று செதுக்கியெடுத்தால் அந்த வடிவத்தைப் பார்த்து ரசிக்கிற மனிதனது மனது பிரபஞ்சத்தை மறந்து அதற்கு அப்பால் போகவேண்டும். கோபியர்களுடன் கண்ணன் விளையாடு வதை இந்தியக் கலைஞானம் ஓவியமாகத் தீட்டி வைத்திருக் கிறது. அந்த விளையாட்டில் அவர்கள் இவ்வுலகை மறந்து அதீத நிலைக்குப் போகின்றனர். படத்தில் அக்காட்சியைப் பார்க்கின்றவர்களுக்கும் அத்தகைய மனநிலை வரவேண்டும். இனி வடிவத்தைக் கல்லினின்று இந்திய சில்பம் உருவாக்கி யிருப்பதை ஆராய வேண்டும். காளிகாதேவியின் முக விலாசம் கல்லினின்று உருவாக்கப்பட்டிருக்கின்றது. பயந்து அம் முகத்தைப் பார்க்கிறவர்களுக்கு அது பயமூட்டுகிறது. அன்பு சுரந்து அம்முகத்தைப் பார்க்கிறவர்களுக்கு அது அனுக்ரகம் செய்கிறது. இப்படிப் பரதேவதை செய்கிற செயலை இந்தியச் சில்பம் வெளியாக்குகிறது. இனி, சிவனார் தக்ஷிணாமூர்த்தியாக எழுந்தருளியிருப்பதை இந்திய சில்பம் உருவாக்கியிருக்கிறது. அந்த வடிவத்தை உற்று நோக்குகிறவர்களுக்கு இவ்வுலக உணர்வு அகலுகிறது. பிரபஞ்சத்துக்கு அதீதத்திலிருக்கும் மௌனத்தை அம் மனது

எட்டுகிறது. ஆக, இந்தியக் கலைகளெல்லாம் மக்களை இவ்வுலக உணர்வினின்று உயர்ந்ததோர் நிலைக்கு எடுத்துச் செல்வதற்கென்றே அமைந்துள்ளவைகளாம். ஆனால் மேல் நாட்டு ஓவியமும் சில்பமும் இயற்கையை ஐம்பொறிகளுக்கு எட்டுகிறவாறு விளக்குகின்றன. இறைச்சித் துண்டு ஒன்றை ஒருவன் ஓவியமாக வரைகிறான். நாய் ஒன்று அதை இறைச்சியென்றே கருதி அதைக் கௌவப்போகிறது. மானுட உடலை அழகுறப் படமாகத் தீட்டுவதும் கவர்ச்சிகர மாகக் கல்லில் செதுக்குவதும் மேல்நாட்டுக்கலை. இயற் கையின் எழிலை உள்ளவாறு சித்திரிப்பது அதன் செயல். இயற்கையின் அமைப்பைக்கொண்டு மனதை அதற்கப்பால் எடுத்துச் செல்லுவது இந்தியக் கலை.

இனி, சில்பத்தைக் கையாண்டு வீடுகள் கட்டுகிற முறையைச் சுவாமி விவேகானந்தர் ஆராய்ச்சி செய்திருக் கிறார். குடிசைகள் இந்தியாவிலும் இருக்கின்றன. ஏனைய நாடுகளிலும் இருக்கின்றன. புறநாடுகளில் இருக்கும் எளிய குடிசைகள் இவ்வுலக வாழ்வை ஞாபகமூட்டுபவைகளாய் இருக்கின்றன. ஆனால் இந்தியாவில் பழங்காலந்தொட்டு இன்றுவரை மக்கள் குடியிருந்து வந்துள்ள குடிசைகள் இந்தி யப் பண்புக்கேற்ற எண்ணங்களை ஊட்டுபவைகளாய் இருக் கின்றன. ‘சிறுகக் கட்டிப் பெருக வாழ்’ என்பது இந்தியப் பண்பு. இந்தியாவின் குடிசைகள் பாரமார்த்திகப் பெரு வாழ்வுக்குச் சின்னங்களாய் அமைந்துள்ளன. இனி, மாளிகை கள் கட்டுவதிலும் இந்தியக் கொள்கைக்கும் வெளிநாட்டுக் கொள்கைகளுக்கும் இடையில் வேற்றுமை மிக உண்டு. கல்கத்தாவில் அமைந்துள்ள மாளிகைகளெல்லாம் லண்டன் நகரில் அமைந்துள்ள மாளிகைகளின் நகல்கள் ஆகின்றன. மரப்பெட்டிகளை ஒன்றன்மீது ஒன்றை அடுக்குவது போன்று

அம்மாளிகைகள் அமைந்திருக்கின்றன. அதற்கு நேர் மாருக இந்திய சில்பத்துக்கு எடுத்துக்காட்டாக ராஜபுதன சமஸ்தானங்களில் உள்ள தர்மசாலைகளையும் தென்னிந்தியாவிலுள்ள கோவில்களையும் ஆராய்ந்து பார்த்தல் வேண்டும். அவைகள் அலாதியான ஆத்மீக எண்ணங்களை மக்களது உள்ளத்தில் வருவிக்கின்றவைகளாய் இருக்கின்றன. அன்னமேற்று அரும்பசியாற்றுதற்காக இனிது வாருங்கள், என்று மக்களை வரவழைப்பவைகள் போன்று இந்திய தர்மசாலைகள் அமைக்கப்பெற்றிருக்கின்றன. மானுடா, நீ மண்ணுலகில் பிறந்திருப்பது பரமனை அறிந்து அவனை அடைதற்பொருட்டு என்னும் எண்ணத்தை ஊட்டுபவைகளாக இந்தியாவிலுள்ள ஆலயங்கள் அமைந்திருக்கிறன. இங்ஙனம் ஓவியத்தையும் சில்பத்தையும் பற்றிச் சுவாமிகள் தமது கருத்துக்களைத் தெரிவித்திருக்கிருர்.

பாக சாஸ்திரம்

துறவறத்தின் உச்சநிலையை விவேகானந்த சுவாமிகளின் வாழ்வில் இனிது காண்கின்ருேம். உடல் உணர்வையெல்லாம் அவர் முற்றிலும் தாண்டியவர். உடலுக்கு எத்தகைய உணவு தற்செயலாய் வந்து வாய்க்கிறதோ அதையேற்று வந்தவர் அவர். ஆயினும் உணவு சமைப்பதைப் பற்றிய கலையை அவர் பொருள்படுத்தாது ஒதுக்கி வைத்தவர் அல்லர். பாக சாஸ்திரத்தில் அவர் கைதேர்ந்தவர். இந்திய ஐதிகப்படி சமையல் அறையானது மடைப்பள்ளியெனப் பகரப்பெறுகிறது. அது தேவாலயத்துக்கு நிகரானது. இறைவனுக்கு நைவேத்தியமாக உணவு ஆக்குவது இந்திய ஐதிகம். இறைவனுக்கு உரியதாக்குதற் பொருட்டு மனமடங்கியிருந்து, நாவடங்கியிருந்து உணவைச் சமைக்க வேண்டும். வழிபடு தெய்வத்துக்கு அதை நைவேத்திய

மாகப் படைக்க வேண்டும். பின்பு அதை ஈசுவரப் பிரசாத மாக மக்கள் அருந்தவேண்டும். இதுவே இந்தியப் பண்பு. ஒருவர் வழங்கும் உணவில் பொலிகிற தூய்மை அவரது மனபரிபாகத்துக்குப் புறச் சின்னமாகும். சுவாமி விவேகானந்தர் தூய்மைக்கு உறைவிடம். பாக சாஸ்திரத்தில் அவர் நிபுணர். அவர் கைப்படச் சமைத்த அமுதை ஏலும் பாக்கியம் மேல் நாட்டிலும் கீழ்நாட்டிலும் யாரோ சிலருக்குத்தான் வாய்த்தது. அப்படி அவர் ஆயத்தப்படுத்திய உணவை அருந்தியவர்கள் அதைத் தேவாமிருதமெனப் போற்றி இருக்கின்றனர். நல்லார் கைப்பட்ட உணவைத்தான் ஆத்ம சாதகர்கள் ஏற்கவேண்டும் என்னும் கோட்பாட்டுக்கு அக்கலையில் விவேகானந்தர் அடைந்திருந்த பண்பு நல்லதொரு எடுத்துக்காட்டு ஆகும். வெவ்வேறு சுவைகளைத் தெள்ளிய முறையில் வெளியாக்கும் திறமை அவருக்கிருந்தது. அவர் சமைத்த உணவு, அவர் பாடிய பாடல்கள் போன்று மனதை தெய்வ சான்னித்தியத்துக்கு எடுத்துச் செல்ல வல்லதாயிருந்தது. இச்சந்தர்ப்பத்தில் மற்றொரு மகான் பாக சாஸ்திரத்தில் அடைந்திருந்த பண்பை எடுத்துப் பகர்வது பொருந்தும். அண்மையில் தென்னாட்டில் திருவண்ணாமலையில் வதிந்திருந்த ரமண மகரிஷி பாக சாஸ்திரத்தில் வல்லவர். ஊறுகாய் முதலியவைகளை அவர் ஆயத்தப்படுத்தியது போன்று செய்ய அவரது ஆச்ரமத்தில் வேறு யாருக்குமே இயலவில்லை யென்று எல்லாரும் ஏகோபித்து இயம்பினர். பண்பாடடைந்துள்ள மனது எக்கலையில் புகுந்து செயல் புரிந்தாலும் அக்கலையின் உயர்வெல்லாம் அத்தூய மனமுடையவர்க்குச் சொந்தமாகிறது என்பது கோட்பாடு. ஆகவே அறுசுவையுடன் அமுது ஆயத்தப்படுத்துதல் என்னும் கலையிலும் சுவாமி விவேகானந்தர் தலைசிறந்தவராயிருந்தார்.

கூத்து

பரம்பொருளைப் பற்றிய முடிவான விளக்கம் மகா வாக்கியம் எனப்படுகிறது. வேதங்களில் உள்ள நான்கு மகாவாக்கியங்களுள் "பிரக்ஞானம் பிரம்மம்" என்பது ஒன்று. பேரறிவே மெய்ப்பொருள் என்பது அதன் கருத்து. அந்த மகாவாக்கியத்தை விவேகானந்த சுவாமிகள் சற்று மாற்றியமைத்தார். "கலை ஞானம் பிரம்மம்" என்பது அவருடைய கோட்பாடு. ஆனால் அவர் அப்படிப் பகர்ந்ததில் புதுமை ஒன்றும் இல்லை. அன்னை பராசக்தி சகலகலாவல்லி என அழைக்கப்படுகின்றாள். அத்தகைய சக்தி வேறு, சிவம் வேறு அன்று. சிவம் பிரம்மத்துக்கு அமைந்துள்ள மற்றொரு பெயர். பிரம்மமும் மாயையும் ஒன்று. கிரியா சொரூபமாயிருக்கிறபொழுது அவ்வஸ்து மாயை எனப்படுகிறது. நிஷ்கிரியா சொரூபமாயிருக்கிறபொழுது அது பிரம்மம். கிரியா சொரூபமாயிருக்கும்பொழுது தனது மஹிமைகளையெல்லாம் அவள் தோற்றுவிக்கிறாள். அவளின் பொலிவுகள் கலை ஞானங்களாகின்றன. ஆக, கலைகள் அனைத்தும் பரம்பொருளின் வெவ்வேறு விபூதிகளாம்.

திருந்தியமைந்துகொண்டு வருகிற மொழி இயலில் தொடங்கி இசையாக உயர்நிலையெய்தி கூத்து ஆக முற்றுப் பெறுகிறது. இக்கோட்பாட்டை ஆங்கிலத்தில் Prose, Poetry, Drama என்று இயம்புவார்கள். கூத்துக்கு ஒத்த கருவியாக மொழி அமையுமிடத்து அதில் இயலும் இசையும் கூத்து என்னும் வாழ்க்கைத் தத்துவமும் ஒன்றுபட்டு ஒளிர்கின்றன. வாழ்க்கை முறையை உள்ளபடி விளக்குதற்கு இத்தனைவித அலங்காரங்களுடன் மொழி பயன்படுகிறது. இனி, சிவனார் அம்பலக் கூத்தன் என்று இயம்பப்படுகிறார். பிரபஞ்சம் முழுதும் அவருடைய நாடகசாலை. ஆங்கு நிகழ்கிற

நிகழ்ச்சிகளெல்லாம் அவருடைய கூத்து. உயிர்கள் அனைத்தும் அக்கூத்தில் பங்கு எடுத்துக்கொள்கின்றன. நன்கு நடிக்கின்ற பாத்திரங்களும் பொருந்தாத முறையில் நடிக்கின்ற பாத்திரங்களும் இறையவனுர் கூத்தில் இடம் பெற்றிருக்கின்றனர். அவருடைய கூத்தில் கலந்துகொள்ளு கின்ற உயிர்கள் நாடகத்தின் வெவ்வேறு இயல்களில் நடித்து மேல் நிலைக்கு வரவர அவ் இறைவனுடைய சொரூபமாக மாறியமைகின்றன. முற்றிலும் பண்பட்டுள்ள ஜீவாத்மாக் கள் நடிக்கிற வாழ்வு என்னும் நாடகம் அம்பலக் கூத்தனு டைய சொரூபத்தையே விளக்குவது ஆகிறது. அங்ஙனம் சிவனுர்க்கு ஒப்ப உலக வாழ்வு என்னும் கூத்தை நன்கு நிறைவேற்றியவர் சுவாமி விவேகானந்தர்.

மொழியில் இயல், இசை, கூத்து ஆகிய மூன்று பகுதிகள் அமைந்திருப்பனபோன்று உயிர் வாழ்க்கையிலும் இம்மூன்று பகுதிகள் அமைந்திருக்கின்றன. அம் மூன்றின் உச்சநிலை விவேகானந்தரது வாழ்வில் வெளியாகிறது. பண் பட்ட வாழ்வு ஆத்மனுக்குரிய இயல் எனப்படுகிறது. பிறந்தது முதல்கொண்டு பண்பாட்டுக்கே விளக்கமாக விவேகானந்தர் விளங்கினுர். அவருடைய வாழ்வில் இலங் கிய இனிமையை இசை எனலாம். இறையவனுர் அண்டம் முழுதையும் இயக்குதலில் தானுக இசை தோன்றியிருப்பது போன்று இப்பரமாசாரியருடைய வாழ்க்கையில் இன்னிசை நிறைந்திருக்கிறது. இனி, வாழ்க்கையையே கூத்து என்று கூறுமிடத்து அதில் அமைந்துள்ள அரிய கோட்பாடு ஒன்றைப் பரிபூரண நிலையை எட்டியுள்ள பெருமக்கள் விளக்குகின்றனர். ஸ்ரீ ராமகிருஷ்ண பரமஹம்ஸர் சிறுபிள்ளை யாயிருந்தபொழுது ராதை, கிருஷ்ணன் முதலியவர்களு டைய ஜீவிதத்தை நாடகமாக நடித்தார். ஆனல் அவருக்கு

அது வெறும் நாடகமன்று; அதில் நடித்தபொழுது அவர் தாமே கிருஷ்ண சொரூபாக அல்லது ராதை சொரூபமாக மாறியமைந்தார். அப்பொழுது அவர் பரிந்து செய்த பிரார்த்தனையும் பிற்காலத்தில் சாதன தசையில் அவர் பரிந்துசெய்த பிரார்த்தனையும் ஒன்றுக்கொன்று நிகராயிருந்தன. கூத்துக்கும் உயிர் வாழ்க்கைக்கும் இடையில் அவருக்கு எந்தவிதமான வித்தியாசமும் ஏற்படவில்லை. அந்த அளவில் அவர் சிவசொரூபமாய் விளங்கினர். சிவனர் புரிந்து வருகிற அம்பலக் கூத்தில் எது வாழ்க்கைத் தத்துவம், எது வெறும் விளையாட்டு என்று பிரிக்கமுடியாது. பெரியோர்களுக்கு வாழ்வே விளையாட்டு; விளையாட்டே வாழ்வு. விவேகானந்தருடைய வாழ்க்கையும் அத்தகையது. ஜீவாத்மன் ஒருவன் உலகில் பிறந்து அரும்பெரும் செயல்களைச் செய்வதையெல்லாம் கவிஞன் ஒருவன் கற்பனையாக அமைக்கிறன் என்று வைத்துக்கொள்வோம். வால்மீகி மகரிஷி அப்படித் தமது மனதில் கிரகித்ததும் ராமாயண பாத்திரங்கள் அவையாவையும் நடித்ததும் ஒன்றுபட்டன. விவேகானந்தருடைய வாழ்க்கையும் அத்தகையது. புருஷோத்தமன் ஒருவன் பூலோக வாழ்க்கையை எவ்வளவு புனிதமாக நடாத்தக் கூடும் என்று மகாகவிஞர் கற்பிப்பதற்கு நிகராக விவேகானந்தருடைய வாழ்வு இலங்கிற்று. எனவே அவரே ஓரளவில் சிவசொரூபமாயிருந்து அம்பலக்கூத்துக்கு விளக்கமாயினர் என்று பகர்வது பொருந்தும். அவருடைய வாழ்க்கை முழுதும் பலப்பல கலைஞானங்களுக்கும் பாரமார்த்திகப் பெருவாழ்வுக்கும் விளக்கமாக அமைவதாயிற்று.

பிரபஞ்ச சொரூபமாயிருந்து பிரபஞ்ச நடைமுறை என்னும் கூத்தை நடாத்துகிற சிவபெருமான் அக்கூத்தையெல்லாம் பரமானந்தத்தில் திளைத்து இருந்து நிறைவேற்று

கிருர். அதை முன்னிட்டு அவருடைய கூத்து ஆனந்தத் தாண்டவம் என இயம்பப்படுகிறது. பின்பு அவருடைய கூத்து ஊர்த்துவத் தாண்டவத்தில் உச்சநிலை எய்துகிறது. இயற்கையில் அதற்கொரு உபமானம் எடுக்கவேண்டி வருமிடத்துத் தாமரைப்பூ அதற்கு முற்றிலும் பொருத்தமானது. பங்கஜம் என்பது அதற்கு அமைந்துள்ள பல பெயர்களில் ஒன்று. சேற்றில் பிறந்தது என்பது அதன் பொருள். சேற்றிலும் சேற்று நீரிலும் வாழ்ந்து வருகிற தாமரையானது மலரும்பொழுது நீருக்கு மேலே வருகிறது அப்பொழுது உலக சொரூபத்தினின்று நீங்கித் தெய்வ சொரூபமாக அது மாறுகிறது. தெய்வத்துக்குப் படைக்கப்படும் தகைமை அப்பொழுது அதற்கு வருகிறது. திருமகளும் கலைமகளும் தங்குதற்குத் தகுதியுடையதாகிறது. பிரபஞ்சத்தின் விளையாட்டெல்லாம் அத் தாமரைபோன்று பரம்பொருள் சொரூபமாக மாறியமைதற்பொருட்டாம். சிவனுடைய ஊர்த்துவத் தாண்டவம் இந்தத் தத்துவத்தை விளக்குகிறது. பிரபஞ்ச சொரூபமாக இருக்கிற அவர் பிரபஞ்சத்துக்கு அப்பாற்பட்டுள்ள பாரமார்த்திகப் பெருநிலையில் தமது சொரூபத்தைப் பூர்த்திபண்ணுகிருர். இனி, விவேகானந்தருடைய வாழ்க்கையையும் இந்த ஊர்த்துவத் தாண்டவத்தோடு ஒப்பிடலாம். பிரபஞ்சம் என்னும் சேற்றில் பிறந்தவர் போன்று அவர் தென்பட்டார். அவருடைய மேனி என்னும் தாமரையிலையில் பிரபஞ்சம் என்னும் தண்ணீர் சிறிதேனும் தோயவில்லை. யாண்டும் பவித்ர புருஷனுகவே அவர் பிரகாசித்திருந்தார். அதுதான் பரமஹம்ஸ தேவருக்குப் பரமானந்தத்தை ஊட்டியது. கல்கத்தா போன்ற ஒரு லௌகிக நகரத்தில் இத்தகைய சித்த புருஷன் ஒருவன் தோன்றி வரமுடியுமா, என்று அவர் திகைத்தார். இனி விவேகானந்தருடைய மனதோ

தாமரை மலர் போன்று பாரமார்த்திகத்திலேயே யாண்டும் ஊறியிருந்தது. அப்பெருநிலையில் அவர் நிலைபெற்றிருந்த தனால்தான் அவரிடத்திருந்து வெளியாகிய கலைஞானங்கள் அனைத்தும் தெய்வீகத்துடன் திகழ்வனவாயின. விவே கானந்தரை அறிந்துகொள்ளுதல் அவர்மாட்டு மிளிர்ந்த கலைஞானங்கள் அனைத்தையும் அறிந்து கொள்ளுதற்கு நிகராகிறது.

---

8. பரஞானி

மனிதன் பெறுகிற ஞானங்களுள் பரஞானம் முடிவானது. அதைப் பெற்றான பிறகு மேலும் மனிதன் பெற வேண்டிய பேறு ஒன்றுமில்லை. பரஞானம் எது என்பதை நாம் அறிந்திருக்கவேண்டும். இகம் பரம் என்னும் இரண்டு நிலைகள் இருக்கின்றன. அவைகளுள் இகம் என்னும் நிலையில் நாம் இப்பொழுது இருந்து வருகிறோம். எது ஐம்பொறிகளுக்கும் அந்தக்கரணத்துக்கும் புலனாகிறதோ அது இகம். அது நிலையற்றது. அதைப் புலப்படுத்துகிற பொறிகளும் நிலையற்றவைகள். இகத்துக்கு மாறாக இருப்பது பரம். அது நிலையுற்றது; என்றும் அழியாதது. அதை அடைகிற மனிதனுக்கு மரணமிலாப் பெருவாழ்வு வாய்க்கிறது. ஆனால் அப்படிப் பரம் என்று சொல்லுவது இகத்துக்கு மாறுபட்டிருந்தாலும் அது இகத்துக்குப் புறம்பானதல்ல. மனிதனுக்கு மெய்ஞ்ஞானம் வாய்க்குங்காலை இந்த இகமே பரமாகக் காட்சி கொடுக்கிறது. பரத்தின் காட்சி மெய்க் காட்சி. அது நிலையுற்றது. இகத்தின் காட்சி பொய்யானது;

அது நிலையற்றது. பரத்தைப் பற்றிய மெய்ஞ்ஞானத்தைத் திருமூலர்

மரத்தை மறைத்தது மாமத யானை
மரத்தில் மறைந்தது மாமத யானை
பரத்தை மறைத்தது பார்முதற் பூதம்
பரத்தில் மறைந்தது பார்முதற் பூதமே

எனத் திருவாய் மலர்ந்தருளியிருக்கின்றார். பொருள் ஒன்றே; காட்சிகள் இரண்டு என்பதை இத்திருமந்திரம் நன்கு விளக்குகிறது.

சுவாமி விவேகானந்தர் முற்றத்தெளிந்த பரஞானி. இனி, பரஞானி இகத்துக்குப் பயன்படாது போவதில்லை. உண்மையில் பரஞானியே இகத்துக்கு நன்கு பயன்படுகிறான். பரஞானமே பிரம்ம ஞானம் எனவும் சிவஞானம் எனவும் பகரப் பெறுகிறது. அந்த ஞானத்தைப் பெற்றவனுக்கு எதைப் பற்றியும் மதிமயக்கம் இல்லை.

எப்பொருள் எத்தன்மைத் தாயினும் அப்பொருள்
மெய்ப்பொருள் காண்ப தறிவு

என்னும் கோட்பாடு பரஞானத்துக்கே முற்றிலும் பொருந்துகிறது. உண்மையில் இருப்பது ஒரு பொருள். அது பல பொருள்களாகக் காட்சிக் கொடுத்துக் கொண்டிருக்கிறது. இவ்வுண்மையை

ईश वास्यं इदं सर्वं यत्किञ्च जगत्यां जगत्।

ஈசா வாஸ்யம் இதம் ஸர்வம் யத்கிஞ்ச ஜகத்யாம் ஜகத்

என உபநிஷதம் முரசு அறைகிறது. இப்பிரபஞ்சத்தில் பலவாகத் தென்படுபவைகளெல்லாம் ஈசன் என்னும் ஒரு மூலப்பொருளால் ஆக்கப்பெற்றவைகளாம். அந்த ஞானத்தை விவேகானந்தர் பெற்றிருந்ததனால் உலகனைத்தையும் ஒரே

குடும்பமாகப் பாவிக்க அவருக்கு இயன்றது. ஆண்டவனே ஆருயிர்களாக வடிவெடுத்து விளையாடுகிறுர். ஆதலால் ஆருயிர்களோடு வைக்கிற நல்லிணக்கம் ஆண்டவனுடைய வழிபாடு ஆகிறது. பரஞானியின் வாழ்வு இடையருத ஈசன் சேவையாகிறது. விவேகானந்தருடைய வாழ்வு இவ்வுண் மையை நன்கு விளக்குகிறது. பரஞானத்தைப் பெற்றவ னுக்குப் பரத்தின் காட்சி ஒருபொழுதும் மறைவதில்லை. பரத்தையே காணும் தெளிந்த ஞானநிலை அவனுக்குச் சொந்தமாகிறது. அதனல் மற்ற உயிர்களும் பெரு நன்மை அடைகின்றன. ஞானியோடு தொடர்வு கொள்ளும் பொழு தெல்லாம் மற்றவர்களுக்கு மெய்ப்பொருளைப் பற்றிய மயக்கம் ஒருவாறு தெளிகிறது. விவேகானந்தர் முன்னிலையில் மன்னுயிர்களுக்குக் கீழான மனப்பான்மை எதும் உரு வெடுக்கவில்லை. தெய்வீக உணர்வே அவர்கள் உள்ளத்தில் உதிக்கலாயிற்று. கனிந்த கனி இனிக் கனிதற்கிருக்கிற முதிர்ந்த காய்களையெல்லாம் விரைவில் கனிவிக்க வல்லது. அங்ஙனம் ஞானக் கனியாகிய விவேகானந்த சுவாமிகள் பர ஞான நிலையை எட்டுதற்கான பரிபக்குவம் அடைந்திருந்தவர் களையெல்லாம் அப்பெரு நிலைக்கு மிக எளிதில் உயர்த்துவா ராயினர். பரஞானியின் சாந்நித்தியமே பரம்பொருளின் சாந் நித்தியமாகிறது. உலகத்தவர்களுக்கு அத்தகைய சாந்நித் தியம் விவேகானந்தர் வாயிலாக வாய்ப்பதாயிற்று. தம்மை யறியாது அவர் உலகுக்குப் பாரமார்த்திகப் பெருநிலையை ஓயாது வழங்கிக் கொண்டிருந்தார்.

சுவாமி விவேகானந்தர் புரிந்த ஞானோபதேசங்களிலும் உபந்யாசங்களிலும் பிரசங்கங்களிலும் பொதுமக்கள் தனி மகிமையொன்றை உணரலாயினர். பிரசங்கத்துக்கு அவர் மேடையின்மீது எழுந்தருளிய பொழுதெல்லாம் அவர்

சொரூபம் முற்றிலும் பரம்பொருள் சொரூபமாக மாறிப் போம். பேசுபவன், பேச்சைக் கேட்பவர்கள் என்னும் தன்மையும் முன்னிலேயும் ஒன்றித்து ஒரே பரநிலேயாய் உருவெடுத்திருக்கும். ஆதலால் அவருடைய ஞான உரைக்குச் செவி கொடுக்க வந்தவர்கள் அத்தருணத்தில் முற்றிலும் அவர் சொரூபமாக மாறியமைவர். காந்தத்தை அணுகியுள்ள இரும்பனைத்தும் அவ்வேளையில் காந்தமாக அமைந்திருப்பது போன்று விவேகானந்தரால் உபதேசிக்கப் பெறுபவர்களெல்லாம் விவேகானந்தர் சொரூபம் ஆவார்கள். அவர் தமது அனுபவங்களைத் தமக்குத்தாமே பேசிக்கொள்வது போன்று அவருடைய வாசாலம் வெளியாகும். ஆக, அவருடைய பிரசங்க நேரத்தில் கூடத்தில் இருந்தவர்களெல்லாம் தம்மை மறந்து அத்வைத நிலேயில் பேருணர்வைப் பெறுபவர் ஆயினர். யான் எனது என்னும் செருக்கு யாண்டும் ஜீவபோதத்துக்கு உற்றவைகளாகின்றன. விவேகானந்தரது பேருரை என்னும் அமிர்தத்தைப் புசித்துக் கொண்டிருந்தவர்களுக்கு அவ்வேளையில் யான் எனது என்னும் செருக்கு அறவே அகன்று போவதாயிற்று. தமது பிரசங்கம் வாயிலாக விவேகானந்தர் உண்மையில் தமது பரஞானத்தைக் கேட்பவர்கள் உள்ளத்திலே அதைப் பிரதிஷ்டை பண்ணி வந்தார். அதுதான் அவர் உலகுக்கு அளித்த பெரிய ஞானக் கொடையாகும். ஸ்ரீ ராமகிருஷ்ண பரமஹம்ஸர் அட்பெரிய கொடைக்காகவென்றே விவேகானந்தரை ஆயத்தப்படுத்தினர். அமெரிக்கா தேசத்தவர்களுடைய மனப்பாங்கையே புதியதொரு அச்சில் விவேகானந்தர் வார்த்து வைத்தார் என்று அந்நாட்டிலிருந்த பேரறிஞர்கள் பகர்ந்தனர். தன்னிடத்திலில்லாத ஒன்றை மனிதன் பிறர்க்கெடுத்து வழங்கமுடியாது. பின்பு தன்னிடத்திலிருப்பதைத்

தன் விருப்பப்படி யாருக்கு வேண்டுமாலும் எடுத்து வழங்கலாம். அங்ஙனம் விவேகானந்தர் பரஞானத்தை உலகுக்கு எடுத்து வழங்கிய வள்ளல் ஆவார்.

வேதாந்த தரிசனத்தைக் கற்பதற்கு வித்தியார்த்திகள் ஐதிகமாகக் கையாண்டு வந்த முறை வேறு; அதை உலகத்தவர்கள் விவேகானந்தரிடமிருந்து பெற்ற முறை வேறு. தர்க்க சாஸ்திரத்தை ஏராளமாகக் கற்றுத் தர்க்க ரீதியாக வேதாந்த விசாரம் செய்வது இடைக்காலத்து ஞானக்கல்வி முறையாக இருந்து வந்தது. அப்படி ஏட்டுக் கல்வியினின்று மக்கள் பெற்ற வேதாந்த விற்பன்னம் வாழ்க்கையோடு சிறிதும் சம்பந்தப்படாதிருந்தது. ஆகாயக்கோட்டை கட்டுவது போன்றும், பகல் கனவு காண்பது போன்றும் அவர்கள் ஏதேதோ நுட்பமான விஷயங்களைத் தர்க்க ரீதியாக விவாதித்துக் கொண்டிருப்பார்கள். ஆதலால் பொதுவாக வேதாந்திகளை இவ்வையக வாழ்க்கைக்கு உதவாதவர்கள் என உலகத்தவர் பொருள்படுத்தி வந்தனர். இங்ஙனம் சென்ற நூற்றாண்டில் வேதாந்த தர்சனமானது உயிரற்றுக் கிடந்தது. அதற்குப் புதிய உயிர் கொடுத்தவர் விவேகானந்தர். தாயின் பராமரிப்பைத் தெரிந்து கொள்ளுதற்குக் குழந்தை தர்க்கம் கற்க வேண்டிய அவசியமில்லை. வேதாந்தத்தாய் ஓயாது வழங்கி வருகிற அருள் விருந்தை ஏற்றுக்கொள்ளுதற்கு உலக மக்கள் தர்க்கம் ஒன்றும் கற்றுக்கொள்ள வேண்டிய அவசியமில்லை. பாரமார்த்திகப் பேருணர்வு தங்கள் உள்ளத்தில் உருவெடுத்த பிறகு வேதாந்தத்தை ஓதாது உணரும் திறன் மக்கள் அனைவருக்கும் எளிதில் வருகிறது. அத்தகைய புதிய சூழ்நிலையை அமைத்துக் கொடுத்தவர் சுவாமி விவேகானந்தர். வேதாந்த தர்சனத்தை தர்க்க சாஸ்திரம் என்னும் பிணியினின்று பிரித்

தெடுத்து வாழ்க்கைக் கவிதை மயமாக விவேகானந்தர் அமைத்தருளினர். உலகிலே தோன்றியுள்ள காவியங்களி லெல்லாம் தலை சிறந்த காவியங்களாகத் திகழ்பவைகள் உபநிஷதங்கள் என்பது விவேகானந்தரது துணிபு. எனவே உபநிஷதங்களைக் கற்பதற்குத் தர்க்க சாஸ்திரங்களை நாடிச் செல்லவேண்டிய அவசியமில்லை. உயிர் வாழ்க்கையே வேதாந்தம். வேதாந்தமே உயிர் வாழ்க்கைக்கு ஜீவநாடி. உபநிஷதங்கள் சிறுவாழ்வில் உறங்கிக்கிடக்கும் உயிர்களைப் பெருவாழ்வுக்குத் தட்டி யெழுப்புகின்றன என விவேகா னந்தர் விளக்கியருளியுள்ளார். உபநிஷதங்களின் தெளிந்த கோட்பாடுகள் ஒன்ருகத் திரட்டப்பட்டது பகவத்கீதை. உப நிஷதங்களின் உட்கருத்துக்களை ஓர்மைப்படுத்தி விளக்கி யிருப்பது வேதாந்த சூத்திரங்கள் என்னும் சாஸ்திரம். வேதாந்த சூத்திரங்களைப் பிரம்ம சூத்திரங்கள் எனப் பகர்வ தும் உண்டு. ஆக, உபநிஷதங்கள், பிரம்மசூத்திரம், பகவத் கீதை ஆகிய மூன்றும் பிரஸ்தானத்திரயங்கள் எனப் பெயர் பெற்றுள்ளன. வேதாந்த தர்சனத்துக்கு இம்மூன்று நூல் களும் முடிவான பிரமாணங்கள் ஆகின்றன. இந்நூல்கள் மூன்றும் பெரிதும் பாண்டித்தியம் படைத்திருந்த துறவியர் களிடத்திலேயே இதுகாறும் இருந்து வந்தன. ஆனல் அம்மூன்று அரிய நூல்களையும் பொதுமக்களுக்கு உரிமை யாக்கியவர் விவேகானந்தர். நல்ல கவிதை ஒன்றில் எளி மையும் ஆழ்ந்த நுட்பமும் ஒன்றுசேர்ந்திருப்பது முறை விவேகானந்தர் இயற்றியுள்ள ஞானயோகம், பக்தியோகம், ராஜயோகம், கர்மயோகம் ஆகியவைகள் வேதாந்தத்தின் சாரம் ஆகின்றன. அந்நூல்களைப் பண்டிதர்களும் பாமரர் களும் எளிதில் படிக்கலாம். ஆசிரியரிடமிருந்து முறையாகப் பாடம் கேட்கவேண்டிய அவசியம் இல்லை. தன் வாழ்வை

ஒவ்வொரு மனிதனும் தானே அறிந்து கொள்ளுகின்றான். ஒவ்வொரு மனிதனுக்கும் தனது வாழ்க்கைக்கு விளக்கமாக விவேகானந்தர் இயற்றியுள்ள இந்த நான்கு யோகங்களும் அமைந்துள்ளன. ஆக வேதாந்தத்தை மக்களுடைய பொதுவுடைமையாகச் செய்து வைத்தவர் விவேகானந்தர். அதன் அரிய கோட்பாடுகளை யெல்லாம் மிக எளிதில் யார் வேண்டுமானாலும் விவேகானந்தரின் நூல்களினின்று கற்றுக் கொள்ளலாம். அவர் பரஞானியாயிருந்ததனால் கிரகிப்பதற்கு அரியவைகளை மிக எளியவைகளாக மாற்றியமைக்க அவருக்கு முடிந்தது.

ஒவ்வொரு சாஸ்திரத்திலும் கோட்பாடு, அனுஷ்டானம் என்னும் இரண்டு பகுதிகள் இருக்கின்றன. புத்தி பூர்வமாக ஒரு சாஸ்திரத்தின் நுட்பங்களை அறிந்துகொள்ளுதல் கோட்பாடு. அவைகளைப் பழக்கத்தில் கொண்டுவருவது அனுஷ்டானம். இடைக்காலத்தில் வேதாந்த தர்சனம் மக்களுக்கிடையில் வெறும் கோட்பாடாகக் கிடப்பதாயிற்று. அதை முற்றிலும் வாழ்க்கைக்குரியதாக விளக்கிக் காட்டிய பெருமை விவேகானந்தருக்கு உண்டு. அவர் அனுபூதிமானாக இருந்ததே அதற்குக் காரணமாயிற்று. மெய்ப்பொருளை அவர் நேர் சாக்ஷாத்கரித்திருந்ததனால் அவர் பரஞானியானார். அப்படி அவர் சுவானுபூதியில் அறிந்திருந்த உண்மைகளை வாழ்க்கையோடு இணைத்து மக்களுக்கு எடுத்துப் புகட்டியதனால் வேதாந்த தர்சனம் முழுதும் வாழ்க்கை சாஸ்திரமாக விவேகானந்தரின் மூலம் வெளியாயிற்று. இகத்துக்குரிய ஞானம் பரத்துக்குரிய ஞானம் ஆகிய இரண்டையும் அவர் தெளிவுற சமரசப்படுத்தினார். அப்படி அவர் ஒன்றுபடுத்தியதைப் பாமரர்களுக்கும் விளங்குகின்ற பாங்கில் மிக எளிய உரைநடையில் அவர் எடுத்து வழங்கியுள்ளார்.

அவருடைய நூல்கள் என்னும் அரிய எளிய காவியத்தை அவர் உலகுக்கு வழங்காது போயிருப்பாராகில் சமரசம் என்னும் அவரது செய்தி உலகத்தவர்க்கு எட்டாது போயிருந்திருக்கும்.

மாயாவாதம் என்பது வேதாந்த தர்சனத்தில் அரியதோர் இடம் பெற்றிருக்கிறது. வேதாந்தம் உண்மையில் பிரம்ம வாதம். பரம் என்னும் ஒரு பொருளே பிரபஞ்சத்தில் இத்தனையுமாகத் தோன்றிக் கொண்டிருக்கிறது என்பது அதன் கோட்பாடு. ஆனால் பிரம்ம வாதத்தை மாயா வாதம் என்று மொழிந்து மயங்கியிருப்பவர் பலப்பலர். மாயை என்பது வாதத்துக்குரியதன்று. விஷயத்தை உள்ளவாறு எடுத்து விள்ளுதலே மாயா தத்துவம் என விவேகானந்தர் விளக்கியுள்ளார். Maya is not a theory; it is a statement of facts. மாயைக்கு விவேகானந்தர் கொடுத்துள்ள விளக்கத்தை அறிந்துகொள்ளுதற்குப் பாமரன் ஒருவன் எந்தப் பண்டிதனையும் நாடி ஓடவேண்டிய அவசியம் இல்லை. அவர் கொடுத்துள்ள விளக்கத்தைச் சுருக்கமாக ஈண்டு எடுத்து இயம்புவோம். மாயை என்பது மெய்ப்பொருள் ஆகிய பிரம்மத்திடத்து யாண்டும் மிளிர்ந்து கொண்டிருக்கிற ஓர் அரிய சக்தி. இந்தச் சக்தியின் வல்லமையால் உண்மையில் உள்ள ஒரு பொருளே எண்ணிறந்த பொருள்களையுடைய பிரபஞ்சமாகத் தன்னைக் காட்டிக் கொள்கிறது. ஒரே தங்கம் கணக்கற்ற நகைகளாக வடிவெடுப்பதுபோன்று பரப்பிரம்மம் மாயப் பிரபஞ்சமாகத் தன்னை விளக்கிக் கொண்டிருக்கிறது. நாமரூபம் மாயை. வஸ்து பிரம்மம். கங்கணம், கடுக்கன், காசுமாலை என்னும் நாமரூபங்கள் மாயை. அந்நகைகளுக்கு மூலப்பொருளாயிருக்கும் தங்கம் போன்றது பிரம்மம். அஞ்ஞானத்திலிருக்கும் மனிதன்

நாமரூப மயமாயிருக்கும் மாயையில் மயங்குகிறான். பரஞானத்தைப் பெற்றிருப்பவன் நாமரூபத்தைப் புறக்கணித்துவிட்டுப் பரப்பிரம்மம் என்னும் மூலப்பொருளைத் தரிசிக்கிறான். கால தேச வர்த்தமானமாக மிளிர்வது மாயை. இம்மூன்றுக்கும் அப்பாற்பட்டதாய் இம்மூன்றினுள் கட்டுப்படாதிருப்பது பிரம்மம். உண்மையில் பிரம்மமும் மாயையும் ஒன்றே. மாயையைப் பிரம்மத்தோடு இணைத்துப் பார்ப்பவர்க்கு மயக்கமில்லை. பிரமத்தை அறியாது மாயா காரியங்களைக் காண்பவர்க்குப் பந்தபாசத்தை உண்டுபண்ணுகிற பிரபஞ்சம் மெய்ப்பொருளாகக் காட்சி கொடுக்கிறது. தோற்றங்கள் மாயை. மூலவஸ்து பிரம்மம். இவ்வுண்மையை உள்ளவாறு அறிந்துகொள்ள முயலுகிறவன் பரஞானம் அடையப்பெறுகிறான். புதிய கோட்பாடு எதையும் விவேகானந்தர் புகட்டவரவில்லை. பழங்காலத்துப் பெரியோர்கள் புகட்டிய உண்மையையே நவீன முறையில் விவேகானந்தர் விளக்குகிறார். தத்துவ ஞானிகளுக்குரிய பரிபாஷைகளை அவர் ஒதுக்கி வைக்கிறார். பாமரர்களுக்குரிய எளிய மொழியில் உயர்ந்த கருத்துக்களை அவர் வெளியிடுகிறார். பரஞானிகள் அறிந்துகொள்ளுகிற பாரமார்த்திகப் பேருண்மை பாமரர்க்கும் பொதுவானது. மனிதன் எத்துறையில் எத்தொழிலைச் செய்து வந்தாலும் அவனுடைய வாழ்க்கைக்கு வேதாந்த தர்சனம் நன்கு பயன்படுகிறது என்பது விவேகானந்தர் துணிபு.

வேதாந்தத்தில் கணக்கற்ற சம்பிரதாயங்கள் செறிந்து கிடக்கின்றன. பொதுவாக அவைகளைத் துவைதம், விசிஷ்டாத்வைதம், அத்வைதம் என்னும் மூன்று சம்பிரதாயங்களாகப் பிரித்துவைப்பது மரபு. இம் மூன்று சம்பிரதாயங்களுள்ளும் உட்பிரிவுகள் பல இருக்கின்றன. இவைகளுள்

ஏதேனும் ஒரு சம்ப்ரதாயத்தை மற்றொரு சம்ப்ரதாயத்தோடு பொருந்தியிருக்கும்படி இணைத்து வைக்கமுடியாது என்பது பெரும்பாலரது எண்ணம். ஆனால் இத்தனைவித சம்ப்ரதாயங்களுக்குள் முரண்பாடு ஏதும் இல்லையென்பதே விவேகானந்தர் இக்காலத்தவர்களுக்கு வழங்கியுள்ள ஞானக்கொடையாகும். வேதாந்த சம்ப்ரதாயங்கள் அரிய ரத்தினங்களேயாம். அவைகளுக்கிடையில் தொடர்வும் இணக்கமும் மூல ஒற்றுமையும் நன்கு செறிந்து கிடக்கின்றன. மூல உண்மையை ஓர்ந்து அறிந்துகொள்ளுதற்கு அத்தனைவித சம்ப்ரதாயங்கள் இன்றியமையாதவைகள் ஆகின்றன. பரதர்சனம் அடையப்பெற்றவனே அவைகளுக்கிடையிலுள்ள கோவையைச் சரியாக எடுத்துக்காட்டவல்லவன் ஆகிறான். உள்ளது ஒரு பொருள் என்னும் கோட்பாடு அத்வைதம். பிரபஞ்சத்தில் இருப்பன பல, என்னும் கோட்பாடு துவைதம். பல பொருள்கள் ஒரு மெய்ப்பொருளைச் சார்ந்திருக்கின்றன என்பது விசிஷ்டாத்வைதம். இந்த மூன்று சம்ப்ரதாயங்களையும் விவேகானந்தர் முறையாகச் சமரசப்படுத்துகிறார். பிரபஞ்சத்தில் பல பொருள்கள் இருப்பது, நமது விழிப்புநிலையில் நாம் பெற்று வருகிற அனுபவத்துக்குப் பொருத்தம். எதனோடு எப்படி இணக்கம் கொள்ளுதல் என்னும் அரிய பாடம் துவைதநிலையில் நமக்கு வாய்க்கிறது. அதன் விளைவாக நாம் பண்பாடு எய்துகிறோம். அப்பண்பாடோ ஞானத்தில் நம்மை ஒருபடி மேலே உயர்த்துகிறது. விசிஷ்டாத்வைதக் கோட்பாடு சொப்பனத்தில் நாம் பெறும் அனுபவத்துக்கு ஏற்ற பிரமாணமாகிறது. விழிப்பு நிலையில் நாம் காண்கிற பலப்பல பொருள்களைச் சொப்பனத்திலும் காண்கிறோம். ஆனால் அவையாவும் சொப்பனத்தில் ஒரே மனதின் பலதரப்பட்ட விகாரங்களாம். இது விசிஷ்டாத்வைதநிலை. துவைத

நிலை போன்று விசிஷ்டாத்வைதநிலையும் சாதகன் அடைய வேண்டிய பரிபாகத்துக்குப் பேருதவி புரிகிறது. பிறகு சுஷுப்தி அவஸ்தையில் நாம் பெறுகிற அனுபவத்துக்கு ஒத்தது அத்வைதம். இருக்கின்றேன் என்னும் உணர்வு சுஷுப்தியின் நிர்விகாரம் எய்துகிறது; உணர்வு மட்டும் ஆங்கு உளது. உணரப்படுபொருள் ஒன்றுமில்லை. நாம் நித்தமும் பெற்றுவருகிற அனுபவத்தில் இந்தநிலையும் இடம் பெறுகிறது. பரஞானத்தில் இந்த நிலையை அடைவதே கைவல்யம் என்னும் முடிவு. இதற்குத் துவைதமும் விசிஷ்டாத்வைதமும் உறுதுணைகளாகின்றன. ஆகவே அவைகளுக்கிடையில் முரண்பாடு இல்லவேயில்லை என்பது விவேகானந்தர் உலகத்தவர்களுக்கு நவீனமுறையில் வழங்கியுள்ள பண்டைச் செய்தியாம்.

அறிவாளன் ஒருவன் ஓர் ஊரை நேரில் போய்ப்பார்த்து அதை நன்கு அறிந்துகொண்டு திரும்பி வருகிறான். அப்படி வந்தவன் அவ்வூரைப்பற்றி விளக்கியுள்ள புஸ்தகம் ஒன்றைப் படிக்கிறான். அப்புஸ்தகத்தில் விஷயம் சரியாக விளக்கப் பட்டிருக்கிறதா, இல்லையா என்பதை எடுத்துச் சொல்ல அம்மனிதனுக்கு இயலும். பரஞான விஷயத்தில் விவேகானந்த சுவாமிகளுக்கு அது போன்ற தகைமை இருந்தது. சாதாரண மக்கள் உபநிஷதங்களை முடிவான பிரமாணங்கள் என்று ஏற்றுக்கொள்கின்றனர்; அவைகளை முழு விசுவாசத்துடன் பின்பற்றி அனுஷ்டிக்கின்றனர். மற்று விவேகானந்தர் செய்தது அதற்கு நேர்மாறானது. “உபநிஷதங்கள் உண்மையான நூல்கள். ஏனென்றால் என்னுடைய பாரமார்த்திகப் பேரனுபவத்தை அவைகள் சரியாக விளக்குகின்றன,” எனச் சுவாமிகள் சாற்றினர். இங்கு அவருடைய சுவானுபவமே முடிவான பிரமாணமாகிறது. அதை

அனுசரித்தவைகளாக உபநிஷதங்கள் அமைந்திருக்கின்றன. தமது அனுபவத்துக்குத் தக்க விளக்கமாக

यस्मिन् सर्वाणि भूतान्यात्मैवाभूद् विजानतः ।
तत्र को मोहः कः शोक एकत्वमनुपश्यतः ॥

யஸ்மின் சர்வாணி பூதான்யாத்மைவாபூத் விஜானத:
தத்ர கோ மோஹ: க: சோக ஏகத்வமனுபச்யத:

இருப்பது ஒன்று என்றும் உயிர்களனைத்தும் தமது ஆத்ம சொரூபம் என்றும் அறிந்துள்ள பரஞானிக்கு மோகமேது, சோகமேது எனப் பொருள்படும் இந்த உபநிஷத்மந்த்ரத்தைச் சுவாமி விவேகானந்தர் தெளிவுற விளக்கியிருக்கிறார். மேற்போக்காகப் பார்க்குமிடத்து அவர் விளக்கியது இந்த உபநிஷத் மந்த்ரத்தை. ஆனால் உண்மையில் அவர் விளக்கம் கொடுத்தது தமது சுவானுபவத்துக்கேயாம். மாந்தர் செய்கின்ற தவறுதலை அவர் தெளிவுற எடுத்துக் காட்டுகிறார். மனிதனிடத்திருந்து மனிதனைப் பிரித்து வைக்கும் இயல்பு உலகத்தவர்களிடத்து இருக்கிறது. ஆடவன் வேறு; மகளிர் வேறு எனப் பிரிப்பார் உளர். முதியோர் என்றும் இளைஞர் என்றும் பாகுபடுத்துபவர்கள் இருக்கின்றனர். இந்தத் தேசத்துக்கு உரியவன், அந்தத் தேசத்துக்கு உரியவன் என்று பிரித்துப் பேசுவதும் மக்களது இயல்பு. பூமி வேறு, சந்திரன் வேறு. வானத்தில் சஞ்சரிப்பவைகளுள் சந்திரன் வேறு, சூரியன் வேறு இப்படியெல்லாம் பிரித்து வைக்கின்றனர். இனி ஓர் அணு மற்றோர் அணுவினின்று மாறுபட்டிருக்கிறது என்றும் அவர்கள் மொழிகின்றனர். இருக்கிற ஒன்றை இப்படிப் பேதப்படுத்துவதால் மனிதன் துயரத்துக்கு ஆளாகிறான். இங்ஙனம் மனிதன் மொழிவதற்கு முற்றிலும் மாறாக வேதாந்தம் விளக்குகிறது. வேற்றுமை

என்பது உண்மையில் இல்லவேயில்லை; இது வேதாந்தத்தின் கூற்று. வேற்றுமையிருப்பது போன்று மேற்போக்காகப் பார்ப்பவர்களுக்குத் தென்படுகிறது. பொருளை உள்ளூரத் துருவி ஆராய்ந்து பார்க்கிறவர்களுக்கு வேற்றுமை இல்லவேயில்லை. உள்ளத்தினுள் உறைந்து கிடப்பதைச் சரியாக ஆராய்ந்து பார்த்தால் மனிதன் மனிதனோடு வேறுபடுபவன் அல்லன் என்றும், ஆண் பெண் வேற்றுமை இல்லையென்றும், முதியவன் இளையவன் என்னும் வேற்றுமை இல்லையென்றும், அந்தநாட்டுக்குரியவன் இந்தநாட்டுக்குரியவன் என்னும் வேற்றுமை இல்லையென்றும், மேலோர் கீழோர் என்னும் வேற்றுமை இல்லை என்றும், செல்வர் வறிஞர் என்னும் வேற்றுமை இல்லையென்றும், மக்கள் தேவர் என்னும் வேற்றுமை இல்லையென்றும் தெளிவுற விளங்கும். உண்மையில் இருப்பது ஒன்றே. மனிதனிடத்துப் புதைந்து கிடக்கும் தெய்விகம் விலங்கினிடத்தும் புதைந்திருக்கிறது என்பதை ஞானி நன்கு காண்கிறான். அப்படி அவன் உண்மையைக் காண்பதால் அவனுக்குச் சிறிதேனும் மோகமில்லை. பலப்பலவாகத் தோன்றிக் கொண்டிருப்பனவெல்லாம் உண்மையில் ஒன்றே என்பதை மெய்ஞ்ஞானி அறிகிறான். பலப்பலவாகத் தோன்றுவதன் அந்தரங்க அமைப்பு அவனுக்கு நன்கு விளங்குகிறது. உண்மையை உள்ளவாறு கண்டு கொண்ட பிறகு அதை முன்னிட்டு அவன் ஏன் துயரப்படவேண்டும்? எதைப் புதிதாகப் பெறுதற்கு அவன் ஆசைகொள்ளவேண்டும்? மூலத்தை எட்டியவன் பரஞானி. அனைத்துக்கும் முதலாயிருப்பது மெய்ப்பொருள். ஆதிபகவன் என அப்பொருள் அழைக்கப்படுகிறது. அனைத்தையும் தன்னகத்து அடக்கி வைத்திருப்பது அது. அனைத்துக்கும் நடுவாயிருப்பது அது. அப்பொருளோ

அகண்ட சச்சிதானந்தம். அப்பொருளுக்கு மரணமில்லை. தன்னிடத்து இல்லாதது ஏதேனும் ஒன்றைப் பெற்றாக வேண்டும் என்று அது ஆசைப்படுவதில்லை. பொருந்தாத நிகழ்ச்சி ஏதோ நேர்ந்துவிட்டதென்று அது துயருறுவ தில்லை. தான் அமைத்துள்ள திட்டத்துக்கு மாறாக ஏதோ நிகழ்ந்திருக்கிறதே யென்று அது அதிருப்திப்படுவதில்லை. இப்படி நடுநாயகமாக இருக்கின்ற மூலப்பொருள் மய மாகவே தோற்றத்துக்கு வந்துள்ள யாவையும் பரஞானி பொருள்படுத்துகிறான். அந்த மெய்க்காட்சியின் விளைவாக மடிந்துபோன யாரைக் குறித்தாவது அவன் துயருறுவ தில்லை. நெறி வழுவிய யாரைக் குறித்தாவது அவன் விசனப் படுவதில்லை. ஒழுக்கம், ஒழுக்கமின்மை ஆகிய மேல்தோற் றங்களுக்கு அடிப்படையிலிருக்கும் ஒண்பொருளை நிறை ஞானி தரிசிக்கிறான். அப்புனிதப் பொருளுக்கு வடிவமில்லை. உடல் இல்லை, இழுக்கு இல்லை. நிறைஞானி சொரூபம் அது. பெரிய பொருளாயிருப்பது அது. மகாகவியாயிருப் பது அது. தன்னில் தானாய் நிறைவாய் இருப்பது அது. தோற்றத்துக்கு வந்திருக்கின்ற உயிர்களுக்கு வேண்டியிருப் பவைகளை வகுத்தளித்துக் கொண்டிருப்பது அது. இத்த கைய மெய்க்காட்சி அடையப்பெற்றவனே பரஞானி என விவேகானந்தர் உபதேசித்தருளியுள்ளார். அப்படி அவர் உபதேசித்தது தாம் அடைந்திருந்த பாரமார்த்திகப் பெரு நிலையைப் பற்றியேயாம்.

பரஞானத்தைப் பற்றி மேலும் அவர் பகர்ந்திருப்பதா வது: எவன் ஒருவன் தன்னை அகண்ட சச்சிதானந்தமாக உணருகிறானோ அவனுக்குப் பயமில்லை. ஒன்றுக்குமேற்பட்ட காட்சியில் ஒன்று மற்றொன்றைக் குறித்து அஞ்சுகிறது. அகண்டமாயிருப்பது ஒரே வஸ்து என அறிகிறவனுக்கு

அஞ்சுதற்கு ஒன்றும் இல்லை. எண்ணிறந்த ஜீவர்களாகக் காட்சிகொடுத்துக் கொண்டிருப்பது ஒரு பரவஸ்து என்று அறிகிறவன் எவ்வுயிர்க்கும் தீங்கு இழைப்பதில்லை. தன்னைத் தானே துன்புறுத்திக்கொள்பவனை நாம் உலகில் காண்பதில்லை. தானும் உலகிலுள்ள யாவும் ஒன்று என அறிகிறவன் தனக்குத்தானே தீங்கு இழைத்துக்கொள்வதில்லை. தன்னை ஒழிக்க யாரும் முயலுவதில்லை. தன்னைக் கண்டு தான் அஞ்சுவதில்லை. பிறகு தானே இத்தனையுமாகத் தோன்றுவதால் அத்தோற்றத்தைக்குறித்து மயக்கமேதும் இல்லை. ஜீவர்களுக்கிடையில் பேதம் காண்கிறவர்கள் பொருமைப்படுகின்றனர். தன்னிலும் மிக்கான் ஒருவன் இருக்கின்றான் என்றும்; அம் மிக்கானுக்கு நிகராகத் தான் இன்னும் ஆகவில்லையே என்றும் ஒருவன் பொருமைப்படுகின்றான். ஆனால் தானும் அயலாரும் ஆகிய எல்லாரும் ஒரே வஸ்துவின் வெவ்வேறு தோற்றங்கள் என அறிந்து கொள்கிறவனுக்கு அழுக்காறு இல்லை. அக்ஞானத்தில் உழலும் ஒருவன் மற்றவர்களைக் குறித்துக் கீழான எண்ணங்கள் கொள்ளுகிறான். ஆனால் தன்னையே குறித்து அவன் கீழான எண்ணம் கொள்ளுவதில்லை. பரஞானிக்கு வேற்றுமைகள் அனைத்தும் அழிந்துபட்டுப்போகின்றன. பல உயிர்கள் என்னும் குருட்டு நம்பிக்கைக்கும் அவனுக்கும் வெகுதூரம். வேற்றுமையே வடிவெடுத்திருப்பதாகத் தென்படுகிற இவ்வுலகில் பரஞானி ஒற்றுமையையே காண்கிறான். ஜடப்பொருள்களாக மற்றவர்களுக்குத் தென்படுபவைகளெல்லாம் பரஞானிக்குச் சின்மயம். வெறும் தோற்றங்களாக உள்ள இப்பிரபஞ்சத்தில் பரவஸ்து ஒன்றையே தரிசிப்பவன் பரஞானி. சாந்தி அவனுக்கே சொந்தம். இங்ஙனம் பரஞானத்தைப்பற்றி விளக்கிய விவேகானந்த சுவாமிகள் தாமே தலைசிறந்த பரஞானியாவார்.

9. பக்த ராஜன்

தூய பக்தியும் தூய ஞானமும் ஒன்று என்பது ஸ்ரீ ராம கிருஷ்ண பரமஹம்சரது கோட்பாடு. ஒரு மனிதனை நேசிக்கிற அளவு அவனை நாம் நன்கு அறிய வல்லவர்கள் ஆகிறோம். அவனை அறிந்துகொள்ளுதற்கு ஏற்ப அவனிடத்து அன்பு அதிகரிக்கிறது. இக்கோட்பாடு பகவத் விஷயத்தில் ஒப்பற்ற உயர்நிலை எய்துகிறது. ஜீவாத்மன் என்னும் பறவையானது பரமாத்மனை நோக்கிப் பறந்து செல்லுதற்குப் பக்தியும் ஞானமும் இரண்டு சிறகுகளாக அமைந்துள்ளன. பரமஹம்ஸ தேவரும் சுவாமி விவேகானந்தரும் பரமபக்தர்களாகவும் பரம ஞானிகளாகவும் திகழ்ந்தனர். ஆயினும் புறத்தோற்றத்தில் அவர்களுக்கிடையில் வேற்றுமை ஒன்று இருந்தது. பரமஹம்ஸதேவர் வெறும் பக்தர் போன்று வெளிக்குத் தென்பட்டார். ஆனால் உள்ளூர அவர் ஞானமே வடிவெடுத்தவர். இதற்கு மாறாக விவேகானந்தரோ வெளித்தோற்றத்துக்கு ஞானமே வடிவெடுத்தவராக இலங்கினர். பொருந்தாத கொள்கைகளையும் குருட்டு நம்பிக்கைகளையும் மூடக்கோட்பாடுகளையும் அவர் தமது ஞான வாளால் சின்னபின்னமாக்கி வந்தார். அறிவுத்துறையில் அவருடன் போராட எத்தனிப்பவர் தோல்வியுற்று யுக்தி பூர்வமாக வாயடக்கப்படுவர். எதற்கும் அசையாத ஞானவாளாகத் தென்பட்ட விவேகானந்தர் உள்ளத்தினுள்ளே அன்பே வடிவெடுத்தவர். பக்திக்கு விளக்கம் கொடுத்த நாரதர் **सा त्वस्मिन् परम प्रेम रूपा** ஸா த்வஸ்மின் பரம ப்ரேம ரூபா, என விளக்கியுள்ளார். அந்தச் சூத்திரத்துக்கு விளக்கமாக இலங்கியவர் சுவாமி விவேகானந்தர். அவரை அறிந்துகொள்ளுவதும் தூய அன்பை அறிந்துகொள்ளுவதும் ஒன்றாகும். மூன்று நிலைகளில் அவருடைய அன்பு முன்னணியில்

வந்து நிற்கும். பகவானது பெருமையைப் பற்றிப் பேச்சு எழும்பொழுது பரமப்பிரேமை சொரூபமாக இப்பரமாச்சாரியார் மாறியமைவார். இவரை ராமகிருஷ்ண பரமஹம்சரின் சிஷ்யர் என்று சொல்லும்பொழுதே இவர் கனிந்த அன்பு சொரூபமாக மாறிப்போவார். அவருடைய கூரிய அறிவுத் திறன் அப்பொழுது பின்னணியில் சென்று மறைந்திருக்கும். மூன்ருவதாக இந்தியாவின் நலனைப்பற்றிய பேச்சு எழும் பொழுது அவர் பேரன்பு சொரூபமாக மாறுவார். தெய்வ பக்தி எவ்வளவு ஆழ்ந்ததாக அவர் உள்ளத்தில் இடம்பெற்றிருந்ததோ அவ்வளவு ஆழ்ந்ததாகத் தேச பக்தியும் அவருடைய உள்ளத்தில் இடம் பெற்றிருந்தது. ஆக, அவரை ஒரு பக்தராஜன் என்று பகர்வது முற்றிலும் பொருந்தும்.

சின்னஞ்சிறு வயதிலிருந்தே தெய்வ உபாசனையில் ஆழ்ந்து மூழ்கியவர் விவேகானந்தர். இயல்பாக அவருக்கு அமைந்திருந்தது ராமபக்தி. தாற்காலிகமாக அது சிவ பக்தியாக மாறியது. திரும்பவும் அது பழைய ராமபக்தியாக வடிவெடுக்கலாயிற்று. ஜபிப்பதற்கு அவர் சுபாவத்துக்கு முற்றிலும் பொருந்தியது ராம நாமம் என்று பரமஹம்ஸ தேவர் பகர்ந்தருளினர். அதைக் கேட்டதும் அவரது பக்திப் பேரார்வத்துடன் மேலோங்குவதாயிற்று. ஆஞ்சநேயர் ராம பக்தியில் எவ்வளவு ஆழ்ந்து ஈடுபட்டிருந்தாரோ அவ்வளவு ஆழ்ந்த ஈடுபாடு விவேகானந்தருக்கும் வந்திருந்தது. ஈண்டு மற்ருெரு விஷயத்தை நாம் ஞாபகத்துக்குக் கொண்டு வரவேண்டும். சிவனர் உச்சரிப்பது தாரகப் பிரம்மம் என்னும் பெயர் தாங்கியுள்ள ராம நாமம். பின்பு ராமன் சதா உச்சரித்துக் கொண்டிருப்பது சிவநாமம். பக்திப் பரவச நிலையிலிருக்கும் பொழுது விவேகானந்தர் சில வேளைகளில் தாமே ராம சொரூபமாக மாறிச் சிவ நாமத்தை

உச்சரிப்பார். வேறு சில வேளைகளில் அவர் சிவ சொரூப மாகி ராம நாமத்தை உச்சரிப்பார். பரமாத்மா காந்தக்கல் போன்றவர். ஜீவர்களோ அந்தக் காந்தக் கல்லினிடம் கவர்ந்து இழுக்கப்படும் இரும்புத்தூள் போன்றவர்கள். ஜீவர்களுக்குப் பகவான் எத்தகைய வலிவு படைத்த காந்தம் என்பதை விவேகானந்தர் சாந்நித்தியம் நன்கு விளக்கிக் காட்டும். பகவத் பக்தியில் அவர் ஆழ்ந்து மூழ்கியிருக் கின்றபொழுது அவரே முற்றிலும் பகவத் சொரூபமாக மாறி யிருப்பார். அப்பொழுது அவர் அருகிலிருக்கும் பக்தருடைய உள்ளத்தில் பக்தி பிரபாவம் அளவு கடந்து உருவெடுக்கும். பக்தன் ஒருவனுடைய உள்ளத்தில் பக்தி ஓங்குதற்கு விவே கானந்தரது இணக்கம் பெருந்துணை புரிந்தது. பகவானிடம் உபாசனை பண்ணுவது எங்ஙனம் என்பதை விவேகானந் தரது வாழ்வு நன்கு விளக்கிக் காட்டுகிறது. உபாசனை வலுக்குமளவு பக்தனுக்கு உபாசனா மூர்த்தியின் விபூதி களெல்லாம் சொந்தமாகின்றன. விவேகானந்தர் உபா சனையே வடிவெடுத்தவர். அவர் முதிர்ந்த பக்குவியான பிறகு அவரிடத்தில் நிர்க்குணப்பிரம்ம உபாசனையும் சகுணப் பிரம்ம உபாசனையும் ஒன்றுக்கொன்று நிகர் ஆயின. பின்பு பரம்பொருளுக்கு எப்பெயர் இட்டு அழைக்கினும் அவரு டைய பக்தி அதற்கு இடந்தந்தது. ஒரு சார்பில் இருக்கும் பக்தர்கள் தெய்வத்தின் ஒரு சொரூபத்தில் மட்டும் பற்று வைப்பர். அதை அனுசரித்து அந்தச் சொரூபத்துக்குரிய மந்த்ரத்தை மட்டும் உச்சரிப்பர். ஆனால் பக்தியின் உச்ச நிலையை எட்டிய விவேகானந்தருக்கோ சொரூபங்கள் அனைத்தும் பரமன் ஒருவனையே விளக்குபவைகள் ஆயின. நாமங்கள் அனைத்தும் அந்தப் பரமனுக்கே உரியவைகள் ஆயின. ஆதலால் வெவ்வேறு உபாசனா மூர்த்திகளை உடைத்

திருந்த பக்தர்கள் எல்லாரும் விவேகானந்தர் முன்னிலையில் அவரவர் தெய்வ பக்தியும், அவரவர் தெய்வத்தின் திரு நாமமும் முன்னணியில் இருக்கக்காண்பர். சைவன் ஒருவனுக்கு விவேகானந்தர் பழுத்த சிவபக்தன்; வைஷ்ணவன் ஒருவனுக்கு அவர் விஷ்ணுபக்தியில் முற்றிலும் தோய்ந்த பாகவதன்; சக்தி உபாசகனுக்கு அவர் தலைசிறந்த சக்தி உபாசனுகத் தென்பட்டார்.

உலையில் உருகி உலோகங்கள் தூய்மையடைந்து நாம் கொடுக்கிற வடிவங்களை எடுக்கின்றன. அது முற்றிலும் உஷ்ணமயமானது. மானுட உள்ளமோ தெய்வபக்தி என்னும் இனிமையில் உருகித் தெய்வீக வடிவெடுக்கிறது. விவேகானந்தர் பரஞானியாயிருந்து எல்லை காணுப் பேரறிவில் உறைந்திருந்தது போன்று ஆழமறியாத அன்புக் கடலிலும் மூழ்கியிருந்தார். அன்புக் கண்ணீர் அவரிடத்திருந்து ஆருகப் பெருகிவரும். பரமானந்தத்தில் நெக்குருகுவதுபோன்று அவர் தென்பட்டார். பக்தியின் முதிர்ச்சியால் ஒரு வேளையில் பரமனைப் பெறவில்லையே என்று தவித்துருகுவார். மற்ருெரு வேளையில் தமது ஆருயிர் நாயகனோடு உரையாடி இன்புற்றிருப்பார். அருள் நாட்டத்தில் ஒரு வேளை அவர் தம்மை இறைவனுடைய தொண்டனுக உணர்வார். மற்ருெரு வேளையில் இறைவனுடைய தோழனுக உணர்வார். அப்படி ஏதேனும் ஒரு இனிய இணக்கத்தை இறைவனோடு வருவித்துக் கொள்கின்றபொழுது அவருடைய திரிகரணங்களும் அந்த உணர்வுமயமாக மாறியிருக்கும். வாலறிவன் பேரன்பனுகப் பொலிவதை விவேகானந்தரது சொரூபத்தில் காணலாம்.

பரம்பொருள் சகுணப் பிரம்மமாகவும் நிர்க்குணப் பிரம்மமாகவும் இலங்குகிறது. இந்த இரண்டுவித சொரு

பத்திலும் விவேகானந்த சுவாமிகள் பூரணப் பிரேமையைச் செலுத்தி வந்தார். பரம்பொருளிடத்து பேரறிவும் ஆழ்ந்த அன்பும் பூரண ஆற்றலும் நிறைந்திருப்பதாக அவர் உணர்ந் தார். அத்தகைய பரமனிடத்திருந்து உயிர்கள் அனைத்தும் உதித்து வந்திருப்பதால் அந்த அறிவு, அன்பு, ஆற்றல் ஆகியவை உயிர்களுக்கும் சொந்தம் என்பது அவர் துணிபு. பரமனிடத்து அன்பு கொள்ளுதற்கு ஏற்ப ஜீவாத்மன் அப் பரமன் மயமாகத் திருந்தியமைகிறுன் என்பதும் அவருடைய துணிபு. தூய அந்தக்கரணத்தைக்கொண்டு மனிதனுல் கிரகிக்கப்படுபவைகளுள் மூர்த்திகள் சொரூபமாக இருக் கின்ற சகுணப் பிரம்மமே தலையாயது என்பதும் சுவாமி களது அனுபவம். இறைவனிடத்துக்கொண்டிருக்கிற நேசம் தான் உலகத்தில் எத்தனையெத்தனையோ பந்தபாசங் களாகக் காட்சி கொடுத்துக்கொண்டிருக்கிறது என்பதும் அவருடைய கருத்து. அவ்வுண்மையை அவர் அறிந்திருந்த தால் தமது அன்பு அனைத்தையும் இறைவனிடத்தே அவர் திருப்பி வருவாராயினர். அவர் பூண்ட அன்பின் உச்ச நிலையில் அன்பு பூணுகிற தாமும் அன்பு பூணப் பெறுகிற தெய்வமும் அப்பேரன்பிலே ஒன்றுபட்டுப் போவர். ஸ்தம்பித் திருக்கிற அவரது மேனியில் அன்பின் அறிகுறிகளையெல் லாம் காணலாம்.

மெய்தான் அரும்பி விதிர்விதிர்த்து
உன்விரையார் கழற்குஎன்
கைதான் தலைவைத்துக் கண்ணீர்
ததும்பி வெதும்பியுள்ளம்
பொய்தான் தவிர்ந் துன்னைப்போற்றி
சயசய போற்றியென்னும்
கைதான் நெகிழவிடேன் உடையாய்
என்னைக் கண்டுகொள்ளே

என்னும் பக்திப் பிரவாகத்துக்கு அவர் பெரியதோர் எடுத் துக்காட்டாக இலங்கினர். ஆனந்த பரவசத்தினின்று கீழ் நிலைக்கு இறங்கி வந்தான பிறகு பிரபஞ்சத்தில் உள்ளும் புறமும் இருப்பது அன்புத் தெய்வம் என்பதை அவர் உணர்ந்தார். யாண்டும் வியாபகமாய் இருப்பது அன்பு ஒன்றே என்பதும் அவரது அனுபவம்.

சகுணப் பிரம்மத்தின் சொரூபமாயிருக்கிற சிவத் தையோ, சக்தியையோ, நாராயணனையோ, கிருஷ்ண னையோ, ராமனையோ சிக்கெனப் பிடித்துக்கொண்டு அப் பேருணர்வில் பலநாள் அவர் ஊறியிருப்பார். அவ்வேளையில் அவர் வழிபடு தெய்வமே அவர் மேனியில் இலங்குவதாகக் காட்சிகொடுத்தது. வேறு சிலவேளைகளில் அதே பக்திப் பிரவாகத்தை நிர்க்குணப் பிரம்மத்திடத்து அவர் செலுத்து வார். அப்பொழுது நாமரூபங்களெல்லாம் அடிபட்டுப்போய் பரமப் பிரேமை சொரூபமாக அவர் இலங்குவார். மற்றும் சில வேளைகளில் ஓர் ஆடவனையோ மகளிரையோ அல்லது இயற்கையையோ சாக்ஷாத் பரம்பொருள் சொரூபமாகக் கருதி அப்பேருணர்வில் அவர் புதைந்திருப்பார். இன்னும் சிலவேளைகளில் ஏதேனும் ஓர் உயர்ந்த எண்ணமே அவருக்கு உபாசனைமூர்த்தியாக அமைந்திருப்பதைக் காணலாம். தமது உள்ளத்தில் ஊற்றெடுத்த அன்பானது புறத்திலிருக்கிற பொருள்களிடத்துப் பாய்கிறதா அல்லது அகத்திலிருக்கும் இறையவனர் சந்நிதிக்குச் செல்லுகிறதா என்பதையெல்லாம் பற்றி அவர் பாகுபாடு செய்வதில்லை. அகம் புறம் என்னதை படி அன்பில் ஊறிக்கிடப்பதே அவரது போக்கு ஆயிற்று. அன்பு ஒன்றே உள்ளது என்பது அவரது தெள்ளிய உணர்வு. எனவே யாண்டும் அன்பு சொரூபமாயிருந்தது அவரது மகிமையாம்.

தெய்வத்திடத்துப் பயங்கர சொரூபமும் அமைந்திருக் கிறது. சிவனர் பயங்கர வடிவினனுகிறபொழுது அவர் ருத்ரன் என்ரே வீரபத்ரன் என்ரே அழைக்கப்படுகிருர். சக்தியின் பயங்கர சொரூபம் ஸ்மசான காளி. மகாவிஷ்ணு வின் பயங்கரசொரூபம் நரசிம்ம மூர்த்தி. பொதுவாக இந்தப் பயங்கர வடிவங்களைப் பக்தர்கள் உபாசிப்பதில்லை. ஆனல் சுவாமி விவேகானந்தரோ இந்தப் பயங்கர வடிவங்களைப் பேரன்புடன் உபாசித்து வந்தார். பயங்கர சொரூபம் சகுணப் பிரம்மத்துக்கு இன்றியமையாத ஒரு பகுதியாகிறது. பயங்கரத்தைப் போற்றிப் பழகாதவன் அன்பின் முடிவைக் கண்டவன் அல்லன் என்பது விவேகானந்தரது முடிந்த முடிபு. அன்பின் மேலீட்டால் சில வேளைகளில் தம்மை இயற் கையோடு ஒன்றித்திருக்க அவர் செய்வார். வேறு சிலவேளை களில் கால சொரூபத்தில் அவர் ஒன்றுபட்டிருப்பார். இன் னும் சில வேளைகளில் உயிர்களனைத்தையும் தமது சொரூப மாகவும் அல்லது தம்மை உயிர்கள் அனைத்தின் சொரூபமாக அவர் உணர்வார். பிரபஞ்சத்திலுள்ள அனைத்தின் சொரூப மாக பரமன் இலங்குகின்ருர் என்பது வேதங்களின் துணிபு. அவ்வுயர்ந்த கோட்பாடு விவேகானந்தரின் மூலமாகவும் வெளியாயிற்று. மிகக் கீழ்நிலையிலிருக்கும் ஒரு புழுவினு டைய வடிவத்திலிருந்து பரப்பிரம்மம் ஈருக எல்லாப் படித் தரங்களில் இருப்பவைகளும் அந்த ஒரு பொருளே என்று உணர்ந்து அவையாவற்றையும் ஒரேபாங்கில் அவர்நேசித்து வந்தார். புல் பூண்டாக இருப்பதும், சந்திர சூரியர்களாக இருப்பதும், நிலத்தில் ஊர்ந்து செல்லுகிற சிற்றுயிர்களா யிருப்பதும், அல்பமானவைகளாயிருப்பதும், மகத்தானவை களாயிருப்பதும், பாபிகளாயிருப்பதும், பவித்ர புருஷர்களா யிருப்பதும், அண்மையில் இருப்பதும், சேய்மையில் இருப்

பதும், துஷ்டத்தனம் நிறைந்த ஜீவர்களாய் இருப்பதும், தெளிந்த சான்றோர்களாயிருப்பதும் எல்லாம் அந்த அண்ட நாயகனது பெரிய விளையாட்டு என உணர்ந்து அத்தனை விதத் தோற்றங்களிடத்தும் அவர் தூய அன்பு வைத்து வந்தார். இத்தனைவித வடிவங்களில் இலங்குவதன் மூல மாகவே பரமனது பெருமை நன்கு வெளியாகிறது எனவும் அவர் உணர்ந்தார். அன்பின் புறத்தோற்றமாகவே இத் தனைவித வடிவங்கள் வந்துள்ளன என்பதும் அவர் கண் டறிந்த உண்மையாகும். அன்பை முற்றிலும் அடையப் பெறுகிற ஒருவன் அத்வைத சித்தி அடையப் பெறுகிறான். என விவேகானந்தர் சாற்றியுள்ளார். பலவாயிருப்பவைகளை யெல்லாம் ஒன்றாகப் பிடித்து வைப்பது அன்பு என்பது அவருடைய அனுபவம். கொடிய புலி ஒன்றனிடத்தும் உண்மையில் அன்புதான் இலங்குகிறது என்பதை சுவானு பவத்தில் கண்டறிகிறவனே பக்தியில் அனுபூதிமான் ஆயிருக்கிறான் என்பது விவேகானந்தரது கோட்பாடு. மெய்யன்பானது லாப நஷ்டத்தைக் கணக்குப்பார்ப்பதில்லை. புத்தர்பெம்மான் எத்தனையோ பிறவிகளில் படிப்படியாக அன்பின் மேல் நிலைக்கு வந்துகொண்டிருந்தார். ஒரு பிறவி யில் பசித்திருந்த புலி ஒன்றுக்கு அன்புடன் தமது மேனியை இரையாகக் கொடுத்தது அவர் அடைந்திருந்த பரிபாகத் தின் விளைவாகும். தனக்கு நிகழ்வது யாது என்று எண் ணிப் பார்க்காது விட்டில் பூச்சியானது கொழுந்துவிட்டெரி கிற நெருப்பினிடத்துத் தன்னைக் கொடுப்பது போன்று எவன் ஒருவன் தன் வழிபடு தெய்வத்திடத்துத் தன்னை முற்றிலும் கொடுக்கிறானோ அவனே பக்தியில் உச்சநிலையை எட்டிய வன் என்பதற்கு விவேகானந்தருடைய வாழ்வே நல்ல எடுத்துக்காட்டு ஆகும். புத்தரைப்பற்றிப் பேசும்பொழுது

விவேகானந்தர் தாமே புத்தர் சொரூபம் ஆவார். ஏசுநாத ரைப்பற்றிப் பேசும்பொழுது இவர் தாமே ஏசுநாதர் வடிவம் எடுத்துள்ளவர் ஆவார். இப்படிப் பலப்பல பரமாசாரியர் களைப்பற்றி இவர் பகர்ந்தபொழுதெல்லாம் அப்பரமாசாரி யர்களே மற்றுமொருமுறை விவேகானந்தர் வடிவில் வந்து தங்களைத் தாங்களே விளக்கிக்கொண்டது போன்று விவேகானந்தரது விளக்கம் தோன்றும். எனவே பக்த ராஜன் என்று அவரைப் பகர்வது முற்றிலும் பொருந்தும்.

10. திருத்தொண்டன்

அன்னை பராசக்திக்கு அமைந்துள்ள ஆயிரம் நாமங் களுள் இச்சாசக்தி—ஞானசக்தி—கிரியாசக்தி சொரூபிணீ என்பது ஒன்று. இந்த நாமத்தில் ஆழ்ந்த கருத்து ஒன்று புதைந்திருக்கிறது. அது முற்றிலும் வாழ்க்கைத் தத்து வத்தை ஒட்டியது. இச்சா சக்தி அன்பைக் குறிக்கிறது. ஞான சக்தி அறிவைச் சுட்டிக் காட்டுகிறது. கிரியா சக்தி அவ்விரண்டின் விளைவை எடுத்துக் காட்டுகிறது. 'அன்பின் வழியது உயிர் நிலை.' உயிர் வாழ்வன அனைத்தும் அன்பு சொரூபம். அன்பு ஓங்குதற்கு ஏற்ப உயிர்வாழ்வு உயர் கிறது. தன்னையும் தனது சூழ்நிலையையும் அறிந்துகொள்ளு தற்கு ஏற்ப வாழ்வு செப்பமடைகிறது. அன்பு பாராட்டு வது அன்புச் செயலாகப் பரிணமிக்க வேண்டும். பின்பு ஒரு கோட்பாட்டை அறிந்துகொள்ளுதற்கு ஏற்ப அது வாழ்க் கைச் செயலாக வடிவெடுக்க வேண்டும். தாய் சேயினிடத்து வைத்திருக்கிற அன்பை இடையறாச் சேவையின் மூலம் விளக்குகிறாள். தந்தை தனயனை அறிந்து கொள்ளுதற்

கேற்ப அவனுக்கு வேண்டிய வாழ்க்கை வசதிகளை எல்லாம் அமைத்து வைக்கிறான். ஆகவே ஒருவனிடத்து அன்பு பாராட்டுவதும் அவனைச் சரியாக அறிந்துகொள்ளுவதும் அவைகளுக்கு ஏற்ற செயல்கள் வாயிலாகவே வெளியாகின்றன. உயிர்கள் அனைத்தும் வினையாற்றுவதன் மூலம் வாழ்வைப் பண்படுத்தி வருகின்றன. வாழ்வுக்குரிய செயல் புரிதற்கென்றே உயிர்கள் அனைத்தும் பிரபஞ்சத்தினுள் வந்துள்ளன.

எத்தனையோ பிறவிகளில் உயிர்கள் அனைத்தும் தங்களுக்காகவென்றே கர்மங்கள் புரிந்து வந்திருக்கின்றன. மானுடப் பிறவியில் தெய்விக அன்பையும், தெய்விக அறிவையும் அடையப் பெறுகிறவன் தனக்காகவென்று பல பிறவிகளில் கர்மம் செய்து வந்ததை மாற்றியமைக்கிறான். தெய்வத்துக்காகவென்றே அவன் கர்மம் செய்கிறான். அத்தகைய கர்மம் மனிதனைப் பந்தப்படுத்துவதில்லை. ஆதலால் தெய்வத்துக்காகவென்று செய்கிற கர்மம் கர்மயோகம் எனப்படுகிறது. இறைவனைத்திருப்திப்படுத்துதற்கு அவரிடத்துச் செயலற்று அன்பு பூண்டிருப்பது போதாது. அவரைப்பற்றி எல்லாம் அறிந்துகொண்டு அவர்க்குப் பணிவிடை செய்யாதிருப்பது ஒவ்வாது. நல்லதோர் உபமானக் கதையின் மூலம் ஸ்ரீ ராமகிருஷ்ணர் இதை விளக்குகிறார். ஓர் எஜமானனுக்கு இரண்டு தோட்டக்காரர்கள். அவர்களுள் ஒருவன் சோம்பேறி. தோட்டத்தில் ஒருவேலையும் செய்வதில்லை. ஆனால் எஜமானனைக் காணும்பொழுதெல்லாம் அவரோடு அன்புரை நிகழ்த்தவும் அவரைப் போற்றவும் அவரைப் பற்றித் தான் என்னென்னவோ அறிந்திருப்பதாகவும் பேசிப் பொழுது போக்குவான். இரண்டாவது தோட்டக்காரனுடைய போக்கு அத்தகையதன்று. அவன் முழுமனதோடு தோட்டத்தில்

வேலை செய்வான். எஜமானன் தோட்டத்துக்கு வரும் பொழுதும் அவரைக் கவனிக்காது தன் கருமத்திலேயே ஈடுபட்டிருப்பான். ஏதாவது பேசுதற்கு எஜமானன் அவனைக் கூப்பிட்டால் எஜமானனிடம் அவன் தெரிவிக்கவேண்டியதைச் சொல்லிவிட்டுத் தன் வேலைக்குப் போவான். இவ்விரண்டு தோட்டக்காரர்களுள் எஜமானன் யாரிடத்து அதிக நம்பிக்கை வைப்பான்? வாய்ப்பேச்சுக்காரனை நம்பித் தோட்டத்தை அவனிடம் ஒப்படைக்க மாட்டான். சர்வேசுவரன் இப்பிரபஞ்சத்துக்குத் தோட்டக்காரன். உயிர்கள் அனைத்தும் அறிந்தோ அறியாமலோ அவர் பணியாற்றுதற்கே பிரபஞ்சத்துள் வந்துள்ளன. தன்னைத் தெய்வத்தின் தொண்டன் எனக்கருதி அவருக்கே பணிவிடை புரிபவன் திருத்தொண்டன் ஆகின்றான். தான் புரிகின்ற பணிவிடையில் ஆழ்ந்து ஈடுபடுவதற்கேற்ப அவன் இறையவனுர்க்கு அலாதியாக உரியவனாகிறான். 'என் கடன் பணி செய்து கிடப்பது; தம் கடன் அடியேனையும் தாங்குதல்' என்னும் கோட்பாட்டுக்கு அத்திருத்தொண்டன் நல்லதொரு எடுத்துக்காட்டு ஆகிறான். கைம்மாறு கருதாது கடவுளுக்காகவென்றே கர்மம் புரிகிறவனிடத்து அவர் பெரிதும் கடமைப்பட்டவராகிறார். தொண்டனுக்கே அவர் தொண்டனாகிறார். இதுவே வாழ்க்கையைப்பற்றிய மேலாம் தத்துவம். இறையனார்க்கென்று இடையறாது அரும்பணி யாற்றுகிறவர்கள் பாக்கியவான்கள். கைங்கரியத்தின் மூலமாகவே அவர்கள் முற்றும் கடவுளுக்குரியவர்கள் ஆகிறார்கள். கடவுளும் அத் திருத்தொண்டர்களுக்கு உற்றவர் ஆகின்றார். திருத்தொண்டர்களின் பெருமையை விளக்குவது எளிதன்று. பகவானுக்கு நிகராகவும், சில வேளைகளில் பகவானுக்கு மிக்கார்களாகவும் திருத்தொண்டர்கள் இருக்கிறார்கள்.

சுவாமி விவேகானந்தர் அண்மையில் இவ்வுலகினில் வந்துள்ள இறையவனுரது திருத்தொண்டன். தம் உடல், பொருள் ஆவியெல்லாம் அவர் இறையவனுர்க்கென்றே ஒப்படைத்தவர் ஆவார். வாழ்க்கையில் அவர்க்கு ஏற்பட்ட சோதனையே அவருடைய தொண்டுக்குச் சிறந்த விளக்கமாகும். தந்தையார் திடீரென்று காலமானுர். அதைத் தொடர்ந்து வறுமை நோய் அக்குடும்பத்தை வந்து வாட்டியது. இவரை ஈன்றெடுத்த அன்னையும் உடன் பிறந்தவர்களும் இவருடைய ஆதரவை எதிர்பார்த்தவர்களாயினர். அத்தகைய நெருக்கடி ஒருபுறமிருக்க, விவேகானந்தருக்கு ஏற்பட்டிருந்த மற்ரெரு பெரிய கடமையை அவருடைய குருநாதர் ஸ்ரீ ராமகிருஷ்ண பரமஹம்சர் எடுத்துக்காட்டினுர். உலகில் எண்ணிறந்த நல்ல ஆத்மாக்கள் அறநெறியை நன்கு அறிந்துகொள்ளாது தவித்திருந்தனர். அன்னவர்களுக்கு அறநெறியை எடுத்துக்காட்டி அருள் நாட்டத்தில் அவர்களை ஊக்குவிப்பது விவேகானந்தருடைய பெரிய கடமையென்று குருதேவரால் அவருக்குப் புகட்டப்பட்டது. விவேகானந்தரும் அப்பெரிய கடமையை நிறைவேற்றுதல் பொருட்டுத் தமது சிறிய கடமையைத் தாயாரிடம் ஒப்படைத்து விட்டு, அவருடைய ஆசியை ஏற்றுக்கொண்டு வெளியேகினுர். அன்று தொட்டு அவர் உயிர் வாழ்ந்திருந்த காலமெல்லாம் இறையவனுரது திருத்தொண்டிலேயே ஈடுபட்டிருந்தார். யான், எனது என்பன அவரிடத்தில் இம்மியளவும் இல்லை.

பரமஹம்சதேவர் உடலை உகுப்பதற்கு முன்பு இப்பெரிய பொறுப்பை விவேகானந்தர் மீது சுமத்தினுர். உலகில் ஆங்காங்கிருந்த நல்லார்க்குப் பாரமார்த்திகப் பெருவாழ்வை எடுத்து வழங்குவது விவேகானந்தர் கடமை

என்று அவர் ஆக்ஞாபித்திருந்தார். அவரது ஆணையை நிறைவேற்றுவதற்கு விவேகானந்தரும் துறவியாக வெளியில் கிளம்புவராயினர். தம்மை ஏதோ ஒரு அருள் சக்தி ஆட்டி வருவதாக அவர் உணர்ந்தார். தாம் புரிதற்கிருக்கும் பணி எத்தகையதென்பது அவருக்கே தெரியாது. இறைவன் எப்பொழுது தமக்கு எத்தகைய பணியை நியமிக்கின்றாரோ அதை அப்பொழுது ஆற்றுவது தம் கடமை என உணர்ந்தவராய்ப் பரதகண்டம் முழுதிலும் சஞ்சரித்து வந்தார். காஷ்மீரத்திலிருந்து கன்னியாகுமரி பரியந்தம் இறைவன் தூண்டுதலுக்கு இணங்கியவராக அவர் யாத்திரை பண்ணினர். பலதரப்பட்ட மக்களைச் சந்தித்தார். மக்களுக்கிடையிலே ஊறிக்கிடந்த அறியாமையையும் வறுமையையும் அவர் நன்கு உணர்ந்தார். ஆருயிர்களுக்குச் செய்கின்ற பணிவிடையே ஆண்டவனுக்குச் செய்கின்ற பணிவிடையாகும் என்பது அவரது தெளிந்த கொள்கை. எம்முறையில் தமது திருத்தொண்டைத் தொடங்குவது என்பதைப் பற்றித் தாம் திட்டம் ஒன்றும் போடாது தெய்வத்திடத்துத் தம்மை ஒரு கருவியாக ஒப்படைத்தவராக நாட்டினுள் அவர் சஞ்சரித்து வந்தார். சித்தன் போக்கு சிவன் போக்கு என்பது பழமொழி. அதாவது சித்தன் ஒருவன் தனக்காக வென்று வேலைத் திட்டம் எதையும் வகுத்து வைத்துக் கொள்வதில்லை. அப்போதைக்கப்போது தெய்வச் செயலாய் வாய்க்கிற கடமைகளை இறைபணியாகக் கருதி நிறைவேற்றுவது சித்தன் போக்கு. விவேகானந்தரும் அம்முறையில் பணியாற்றி வந்தார். பாராளும் வேந்தர்கள் பலரை அவர் சந்தித்தார். அவர்களைத் திருத்தியமைக்கின்ற பணி விவேகானந்தருக்கு ஏற்பட்டது. அதை இறைபணியாகக் கருதி அவர் இயற்றி வந்தார். பண்டிதர்களுக்கிடையில்

வாழ்க்கைக்குப் பயன்படாத வெறும் ஏட்டுக்கல்வி நிறைந்திருந்ததை அவர் காணலுற்றுர். அப்பண்டிதர்கள் வாழ்க்கையைச் செப்பனிடுவதற்காகத் தங்கள் பாண்டித்தியத்தைப் பயன்படுத்த வேண்டுமென்று விவேகானந்தர் விளக்கிக் காட்டினர். இனிப் பாமரர்கள் பொருட்டு அவர் வெறும் கண்ணீர் சிந்தினர் என்று சொன்னல் போதாது. ஏழை எளியவர்களுக்காக அவர் ரத்தக்கண்ணீர் சிந்தினர் என்று சொல்லுவது முற்றிலும் பொருந்தும். இப்படி நாடெங்கும் ஞான விளக்கை எடுத்துச் செல்வதற்கிடையில் ஆங்காங்கு பலதரப்பட்ட மக்களுக்குத் தேவையாயிருந்த பணிவிடைகளை யெல்லாம் உள்ளன்போடு அவர் புரிந்து வந்தார். மக்களுக்குப் பணிவிடை செய்தற்காகப் பிறவிகள் பல எடுக்கத் தாம் ஆயத்தமாயிருந்ததாகவும் அவர் அன்புகனிந்து இயம்பினர்.

இகலோக வாழ்க்கையில் ஆக்கம் தேடுகிறவர்கள் எத்துறையில் புகுந்து செயல் புரிந்தாலும் அதில் நல்ல திட்டத்தை வகுத்து வைப்பது முற்றிலும் அவசியம். பொருள் ஈட்டுதல், சாகுபடி செய்தல், வாணிபம் செய்தல், தொழிற்சாலை அமைப்பது, சங்கம் நிறுவுவது, கல்வி புகட்டுவது, பகைவனை எதிர்த்துப் போர்புரிவது—இவைபோன்ற வாழ்க்கைச் செயல்களில் எவ்வளவுக்கெவ்வளவு திட்டம் மேலானதும் ஒழுங்குப்பாடுடையதும் ஆகிறதோ அவ்வளவுக்கவ்வளவு தொடுத்தவினை வெற்றிகரமாக நிறைவேறும். ஆக, வையக வாழ்க்கையில் வினையை வகைப்படுத்தத் தெரியாதவன் ஒருபொழுதும் வெற்றியடையான். வினையாற்றுதலைச் சரியாக வகைப்படுத்தி வைப்பவன் ஆக்கத்துக்கு வழி தேடுபவன் ஆகிருன். ஆனல் கடவுளின் தொண்டர்கள் போக்கு இதற்கு நேர்மாருனது. திட்டங்கள் அமைத்துக்

கொண்டு தெய்வத்துக்குத் திருத்தொண்டு செய்ய முயலுகிற வர்கள் ஒருநாளும் தொண்டர்கள் ஆகமாட்டார்கள் என்பது விவேகானந்த சுவாமிகளது கொள்கை. இறையவன் அப் போதைக்கப்போது இடுகிற ஆணையைச் சிரமேற்கொண்டு நிறைவேற்றி வைப்பதில் திருப்தியடைந்திருப்பவர்கள் நல்ல தொண்டர்கள் ஆகிறார்கள். தசரத ராமன் தனது ஜீவிதத்தில் செயற்கரிய செயல்களைச் செய்து சாதித்தவன். ஆனால் அவை களின்பொருட்டு அவன் திட்டம் ஒன்றும்வகுக்கக்கிடையாது. பயிற்சியின் பொருட்டு விசுவாமித்திரரிடம் அவன் போய்ச் சேர்ந்ததற்குத் திட்டம் எதுவும் இல்லை. இளவரசனாவதற்கு அவன் சங்கல்பிக்கக் கிடையாது. ராமனை இளவரசன் ஆக்கு வதற்கென்று அமைந்த சூழ்நிலை அவனை நாடு கடத்துவதற் கான சூழ்நிலையாக மாறியமைந்தது. அந்த மாறுபாடுகளுக் கிடையில் அவன் மனம் கோணியது கிடையாது. பிறகு வன வாசத்தில் நிகழ்ந்தவைகள் யாவும் தெய்வாதீனமாக வாய்த் தவைகள். ராமன் படைத்திருந்த மனப்பான்மையே திருத் தொண்டர்களுக்கு முற்றிலும் பொருத்தமானது. ராம உபாச கராகிய விவேகானந்தர் க்ஷேத்திரங்களையெல்லாம் சென்று தரிசித்த பிறகு சென்னை நகர் வந்து சேர்ந்தார். அவர் அமெரிக்கா போகவேண்டும் என்னும் வினைத் திட்டம் ஆங்குத் தானாக மற்றவர்களுக்கிடையில் வடிவெடுத்தது. ஆனால் விவேகானந்தரோ அதற்கு ஆரம்பத்தில் உடந்தையர் ஆகவில்லை. எல்லாம் இறைவனது திருவுளப்படியாகுக என்னும் எண்ணத்துடன் அவர் இது விஷயத்தில் சிந்தனை யற்றுச் சும்மா இருந்தார். அவர் கடல் பயணத்துக்கு நிதித் திரட்டப்பட்டது. ஆனால் ஏழையர்களுக்கு அன்னதானம் செய்வதில் அதை அவர் செலவழித்தார். நிதித் திரட்டியவர் கள் அதற்குக் காரணம் கேட்டபொழுது "நான் வெளிநாடு

செல்லுவது தெய்வத்துக்குச் சம்மதம் என்றால் மீண்டும் செல்வம் வரும்" என சுவாமிகள் விடை விடுத்தார். அங்ஙனமே அன்பர்களால் மீண்டும் நிதித் திரட்டப்பட்டது. அன்னை சாரதாதேவியாருக்குத் தாம் அமெரிக்கா போவதைக் குறித்து விவேகானந்தர் ஒரு கடிதம் எழுதியிருந்தார். அதைப்பற்றி அன்னையார் என்ன கருத்துக்கொள்கிறாரோ அதன்படி நடந்துகொள்ள அவர் எண்ணியிருந்தார். விவேகானந்தரை ஆசீர்வதித்து, கட்டாயம் வெளிநாடு ஏக வேண்டும் என்று அன்னையாரிடமிருந்து மறுமொழி வந்தது. அதன் பிறகே அவர் அமெரிக்கா செல்ல சம்மதித்தார். சென்னை அன்பர்களும் அவரைக் கப்பலேற்றி அமெரிக்காவுக்கு அனுப்பிவைத்தார்கள். 'எல்லாம் இறைவனுடைய திருவுளப்படி நிகழ்வனவாகுக' எனக்கருதி அவரும் அலை கடல் தாண்டி அமெரிக்கா போய்ச் சேர்ந்தார்.

ஆனால் அமெரிக்காவில் தொடக்கத்தில் அவருக்கு எல்லாம் பிரதிகூலமானவைகளாகவே இருந்தன. சர்வமத மகாசபைக்கு ஓர் அங்கத்தினராகத் தொடக்கத்தில் இவர் அனுமதிக்கப் படவில்லை. இதற்குள் இந்தியாவினின்று இவர் கொண்டுபோயிருந்த நிதியெல்லாம் விரைவில் செலவாய்விட்டது. இவரை மற்றவர்களுக்கு ஒரு விநோதமான மனிதன் என்று வேடிக்கை காட்டுதற்கு ஸ்ரீமாட்டி ஒருத்தி இவரைத் தமது மாளிகையில் விருந்தினராக வைத்திருந்தாள். வேடிக்கை பார்க்கவந்தவர்கள் எல்லாரும் பொருள் சேராக் கேள்விகள் பலவற்றை இவரிடம் கேட்டுவந்தனர். அக்கேள்விகளுக்கெல்லாம் இவர் விடை விடுத்ததை இறைவன் கைங்கர்யமாகவே கருதிவந்தார். இன்னும் சில தினங்களில் சர்வமத மகாசபையில் ப்ரமாசாரியராக பாராட்டப்படுவதற்கிருந்தவர் இப்பொழுது வேடிக்கை பார்க்க வந்தவர்

களுக்கு விநோதப் பிராணியாகத் தென்பட்டு வந்தார் ஆயினும் ஒன்றோடு ஒன்று ஒவ்வாத இந்த இரண்டு சூழ்நிலை களிலும் அவர் தட்டுப்படாதவராக இருந்தார். கண்காட்சி சாலையில் வைக்கப்பட்ட காட்டு மிராண்டியாக முதலில் கருதப்பட்டார். பிறகு கடவுளுடைய ஆதேசத்தைப் பெற்ற பேரறிஞனாகப் பாராட்டப்பட்டார். ஆனால் புகழ்ச்சியிலோ, இகழ்ச்சியிலோ இவர் பந்தப்படவில்லை. இறைவனுடைய தொண்டனாகவே இவர் தம்மைக் கருதி வந்தார். நிகழ்வ தெல்லாம் ஈசன் செயல் என்றும், எச்செயலுக்கும் தாம் கர்த்தா அல்லரென்றும் அவர் தெளிவுறக் கருதியிருந்தமை யினாலேயே நிந்தையிலும் ஸ்துதியிலும் கட்டுப்படாதவரா யிருந்தார். விவேகானந்தருக்குப் பெரிய செயல் சிறிய செயல் என்னும் வேற்றுமையில்லை. புல்லியவர்களுக்குப் புல்லிய கேள்விகளுக்கு விடை கொடுத்ததையும், தெள்ளி யெடுத்த சான்றோர்கள் சபையில் வேதாந்த தத்துவத்தைத் தேவாமிர்தமாகத் திரட்டிப் படைத்ததையும் எல்லாம் இறை வனுடைய திருத்தொண்டு எனவே சமதிருஷ்டியுடன் அவர் கருதிவந்தார்.

மேல் நாடுகளினின்று இந்தியாவுக்குத் திரும்பி வந்த விவேகானந்தர் கல்கத்தாவுக்கருகில் பேலூர் என்னும் கிராமத்தில் ஸ்ரீ ராமகிருஷ்ண மடத்தை ஸ்தாபித்தார். அதன் பிறகு கல்கத்தாவில் பெருவாரியாகப் பிளேக் நோய் தோன்று வதாயிற்று. அந்தத் தொற்றுநோய்க்குப் பயந்து பலர் நோய்வாய்ப்பட்டிருந்த தம் உற்றார் உறவினர்களை ஆங்காங் குப் போட்டு வைத்துவிட்டு வெளியூர்களுக்குப் பறந்தோடி னர். ஆனால் விவேகானந்த சுவாமிகள் அப்பிணியாளர் களுக்குப் பணிவிடை செய்தற் பொருட்டுப் பிளேக்நோய் நிவாரண வேலையைத் தொடங்கிவைத்தார். அது இந்து தேச

சரித்திரத்திலேயே தனி இடம் பெறுவதற்கான தேசீய நிகழ்ச்சியாகும். மேலும் அது சமய அனுஷ்டானத்திலே சிறந்த செயலாகப் பாராட்டுதற்குரிய பணிவிடையாகும். மரணத்துக்கு அஞ்சி ஓடுபவன் இம்மைக்கோ மறுமைக்கோ தகுதியுடையவன் அல்லன் என்பதையும், தொற்றுநோயின் மூலமாக மரணத்துக்கு இரையாகும் தறுவாயிலிருக்கும் திக்கற்ற நோயாளிகளுக்குப் பணிவிடை செய்வதே பரமனுக்குரிய வழிபாடாகும் என்பதையும் செயலில் காட்டியவர் விவேகானந்தர். தாம் தொடங்கிய பிளேக் நிவாரண வேலைக்குப் போதியவளவு பணவுதவி வரவில்லை. அப்பொழுது தாம் ஸ்தாபித்திருந்த மடாலயத்தையே விலைக்கு விற்று அப்படி அகப்பட்ட நிதியைக்கொண்டு பிளேக்நோய் நிவாரண வேலை செய்ய அவர் தீர்மானித்தார். ஆனால் அத்தீர்மானத்தை நடை முறைக்குக் கொண்டுவருவதற்கு முன்பு நிவாரண வேலைக்கு வேண்டிய நிதி வந்து சேர்வதாயிற்று. ஆருயிர்களுக்குச் செய்கிற பணிவிடையே ஆண்டவனுக்குச் செய்கின்ற பணிவிடை என்னும் கோட்பாட்டை அவர் தீவிரமாக அனுஷ்டித்தவர். தமது உயிர், உடல், உடைமை எல்லாம் கஷ்டதசையிலிருக்கும் மக்கள் சேவையின்பொருட்டுத் தியாகம் பண்ண அவர் எப்பொழுதும் ஆயத்தமாயிருந்தார்.

உலகெங்கும் சமயக் கோட்பாடுகளை அனுஷ்டான பூர்வமாக வழங்கி வந்தவர் விவேகானந்த சுவாமிகள். எச்செயலுக்குமே தம்மைக் கர்த்தாவாக அவர் ஒரு நொடிப்பொழுதிலும் கருதியது கிடையாது. இறைவன் கையில் அமைந்துள்ள ஒரு கருவியாகவே அவர் தம்மைக் கருதி வந்தார்.

வேண்டத் தக்க தறிவோய்நீ
வேண்ட முழுதுந் தருவோய்நீ

வேண்டும் அயன்மாற் கரியோய்நீ
வேண்டி என்னைப் பணிகொண்டாய்
வேண்டி நீ யாது அருள்செய்தாய்
யானும் அதுவே வேண்டினல்லால்
வேண்டும் பரிசொன் றுண்டென்னில்
அதுவும் உன்தன் விருப்பன்றே.

என்னும் கோட்பாட்டுக்கு இலக்காக விளங்கியவர் விவேகானந்தர். உலகெங்கும் தாம் சாதித்த அரும் பெரும் ஆத்மீகத் தொண்டுகளெல்லாம் ஈசன் செயல் என்னும் எண்ணத்தில் அவர் நிலைபெற்றிருந்தார். தமது ஆணவ அகங்காரத்தைக் கொண்டு தாம் ஏதேனும் சாதித்திருப்பாராகில் அதெல்லாம் அடிபட்டுப் போகட்டும் என்றும், இறைவன் கையில் தாம் கருவியாயிருந்து ஏதேனும் கைங்கரியம் உலகுக்குச் செய்திருப்பாராகில் அவையெல்லாம் இறைவன் அருளால் முன்னேற்றம் அடையட்டும் என்றும் தமது குரு சகோதரர்கள் முன்னிலையில் அவர் உறுதிமொழி கூறுவாராயினர். அதினின்று அவர் எத்தகைய தெய்விகத் திருத்தொண்டன் என்பது தெளிவுற விளங்குகிறது. விவேகானந்தரைச் சரியாக அறிந்துகொள்வது திருத்தொண்டின் மகிமையைச் சரியாக அறிந்துகொள்வதற்கு நிகராகிறது. அப்படித் தொண்டின் சிறப்பை அறிந்து தொண்டு புரிகிறவர்கள் முற்றிலும் தெய்வத்துக்கு உரியவர்கள் ஆவார்கள்.

11. பேச்சாளன்

நீரில் வாழும் ஜீவ ஜந்துக்கள் பொதுவாக ஓசையை உண்டு பண்ணத் தகுதியற்றவைகளாக இருக்கின்றன. ஆனால் நிலத்தில் வசிப்பவைகளும் வானத்தில் பறப்பவை களுமாகிய உயிர் வகைகளுள் பெரும் பகுதி ஏதேனும் ஒரு விதத்தில் ஓசையை உண்டுபண்ணித் தங்கள் உணர்வை வெளியாக்குகின்றன. இன்பம், துன்பம், ஆபத்து, பசி இவைபோன்ற உணர்ச்சிகளை வெளிப்படுத்துதற்கு ஏற்ற ஓசைகள் அவ் உயிர்களுக்கு இயல்பாக அமைந்திருக்கின் றன. மக்களுள்ளோ அது மொழியாக வடிவெடுக்கிறது. மொழிகளுள்ளும் பலப்பல பாங்குடையவைகள் இருக்கின் றன. எத்தனை யெத்தனையோ கருத்துக்களைச் சரியாக வெளிப்படுத்தும் வல்லமைக்கு ஏற்ப ஒரு மொழியின் சிறப்பு மேலோங்குகிறது. இனி மனிதன் மொழி ஒன்றை முறை யாகக் கற்பது தன் கருத்துக்களைச் சரியாகப் பிறர்க்கு எடுத்து வழங்குதற் பொருட்டேயாம். மொழியைச் சரியாகப் பேசிப் பழகுவது நல்ல கலைஞானமாகிறது. பேச்சுத் திறமை எல்லார்க்கும் ஒரே விதத்தில் அமைவதில்லை. பேச்சின் சிறப்பைக் குறித்து

கேட்டார்ப் பிணிக்கும் தகையவாய்க் கேளாரும்
வேட்ப மொழிவதாம் சொல்

என வள்ளுவர் விளம்பியுள்ளார். பேச்சுத் திறமையினால் ஒருவன் மற்றவர்களை யெல்லாம் வசப்படுத்தித் தன் வழிக் குத் திருப்பிவிடலாம். நல்ல தின்பண்டத்தை ஒரு தடவை சுவை பார்த்த சிறுவன் ஒருவன் திரும்பத் திரும்ப அதைச் சுவைக்க அவாவுறுகிறான். அதே விதத்தில் சொல் வல்லான் ஒருவன் பேச்சை ஒருதடவை கேட்டவர்கள் திரும்பத்

திரும்ப அதைக் கேட்கக் காமுறுகின்றனர். முன்பு கேளாத வர்களையும் அப்பேச்சை வந்து கேட்கும்படி அவர்கள் தூண்டி அழைத்துச் செல்லுகின்றனர். பேச்சுத் திறமைக்கு அத்தகைய சக்தி உண்டு. விவேகானந்தர் முறையாகப் பேசும் கலையை நன்கு அடையப்பெற்றவர். அவர் பேச்சை ஒரு தடவை கேட்டவர்கள் அதனோடு திருப்தியடைந்திருக்க மாட்டார்கள். திரும்பத் திரும்ப அவர் பேச்சுக்குச் செவி சாய்க்க விரும்புவர். அமெரிக்காவில் நிகழ்ந்த சர்வமத மகாசபையில் கூடியவர்களையெல்லாம் அன்றாட நிகழ்ச்சி களில் கடைசி வரையில் காத்திருக்கச் செய்வதற்குச் சபாநாயகர் அரிய முறை ஒன்றைக் கையாண்டு வந்தார். சபையில் கூடியவர்கள் அனைவரும் அமைதியாக அமர்ந் திருந்தால் தக்க சமயத்தில் விவேகானந்தர் மற்றுமொரு முறை பேசுவார் என்று சபாநாயகர் ஆர்வமூட்டுவார். சுவை யற்ற மற்ற பேச்சுக்களுக்கெல்லாம் செவிகொடுத்தும் கொடுக் காதும் பலபலர் பொறுமையுடன் காத்திருப்பார்கள். அப்படி அவர்கள் பொறுமை சாதித்ததெல்லாம் விவேகானந் தர் நிகழ்த்துதற்கிருந்த அறிவுரைக்குக் காது கொடுத்து அதை இனிது அருந்துதற்பொருட்டேயாம்

பிரசங்கத்துக்காகவென்று மேடையின்மீது விவேகானந் தர் எழுந்து நிற்கும் பொழுதே மக்கள் கருத்தெல்லாம் அவரிடம் சாரும். இனி, அவர் பேச ஆரம்பித்தால், மடை திறந்தால் நீர் புரண்டோடி வருவதுபோன்று அரிய பேச்சு அவரிடமிருந்து பெருக்கெடுத்து ஓடிவரும். உலகெங்கும் அவர் கையாண்ட மொழி ஆங்கிலம். அவரது தாய்மொழி யாகிய வங்காளத்தில் அவர் எவ்வளவு வாக்குத் திறமை படைத்திருந்தாரோ அவ்வளவு திறமை ஆங்கில மொழியி லும் அவர் படைத்திருந்தார். சொல்மாரி அவரிடமிருந்து

ஓயாது சொரிவது, நிலத்தில் பயிர்களுக்கு உயிர் ஊட்டுவது போன்று மக்களிடத்து அருளூட்டி வந்தது. வாக்குவன்மை வாய்க்கப்பெற்றவர்கள் சிலர் உலக சரித்திரத்தையே மாற்றி யமைத்திருக்கிருர்கள். வாக்குவன்மை வாய்க்கப்பெற்றிருந்த விவேகானந்தர் அமெரிக்காவிலும் ஐரோப்பாவிலும் கற்ற றிந்த மேன்மக்களது மனப்பான்மையை அறவே மாற்றி யமைத்து வைத்தார். அவர் உள்ளத்தில் ஊற்றெடுத்து வந்த பாரமார்த்திகப் பெருங் கருத்துக்களுக்கெல்லாம் பணி விடை செய்வது போன்று சீரிய சொற்கள் முறையாக முன் வந்து நிற்கும். கேட்போருக்கு அவர் பிரசங்கம் செவியமு தாய் அமைந்தது உடனடியாக வாய்த்த பெரும் பேருகும். குரலோசையின் இனிமையும், சொல்லமைப்பின் மகிமையும், சோராது சொல்தொடர் அவர் நாவினின்று கிளம்பி வெளி வந்து கொண்டிருந்ததும் செவிசாய்த்தோர்க்குப் போதிய அருள் விருந்தாயிற்று. விவேகானந்தருடைய சொல்திறனை அமெரிக்க சமாசாரப் பத்திரிகைகள் The Hindu cyclone என்றும் An orator by divine right என்றும் சிலாகித்துக் கூறலாயின. ஹிந்துச் சூருவளி என்றும், தேவானுக்கிரகம் பெற்ற பேச்சாளன் என்றும் அவ் ஆங்கிலச் சொற்ருெடர்கள் பொருள்படுகின்றன. சூருவளி ஒன்று கிளம்பி விரைந்து அடிக்கின்றபொழுது காட்டு மரங்களை யெல்லாம் வீழ்த்து கிறது. குப்பை தூசிகளை யெல்லாம் வாரி எங்கேயோ கொண்டு போகிறது. விவேகானந்தருடைய பிரசங்கம் அங்ஙனம் மேல் நாட்டுப்பண்பிலும் கிறிஸ்துவ சமய உணர்ச் சியிலும் தற்பெருமை கொண்டிருந்தவர்களையெல்லாம் தகர்த் துக் கீழே தள்ளியது. மக்கள் உள்ளத்தில் அதுகாறும் இடம் பெற்றிருந்த புல்லிய கருத்துக்கள் பலவற்றை விவே கானந்தப் பிரசங்கம் என்னும் புயல்காற்று மோதியடித்து

அப்புறப்படுத்தியது. நல்ல விவேகிகள் விவேகானந்தரின் மேடைப் பிரசங்கத்தைப் பற்றி மற்ளெரு விதத்தில் அபிப் பிராயம் கூறினர். அப்பெரு மகனிடத்திருந்து கிளம்பி வந் தது வெறும் வாக்குப்பிரவாகம் அன்று; அருட்பிரவாகமே வாக்குப் பிரவாகம் போன்று உருவெடுத்து வந்தது. அவர் திருவாய் மலர்ந்தருளியதற்குச் செவி கொடுத்தவர்கள் எல் லாரும் இம்மண்ணுலக வாழ்வை அறவே மறந்துவிட்டு விண் ணுலகப் பேரின்பத்தில் திளைத்திருந்தனர். அமிர்தபானம் பண்ணியது போன்று அவர்கள் ஆனந்தமுற்று இருந்தனர். கண்ணனது குழலோசை உயிர்கள் அனைத்தையும் அதீத நிலைக்கு அழைத்துச் சென்றது போன்று விவேகானந்தப் பிரசங்கப் பிரவாகம் அமெரிக்கப் பெருமக்களை யெல்லாம் பரமானந்தத்தின்கண் அழைத்துச் செல்வதாயிற்று. தமது பிரசங்கத் திறமையின் மூலம் விவேகானந்தர் உலகுக்கு அளித்த அருள் விருந்து இத்தகையதாம்.

பேச்சாளர் சிலர்க்கிடையில் சொற்சுவை மட்டும் சிறப் புற்று விளங்கும். செவிசாய்த்துக் கொண்டிருக்கும் வரையில் அது இன்பம் நல்குவதாகும். ஆனால் சொற்பெருக்கு முடி வுறும்பொழுது அந்த இன்பத்துக்கு முடிவு வருகிறது. சொற்பொழிவைக் கேட்டு என்ன அறிந்துகொண்டாய், என்று பொதுமக்களைக் கேட்குமிடத்துப் பிரசங்கம் மிக நன் ருய் இருந்தது என்று மட்டும் மொழிவர். அதற்குமேல் ஒன்றும் எடுத்துரைக்க அவர்களுக்கு இயலாது. வேறு சிலர்க்குப் பொருள் சுவை மட்டும் வாய்க்கிறது; சொற்சுவை சிறிதேனும் அவர்களிடத்து அமைவதில்லை. ஆதலால் பொருள் சுவை மேகத்தில் மறைந்த சூரியன் போன்று கேட் போருக்குப் பெரிதும் பயன்படாது போகிறது. சொல் குறை பாடுகளுக்கிடையில் சீரிய கருத்துக்களைப் பேசுபவரிட

மிருந்து பொறுக்கி எடுக்கும் திறமை யாரோ சிலருக்குண்டு; பெரும்பாலோர்க்கு அது இயலுவதில்லை. ஆதலால் தனியாகப் பொருள் சுவை பெரிதும் பயன்படாது போகிறது. பின்பு விவேகானந்தரிடத்தோ பொருள் சுவை சொற்சுவை ஆகிய இரண்டு சுவைகளும் வேண்டியவாறு புதைந்து கிடந்தன. ஆதலால்தான் விவேகானந்தர் பிரசங்கம் கேட்க மக்கள் திரள் திரளாகச் சென்றனர். அவர் பிரசங்கம் கேட்டு அவர்கள் பெருநலன் அடைந்தனர். வாழ்க்கைக்கே புதியதொரு விளக்கத்தை அவர்கள் அவ்வள்ளலிடமிருந்து பெறுவாராயினர். வெறும் வாய்ப்பேச்சால் உலகத்துக்கு ஒரு நன்மையும் செய்ய முடியாது என்பது பொதுவாக அமைந்துள்ள கொள்கையாகும். ஆனால் அருளாளன் ஒருவன் சேர்ந்தாற்போன்று சொல்லாளனாயும் இருப்பானாகில் சர்க்கரைப் பந்தலில் தேன்மாரி பொழிந்தது போன்று பொருள் சுவை, சொற்சுவை ஆகிய இரண்டும் சேர்ந்து மக்களுடைய மனப்பான்மையையே திருத்தியமைக்கிறது. மேடைகளின்மீது விவேகானந்தர் புரிந்த அரிய சொற்பொழிவுகள் அத்தகைய சீரிய நலனை உலக மக்களுக்கிடையில் உண்டு பண்ணுவனவாயின.

சுவாமி விவேகானந்தருடைய மேடைப் பிரசங்கங்களைக் கேட்டுப் பயனடைந்தவர்கள் கணக்கற்ற பேர். ஆனால் அவரோடு நேரில் உரையாடி நலன் பெற்றவர்கள் அத்தனை பேர் அல்லர். ஆயிரக்கணக்கான பேருக்கு அவரோடு நேரில் தொடர்வு வைக்கும் வாய்ப்பு அமையவில்லை. அது சாத்தியமும் அன்று. பின்பு நேரில் அவரோடு இணக்கம் வைத்தவர்கள் அவருடைய பேச்சுத்திறனை இன்னும் நன்றாக மதிப்புப் போட்டிருக்கின்றனர். அவர் எப்பொழுதுமே பாரமார்த்திக விஷயம் ஒன்றைப்பற்றி மட்டும் பேசுவது

வழக்கம் எனக் கருதலாகாது. எந்த விஷயத்தைப்பற்றிப் பேச்செடுத்தாலும் அதை யொட்டிய அரிய கருத்துக்கள் அவரிடமிருந்து வெளியாகும். தெய்விக விஷயங்கள், உலக விஷயங்கள் ஆகியவைகளுள் அவர் எதைப்பற்றிப் பேசினு லும் அதில் புதைந்திருக்கும் சிறப்பு அவர் வாயிலாக வெளி யாகும். இனி அவரோடு கருத்துக்களைக் கலந்துகொள் கின்றவர்களுக்குக் குழப்பம் ஏதும் உண்டாவதற்குச் சிறிதே னும் இடம் இராது. கண்ணுடியில் எல்லாரும் அவரவர் முகம் காண்கின்றனர். முகத்தை அலங்கரிப்பதற்கான எண்ணமும் அதினின்று உள்ளத்தில் எழுகிறது. விவேகா னந்தரோடு உரையாடுவது அவரவர் உள்ளத்தை அப்பரம புருஷன் வாயிலாக அலசி ஆராய்வதற்கு ஒப்பாகும்.குழந்தை களோடு பேசுகிறபோது அவருக்கும் ஒரு குழந்தையின் உள்ளம் வாய்க்கும். தனக்கு ஒத்த மற்ருெரு குழந்தையோடு இணக்கம் கொள்ளுவது போன்று அக்குழந்தை உணரும். அது ஏற்றுக்கொள்ளக்கூடிய நல்லதொரு கருத்தை விவே கானந்தர் அன்பொடு கலந்து, அருளொடு கலந்து அதற்கு ஊட்டுவார். பண்படாத மனநிலையில் இருக்கிறவர்களோடு சுவாமிகள் உரையாடவேண்டி வருமிடத்துத் தம்மையும் ஒரு பாமரன் நிலையில் வைத்துக்கொள்வார். ஆதலால் அவரோடு பேசுகிறவர்களுக்கு இவருடைய பாண்டித்தியமோ பார மார்த்திகப் பெருநிலையோ குறுக்கிட்டு நிற்காது. யார் யார் எத்தகைய பண்புடையவராயிருந்தாரோ அந்தப் பண்புக் கேற்ற பேச்சும் அதினின்று அவரை ஒருபடி மேலே உயர்த்து வதும் விவேகானந்தருடைய கடமையாயிருந்தது. எனவே அவர் மக்கள் எல்லாருக்குமே உரையாடுவதில் இனியவரா யிருந்தார். பின்பு அவரவர்க்கு உண்டாயிருந்த சொந்தப் பிரச்னைகளை சுவாமிகளோடு கலந்து கொண்டவர்களுக்கு

அவருடைய காருண்யமும் பேச்சுத் திறமையும் நன்கு புலனாயிற்று.

தாய் ஒருத்தித் தன் குழந்தைக்கு ஊட்டுகிற பால் அதன் உடலுக்கு ஒத்துக்கொள்வதாயிருக்கிறதா என்னும் கேள்வி ஒரு பொழுதும் எழுவதில்லை. குழந்தையின் உடல் நிலைக்கு ஏற்றதாகவே தாய்ப்பால் தானாக மாறியமைகிறது. அத்தகைய தாய்ப்பால் போன்றது விவேகானந்தர் தனித் தனியாக ஒவ்வொருவரோடும் பேசிய பேச்சு. குழந்தைக்கு நாளடைவில் ஜீரணசக்தி அதிகரிப்பதற்கு ஏற்ப தாய்ப் பாலும் சற்றுத் தடித்ததாகும். அதே விதத்தில் கருத்தை ஏற்பவர்களுடைய பரிபாகத்துக்கேற்றபடியே விவேகானந்தர் நல்லெண்ணங்களை அன்னவர்களுக்கு எடுத்தூட்டுவார். அப்படி அவர் செய்வது ஒரு போதகாசிரியர் முறையில் அன்று. தாயும் சேயும் ஒட்டி உறவாடுவது போன்றோ அல்லது தோழர்கள் கருத்து ஒருமித்து இணங்கி இருப்பது போன்றோ விவேகானந்தரது கூட்டுறவு அமைந்திருக்கும். பேச்சை அவர் தம்மோடு இணங்கியிருப்பவரது பரிபாகத் துக்கேற்றவாறு அமைப்பார்.

விவேகானந்தரோடு விவாதிக்க வேண்டிய சூழ்நிலைகள் பலர்க்கு வாய்க்கும். அப்படி வாதிக்கின்றபொழுது மக்களுடைய மனபரிபாகம் விவேகானந்தரது மனதில் முன்னணியில் வந்து நிற்காது. விவாதிக்கப்படுகிற விஷயமே முன்னணியில் வந்து நிற்கும். சம்பாஷிக்க வந்தவனை எப்படியாவது சந்தோஷப்படுத்தி அனுப்புவது விவேகானந்தரது போக்கு அன்று. விவாதிக்க வந்தவனது அறிவுத் திறனையும் ஆராய்கின்ற முறையையும் ஒழுங்குபடுத்தி அனுப்புவது சுவாமிகளது கடமையாயிற்று. அப்படி அவனது அறிவுத் திறனை ஒழுங்குபடுத்துதலில் தயவு தாட்சண்யத்துக்குச்

சிறிதேனும் அவர் இடம் கொடுக்கமாட்டார். நோயாளி ஒருவனுக்குக் காயத்தைக் கசக்கிக் கட்டுவதை முன்னிட்டு உண்டாகிற வலியை ரண வைத்தியர் கருத்தில் வாங்கிக் கொள்வதில்லை. எந்த முறையில் காயத்தைத் திருத்திக் கட்டினால் காயப்பட்டவனுக்கு நலன் உண்டாகுமோ அந்த முறையில் நல்ல மருத்துவர் ரண வைத்தியத்தைக் கையாளு வார். மக்களது மனநோயைக் களைவது விவேகானந்தரது கடமையாயிற்று. எனவே ஏதேனும் ஒரு தத்துவத்தை எடுத்து விவாதிக்கும்பொழுது தமது சொற்கேட்பவனுக்குக் கசப்பு ஏதேனும் வரலாகாது என்று அவர் கருதுவதில்லை. எப்படியும் விவாதிக்கிறவனுடைய மனதை அவர் நேர்மைப் படுத்தி வைப்பார். அதற்கிடையில் அவர் பொறையே வடி வெடுத்தவர். பலர் உரையாடும்பொழுது பிறர் பேச்சை முழுதும் வாங்கிக்கொள்ளப் பொறையற்றவர்களாயிருப் பார்கள். எதிர்த்துப் பேசுபவனது இரண்டொரு வார்த்தை களைக் கேட்டதும் சரமாரியாகத் தங்கள் கருத்தை வாரிக் கொட்டுவர். அத்தகைய சம்பாஷணை பெரிதும் குழப்பத்தி லும் மனத்தாங்கலிலும் சென்று முடியும். அது போன்ற இழுக்குக்கு விவேகானந்தர் ஒரு பொழுதும் இடந்தரமாட் டார். மற்றவனுடைய கூற்று முழுதையும் பொறுமையாகக் கேட்டுக்கொண்டிருப்பார். அவன் பேசியதை யெல்லாம் விமர்சனப்படுத்துகிற முறையில் சுருக்கமாகத் தாம் ஒரு தடவை எடுத்து மொழிந்து ‘இதுதானே நீ பகர வந்துள்ள கருத்து?’ என அவர் வினவுவார். மற்றவன் தனது கூற்று முழுதையும் விவேகானந்தர் சரியாகக் கிரகித்துக்கொண் டார் என்று அவன் ஒத்துக்கொண்ட பிறகு அக்கூற்றிலுள்ள குறைபாட்டை அவர் படிப்படியாக எடுத்து விளக்குவார். ஏதேனும் ஒரு படித்தரத்தில் விவேகானந்தரது மறுப்பு

அவனுக்குச் சமாதானம் அளிக்கவில்லையென்றால் அந்தப் பகுதியை மேலும் அவர் பலப்பல விதங்களில் விளக்கிக் காட்டி தம்மோடு உரையாடுபவனுடைய கருத்தைத் திருத்தி யமைப்பார்.

தலைசிறந்த பரமாசாரியர் ஒருவரிடம் இருக்கவேண்டிய நற்குணங்களெல்லாம் ஒன்று சேர்ந்து விவேகானந்தரிடத் துத் திகழ்வனவாயின. தன் அறிவுக்கெட்டியவாறு ஒரு விஷயத்தைக் கருத்தில் வாங்கிக்கொள்ளும் சுதந்தரம் ஒவ் வொரு மனிதனுக்கும் உண்டு என்பதை விவேகானந்தர் கணப்பொழுதிலும் மறந்துவிடவில்லை. அவரவர் சுயேச்சைப் படி விஷயங்களை ஓர்கின்றபொழுதே அவர்களுக்கு நல்ல முறையில் மன வளர்ச்சி உண்டாகிறது. சொல்லுவதைக் கேட்டு அக்கூற்றுக்கு அடிபணிகிறவர்களாய் மக்கள் இருக்க வேண்டும் என்னும் கருத்துடைய ஆசிரியர்களும், போதகர் களும், ஆசாரியர்களும் உலகில் பலர் இருக்கின்றனர். ஆனால் அப்படி வலிந்து தமது கருத்தைப் பிறர்மீது திணிப்பது அறிவு வளர்ச்சிக்குப் பொருந்தாதது என்பது விவேகானந்த ரது கொள்கை. ஒவ்வொரு குழந்தையும் தன் போக்கில் நின்றும் நடந்தும் பழகுகிறது. சிந்தனை சக்தியும் அதே விதத்தில் அந்தந்த மனிதனுடைய மனப்பான்மைக்கு ஏற்ற வாறு வடிவெடுத்து வளரவேண்டும். அவரவர் போகின்ற போக்கில் போவதற்குச் சுதந்தரம் கொடுத்து உற்சாகமூட்டு வது விவேகானந்தர் கையாண்ட முறை. அப்படி உற்சாக மூட்டுதற்கிடையில் மக்கள் உள்ளத்தில் உண்டாகிற கோணல்களை மட்டும் அவர் அமைதியாக ஒழுங்குபடுத்து வார். தன்னிடத்திருந்த கோணல் திருத்தியமைக்கப்பெற்றி ருக்கிறது என்பதையே பலர் உணர்ந்து கொள்ளாதபடி அவ்வளவு திறமையாக விவேகானந்தர் தம் பேச்சைக்

கையாண்டார். பேச்சின் மூலம் மக்களுடைய பான்மைகளையே போராட்டத்துக்கு இடமில்லாது சரிப்படுத்தலாம் என்பதற்கு விவேகானந்தரது சொல்திறமை எடுத்துக்காட்டாக விளங்கிற்று. ஒருவர் பேசிக்கொண்டிருப்பதற்கிடையில் மற்றவர்கள் குறுக்கிட்டுத் தங்கள் கருத்துக்களை வாரிக்கொட்டுவது ஒரு சிலரிடத்துள்ள குறைபாடு. அத்தகைய நெருக்கடி விவேகானந்தருக்குத் திரும்பத் திரும்ப நிகழும். ஆனல் அதுபோன்ற சோதனை வேளைகளில் அவர் ஒரு பொழுதும் தமது பொறுமையை இழக்கமாட்டார்; அமைதியும் இனிமையுமே வடிவெடுத்தவராயிருந்து தமது சீரிய கருத்துக்களைக் கேட்பவர்களுடைய உள்ளத்தில் அமுதூட்டுவது போன்று செலுத்துவார்.

இனி மதவெறி பிடித்தவர்களும், கருத்து வெறி பிடித்தவர்களும், அகங்காரம் மிகப் படைத்தவர்களும் உலகில் பலர் உண்டு. இன்னும் சிலர் விவேகானந்தரை வாய்ப் பேச்சில் தோற்கடிக்கவேண்டும் என்னும் செருக்குடன் வந்து விவாதத்தில் அவரை எதிர்ப்பார்கள். அத்தகைய புல்லிய பாங்கு படைத்திருந்த கிறிஸ்தவப் பாதிரிமார்களும் கல்விச் செருக்கர்களும் பலர் அமெரிக்காவில் விவேகானந்தரைப் பேச்சில் தோற்கடிக்க வந்தனர். அவர்கள் விவேகானந்தரிடம் பட்டபாட்டைக் குறித்து அக்காலத்திய சமாசாரப் பத்திரிகை யொன்று இங்ஙனம் எழுதலாயிற்று:— "விவேகானந்தரது வேதாந்தக் கோட்பாடுகளில் குற்றம் காண வேண்டும் என்னும் குறுகிய மனப்பான்மையுடன் அவரை எதிர்த்தவர்கள் அடைந்த அலங்கோலத்தை என்னென்பது? விவேகானந்தரை எதிர்த்தவர்களில் பலர் அவருடைய வேதாந்தக் கோட்பாடுகளெல்லாம் வீணான வெறும் மனக் கோட்டைகள் என்று குற்றம் காண முயன்றனர். அந்தோ,

அம்முயற்சியில்தான் அவர்கள் அறவே தோல்வியடைந்தனர். எதிரிகள் கூறிய குற்றங்களுக்கு விவேகானந்தர் விடுத்த விடைகள் மின்னல் கொடிகள் போன்று கார்மேக மயமான எதிரிகளின் உள்ளங்களைப் பிளந்து கொண்டு போயின. சொற்போரில் விவேகானந்தரைத் தோற்கடிக்க முயன்றவர்கள் ஒரே மறுமொழியில் வாயடக்கப்பட்டனர். அவருடைய வாலறிவு என்னும் வடிவேலுக்கு எதிரே எதிரிகளின் மடமை தாக்குப் பிடிக்கத் தகுதியற்றதாய்த் தகர்த்தெறியப் பட்டது. எத்தகைய கூர் அம்புகள் போன்று அவருடைய தெளிந்த கருத்துக்கள் இருந்தன என்பதையும், அவருடைய அறிவுத் திறனில் எத்தகைய பிரகாசம் ஜொலித்துக்கொண்டிருந்தது என்பதையும், எவ்வளவு பெரிய ஞானக்களஞ்சியம் அவருடைய உள்ளத்தில் இடம் பெற்றிருந்தது என்பதையும், விவாதத்திலே எத்தகைய பண்பாடடைந்த மேன்மகனாக விவேகானந்தர் விளங்கினார் என்பதையும், அவரை எதிர்த்து விவாதம் பண்ண முற்பட்ட செருக்கர்கள் அறிந்து கொண்டு வாயடங்கி வெறுமனே திரும்பிப் போயினர்.''

விவேகானந்தரது பேச்சுத்திறமையைக் குறித்து மற்றுமொரு பத்திரிகை இங்ஙனம் எழுதுவதாயிற்று: "விவேகானந்தரது வாலறிவு முழுதையும் அறிந்து கொள்ளுதற்கு அவருடன் சம்பாஷணை புரிவதே உற்ற உபாயமாகும். மேடைப் பிரசங்கத்தில் ஏதேனும் ஒரு கருத்தை ஏதேனும் ஒரு போக்கில் பொருத்தமாக அவர் பேசி முடிக்கிறார். ஆனால் அவருடன் நேரே சம்பாஷிக்கின்ற பொழுதே அவரிடத்துள்ள சீரிய ஞானம் நன்கு வெளியாகிறது. விஷயங்களைத் தெரிந்து கொள்ளவேண்டும் என்னும் சீரிய எண்ணத்துடன் அவருடன் உரையாடினால் பகர்பவரும் பகரப்பெறுபவரும் ஒன்றுபட்டிருப்பது முதலாய அற்புதமாகும். அவரு

டைய ஆழ்ந்த அனுபவங்களை யெல்லாம் தமக்குத்தாமே பேசிக்கொள்வது போன்று அவர் வெளியிடுவார். பிறர்க் கெடுத்துத் தம் கருத்தை வழங்குதல் என்னும் பேதம் அவரு டைய மனதினின்று அறவே அகன்று போகிறது. சொல்லு பவர்க்கும் கேட்பவர்க்குமிடையில் ஐக்கியம் உண்டாகிறது. அப்படி நிகழ்கின்ற சம்பாஷணை அமிர்தத்தை வாரி வழங்கு வதுபோன்று இனியதாக இருக்கிறது. விவேகானந்தரது பாண்டித்தியம், சொல்வன்மை, சோர்வு என்பதை அறியாத சமயோசித புத்தி, கடலிலும் ஆழ்ந்த அனுதாபம் ஆகிய சீர்மைகளெல்லாம் அவரிடத்திருந்து சோராது வெளிக்கிளம் பிக் கொண்டிருக்கும். இன வேற்றுமை, தேச வேற்றுமை, பழக்கவழக்கங்களின் வேற்றுமை, மொழி வேற்றுமை ஆகிய வைகளெல்லாம் அவ்வேளையில் இருக்குமிடம் தெரியாது மறைந்து பட்டுப்போம். எந்த விஷயத்தைப் பற்றிப் பேசு கிறாரோ அந்த விஷயம் கண்ணெதிரே காட்சி கொடுப்பது போன்று விவேகானந்தரால் பேசப் பெறுகிறவர்களுக்கு விளங்கும். சரித்திரத்தைப் பற்றிப் பேசினால் பேசப்பெறும் நிகழ்ச்சி ஆங்கு நிகழ்வது போன்று இருக்கும். பரதத்துவத் தைப் பற்றி அவர் பேசினால் அனுபவம் அடையப் பெற்ற வனாகப் பேசப் பெறுபவன் அந்தச் சிறிது நேரத்துக்காவது மாறியமைவது திண்ணம். அதுவே விவேகானந்தரது பேச்சுத் திறமை. அது பொருள் மிகப் புதைந்தது. அது ஒப்பு உயர்வு அற்றது."

நாவலர் பலர் உலகில் இருக்கின்றனர். ஆயினும் அவர்கள் எல்லாரும் மெய்ப்பொருள் காட்சி கண்டவர்கள் அல்லர். தாம் தாம் கற்றறிந்தும் கேட்டும் உணர்ந்தும் இருக் கும் சிறு கொள்கைகளையும் கோட்பாடுகளையும் சிலாகித்துப் பேசுவதே அன்னவர்களின் போக்கு. ஆனால் சுவாமி விவே

கானந்தரோ மெய்ப்பொருளை முற்றிலும் உணர்ந்தவர். பாரமார்த்திகத் தத்துவங்களையெல்லாம் அனுபவ பூர்வமாகத் துருவி ஆராய்ந்தவர். ஆதலால் விருப்பு வெறுப்பின்றியும், மக்களைத் தாக்குதலோ தாங்குதலோ இன்றியும் எடுத்துக் கொண்ட விஷயங்களை நடுநிலைகோணது விளக்கியருள்வார். "எப்பொருள் யார் யார் வாய்க் கேட்பினும், அப்பொருள் மெய்ப்பொருள் காண்பது அறிவு" என்னும் பொய்யாமொழியானது விவேகானந்தர் வாயிலாக நன்கு விளக்கப்பெறுவதாயிற்று. அவர் தாமே ஒரு சொல்வேந்தர். அவர் வாயினின்று வெளியானவையெல்லாம் உண்மை.

---

11. விவேகானந்தர் வழங்கியுள்ள சந்தேசம்

செய்தி, சந்தேசம் ஆகிய இந்த இரண்டு சொற்களுக்கிடையில் சிறிது கருத்து வேற்றுமை உளது. ஏதாவது ஒரு தகவலை மற்றவர்களுக்கு எடுத்து இயம்புமிடத்து அது செய்தி. ஆனல் சந்தேசம் என்பது ஏதேனும் ஒரு விஷயமோ, தகவலோ, புள்ளி விவரமோ அன்று. அதில் ஒரு தனிச் சிறப்பு இருக்கிறது. மக்களுக்கு வாழ்க்கையில் பயன்படுகிற வேலைத் திட்டம், கர்ம நியதி, வாழ்க்கைக் கோட்பாடு ஆகியவைகள் அடங்கப்பெற்றிருப்பது சந்தேசம். உலகை உய்விக்க வந்துள்ள பெருமக்கள் எல்லாரும் கொண்டு வந்துள்ளது வெறும் செய்தியன்று; அவர்கள் விடுத்துள்ள வர்த்தமானங்களைச் சந்தேசம் என்று சொல்லுதல் முறை.

வாழ்க்கையில் பிற்காலத்தில் தாங்கள் என்ன செய்யப் போகிறூர்கள் என்பதைச் சிறுவர்கள் தங்கள் விளையாடல்களின் மூலம் பல தடவைகளில் வெளியிடுகிறூர்கள். சுவாமி விவேகானந்தர் விளையாட்டுப்பிள்ளை நரேந்திரனுக இருந்த பொழுதே தமது வாழ்க்கைத் திட்டத்தை ஒருவாறு வெளியிடுவாராயினர். வாழ்க்கையிலே மற்ற இளைஞர்கள் என்ன செய்யப்போவதாக எண்ணிக்கொண்டிருக்கிறூர்கள் என்று அவர் விசாரித்தார். அவர்கள் தங்களுக்குத் தோன்றியவைகளைச் சொல்லிய பின்பு நரேந்திரன் என்ன செய்யப் போகிறுனே, என்று வினவுவார்கள். "நீங்கள் சொல்லியுள்ள வாழ்க்கைச் செயல்களெல்லாம் எனக்குப் போதா. நான் அரும்பெரும் செயல் ஏதாவது ஒன்றைச் செய்தாகவேண்டும்." இப்படி விளையாட்டுப் பிள்ளையாயிருந்த பொழுதே அவர் விளம்பி வந்தார். பிறகு கல்லூரி மாணவர்களுக்கிடையிலும் சில சந்தர்ப்பங்களில் இவ்வெண்ணத்தை அவர் வெளிப்படுத்தியிருக்கிறூர். ஏதோ ஒரு தனிச்சிறப்பு வாய்ந்த செயலைச் சாதிப்பதற்கே இவ்வையகத்துக்குள் தாம் வந்திருப்பதாக அவர் எடுத்து இயம்புவார். வாழ்க்கையில் தாம் செய்யக்கிடந்த தனிச்செயல் எது என்பது ஆரம்ப தசையில் அவருக்கு விளங்கவில்லை. ஆனுல் ஸ்ரீ ராமகிருஷ்ண பரமஹம்சரைச் சந்தித்து அவருடைய அனுக்கிரகத்தால் நிர்விகல்ப சமாதியை அடையப்பெற்றுன பிறகு வாழ்க்கையிலே தமக்கென்று அமைந்துள்ள சந்தேசம் இன்னதென்பதை அவர் தெளிவுற அறிந்துகொண்டார். செயற்கரிய செயல் ஒன்றைத் தாம் சாதிப்பதற்கிருப்பதாகவும் அவர் உணரலாயினர். அப்படித் தாம் சாதிப்பதற்கிருந்த அரிய செயலானது புறவுலகோடு சம்பந்தப்பட்டது அன்று என்றும், அது மனிதனது மேலான சொருபத்தை வியாபகப்

படுத்துவதற்கான அத்யாத்மிகச் செயல் எனவும் அவர் ஐயம் திரிபு அற அறிந்துகொண்டார். இப்படிச் சீரிய சந்தேசத்தோடு உலகத்தில் தோன்றி வருபவர்களை வெகு காலத்துக்கொருதடவை காண்கின்ருேம். அப்படி உலக நன்மைக்காகவென்று வாழ்க்கைத் திட்டத்தை வகுத்தெடுத்துக்கொண்டு வருகிறவர்கள் எந்தச் சந்தர்ப்பத்திலும் அடிமைகள் போன்று நடந்துகொள்வதில்லை; ஆளவந்தவர்கள் போன்றே அவர்கள் நடந்து கொள்கின்றனர். அன்னவர்களின் பேச்சோ, நிறைமொழியாக மிளிரும். பாமரர்களது மேற்போக்கான மொழி போன்று அது மங்கியிராது. எரிகிற தீபம் மற்றத் தீபங்களைக் கொளுத்துவதுபோன்று பாரமார்த்திகப் பெருநிலையில் பொலிவடைந்துள்ள பரமாசாரியர்கள் மற்றவர்களுக்கும் அப்பாரமார்த்திகப் பெருநிலையை எடுத்து வழங்குகின்றனர். அத்திருக்கூட்டத்தைச் சேர்ந்தவர் விவேகானந்தர்.

சுவாமி விவேகானந்தர் மாநிலத்துக்கு எடுத்து வழங்குதற்கிருந்த சந்தேசமானது உருவாவதற்குக் காரண பூதங்களாகச் சில சம்பவங்கள் நேரலாயின. விவேகானந்தர் கல்லூரி மாணக்கராயிருந்த பொழுது கற்றறிந்துவந்த உலக சரித்திரம், ஆசியாக் கண்டத்துக்கும் ஐரோப்பாக் கண்டத்துக்கும் உரியவைகளாயிருந்த தத்துவ சாஸ்திரங்கள், நவீன உலகம் விரைவில் கண்டறிந்து வந்த பௌதிக விக்ஞானம் ஆகிய நவீனக்கலை ஞானங்களெல்லாம் ஒன்று சேர்ந்து முதல் காரண பூதமாயின. பிறகு விவேகானந்தர் ஸ்ரீ ராமகிருஷ்ண பரமஹம்சரைச் சென்றடைந்து அவரிடமிருந்து அடையப்பெற்ற ஆத்ம ஞானத்துக்குரிய பயிற்சி மற்ெருரு காரண பூதமாயிற்று. பண்டைக்காலத்து ரிஷிகள் பெற்றுவந்த பயிற்சியுடனும் பண்புடனும் அதை ஒப்பிடலாம். அவர் பெற்றிருந்த

சம்ஸ்கிருத பாஷைப் பாண்டித்தியம் இந்த ஆத்ம ஞானத்துக்கு அனுசரணையாக அமையலாயிற்று. மூன்ருவது காரணமாயிருந்தது விவேகானந்த சுவாமிகள் பரதகண்டம் முழுதையும் பரிவ்ராஜக பரமஹம்சராக இருந்து சுற்றிப் பார்த்துப் பெற்ற அனுபவமாம். எத்தனை யெத்தனை பாங்குடைய மக்கள் இப்பரத கண்டத்தில் உளரோ அத்தனை விதமான வர்களோடும் அவர் தொடர்வு கொள்வாரயினர். ஆகவே நாட்டின் நிலைமையை அவர் நன்கு அறிந்திருந்தார். சுவாமி விவேகானந்தர் உலகுக்கெடுத்து வழங்குவதற்கிருந்த சந்தேசத்துக்கு இந்த மூன்று வித வாய்ப்புகளும் தக்க முகாமைகளாக அமைந்தன. தாம் உலகுக்குக் கொண்டு வந்துள்ள தெய்வீகச் செய்தி ஒன்று தம் உள்ளத்தில் உருவெடுத்திருப்பதாகவும் அது தம்மை ஓரிடத்தில் தங்கியிருக்கவொட்டாது இங்குமங்கும் சஞ்சாரம் செய்யும்படி தூண்டுகிறது என்றும் அவர் கூறுவாராயினர். உள்ளத்திலுள்ள ரஜோகுண வடிவெடுத்துத் ததும்பிக் கொண்டிருக்கும் அப்பேருணர்வானது வெடிகுண்டு போன்றிருந்து தம்மைத் துகள் துகளாக வெடிக்கும்படி தூண்டுகிறது எனத் தமது குரு சகோதரர்களிடம் அவர் பல தடவைகளில் கூறியுள்ளார். அப்படி அவரை வெடிக்கச் செய்வது போன்றிருந்த அருள் வெடிகுண்டானது உண்மையில் உலகத்தவர்களது உள்ளத்தில் ஊடுருவிப் பாய்வதற்கு விவேகானந்தரிடம் உருவாய்க் கொண்டிருந்த ஆத்ம சக்தியாம்.

இனி, அவர் தமது சந்தேசத்தை உலகத்தவர்களுக்கு வழங்குதற்கேற்ற சூழ்நிலை ஒன்று தெய்வாதீனமாக அமைவதாயிற்று. அது உலக சரித்திரத்திலேயே அலாதியான இடம் பெறுவதற்கான சூழ்நிலையாம். மேல் நாடுகளில் லோகாயதம் தலைவிரித்துத் தாண்டவமாடிக் கொண்டிருந்தது.

அந்நாடுகளிலிருந்த அறிவாளர்களுக்குத் தாங்கள் அது காறும் அனுஷ்டித்து வந்திருந்த சமயங்கள் திருப்தியளிக்க வில்லை. அச்சமயங்களிலிருந்த குற்றம் குறைகளை முன் னிட்டு அவைகளை அவ்வறிஞர்கள் அமைதியாக ஒருபுறம் ஒதுக்கித் தள்ளி வைத்தனர். இனி, இந்தியாவிலோ ஆங்கி லக் கல்வி கற்றவர்களுக்கிடையில் புதிய மனப்பான்மையும் வாழ்க்கை முறையும் வடிவெடுக்கலாயின. தங்களுடைய தேசீயப் பண்பாட்டில் அவர்கள் வைத்திருந்த விசுவாசம் கலைந்து போவதாயிற்று. ஆக, வைதிகப் பண்புக்கே புதிய தொரு வடிவம் கொடுக்கவேண்டிய நெருக்கடி வந்திருந்தது. இனி, உலகில் எங்குமே புதியதொரு ஏற்பாட்டுக்கு அவ சியம் ஏற்பட்டது. அப்புதிய ஏற்பாடு யுக்திக்கு முற்றிலும் ஒத்ததாயிருக்கவேண்டும். மக்களிடத்திருந்து மக்களைப் பிரித்து வைக்கும் குறுகிய பான்மை அதனிடத்து இருக்க லாகாது. வெவ்வேறு மனப்பான்மை படைத்திருப்பவர் களுக்கெல்லாம் ஏற்றதாக அப்புதிய சமயக் கோட்பாடு வாய்ப்பது அவசியமாயிற்று. இப்படி உலகம் முழுதுமே பயன்படாத பழையன கழிதல், நன்கு பயன்படுகிற புதியன புகுதல் என்னும் சீரிய மாறுபாடு ஒன்றை வேண்டி நின்றது. இதுகாறும் இருந்து வந்த ஏற்பாட்டில் உலகம் பெரிதும் அதிருப்தியடைந்திருந்தது. வாழ்க்கையிலே இனி நாம் செய்யக்கிடக்கும் கடமைதான் என்ன, பழகவேண்டிய ஒழுக் கம்தான் என்ன, தெள்ளி ஆராயவேண்டிய தத்துவம்தான் என்ன என்னும் மனக் குழப்பத்தில் மக்கள் மூழ்கியிருந்த னர். இத்தகைய ஐயப்பாட்டிலும் மனக் குழப்பத்திலும் மக்கள் நெடுநாள் உழல்வது ஒவ்வாது. அவர்களுக்கு உள் ஒளி ஊட்டுதற்கான புதியதொரு சூழ்நிலை தெய்வாதீனமாக உருவெடுக்கலாயிற்று. மனிதன் பேரார்வத்துடன் கடைப்

பிடிப்பதற்குரிய தர்மம் இன்னதென்று தெளிவுற விளக்கிக் காட்டவேண்டிய காலம் வந்துள்ளது. முன்பு எத்தனையோ தடவைகளில் இத்தகைய குழப்பங்கள் சமுதாயங்களில் நேர்ந்திருந்தன. அத்தகைய நெருக்கடிகளிலெல்லாம் சான்றோர்கள் ஆங்காங்குத் தோன்றி சமயக்குழப்பங்களை நேர்மைப்படுத்தினர். ஆனால் அன்னவர்களின் செயல்கள் குறிப்பிட்ட சில சமயத்தவர்களுக்கும் இனத்தவர்களுக்கும் பயன்படுபவைகளாக ஏதோ சில இடங்களில் மட்டும் வியாபகமாயின. ஆனால் இப்பொழுது நிகழ்ந்துள்ள நெருக்கடி முற்றிலும் புதியது. பௌதிக விக்ஞானப் படிப்பு உலகெங்கும் பரவுவதாயிற்று. மக்களுடைய மனப்பான்மையையே புதியதொரு அச்சில் அது அமைத்திருக்கிறது. போக்கு வரத்து வசதிகள் உலகெங்கும் புதிய முறைகளில் அமைந்துள்ளன. உலக முழுதையும் ஒன்றாக இணைக்கும் வல்லமை இப்புதிய போக்கு வரத்துச் சாதனங்களுக்கு ஏற்பட்டுள்ளது. இந்தச் சூழ்நிலையில்தான் சர்வமத மகாசபை ஒன்று அமெரிக்காவில் சிகாகோ நகரில் 1893ஆம் ஆண்டில் கூட்டப்பெற்றது. மக்களுக்குச் சமயம் அவசியமா, அது மக்களது புதிய மனப்பான்மைக்கு ஒத்ததாய் இருக்கிறதா, அதை அனுஷ்டிப்பதால் மக்கள் நலன் ஏதேனும் அடைய முடியுமா, இவைபோன்ற கேள்விகளைச் சிரத்தையுடன் ஆராய்ச்சி செய்வதற்கே அந்த மகா சபையானது கூட்டப் பெற்றது. அதில் வந்து கலந்துகொண்டவர்கள் ஏதோ சில நாடுகளுக்குரியவர்கள் அல்லர்; உலகெங்குமிருந்தே தெள்ளியெடுத்த கற்றறிவாளர்களது பேரவையாக அது அமைவதாயிற்று. உலகசரித்திரத்திலேயே இது ஒரு நூதனமான நிகழ்ச்சி. எந்த அரிய அருள் செய்தியை விவேகானந்தர் உலகுக்கெடுத்து வழங்க ஆயத்தமாயிருந்தாரோ அதைத்

துருவி ஆராய்வதற்கு இப் பேரவை தகுதி வாய்ந்ததாயிருந்தது. எனவே வாழ்க்கைக்குரிய புதியதொரு சந்தேசம் வேண்டுமென்று பெரும்பாலோர் தவித்துக்கொண்டிருந்த அதே தருணத்தில் அவர்களுக்குத் தேவையான சந்தேசத்தை எடுத்து வழங்குதற்குத் தவித்துக்கொண்டிருந்த விவேகானந்த சுவாமிகள் அந்தச் சர்வமத மகாசபையில் தெய்வாதீனமாகப் பிரசன்னமாயினர். மக்கள் நாடியிருந்த அருள் நாட்டமும் விவேகானந்தர் வழங்குதற்கென்று தமது திருவுள்ளத்தில் தொகுத்து வைத்திருந்த பேரருட் பேறும் ஒன்றுக்கொன்று முற்றிலும் ஒத்தவைகள் ஆயின,

एकं सत् विप्रा बहुधा वदन्ति

ஏகம் ஸத் விப்ரா பஹு⁴தா வதந்தி

மெய்ப்பொருள் ஒன்று; மேலோர் அதை வெவ்வேறு விதங்களில் விளக்குகின்றனர், என்னும் கோட்பாடு பல்லாயிரம் ஆண்டுகளுக்கு முன்பு இந்தியாவில் வேதங்களுள் இடம் பெற்றிருந்தது. இன்றைக்கு அப் பழைய உண்மையானது புதியமுறையில் நவீன மக்களுக்கிடையில் விளக்கப்பெறுவதாயிற்று. அருள் நாட்டம் மாந்தர் அனைவர் உள்ளத்திலும் சர்வகாலமும் கிளம்பிக் கொண்டிருக்கிறது என்னும் உண்மையையும் விவேகானந்தர் நவீன அறிஞர்க்கு இந்தச் சர்வமத மகாசபையில் விளக்கிக்காட்டினார். மக்கள் எல்லாரும் உண்மை ஒன்றையே நாடி அலைகின்றனர். ஆனால் உண்மையை முற்றிலும் உணர்ந்தவர்கள், ஏகதேசம் உணர்ந்தவர்கள், அரைகுறையாக உணர்ந்தவர்கள்—இப்படிப் பல தரப்பட்ட பரிபாகங்கள் மக்களிடத்து இருக்கின்றன. பொய்யினின்று மனிதன் மெய்யை நாடிப்போகிறான் என்பது உண்மையன்று. தான் அறிந்துள்ள ஏகதேச உண்மையி

னின்று இன்னும் நன்கு தெளிவடைந்த உண்மையை மனிதன் நாடிப் போகிருன். அதுவே அவனுடைய பேரியல்புக்கு ஒத்தது. ஆதலால் எண்ணிறந்த சமயங்களுக்கிடையில் சச்சரவுக்கு இடமில்லை. ஒவ்வொரு சமயமும் மெய்ப்பொருளுக்கு ஓரளவு விளக்கமாகிறது. முழு விளக்கத்தை அடையப்பெறுகிறவனுக்கே ஐயங்கள் அடியோடு அகலுகின்றன. மக்கள் எல்லாரும் ஓரினம். உண்மையில் ஒரு பேருயிர்த் தத்துவமே இத்தனை உயிர்வகைகளாக விளையாடிக்கொண்டிருக்கிறது. ஒருவனை ஒருவன் அனுதாபத்துடன் நேசிக்குங்கால் அவன் உண்மைக்கு அருகில் வருகின்ருன். அஞ்ஞானத்தால் தூண்டப்பெற்று மனிதனை மனிதன் பிளவுபடுத்துவானுகில், மனிதனை மனிதன் வெறுப்பானுகில் அவன் படிப்படியாக உண்மையினின்று எட்டப்போகின்ருன். உலகத்தவர்களுக்கு இந்த அரிய சந்தேசத்தை எடுத்து வழங்குதற்கென்றே இக்காலத்தில் அவதரித்து வந்தவர் விவேகானந்தர்.

இதுகாறும் இந்துமதம் என்ருல் என்ன என்பது விளக்கப்பெருது மறைந்தோ, குழம்பியோ கிடந்தது. சமுதாயப் பழக்க வழக்கங்கள் பலதடவைகளில் ஹிந்துமதக் கோட்பாடுகள் எனக் கருதப்பட்டன. மக்களிடத்து மலிந்துகிடந்த குருட்டு நம்பிக்கைகள் பல ஹிந்துமதத் தத்துவங்கள் எனக் கருதப்பட்டன. ஆனல் அவையாவினின்றும் பிரித்தெடுத்து ஹிந்துமதத்தை உள்ளவாறு விவேகானந்தர் விளக்கிக் காட்டுதற்கேற்ற சந்தர்ப்பத்தைச் சிகாகோ நகர் சர்வமத மகாசபை அளித்து வைத்தது. ஹிந்துமதத்தைப்பற்றி அங்கு அவர் செய்த முதல் பிரசங்கம் அப்புராதன மதத்துக்குத் தெளிந்ததொரு விளக்கமாயிற்று. நன்கு கற்றறிந்த ஹிந்து மக்களுக்கே தங்கள் மதத்தைப்பற்றிய மெய்யறிவூட்டுதற்கு அப்பிரசங்கம் ஏதுவாயிற்று. ஹிந்து மதத்துக்குப் புதிய

தொரு உயிர்கொடுத்தவர் விவேகானந்தர் என்று மொழி வது மிகையாகாது. பரம்பொருளை மனத்தினுள் வழுத்திய பின் அந்த மகாசபையின் மேடையிலே இப்பரமபுருஷன் தமது சந்தேசத்தை எடுத்து வழங்குதற்கு எழுந்து நின்றார். உலகிலுள்ள வெவ்வேறு மதங்களை விளக்கிக் காட்டுதற்கு அங்கு வந்திருந்தவர்களுள் வயதில் மிகச் சிறியவர் விவேகானந்தர். உலகிலுள்ள சமுதாயங்களுள் அமெரிக்க சமுதாயமே வயதில் மிகச் சிறியது. அத்தகைய இளைய சமுதாயம் உலக மதங்களை யெல்லாம் சீர்தூக்கி ஆராயச் செய்திருந்த ஏற்பாடு துணிச்சல் மிக நிறைந்ததாகும். அது பாராட்டுதற்கு உரியதாகவும் இருந்தது. அத்தகைய இளைய சமுதாயத்தவர்களுக்கு இளைஞராகிய விவேகானந்தர் மதங்களுக்கெல்லாம் மிக முந்தையதாகிய ஹிந்துமதத்தைப்பற்றிப் பகர்வாராயினர். முந்தையது மட்டுன்று; மதங்களுக்கெல்லாம் தாய் மதம் என்றும் ஹிந்துமதத்தைப்பற்றி மொழியலாம். பல்லாயிரம் ஆண்டுகளுக்குமுன்பு ரிஷிகள் எடுத்தோதிய வேத மந்திரங்களின் உட்பொருளை இத்தருணத்தில் உலகத்தவர்களுக்கு எடுத்து வழங்கும் வாய்ப்பு விவேகானந்தருக்கு உரியதாயிற்று. இந்தியாவினின்று வந்துள்ள பாரமார்த்திகப் பெருஞ்செய்தியை இப்பொழுது முதல் முதலாக மேல்நாட்டுப் பேரறிஞர்கள் கேட்டறிந்துகொள்ளுதற்கான காலம் வந்து வாய்த்தது. இரண்டு பெரிய நாகரீகங்களின் சந்திப்பு என்றே அந்தச் சம்பவத்தைப்பற்றிச் சொல்லலாம்.

பரதகண்டத்தின் புராதானச் சந்தேசத்தை இப்பொழுது விவேகானந்தர் புதிய உலகுக்கெடுத்து அளிக்கலாயினர். மதங்கள் அனைத்துக்கும் அடிப்படையாயுள்ள கோட்பாடுகளின் தொகையே அவர் விடுத்துள்ள சந்தேசமாகும். வெவ்வேறு மாந்தர் வெவ்வேறு சூழ்நிலைகளில் இருந்துகொண்டு

வெவ்வேறு அனுஷ்டான முறைகளைக் கையாண்டு கொண்டு அறிந்தோ அறியாமலோ ஒரே லட்சியத்தை நோக்கி வந்து கொண்டிருக்கிறார்கள் என்பது அப்புதிய செய்தி. தெய்விகத்தைச் சுவானுபவத்தில் அடையப்பெற்று மனிதன் தெய்வத் தன்மைக்கு உரியவனாகிறான் என்பதும் அச்சீரிய செய்தியர்கும். விக்கிரக ஆராதனையில் தொடங்கி அத்வைத வேதாந்தத்தில் பூர்த்தியாகிற பாரமார்த்திகத் தத்துவங்கள் அனைத்தும் ஒன்று சேர்ந்தது ஹிந்துமதம். நவீன பௌதிக விக்ஞானம் இயற்கையைப் பற்றிக் கண்டு பிடிக்கிற பல ரகசியங்கள் மதக் கோட்பாடுகளுக்கு முரண்பட்டவைகள் என கிறிஸ்துமதம் முதலியன கருதி வருகின்றன. ஆனால் இப்படிப் பௌதிக விக்ஞானம் கண்டறிந்து வருகிற இயற்கைத் தத்துவங்கள் எல்லாம் பாரமார்த்திகத் தத்துவங்களின் எதிரொலிகள் என்றும், ஆகையால் அவையாவும் ஹிந்துமதத்துக்கு உடன்பாடானவைகள் என்றும், பௌதிக விக்ஞானத் தத்துவங்களின் வாயிலாக வேதாந்தத் தத்துவங்களைத் தெளிவுற மக்களுக்கு எடுத்து விளக்கலாம் என்றும், விவேகானந்தர் போதித்தார். இப்படி விவேகானந்தர் விளக்கியதன் விளைவாக ஹிந்துக்களுக்கிடையிலேயே புதியதொரு விழிப்பு ஏற்பட்டது. புதிய உணர்ச்சியும் ஊக்கமும் ஹிந்துமக்களுக்கிடையில் உருவெடுக்கலாயின.

அமெரிக்காவில் சர்வமத மகாசபை நிகழ்தற்கு முன்பே சர்வமதங்களின் சமரசத்தைத் தமது சுவானுபூதியில் ஸ்ரீராம கிருஷ்ண பரமஹம்ஸர் அறியலாயினர். உலகிலுள்ள சமயங்களை யெல்லாம் அனுஷ்டித்துப் பார்த்தவர் அவர். அவையாவும் பரம்பொருள் என்னும் ஒரே லட்சியத்தின்கண் ஆத்ம சாதகர்களை எடுத்துச் செல்கின்றன என்பதையும் அவர் சுவானுபூதியில் கண்டறிந்திருந்தார். எனவே சர்வ

மத மகாசபை ஏற்கனவே அருள்துறையில் தக்ஷிணேசுவர ஆலயத்தில் ஸ்ரீ ராமகிருஷ்ணர் வாயிலாக நிகழ்வதாயிற்று. அதை ஆதாரமாக வைத்துக்கொண்டு ஹிந்து மதத்தையே சர்வமத சமரசம் என்றோ சர்வமதங்களின் மகாசபை என்றோ மொழியலாம். அப்படி ராமகிருஷ்ண பரமஹம்ஸர் அடைந்திருந்த அருள் பேற்றினைத் தமது பிரதம சிஷ்யரான விவேகானந்தரிடம் ஒப்படைத்திருந்தார். தக்ஷிணேசுவரத்தில் திருவருள் சம்மதமாக நிகழ்ந்த சர்வமத மகாசபையின் எதிரொலிதான் சிகாகோவில் நிகழ்ந்தது எனலாம். அந்நிகழ்ச்சியில் விவேகானந்த சுவாமிகள் சிறப்புற்று முன்னணியில் நின்றதும் திருவருள் சம்மதத்துக்கு உட்பட்டதேயாம். பரமஹம்ஸதேவரின் பிரதிநிதியாக விவேகானந்தர் அந்த அமெரிக்க மகாசபையில் திகழ்ந்ததும் தெய்வச் செயலேயாம். அங்கு அவர் வழங்கிய அரிய சந்தேசம் அவ் இரு மகாபுருஷர்களின் சுபானுபவத்தின் விளைவாம்.

ஹிந்து மதம் எனப் பொதுவாகப் பகரப்பெறும் வேதாந்த மதத்தின் மகிமைகளையெல்லாம் உலகுக்கு எடுத்து வழங்குதற்குத் தாம் தெய்வத்தின் கையில் கருவியாய் அமைந்திருந்ததை விவேகானந்தர் நன்கு உணர்ந்திருந்தார். மதப்பிரசாரகர்களுக்குத் தெய்வத்திடமிருந்து ஆதேசம் வந்தமையாது போமாகில் அவர்களுடைய பிரசங்கங்களெல்லாம் வெறும் பேச்சாய்ப் போய்விடும் என்று பரமஹம்ஸதேவர் பகர்ந்தருளியிருந்தார். பின்பு இறைவனுடைய ஆதேசத்தை அடையப் பெற்றவனுடைய பேச்சுக்கு உலகத்தவர் செவி சாய்த்தே ஆகவேண்டும். உலகத்தவர் அவன் காட்டித் தருகிற நெறியில் சென்றே ஆகவேண்டும் எனப் பரமஹம்ஸர் பகர்ந்தருளியிருந்தார். அவருடைய சிஷ்யராகிய விவேகானந்தர் இங்ஙனம் தெய்வ ஆதேசத்தை அடையப்பெற்றவர்.

ஆதலால் அதிகாரபூர்வமாக அவர் ஆத்மீகத் தத்துவங்களை உலகுக்கெடுத்து வழங்கி வந்தார்.

சுவாமி விவேகானந்தர் சென்னையில் வதிந்திருந்த பொழுது பண்டிதர்கள் பலர் அவருடைய கோட்பாட்டுக்கு மறுப்பு கூறத் துணிந்து முன் வந்தனர். அத்வைதம், விசிஷ்டாத்வைதம், துவைதம் ஆகிய மூன்று சம்பிரதாயங் களும் ஒன்றோடு ஒன்று ஒவ்வா என்று அந்தந்த சம்பிர தாயங்களுக்குரிய ஆசாரியர்கள் இயம்பியிருக்கையில் விவேகானந்தர் அவைகளை எங்ஙனம் சமரசப்படுத்தத் துணிந்தார் என்று அப்பண்டிதர்கள் ஆட்சேபித்தார்கள். அம்மூன்று சம்பிரதாயக்காரர்களும் எந்த அரிய செயலைச் செய்து பூர்த்தி பண்ணாது விட்டு வைத்திருந்தார்களோ அந் தச் சமரசம் என்னும் அரிய செயலைச் செய்து நிறைவேற்று வதற்கு ஈசுவர அனுக்கிரகத்துடன் வந்திருப்பது தாம் என்று விவேகானந்தர் உறுதிமொழி கூறினர். அந்நிறை மொழி கேட்ட பண்டிதர்கள் மேலும் மறுத்துப் பேச இயலா தவர்களாய் வாய்பொத்தியிருந்தனர். தாம் இறைவனுடைய ஆதேசத்துடன் உலகினுள் வந்திருப்பதைப்பற்றிய உணர்வு விவேகானந்தர் உள்ளத்தில் நன்கு ஊறியிருந்தது. ஆனல் அதற்கிடையில் அவ் அரிய செயலுக்குக் கர்த்தாவாக அவர் தம்மை உணரவில்லை. ஈசன் கையில் தாம் ஒரு கருவியாக இருந்ததாகவே அவர் யாண்டும் உணர்ந்து வந்தார்.

இறைவனுடைய ஆதேசத்தை அடையப்பெற்றவர் எனி னும் விவேகானந்தருடைய போதனைகளுக்குத் தடைகள் பல இந்தியாவிலும் மேல் நாடுகளிலும் தோன்றலாயின. மேல் நாடுகளில் கிறிஸ்தவப் பாதிரிமார்கள் தமக்கு இயன்றவள வுக்கு இவருக்குத் தடைகள் செய்தார்கள். இந்தியாவில் வெறும் ஏட்டுக் கல்வியிலும், பொருளற்ற பழக்க வழக்கங்

களிலும் உழன்று கிடந்த பண்டிதர்கள் இவருடைய கோட்பாடுகளுக்கு ஆட்சேபங்கள் கொண்டு வந்தார்கள். ஆனால் அப்படி எதிர்ப்புகள் கிளம்பி வந்ததற்கு ஏற்ப விவேகானந்தரிடத்துத் தெய்விகப் பெற்றி மேலும் மேலும் முன்னணியில் வந்து நின்றது. எதிர்ப்புக்களின் வாயிலாகவே இவருடைய சீரிய பாரமார்த்திகக் கோட்பாடுகள், பழங்காலத்து மகரிஷிகள் தெள்ளியெடுத்த கோட்பாடுகள் புதிய வலிமைபெற்று மிளிரலாயின. மக்கள் செய்துவந்த பொருளற்ற தடைகளைக் குறித்து அவர் இங்ஙனம் ஒரு கடிதத்தில் எழுதித் தெரிவித்தார். "மானுடர் வெறும் பொம்மைகள். அன்புக்குரிய இறைவன் என் உள்ளத்தில் சதா ஒளிர்ந்து கொண்டிருக்கிறார். நான் அமெரிக்காவிலிருந்த பொழுதும் இங்கிலாந்திலிருந்த பொழுதும் உண்மையில் இறைவனுடைய சந்நிதியையே சார்ந்திருந்தேன். இந்தியாவில் யாருக்கும் அறிமுகமாகாது சஞ்சரித்துக் கொண்டிருந்த பொழுதும் உண்மையில் நான் இறைவனுடைய சந்நிதியிலேயே திளைத்திருந்தேன். உலகத்தவர்களுடைய பிதற்றுதல்களை நான் ஏன் பொருள்படுத்தவேண்டும்? அவர்கள் வெறும் பாலகர்கள், அறிவிலிகள். இப்பிரபஞ்சம் முழுதும் வெறும் தோற்றம் என்பதைச் சுவானுபூதியில் கண்டறிந்துள்ள நான், இறைவனிடத்திலேயே ஒரு கருவியாக என்னை ஒப்படைத்து வைத்துள்ள நான், இறைவன் என்னை இயக்குகின்ற விதத்தில் அவருடைய அருட்பணியைப் புரிந்து வருகிற நான், இந்தப் பொம்மைகளுடைய பேச்சைக் கேட்டு ஏன் மயங்க வேண்டும்?" அவர் ஒரு தீரனாய் வேதாந்த சந்தேசத்தை உலகுக்கு எடுத்து வழங்கினார்.

---

12. தேசபக்தன்

பரஞானத்தை அடையப்பெறுகிற பிரம்ம ஞானிகளுக்குப் பிரபஞ்சம் மித்தை அல்லது பொய்த் தோற்றமாகிறது. கிளிஞ்சில் வெள்ளிபோன்று தென்படுவது பொய்த்தோற்றம். கானல் நீர்த் தடாகம் போன்று தென்படுவது பொய்த்தோற்றம். அதே விதத்தில் மெய்ப்பொருளாகிய பிரம்மம் பிரபஞ்சமாகக் காட்சி கொடுத்துக்கொண்டிருக்கிறது. கானல் நீரை உண்மையான நீர் அன்று என்று விஷயம் தெரிந்தவர்கள் புறக்கணிப்பதுபோன்று, மெய்ஞ்ஞானிகள் பிரபஞ்சத்தைப் பொருள்படுத்துவதில்லை. உலகிலுள்ள இன்ப துன்பங்கள், கஷ்ட நஷ்டங்கள், ஆக்கம் அழிவு முதலியன வெறும் மாயா காரியங்கள். எனவே அவைகளில் ஞானிகள் கருத்தைச் செலுத்துவதில்லை. ஆனல் பிரம்மஞானியாகிய விவேகானந்தர் இக்கொள்கைக்கு முரண்பட்டுள்ள மற்றொரு கொள்கையைத் தமது வாழ்வின் மூலம் நம் நாட்டு மக்களுக்கு நல்கியிருக்கின்றார். மனது அற்ற நிலையில் பிரபஞ்சம் இல்லை. ஆனல் மனது உற்ற நிலையில் பிரபஞ்சம் இருப்பது மெய். இப்பிரபஞ்சத்திலுள்ள உயிர்களுக்கு அன்புடன் பணிவிடை செய்வது வாழ்க்கையின் சீரிய நோக்கமாகும்.

அன்பர்பணி செய்யஎனை ஆளாக்கி விட்டுவிட்டால்
இன்பநிலை தானேவந் தெய்தும் பராபரமே.

என்னும் சீரிய கோட்பாட்டுக்கு உடந்தையாகச் சில ஞானிகள் இருக்கின்றனர். அச்சிறு கூட்டத்தில் விவேகானந்தர் தலைசிறந்தவர் ஆவார். அவர் படைத்திருந்த தேசபக்தி அளப்பரியது. தராசின் ஒரு தட்டில் அவருடைய பிரம்ம ஞானத்தையும் மற்றொரு தட்டில் தேசபக்தியையும் வைத்து எடைபோட்டுப் பார்த்தால் அவ்விரண்டுக்கும் இடையி

லுள்ள தாரதம்மியத்தைச் சரியாக விளக்கிக்காட்ட முடிய மல் தராசு முள்ளே திண்டாடும்.

சுவாமி விவேகானந்தர் மாணக்கராயிருந்தபொழுது ஸ்ரீ ராமகிருஷ்ண பரமஹம்சரிடம் அடிக்கடி போய் வருவார். அந்நாளில் ஒருதடவை அரியதொரு நிகழ்ச்சி நேர்வதாயிற்று. "நாம ருசி பக்தர் பிரியம், ஜீவதயை" என்பது வங்காளத்து வைஷ்ணவர்களது பழமொழிகளில் ஒன்று. அதை ஒருவர் பரமஹம்சரிடம் எடுத்து உரைத்தபொழுது "ஆ, என்ன அற்புதமான கருத்து" என்று கூறிக்கொண்டு அவர் சமாதியில் மூழ்கலானர். சிறிது நேரத்தில் சமாதி கலைந்து புறவுலக ஞாபகம் வந்தபொழுது அந்தப் பழமொழியில் திருத்தம் ஒன்றை அவர் அமைத்தார். "ஜீவதயை அன்று; ஜீவசேவை. தயைக் காட்டுவதற்கு, அல்லது காருண்யம் காட்டுவதற்கு நான் யார்? ஜீவசேவை செய்வது கிடைப்பதற்கரிய பேறு."— இப்படிப் பரமஹம்ஸர் பகர்ந்து கொண்டிருந்த பொழுது விவேகானந்தர் முகத்தில் புதிய ஞான ஒளி ஜொலித்தது. குருதேவர் சந்நிதியினின்று வெளியே வந்து மற்ற இளைஞர்களுக்குத் தாம் அன்று கற்றுக்கொண்ட புதிய கோட்பாட்டை ஊக்கத்துடன் எடுத்துரைத்தார். தமது வாழ்க்கையே அக்கோட்பாட்டுக்கு ஒப்ப மாறியமையப் போகிறது என்ருர் விவேகானந்தர். மன்னுயிர்களுக்குப் பணிவிடை செய்வதற்கு நிகரான பயன் மானுடப் பிறவியில் இல்லை யென்பது அக்கோட்பாடு. ஆதலால்தான் விவேகானந்தரை நாம் துருவி ஆராய்கின்றபொழுது அவர் தத்துவ ஞானியா, அல்லது தேச பக்தனு என்பதற்கிடையில் பாகுபடுத்த நமக்கு இயலுவதில்லை. எவ்வளவு பெரிய ஞானியாயிருந்தாரோ அவ்வளவு பெரிய தேசபக்தராகவும் அவர் திகழ்ந்தார்.

இந்தியா முழுதையும் காஷ்மீரத்திலிருந்து கன்னியா குமரி பரியந்தம் சுற்றிப் பார்த்த விவேகானந்தருக்குத் தாய் நாடு கொடுத்த காட்சி அவரைப் பெரிதும் துன்புறுத்தியது. முன்னுளிலே சீருடனும் சிறப்புடனும் இருந்த இப்புண் ணிய பூமி இன்றைக்கு இழிநிலையில் உழன்று கிடக்கிறது. நாட்டின் முப்பத்து முக்கோடி மக்கள் முன்பு ஒரு காலத்தில் முப்பத்து முக்கோடி தேவர்கள் போன்று இருந்தார்கள்; இன் றைக்கு முப்பத்து முக்கோடி புழுக்கள் போன்று ஆயிருக்கின் றனர். வறுமையும் அக்ஞானமும் அவர்களுக்கிடையில் தாண் டவமாடுகின்றன. வலிவையெல்லாம் இழந்த பிணியாளி கள் போன்று நாட்டு மக்கள் ஒடுங்கிக் கிடக்கின்றனர். எந்த விதமான ஒழுங்குப்பாடோ வாழ்க்கைத் திட்டமோ அவர் களிடத்து இல்லை. மீண்டும் ஒருமுறை தாங்களோ தங்க ளுடைய சந்ததிகளோ முன்னேற்றம் அடையலாம் என்னும் நம்பிக்கையை அவர்கள் அறவே இழந்து போயினர். மதத் தின் பெயரால் புரோகிதத் தந்திரம் ஒரு பக்கம் அவர்களு டைய அல்ப சேமிப்பையெல்லாம் கறந்தெடுக்கிறது. ஆட்சி முறை மற்ருெரு பக்கம் அவர்களுடைய உழைப்பின் விளைவையெல்லாம் வாரிக்கொண்டு போகிறது. ஜாதிக் கொடுமை ஒரு பக்கம் அவர்களைக் கீழ்மையில் ஆழ்த்துகிறது. பொருளற்ற பழக்க வழக்கங்கள் அவர்களைத் தலையெடுக்க வொட்டாது கீழ்மையில் கட்டிப் பிடித்துக் கொண்டிருக்கின் றன. இத்தகைய பரிதாபகரமான நிலைமைகளை யெல்லாம் பார்த்த விவேகானந்தர் ஆருத்துயரத்தில் மூழ்குவாராயினர். இவ்வளவு தூரம் தாழ்வுற்றுக் கிடக்கும் தேச மக்களுக்குப் புதிய உயிர் ஊட்டுவது எங்ஙனம்? வாழ்க்கையைப் புதுப் பிப்பதற்காகிய வலிவையும் தன்னம்பிக்கையையும் தோற்று விப்பது எங்ஙனம்? பொது மக்களின் பரிதாபகரமான

நிலையைப் பற்றிய இந்த ஓர் எண்ணமே சதா அவருடைய உள்ளத்தில் உருவெடுத்துக் கொண்டிருந்தது. பிரபஞ்சத்தைப் பொய்யென்று புறக்கணிப்பதற்குப் பதிலாகப் பாமரரை உய்விப்பதற்கான எண்ணத்தில் ஊறியிருந்ததே அவர் புரிந்துவந்த ஆத்ம சாதனமாகும். கடும் ஜுரம் உடலைக் காய்வது போன்று இந்த ஓர் எண்ணமே அவரை உருக்குவதாயிற்று. அதைக் குறித்து அவர் சதா சஞ்சலப்பட்டார். சரியாக அவருக்குத் தூக்கம் பிடிக்கவில்லை. நடமாடும் பிணங்கள்போன்று ஆகியுள்ள பொதுமக்கள் புத்துயிர்பிடிப்பதற்கான வழி ஏதாவது ஒன்றைக் கண்டறிந்தாக வேண்டும். இடையருது இப்படி அவர் எண்ணி வந்தது அவர் புரிந்த தவமாகும்.

மூட்டை முடிச்சுக்கள் தலைச்சுமையாய் அமைகிறபொழுது பல தடவைகளில் அவைகள் சுமக்கமுடியாத பாரம் ஆகின்றன. சுவாமி விவேகானந்தருக்குத் தலைச் சுமையாய் இருந்தது மூட்டை முடிச்சுக்கள் அல்ல. தேசமக்களின் தாழ்வைப்பற்றிய எண்ணமே தாங்கமுடியாத தலைப்பாரமாக அவருக்கு இருந்தது. அப்பெரிய துயரத்துக்கு ஆளானவராக அவர் படிப்படியாகத் தென்திசையை நோக்கிச் சஞ்சரித்துக் கன்னியாகுமரி போய்ச் சேர்ந்தார். கடல் சூழ்ந்திருந்த குமரிமுனையின் தென்கோடிப் பாறையின் மீது அமர்ந்துகொண்டு தமது மனவேதனையை யெல்லாம் அவர் மீண்டும் ஒருமுறை விமர்சனம் பண்ணினர். மூலப்பிரகிருதியாகிய பராசக்தி தென் கோடியில் கடற்கரையில் தவம் கிடப்பதை தமது ஞாபகத்துக்குக் கொண்டுவந்தார். அப்பராசக்தியின் திருவடிகளில் தாம் பட்டுவந்த துயரத்தை நைவேத்தியமாகச் சமர்ப்பித்தார். தேசத்தைக் குறித்துத் தாம் அடைந்து வந்த ஆருத்துயரத்தை ஆராதனையாக

அன்னை பராசக்தியிடம் செலுத்தினர். அகிலாண்ட கோடிகளை யெல்லாம் ஈன்றெடுத்த பராசக்தி அலுத்துப் போகவில்லையே! பின்னையும் கன்னியெனத் தென்முனையில் திகழ்கின்றாளே! இவளுடைய அளப்பரிய சக்தி, அழிந்துபோம் தறுவாயிலிருக்கும் இந்திய மக்களுச்குப் புத்துயிர் ஊட்டாதா?—இப்படியெல்லாம் நைந்துருகி உள்ளம் குழைந்திருந்தது அவர் புரிந்த வழிபாடாகும். கடல் சூழ்ந்த பாறையின்மீது வடதிக்கை நோக்கி அவர் தியானத்தில் அமர்ந்தார். பாரதத்தாயின் திருவடிகளில் அமர்ந்திருந்து பண்ணிய தியானமாகும் அது. எத்தனையெத்தனையோ ஆத்ம சாதகர்கள் தாங்கள் உய்வடைதற்பொருட்டுக் கண்ணீரும் கம்பலையுமாகக் கடவுளிடத்துப் பிரார்த்தனை பண்ணுகின்றனர். ஆனல் விவேகானந்தர் பண்ணிய பிரார்த்தனை அதற்கு முற்றிலும் மாறானது. பரஞானத்தைப் பெற்று முற்றிலும் உய்வு அடைந்திருந்த விவேகானந்தர் நாட்டின் பொது மக்களின் பரிதாபகரமான நிலையைக் குறித்துப் பரிந்தழுது பராசக்தியிடம் பிரார்த்தனை பண்ணித் தியானத்தில் மூழ்கியிருந்தார். அந்தத் தியானம் சவிகல்ப சமாதியாகஉருவெடுத்தது. அந்தச் சமாதி நிலையிலே எதிர்கால இந்தியாவின் ஒப்பற்ற உயர்வு அவருடைய ஞானக் காட்சிக்கு எட்டியது. விதை ஒன்றை மண்ணினுள் புதைத்தால் அது பாழ்பட்டுக் கெட்டுப்போவது போன்று மாறியமைகிறது. அந்த மாறுதல் மூலமாகவே அது புதியதொரு செடியாக உருவெடுக்கிறது. இப்பொழுது நாட்டினுள் வந்துள்ள நலிவும் அத்தகையது. அந்த நலிவினின்று புதியதொரு உயிர் பிறக்கப்போகிறது; புதியதொரு ஆத்ம சக்தி உருவெடுக்கப் போகியது; புதியதொரு பரதகண்டம் வடிவெடுக்கப் போகிறது—இத்தகைய ஞானக் காட்சியை அன்னை பராசக்தி அவருக்குக் காட்டி

யருளினுள். அதினின்று விவேகானந்தருக்குப் புதியதோர் உற்சாகம் கிளம்பியது. நாட்டின் உய்வுக்காகத் தாம் அரும் பாடுபடுவதே தமது வாழ்க்கைத் திட்டம் என்று அவர் முடிவு கட்டினுர். இனி எல்லாம் தெய்வா தீனமாக ஒழுங்கா கும் என்று அவர் ஆறுதல் அடையவில்லை. புதிய முன்னேற் றத்துக்கான அலுவல் திட்டங்களை அலசி ஓர்மைப் படுத்து வதே மேலும் அவர் உள்ளத்தில் எழுந்த சீரிய எண்ணங் களாகும். அவர் சிந்தித்ததாவது: “எண்ணிக்கையில் அடங்காத எத்தனை யெத்தனையோ சந்நியாசிகள் இப்புண் ணிய பூமியில் உருவாக்கப் பெற்றிருக்கின்றனர். பொது மக்களுக்காக அவர்கள் புரிந்துள்ள பணிவிடைதான் யாது? இந்நாளில் பொது மக்களுக்கிடையில் தத்துவ தரிசனங் களைப் போதிப்பதா? அது பைத்தியக்காரத்தனம். பட்டினி கிடந்து சாகும் தருவாயில் இருப்பவர்களுக்குப் பரதத்துவ போதனை பண்ணுவது பரிகாசம் செய்வதற்கு ஒப்பாகும். பசியால் வாடி வதங்கிக் கிடக்கின்ற பொது மக்களுக்குப் போதியவளவு உணவை வழங்காதிருந்தால் அவர்கள் உயிர் பிழைப்பது எப்படி? அவர்கள் வலிவு பெறுவது எங்ஙனம்? அன்ன விசாரத்தை முதலில் ஒழித்தாக வேண்டும். அதை ஒழிப்பதற்கு முன்பு ஆத்ம விசாரணை பண்ணுவதில் அர்த்த மில்லை. பொருளாதாரத்துறையில் பொதுமக்களை மேல் நிலைக்குக் கொண்டுவருவது நாட்டின் முதல் கடமை” என அவர் எண்ணுவாராயினர். இரண்டாவதாகப் பொது மக்களுக்கிடையிலுள்ள அடிமைப் புத்தி அகன்று போக வேண்டும். பல நூற்றுண்டுகளாகப் பாமரர், தாங்களும் மற்ற வர்களைப் போன்று மண்ணுலக வாழ்க்கைக்குத் தகுதியும் உரிமையும் வாய்க்கப்பெற்ற மக்கள் என்பதை மறந்திருந் தனர். அப்படி அவர்கள் மறக்கும்படி சூழ்நிலை அவர்களைத்

தூண்டுவதாயிற்று. சமுதாயத்தில் மக்கள் எல்லோருக்கும் சம உரிமை உண்டு என்னும் உணர்வைப் பொது மக்களுக் கிடையில் ஊட்டுவது அவசியமாகிறது. வாழ்க்கையிலே சிலருக்கு எல்லாவிதமான சலுகைகளும் வசதிகளும் தலை முறை தலைமுறையாகத் தரப்பட்டுள்ளன. வேறு சிலருக்கு அத்தகைய சலுகைகளும் வசதிகளும் மறுக்கப்பட்டுள்ளன. வசதிகள் வேண்டும் என்று வாய்திறந்து கேட்பதற்கும் அவர்களுக்கு உரிமை இல்லை. விலங்குகளிலும் கீழான நிலை யில் அவர்கள் வைக்கப்பட்டுள்ளனர். அத்தகைய கொடு மையை அகற்றுதல் அவசியம். பொதுமக்களுக்கிடையில் சரி யான உணர்ச்சியை ஊட்டுதல் வேண்டும். சுய உணர்வும் சுய நம்பிக்கையும் சுயப்பிரயத்தனமும் உடையவர்களாக அவர்கள் மேலான வாழ்வை நாடி உயிர்பெற்று எழுந்திருக்க வேண்டும். பிறருடைய ஆதரவில் யாரும் நெடுநாள் இருக்க முடியாது. பிறர் ஆதரவை நாடியிருப்பவர்கள் முன்னேற்றம் அடைய முடியாது. ஆகவே முயற்சியுடையவர்களாக மக்கள் முன்னணிக்கு எழுந்து வரவேண்டும். பொதுமக்களே நாட்டுக்கு முதுகெலும்பு போன்றவர்கள். பொதுமக்களின் முன்னேற்றமில்லாது யாரோ ஒரு சிலர் இங்கும் அங்கும் மேல் நிலைக்கு வந்திருப்பது நாட்டின் முன்னேற்றம் ஆகாது. இப்படியெல்லாம் கன்னியாகுமரியின் திருவடியில் இருந்து கொண்டு சுவாமி விவேகானந்தர் உணர்வாராயினர். மக்களுக்கிடையில் பேருணர்வை ஊட்டுதலே தமது வாழ்க் கையில் முக்கியமான அலுவல் திட்டம் எனவும் ஆங்கு அவர் தீர்மானம் செய்தார். பண்டொரு காலத்தில் புத்தர் பெம்மான் ஒவ்வொரு சிற்றுயிரின் பொருட்டும் தமது உயி ரைத் தியாகம் பண்ணினர். அத்தகைய கருணை வள்ளல் அவர். அதுபோன்ற கருணை இப்பொழுது விவேகானந்தர்

உள்ளத்தில் ததும்பி எழுவதாயிற்று. தமது முக்தியையும் பொருள்படுத்தாது மக்களுடைய முன்னேற்றத்துக்காகவே தமது வாழ்வனைத்தையும் ஒப்படைப்பதாக அவர் தீர்மானித்தார். ஏழை எளியவர்களும் துயருற்றிருப்பவர்களுமே தாம் வணங்கும் தெய்வம் என அவர் தீர்மானித்தார். இப்படிக் கீழ்மையில் கஷ்டப்படுபவர்களே கண்கண்ட தெய்வங்களாக விவேகானந்தருக்குக் காட்சி கொடுத்தார்கள். அவர்களுக்குப் பணிவிடைபுரிந்து மேலோங்குதற்கு உற்சாக மூட்டுவதே சரியான தேவாராதனை என அவர் கருதினர். ஆருயிர் சேவைக்கும் ஆண்டவன் சேவைக்கும் இடையில் வித்தியாசம் ஒன்றும் அவருக்குத் தோன்றவில்லை. மக்கள் சேவையில் தம்மை முற்றும் ஒப்படைப்பது கடவுள் பக்தியாகும்; அதுவே தேச பக்தியாகும் என்பது அவரது கொள்கை.

எனது பணிவிடைத் திட்டம் — My plan of campaign என்னும் சென்னைச் சொற்பொழிவிலே அவர் பகர்ந்தருளியதாவது: “தேசாபிமானத்தைப்பற்றி மக்கள் பேசுகின்றனர். தேசாபிமானத்தில் எனக்கும் நம்பிக்கை உண்டு. தேசாபிமானம் எது என்பதைப் பற்றிய கருத்து ஒன்று என்னிடத்திலும் உளது. முதலாவதாக மக்களைக் குறித்து உள்ளம் உருகவேண்டும். உள்ளக்கசிவினின்றே அருளார்வம் உதயமாகிறது. ஆகாத காரியங்களை யெல்லாம் ஆக்குவிப்பது அன்பு. இயற்கையின்கண் உள்ள மர்மங்களை யெல்லாம் உள்ளவாறு அறிந்து கொள்ளுதற்கும் உபாயம் ஒன்று உண்டு. அன்பு வழியில் செல்லுகிறவர்களுக்கு மறைந்து கிடக்கும் உண்மைகளெல்லாம் வெளியாகின்றன. ஆதலால் சீர்திருத்தக்காரர்கள் ஆக விரும்புகின்றவர்களே! தேசாபிமானிகளாக விரும்புகின்றவர்களே! மக்கள் பொருட்டு முதலில் நைந்துருகிப் பழகுங்கள். நீங்கள் உள்ளக்கசிவு

கொள்ளுகின்றீர்களா? தேவதைகளின் சந்ததிகளாக வந்துள்ளவர்களும், ரிஷிகளின் சந்ததிகளாக வந்துள்ளவர்களுமான கோடிக்கணக்கானபேர் விலங்குகளுக்கு ஒப்பாகிய கீழ்மையிலே இறங்கி உழன்று கிடக்கிறார்களே என்று நீங்கள் உணருகின்றீர்களா? கோடிக்கணக்கான பேர் நெடுங்காலம் அரை வயிறு, கால் வயிறு உணவருந்தி, பட்டினி கிடந்து வந்துள்ளார்கள் என்பதைக் குறித்து உணருகின்றீர்களா? அக்ஞானமானது கார்மேகம் போன்று நாடெங்கும் பரவிக் கிடக்கிறது என்பதைத் குறித்து நீங்கள் உணருகின்றீர்களா? உணர்வின் மேலீட்டால் நீங்கள் சஞ்சலமே வடிவெடுத்தவர்கள் ஆகியிருக்கிறீர்களா? இந்தப் பரிதாபகரமான நிலைமையை எண்ணி யெண்ணி உறக்கம் கொள்ள முடியாத சஞ்சலம் உங்களிடம் வந்துள்ளதா? இந்த உணர்வு உங்கள் ரத்தத்தில் ஊறி ரத்தக்குழாய் வழியாக உடலெங்கும் பரவி ஹிருதயத்தின் துடிப்புக்கு ஒப்ப, நாடி நரம்புகளில் அடித்துக்கொண்டிருக்கிறதா? இந்த உணர்வின் மேலீட்டால் நீங்கள் பைத்தியம் பிடித்தவர்கள் போன்று ஆகியிருக்கிறீர்களா? பாமரருடைய இழிவையும் துயரத்தையும் பற்றிய ஒரே ஒரு எண்ணத்தால் கவரப்பட்டவர்களாக நீங்கள் ஆகியிருக்கிறீர்களா? அந்த எண்ணத்தின்மேலீட்டால் உங்களுடைய பெயரையும் புகழையும்பற்றி நீங்கள் ஒன்றுமே கருதாதவர்கள் ஆகிவிட்டீர்களா? அந்த உணர்வின் வேகத்தால் உங்கள் உற்றார் உறவினர்களையும், உங்களுடைய சொத்துச் சுகங்களையும், உங்களுடைய உடல் வாழ்க்கையையுமே அறவே மறந்தவர்களாக ஆகியிருக்கின்றீர்களா? இத்தகைய தீவிர உணர்வுக்கு நீங்கள் உள்ளாயிருக்கின்றீர்களா? அப்படி ஆகியிருப்பீர்களாயின் தேசாபிமானத்தைப் பெறுவதற்கு அதுவே முதல்படியாகும். நான் அமெரிக்காவுக்குச்

சென்றது சர்வமத மகாசபையை முன்னிட்டு அன்று என்பது உங்களில் பலருக்குத் தெரியும். ஆனால் நம் நாட்டுப் பாமர மக்களின் பரிதாபகரமான நிலையைப்பற்றிய உணர்வானது பிசாசு போன்று என்னை உடற்றிக் கொண்டிருந்தது. அந்த உணர்வின் வேகத்தால் இந்தியா முழுதிலும் பன்னிரண்டு ஆண்டுகளாக நான் சுற்றி அலைந்திருக்கிறேன். அப்படி அலைந்து திரிந்தும் பொது மக்களின் நலனுக்கு வகை ஒன்றையும் கண்டு பிடிக்க இயலவில்லை. அமெரிக்காவினின்ருவது ஏதாவது உதவியைப் பெற முடியுமா என்றெண்ணி நான் அங்குச் சென்றேன். அன்று முதல் எனக்கு அறிமுகமாயிருக்கின்ற உங்களில் பலருக்கு இது தெரிந்த விஷயமாகும். சர்வமத மகாசபையைப்பற்றி நான் ஒன்றுமே கருதக் கிடையாது. இங்கு என் தாய் நாட்டிலே எனது ரத்தமும் தசையுமாகிய பொது மக்கள், நாள் ஏற ஏற வறுமை வாய்பட்டுக் கீழ்மையில் உழன்றுகொண்டிருக்கின்றனர். அவர்களைப்பற்றிக் கவலை கொள்ளாது வேறு வேலைத் திட்டம் எனக்கு எதற்காக? பொது மக்களின் பரிதாபகரமான நிலையைப்பற்றி சஞ்சலப்பட்டுக் கிடப்பதே எனது முதற்படியாகும்."

அமெரிக்காவுக்குச் சென்ற சுவாமி விவேகானந்தருக்குச் சர்வமத மகாசபையில் ஒப்பு உயர்வற்ற வெற்றியும் கீர்த்தியும் வாய்க்கலாயின. அப்படித் தாம் புகழையும் பதவியையும் பெறுதற்கு முன்பும், அதைப் பெற்ற பின்பும் இந்தியாவில் சில நண்பர்களுக்கு அவர் கடிதங்கள் வரைந்து கொண்டிருந்தார். அக்கடிதங்களிலே அவர் வெளியிட்ட கருத்துக்களும் அவருடைய தேசாபிமானத்தை நன்கு எடுத்து விளக்குவனவாகும். அவைகளில் சில வருமாறு :—" நம் தாய் நாட்டுக்குப் பணிவிடை செய்வதற்கு ஆயிரக்கணக்கான ஆட

வர்களும் மகளிர்களும் தேவை. அவர்கள் தூய்மையே வடிவெடுத்தவர்களாக இருக்க வேண்டும். ஈசுவர விசுவாசம் என்னும் அரண் அவர்களுக்குப் பாதுகாப்பாக இருக்க வேண்டும். சிங்கத்தின் தைரியம் அவர்கள் உள்ளத்தில் உறைந்திருக்கவேண்டும். கீழ்மையுற்று, வறுமைவாய்ப்பட்டு பரிதவித்திருக்கிற ஏழை எளியவர்களிடத்து அனுதாபம் மிகக் கொண்டவர்களாக அவர்கள் இருக்கவேண்டும். நாட்டின் நாலாப்பக்கங்களிலும் சென்று அத்தூய தொண்டர்கள் மக்களின் உய்வுக்காகப் பணிவிடை செய்யவேண்டும். கீழ்மையில் உழல்கின்ற பொதுமக்கள் சமுதாயத்தில் உள்ள மேன்மக்களுக்கு ஒப்பானவர்களே என்னும் சுய நம்பிக்கையை அவர்களுடைய உள்ளத்தில் ஊட்டவேண்டும். பொதுமக்கள் புத்துயிர் பெற்று எழுந்திருந்து தங்கள் முன்னேற்றத்துக்காகப் பாடுபடுவதற்கான உற்சாகத்தை அவர்களுக்கு ஊட்டவேண்டும்.

"என் அருமைச் செல்வர்காள்! நீங்கள் தளர்வுற வேண்டாம். உங்கள் உடையை வரிந்து கட்டுங்கள்; பணிவிடைக்குப் புறப்படுங்கள். தொண்டிற்காகவென்றே ஈசன் என்னை நியமித்திருக்கிறான். எத்தனை யெத்தனையோ அல்லல்களுக்கும் துன்பங்களுக்கும் என்னுடைய வாழ்நாளில் நான் ஆளாயிருக்கிறேன். முற்றிலும் நமக்கு உரியவர்களாயிருக்கிறவர்கள் பலர் பட்டினி கிடந்து சாவதை நான் பார்த்திருக்கிறேன். மற்றவர்களுக்கு அனுதாபம் காட்டியதைக் குறித்துப் பலர் என்னை ஏளனம் செய்தனர். நான் ஒரு பொய் வேஷக்காரன் என்று என்னைக் குறித்து சந்தேகப் பட்டனர். அவற்றையெல்லாம் பற்றிய கவலை வேண்டாம். இளைஞர்காள்! துன்பம் செறிந்த இவ்வுலகம் நமக்கு ஒரு பாடசாலை போன்றது. பெருவாழ்வுக்குரிய விஷயங்களைக்

கற்றுக்கொள்ள நாம் இங்கு வந்துள்ளோம். சால்புடையவர் கள் ஆவதற்குத் தக்க சந்தர்ப்பங்களைச் சான்றோர்களுக்குக் கொடுத்துதவுகிற பாடசாலையாக இப் பார் உலகம் இருக் கிறது. அச்சான்றோர்கள் பட்ட அல்லல்களுக்கிடையில் பிறரிடம் அனுதாபம் காட்டினர்; பொறுமையே வடிவெடுத்த வர்களாக இருந்தனர்; உலகமே அழிந்துபட்டுப் போனாலும் தளர்வுறாத நெஞ்சம் படைத்தவர்களாக அப்பெருமக்கள் இருந்தனர். அவர்கள் பெற்ற பெரிய பயிற்சிக்கும் இப் பாருலகம் பாடசாலையாய் இருந்திருக்கிறது.

''பாடுபட்டுப் பணம்தேடி அதைப்பாதுகாத்து வைப்பது ஒன்றுதான் வாழ்க்கையின் குறிக்கோள் என்றிருக்கும் உலோபிகளாகிய பணக்காரர்களை நம்பவேண்டாம். அவர்கள் செத்தார்க்கு ஒப்பானவர்கள். உயிரின் அறிகுறி ஒன்றும் அவர்களிடத்தில்லை. பின்பு நாட்டின் நலன் உங் கள் உழைப்பைப் பொறுத்திருக்கிறது. அடக்கமும், பணி வும், ஊக்கமும் படைத்துள்ள தேசத்தொண்டர்கள் அரும் பெரும் காரியங்களைச் சாதிக்கமுடியும். முற்றிலும் தெய் வத்தை நம்பியிருங்கள். வேலைத்திட்டம் முக்கியமானதன்று. அதில் சிறப்பு ஒன்றுமில்லை. துயருறுவார்களைக்குறித்து நீங்கள் உள்ளக்கசிவு கொண்டிருங்கள். அதற்கிடையில் இறைவனுடைய அருளை எதிர்பார்த்திருங்கள். அவருடைய அருளும் உதவியும் நிச்சயமாக வரும். இத்தகைய பணி விடைக்கு உதவியை நாடி நான் வீடுவீடாக அலைந்திருக் கிறேன். செல்வந்தர்களையும் பெரிய பிரமுகர்களையும் பலரை நான் பார்த்திருக்கிறேன். ஆனால் அவர்கள் எனது வேண்டு தலுக்குச் செவிசாய்க்கவில்லை. ரத்தம் சொட்டிக் கொண்டி ருக்கிற உள்ளத்துடன் உலகில் செம்பாதியைக் கடந்து இந்த வேற்று நாட்டுக்கு உதவியை வேண்டி நான் வந்திருக்

கிறேன். கடவுள் கருணுகரன். அவர் துணைபுரிவார் என்னும் தெளிவு எனக்கு உண்டு. அந்தத் துணையோ இன்று வரலாம்; நாளை வரலாம் அல்லது பலநாளைக்குப் பின்பு வரலாம். விரைவிலோ அல்லது பொறுத்திருந்தோ அது வருவது திண்ணம். அப்படி உதவி வருவதற்கு முன்பு இந்த வேற்று நாட்டிலே நான் பட்டினி கிடந்து குளிரில் அல்லல் பட்டு அழிந்து போகலாம். அதனுல் நஷ்டம் ஒன்றுமில்லை. ஆனுல் என் உள்ளத்தில் உருகிக்கொண்டிருக்கின்ற இந்தப் பேருணர்வை இளைஞர்களாகிய உங்களுக்கு ஆர்ஜிதமாக அளிக்கிறேன். ஏழை எளியவர்கள், அறிவிலிகள், அடக்கி ஒதுக்கி வைக்கப்பட்டிருக்கிறவர்கள் ஆகியவர்களைக் குறித்து அனுதாபம் காட்டி அவர்களுக்காகப் பணிவிடை செய்தல் என்பதுதான் நான் உங்களுக்குப் பாத்தியதையாக நல்கும் சொத்து ஆகும். அதையேற்றுச் செயலில் கொண்டு வருவதற்கான சீரிய சிஷ்யர்களாக நீங்கள் ஆவீர்களாக. இப்பொழுதே பார்த்தசாரதியின் கோயிலுக்குச் சென்று அவரைச் சேவியுங்கள். அவர் தீனதயாளு. கோகுலத்து எளிய ஆயர் கூட்டத்துக்கு அவர் அன்பன். ராமனுக வடிவெடுத்து வந்த பரமன். கீழ்க்குலக் குஹனைத் தன் உடன் பிறந்தவன் எனக் கட்டித் தழுவிக்கொண்டான். புத்தராக அவதரித்த பரமன் பெருமக்களது அழைப்புக்களை ஒதுக்கி வைத்துவிட்டு மகாபாபியாயிருந்த வேசி ஒருத்தி படைத்த பிக்ஷையை ஏற்று அவளை உய்வித்தார். இங்ஙனம் தெய்வமும் தெய்வப் பெற்றி வாய்க்கப்பெற்றவர்களும் எப்பொழுதுமே தீனதயாளுவாக நடந்துகொள்ளுகின்றனர். இத்தகைய கருணுகரக்கடவுளை முற்றிலும் நம்பியிருந்து, இந்தியாவின் முப்பத்து முக்கோடி மக்களுக்குப் பணிவிடை செய்ய உங்களை ஒப்படைத்து வாருங்கள். இன்றைக்கே இந்த அரிய விரதத்தை எடுத்துக்கொள்ளுங்கள்.

“நல்லியக்கம் ஒன்றை நிறுவுவது ஒருநாள் வேலையன்று. நலம்புரிய நாம் செல்லும் பாதையானது கொடிய முட்கள் பரப்பப் பெற்றிருக்கிறது. ஆயினும் பார்த்தனுக்குச்சாரதியா யிருந்தவர் நமக்கும் சாரதியாக ஆயத்தமாயிருக்கிருர். அதை நாம் நன்கு அறிகிறோம். அவருடைய மகிமையின் பொருட்டு அவர் பெயரால் மலைபோன்று குவிந்து கிடக்கின்ற துன்பக் குப்பைக்குத் தீயிடுங்கள். நெடுநாட்களாக இந்தியாவை அல் லல்படுத்தி வந்துள்ள துயரக்காடு இனி எரிந்து சாம்பலா கட்டும். இது எவ்வளவு பெரிய பணிவிடை என்பதைத் துணிந்து உன்னிப்பாருங்கள். ஆண்டவனுடைய ஆராதனை களுள் இது ஒப்பற்றது. நாம் தீனர்கள் எனினும் இதைச் சாதிக்க நமக்கு இயலும். ஏனென்றால் நாம் கடவுளின் குழந்தைகள். அவருடைய அருள் ஒளி நம் உள்ளத்தில் ஒளிர்ந்துகொண்டிருக்கிறது. பரமன் வாழ்க! நாம் வெற்றி யடைவது திண்ணம். வாழ்வு என்பதில் ஒன்றுமில்லை; மரணம் என்பதிலும் ஒன்றுமில்லை. பசிக்கு அஞ்சுவானேன்? குளிர்தான் நம்மை என்ன செய்ய முடியும்? இறைவன் கருணை ஓங்குக. அவரை நாடி அருட்பணியில் ஈடுபடுக.”

அமெரிக்காவில் சர்வமத மகாசபையில் சுவாமி விவேகா னந்தர் இன்னும் வெற்றிவீரர் ஆகவில்லை. இருக்க இடம் இல்லாது, உண்ண உணவு இல்லாது, ஆதரிக்க அன்பர்கள் இல்லாது அவர் அல்லல்பட்டுக்கொண்டிருந்தபொழுது இந் திய சிஷ்யர்களுக்கு அவர் எழுதிய கடிதங்களின் உட்கருத் துக்கள் இவை. கஷ்ட தசையிலும் அவருடைய ஈசுவர விசு வாசம் எவ்வளவு பெரியது என்பதும், அவருடைய உள்ளக் கிடக்கை வஜ்ரம் போன்று எவ்வளவு உறுதி வாய்ந்தது என்பதும் இக்கடிதங்களினின்று வெளியாகின்றன. மானு டரை உய்விக்க வந்துள்ள மகாபுருஷர்களிடத்து இத்தகைய

காருண்யமும் பணிவிடையில் ஆர்வமும் சதா பொலிந்து கொண்டிருக்கிறது. மற்றொரு கடிதத்தில் இன்னொரு சிஷ்யருக்கு விவேகானந்தர் எழுதியதன் உட்கருத்தாவது:—

“நாம் அடையப்பெற்றுள்ள ஆற்றல் அனைத்தையும் ஓர் அரிய காரியத்தில் பயன்படுத்தவேண்டும். பொதுமக்களை உயர்நிலைக்கு உயர்த்துவது நம் கடமை. ஆனால் அப்படிச் செய்வதை முன்னிட்டுச் சமயத்துக்கு இழுக்கு ஒன்றும் நேரலாகாது. நகரங்களில் வாழ்ந்திருப்பவர்கள் மட்டும் ஒரு நாட்டு மக்கள் ஆகமாட்டார்கள். நாட்டு மக்களிற் பெரும்பான்மையோர் கிராமங்களில் குடிசைகளில் வாழ்ந்திருக்கிறார்கள். நமது பணிவிடை அத்தகைய எளியவர்களுக்கு உரியதாகுக. இதை நன்கு ஞாபகத்தில் வைத்துக்கொள்ளுங்கள். இது காறும் இந்த ஏழை மக்களுக்கு யாரும் ஒரு நலனுமே செய்யக்கிடையாது. நம் சமுதாயச் சீர்திருத்தக்காரர்கள் விதவைகளுக்கு மறுமணம் முடித்துவைப்பதிலேயே கண்ணுங்கருத்துமாயிருக்கிறார்கள். ஆனால் எத்தனை விதவையர்கள் கணவன்மார்களைப் பெறப்போகிறார்கள் என்பதை முன்னிட்டா நமது நாட்டுக்கு நலன் வரப்போகிறது? பொது மக்களது நலனிலேயே நாட்டின் நலன் அடங்கியிருக்கிறது. பொது மக்களுக்குக் கைகொடுத்து அவர்களை உயர்நிலைக்கு எழுப்ப உங்களுக்கு இயலுமா? அவர்களுடைய மேலாம் தகைமைகளையெல்லாம் இப்பொழுது அவர்கள் இழந்து கிடக்கின்றனர். அவர்களுடைய ஆத்மீகப் பேரியல்புக்குப் பின்னம் வாராது அவர்களை உயர்நிலைக்கு உயர்த்தவேண்டும். சமஉரிமை, சுதந்தரம், பேரியக்கம், பேராற்றல் ஆகியவைகளை மேல்நாட்டவர்கள் வாழ்க்கையின் குறிக்கோளாகக் கொண்டிருக்கிறார்கள். ஆத்மீகப் பண்பை ஹிந்துக்கள் குறிக்கோளாகக் கொண்டிருக்கிறார்கள். இந்த இரண்டுவிதக்

குறிக்கோள்களையும் சமரசப்படுத்தி மக்களுக்கிடையிலே அவைகளை எடுத்து வழங்க நீங்கள் வல்லவர்கள் ஆவீர்களா? செயற்கரிய இச்செயலைத்தான் நாம் சாதித்தாக வேண்டும். நாம் அதைச் சாதிக்கத்தான் போகிறோம். அவ்வரிய செயலின் பொருட்டே நீங்கள் எல்லோரும் பிறப்பெடுத்து வந்திருக்கிறீர்கள். எண்ணியதை எண்ணியாங்குச் செய்து சாதிப்பதற்கான திண்மையை உடைத்திருங்கள். அரும்பெரும் காரியங்களை நிறைவேற்றுவதற்கு இத்தகைய உறுதிப்பாடு முற்றிலும் அவசியமாகிறது. என் அருமை ஞானச் செல்வர்காள்! இவ் அரிய தொண்டிலே ஆர்வத்துடன் முன்னேறிச் செல்லுங்கள்."

மற்றொரு சிஷ்யருக்கு சுவாமி விவேகானந்தர் அமெரிக்காவிலிருந்து எழுதிய கடிதத்தில் தேசபக்திக்குரிய வேறு சில கருத்துக்கள் புதைந்து கிடந்தன. அவையாவன: "நீ உனது நாட்டு மக்கள்மீது அன்பு வைத்திருக்கின்றாயா? கடவுளைநாடி வேறு எங்கு நீ அலைந்து திரியப்போகின்றாய்? உன் கண்ணெதிரே தென்படுகின்ற ஏழைகள், துயருறுபவர்கள், மெலிந்து கிடப்பவர்கள் ஆகிய இவர்களெல்லாரும் கடவுளின் வெவ்வேறு தோற்றங்கள் அல்லவா? ஆதலால் அவர்களை நீ ஏன் முதலில் வழுத்திப் பழகலாகாது? கங்கா தீரத்தில் யாராவது கிணறு தோண்டப் போவார்களா? உன்னிடத்து உள்ளன்பு இருக்கிறதா? அது இருக்குமாகில் நீ எல்லாம் வல்லவன். சுயநலத்தை நீ முற்றிலும் ஒதுக்கி வைத்திருக்கிறாயா? அப்படிச் செய்திருப்பாயாகில் உனது ஆற்றலுக்கு யாரும் தடைபோட முடியாது. வீரர்கள் இப்பொழுது நம் நாட்டுக்குத் தேவை. எனவே நீ ஒரு வீரன் ஆவாயாக. செல்வா! நான் ஈசனிடம் விசுவாசம் வைத்திருக்கிறேன்; மனிதன் மீதும் விசுவாசம் வைத்திருக்கிறேன்.

துயருறும் மாந்தராகத் தோன்றியுள்ள தெய்வத்தின் மீது நான் விசுவாசம் வைத்திருக்கிறேன். நரகத்தில் இடர்ப்பட்டும் பிறர்க்குப் பணிவிடை செய்வதில் நான் விசுவாசம் வைத்திருக்கிறேன்."

மற்றொரு சிஷ்யருக்கு அவர் எழுதிய கடிதத்தில் அடங்கியிருந்த கருத்துக்களாவன: "இந்தியாவில் கோடிக்கணக்கான பேர் தாழ்மையுற்றுக் கிடக்கின்றனர். வறுமையில் அவர்கள் வருந்திக் கொண்டிருக்கின்றனர். புரோகிதத் தந்திரமும் ஆட்சிமுறையின் கொடுமையும் அவர்களை அல்லல் படுத்திக்கொண்டிருக்கின்றன. அத்தகைய ஏழை மக்களின் பொருட்டு அல்லும் பகலும் நாம் இறைவனிடம் பிரார்த்தனை பண்ணுவோமாக. மேல் மக்களுக்கும் தனவந்தர்களுக்கும் தர்மப் பிரசாரம் செய்யவேண்டும் என்னும் எண்ணம் எனக்கு இல்லை. நான் தத்துவ ஞானி அல்லன்; நான் சான்றோனும் அல்லன்; நான் பரம ஏழை; ஏழைகளை நான் நேசிக்கிறேன். அவ் ஏழைகளுக்குக் கல்வியில்லை, நல்வழி காட்டித் தருவார் யாருமில்லை. வீடு வீடாகச் சென்று அவர்களுக்குச் சிறிது கல்வி வழங்க ஆயத்தமாயிருப்பவர் யார்? இந்த ஏழை மக்களே நீ வணங்குதற்கேற்ற தெய்வம் ஆகுக. இந்தத் தீனர்களைப்பற்றித் தியானம் பண்ணு; அவர்களுக்காகப் பிரார்த்தனை பண்ணு; அவர்களுக்குத் தொடர்ந்து பணிவிடை செய்; இடையறாது அவர்களுக்காகப் பரமனை வேண்டிக்கொள். அப்படிச் செய்வாயாகில் இறைவன் உனக்கு வழிகாட்டியருள்வார். ஏழை எளியவர்களுக்காக யாருடைய உள்ளம் உருகுகிறதோ அம்மனிதனை நான் மகாத்மா என்கிறேன். எளியவர்களுக்காக மனமிரங்காதவன் துராத்மன். பொது மக்களின் நலனுக்காக நாம் அனைவரும் ஒன்று கூடிப் பிரார்த்தனை பண்ணுவோமாக. அப்படிப் பிரார்த்தனை பண்ணுகிற

நாம் உலகுக்கு அறிமுகமாகாது மடிந்து போகலாம். நமக்கு இரக்கம் காட்டவோ, நாம் மறைந்ததைக் குறித்துத் துயருறுவதற்கோ யாருமில்லாது போகலாம். கண்கூடாக ஒரு செயலேயும் சாதிக்காது நாம் மறைந்துபட்டுப் போகலாம். ஆனல் நாம் எண்ணிய எண்ணம் ஒருபொழுதும் அழிந்து பட்டுப் போகாது. விரைவிலோ அல்லது நாளடைவிலோ நாம் எண்ணிய எண்ணம் உருவெடுக்கும். என் உள்ளத்தை வாட்டுகிற துயரத்தின் மேலீட்டால் எதையும் எடுத்து இயம்ப எனக்கு இயலவில்லே. நீ ஒருவாறு அதை யூகிக்க முடியும். கோடிக்கணக்கான பேர் பசியால் வாடி அக்ஞான இருளில் உழன்றுகொண்டிருக்கின்றனர். அவர்கள் உழைப் பினின்று சேர்ந்த செல்வத்தைக்கொண்டு கல்வி கற்றவர்கள் அப் பொதுமக்களேக் கவனியாது விட்டுவிடுவார்களாகில் அக் கல் நெஞ்சக்காரர்களேத் துரோகிகள் என நான் கருது வேன். ஏழைகளேக் கசக்கிப் பிழிந்தெடுத்த பணத்தைக் கொண்டு அலங்காரமாக உடைகள் அணிந்துகொண்டு உல் லாசமாகத் திரிபவர்களேப் பாதகர்கள் என்பேன். நாம் ஏழையர் எனினும் இறைவன் கையில் கருவிகளாக இருப் போமாக. பெரிதும் இத்தகைய கருவிகளேக் கொண்டே இறைவன் பெருங்காரியங்களேச் செய்து சாதிக்கிருன்.”

அமெரிக்காவிலும் ஐரோப்பாவிலும் வதிந்திருந்த பொழுது சுவாமி விவேகானந்தர் அந்நாடுகளின் ஆக்கத்தை யும் முன்னேற்றத்தையும் கூர்ந்து கவனித்துப் பார்த்தார். ஆனல் முன்னேற்றத்துக்காக அந்நாட்டு மக்கள் வியாபாரத் தையும், அரசியல் இயக்கத்தையும், தொழிலேயும், அவை போன்ற இன்னும் பல லௌகிக முறைகளேயும் கையாண்டு வந்தனர். அம்முறைகளேயெல்லாம் அதே பாங்கில் இந்திய மக்களுக்குக் காட்டித் தருவது பொருந்தாது. இந்திய

மக்களுடைய முன்னேற்றம் எப்பொழுதும் நல்வாழ்வையும், அறநெறியையும், கடவுள் நம்பிக்கையையும் அடிப்படை யாகக் கொண்டிருக்கவேண்டும். ஈசுவர விசுவாசத்தை ஆதாரமாக வைத்துக்கொண்டு இவ்வுலக வாழ்க்கைக்கு வேண்டிய ஆக்கங்களையெல்லாம் உருவாக்கலாம். இந்தியப் பாரமார்த்திகப் பண்பு எக்காரணத்தை முன்னிட்டும் பின்ன ணிக்குப் போகலாகாது. அப்பண்பை இழந்துவிட்டால் பின்பு எவ்வளவுதான் செல்வம் படைத்திருந்தாலும் நாடு உய்வு அடையாது. சரியான அறநெறியிலே நாம் முன்னேற் றம் அடைந்து வரவேண்டும் என்னும் யாகத்தை சுவாமி விவேகானந்தர் தொடங்கிவைத்தார். அந்த வேள்வித் தீயில் தம்மை ஆகுதியாகக் கொடுத்தார். அதன் விளைவாகவே இந்தியா புத்துயிர் பெற்றுப் படிப்படியாக மேல் நிலைக்கு எழுந்திருக்கிறது.

தேசாச்சாரம் அல்லது அந்தந்த நாட்டுக்குரிய பழக்க வழக்கங்கள் எத்தனை யெத்தனையோ உள. இந்தியப் பழக்க வழக்கங்களின் உட்கருத்துக்கள் பலவற்றை நாம் அறியாத வர்களாயிருக்கின்றோம். ஆனால் நமது நடை, உடை, பாவனை, பழக்க வழக்கங்கள் பலவற்றுள் பாரமார்த்திகப் பண்பு புதைந்திருக்கிறது என்பதை சுவாமி விவேகானந்தர் தெளிவுற விளக்கிக் காட்டியுள்ளார். இந்திய மாதர்கள் அடிமைத்தனத்திற்கு அறிகுறியாகத் தாலிகட்டிக் கொள் கிறார்கள் என்றும், தாலியில் தெய்விகம் திகழ்கிறது என்றும், தாலியைப் பயபக்தியோடு போற்றி வருகிறார்கள் என்றும் கிறிஸ்துவ மதப்பிரசாரகர்கள் அமெரிக்காவில் விளம்பரப் படுத்தி ஏளனம் செய்து வந்தார்கள். அவற்றையெல்லாம் குறித்து சுவாமி விவேகானந்தரின் சிஷ்யர்கள் சிலர் அவரிடம் கேள்விகள் கேட்டார்கள். அத்தகைய குருட்டு நம்பிக்கை

வைத்திருப்பதும் பொருளற்ற பழக்கம் படைத்திருப்பதும் பொருந்துமா, என்று பரிகாசம் பண்ணுகிற முறையில் அவர்கள் வினவினார்கள். சிறிது உள்ளம் குழைந்தவராக சுவாமிகள் அதற்கு விடை கொடுத்தார் "நீங்கள் அதைக் குருட்டு நம்பிக்கை என்று கூறுகிறீர்களா? கற்பின் சிறப்பை நீங்கள் அதனுள் காணவில்லையா? மனைவி ஒருத்தித் தன் உடல், பொருள், ஆவியெல்லாம் கணவனிடத்தே உவந்து ஒப்படைப்பது சாமானியமான செயலா? எத்தகைய மனபரிபாகம், தூய்மை, தன்னடக்கம் ஆகியவைகளின் விளைவாக இத்தகைய பண்பு பெண்ணொருத்திக்கு வரக்கூடும் என்பது உங்களுக்கு விளங்க வில்லையா?" இப்படி சுவாமிகள் கொடுத்த சீரிய விளக்கத்தை மேல் நாட்டுச் சிஷ்யர்கள் திகைப்புடன் கேட்டு அதைப்பற்றி அமைதியாகச் சிந்தித்துக்கொண்டிருந்தனர். இந்தியாவின் பண்புக்கு எடுத்துக் காட்டு இந்திய விதவையாவாள் என்பதைத் தெளிவுற சுவாமி விவேகானந்தர் மேல் நாட்டவர்களுக்கு விளக்கிக் காட்டியிருக்கிறார். கணவனை இழந்தான பிறகு உடல் இன்பத்தைக் கைம்பெண் ஒருத்தி அறவே மறந்து விடுகின்றாள். தூய்மைக்கும், எளிய வாழ்க்கைக்கும் அறிகுறியாக அவள் வெள்ளை ஆடை அணிந்து கொள்ளுகின்றாள். கடவுள் சிந்தனையிலேயே அவள் பெரிதும் தன் காலத்தைக் கழித்து வருகின்றான். நாகரிகத்தில் மேலோங்கியிருக்கிறவர்களுக்கே இத்தகைய மனநிலை வரும் என்று அவர் தெளிவுபடுத்திக் காட்டினார். இந்திய மக்களில் பெரும்பான்மையோர் தரையில் பாய் விரித்துப் படுத்துறங்குகின்றனர். அதிகாலையில் அதைச் சுருட்டி எடுத்து மறைவாக ஒரு பக்கம் வைக்கின்றனர். படுக்கையை அப்படியே விரித்துப் போட்டு வைத்திருப்பது இந்தியப் பண்பன்று. சீரிய வாழ்க்கை வாழ்ந்து வருகிற

இந்தியர்கள், எப்பொழுது படுக்கப் போகிறார்கள், எப்பொழுது உறக்கத்தினின்று எழுந்திருக்கிறார்கள் என்பன வெல்லாம் மற்றவர்களுக்குத் தெரியாது. சயனிக்கப் போவதற்கு முன்பு ஈசனைப் பற்றிய சிந்தனை, அதிகாலையில் துயில் எழுந்திருந்து நீராடிவிட்டு இறைவனை வழுத்துதல். இவையே பண்பாடடைந்துள்ள இந்தியர்களது இயல்பு. இவற்றில் எவ்வளவு ஆழ்ந்த தவவாழ்வு அடங்கியிருக்கிறது என்பதை எண்ணிப் பார்க்க வேண்டும். இலையில் உணவு அருந்துவதும் அலாதியான இந்தியப்பண்பு ஆகும். இந்தியர்கள் அணிகின்ற உடையிலும் பண்பு மிகப் புதைந்திருக்கிறது. தங்கள் வாழ்வை ஓர் உயர்ந்த லட்சியத்துக்கு ஒப்படைத்திருப்பதாகவே இந்தியர்களுடைய பழக்க வழக்கங்கள் அனைத்தினின்றும் புலனாகிறது.

''இக்காலத்திய இந்தியா'' என்னும் சொற்பொழிவின் இறுதியில் சுவாமி விவேகானந்தர் பகர்ந்தருளியுள்ள சீரிய கருத்துக்கள் அவர் படைத்திருந்த தேச பக்திக்குச் சிறந்த எடுத்துக்காட்டுகள் ஆகின்றன—''ஓ இந்தியா! உன்னுடைய பெண்மைக்கு, எடுத்துக்காட்டாக இலங்குபவர்கள் சீதை, சாவித்திரி, தமயந்தி என்பதை மறந்து விடாதே. உமாபதி என்றும் சங்கரன் என்றும் அழைக்கப்பெறுகிற துறவி வேந்தனாகிய சிவனாரே நீ வணங்கும் தெய்வம் என்பதை மறந்து விடாதே. நீ மணம் புரிந்து கொள்ளுவதும், செல்வத்தைத் திரட்டுவதும், உடல் வாழ்க்கை வாழ்ந்திருப்பதும், இந்திரிய சுகத்துக்காக அன்று என்பதை மறந்து விடாதே. நீ வாழ்ந்திருப்பதே உனது தனி நன்மைக்காக அன்று; மக்களின் பொது நன்மைக்காக என்பதை நீ மறந்து விடாதே, அன்னை பராசக்தியின் பலிபீடத்திலே உன்னுடைய வாழ்வைச் சமர்ப்பிப்பதற்காக நீ பிறவியெடுத்திருக்கின்றாய்

என்பதை மறந்துவிடாதே. அகிலாண்ட நாயகியாகிய அன்னை பராசக்தியின் பிரபஞ்சப் பெருந்திட்டத்தை அடிப் படையாகக்கொண்டு உனது சமுதாய வாழ்க்கை உருவெடுத் திருக்கிறது என்பதை மறந்துவிடாதே. தாழ்த்தப்பட்டவர் களாகவும், அறிவிலிகளாகவும், ஏழைகளாகவும், கல்வியற்ற வர்களாகவும் இருக்கிற சக்கிலியன், பறையன், தோட்டி ஆகியவர்களெல்லாரும் உன்னுடைய சொந்த ரத்தமும் தசை யும் ஆகிறார்கள்; உனது சகோதரர்கள் ஆகிறார்கள் என்பதை மறந்துவிடாதே. நீ தைரியம்கொண்டிரு; துணிச்சல் படைத் திரு; ஊக்கம் உடைத்திரு; நீ ஓர் இந்தியன் என்பதைப்பற் றிப் பெருமை பாராட்டு. 'நான் ஓர் இந்தியன்; ஒவ்வொரு இந் தியனும் எனது சகோதரன்' என்று பெருமையுடன் முரசறை வாயாக. 'கல்லாத இந்தியன், ஏழை இந்தியன், திக்கற்ற இந்தியன், பிராம்மண இந்தியன், பறைய இந்தியன் ஆகிய எல்லா இந்தியர்களும் எனது சகோதரர்' என்று சொல். உடல் அலங்காரத்தில் கருத்தைச் செலுத்தாதே; மிக எளிய பாங்கில் உடையணிந்திருந்து பழகு; துண்டு ஒன்றை உன் இடுப்பில் அணிந்து கொண்டு—'இந்தியனே எனது சகோத ரன்; இந்திய வாழ்வே எனது வாழ்வு; இந்தியாவின் தெய்வங் களே நான் வணங்கும் தெய்வம். இந்திய சமுதாயம் எனது குழந்தைப் பருவத்தில் எனக்குத் தொட்டில் ஆகிறது; இள மையில் எனக்குச் சிங்காரத்தோப்பு ஆகிறது; முதுமையில் எனக்குத் தவத்துக்கு உரிய காசி க்ஷேத்திரமாகிறது'— இங்ஙனம் உரத்த குரலிலே ஊக்கத்துடன் எடுத்துரைப் பாயாக. 'இந்தியாவின் மண்ணே எனது ஒப்பற்ற சுவர்க்கம்; இந்தியாவின் நலனே எனது நலன்' என்று சகோதரா! நீ சாற்றுவாயாக. 'ஓ கௌரீசா! ஓ அகிலாண்டேசுவரீ! எனக்கு ஆண்மையை நல்குவாயாக. ஆற்றல் அனைத்துக்கும்

உறைவிடமாகிய அன்னை பராசக்தியே! எனது மெலிவை விரட்டி ஓட்டு, எனது புன்மையைப் போக்கடி, வீரம் படைத்த ஆண்மகனாக என்னை ஆக்குவாயாக' என்று அல்லும் பகலும் பிரார்த்தனை பண்ணு.

பிரபஞ்சத்தையே வெறும் மனோகல்பிதம் என்று முற்றிலும் புறக்கணித்திருந்த கடுந்துறவியாக விவேகானந்தர் ஒரு பக்கம் காட்சி கொடுக்கின்றார். மற்றொரு பக்கம் இந்தியாவின் மீது அவர் வைத்திருந்த பற்றுதலும் அபிமானமும் பரம்பொருள் வணக்கத்துக்கு நிகர். இப்படி ஒன்றோடு ஒன்று ஒவ்வாத இரண்டுவிதக் காட்சிகளைக் கொடுத்து வந்தவர் விவேகானந்தர். இவ்விரண்டையும் சமரசப்படுத்துவது எங்ஙனம் என்பது பெரியதொரு கேள்வி. விவேகானந்த சுவாமிகளின் ஆங்கிலச் சிஷ்யை ஆகிய சகோதரி நிவேதிதை தாம் இயற்றியுள்ள 'நான் கண்ட எனது குருநாதர்' என்னும் நூலிலே இம் முரண்பாட்டை ஒருவாறு சமரசப்படுத்துகிறார். அதன் சாராம்சம் வருமாறு: "சுவாமிஜி மேல்நாடுகளில் இருந்தபொழுது அவர் ஒரு சமயாசாரியராகவே எங்களுக்கு விளங்கினார். எல்லாச் சமயங்களுக்கும் அடிப்படையாயிருக்கும் பரதத்துவங்களை ஆங்கு எங்களுக்கு எடுத்து விளக்கிப் பாரமார்த்திக வாழ்க்கையில் தீவிரமாக ஈடுபடும்படி எங்களைத் தூண்டியது ஆங்கு அவர் இயற்றிய அரிய தெய்வீகப் பணியாகும்.

"ஆனால் இந்தியாவுக்கு வந்தான பிறகு வேறொரு வடிவத்தில் என் குருநாதரை நான் காணலாயிற்று. இங்குத் தேசபக்தியே வடிவெடுத்தவராக அவர் இலங்கினார். பழைய லட்சியத்துக்குப் புதிய நடைமுறை வகுத்து வைப்பது எளிதன்று. துறவியர்கள் பரத்தை அடைதற்கென்றே வாழ்ந்திருக்கின்றனர். ஆனால் பொதுமக்களுக்குப் பணிவிடை

செய்வதே பரத்தை அடைவதற்கு உற்ற உபாயம் என்னும் புதிய ஐதிகத்தை இப்பூர்விக சமுதாயத்தினுள் புகுத்துவதை எனது குருநாதர் தம் கடமையாய் எடுத்துக்கொண்டிருந்ததை நான் கண்டேன்.

"எனது குருநாதர் திரட்டி வைத்திருந்த சந்நியாசிகளுடைய சங்கத்தில் அரியதொரு காட்சியை நான் கண்டேன். ஒரு வேளையில் அவர்கள் ஆழ்ந்து நிஷ்டை புரிகின்றனர். அப்பொழுது பிரபஞ்சத்தையே மறந்திருக்கின்றனர். தங்கள் உடலைப்பற்றியோ, உணவைப்பற்றியோ அவர்கள் கொள்ளுகிற சிந்தனை மிகக் குறைவு. மற்றொரு தருணத்தில் சாஸ்திரங்களின் உட்கருத்துக்களை ஆழ்ந்து ஆராய்ச்சி செய்தலிலும், அவைகளைப்பற்றிச் சம்வாதம் செய்தலிலும் அவர்கள் கண்ணும் கருத்துமாய் இருக்கின்றனர். இன்னும் சில வேளைகளில் தோட்டித் தொழில் புரிவதிலும், நோய்வாய்ப் பட்டிருக்கிறவர்களுக்குப் பணிவிடை செய்வதிலும்,சுகாதாரத் துறையில் அக்கம் பக்கங்களில் இருக்கும் சந்து பொந்துகளைச் சீர்திருத்தி அமைத்தலிலும் அவர்கள் ஊக்கத்துடன் ஈடுபடுகின்றனர்.

"உடலை மெலிந்திருக்கச் செய்து தவம் புரிந்து வந்தது பழைய ஐதிகம். நவீன முறைகளில் தேகப்பயிற்சிகள் செய்து உடலை உறுதியாக்கி நாட்டின் நலத்துக்காக அவ்வுடலைக் கொண்டு உழைப்பது எனது குருநாதர் தொடங்கி வைத்துள்ள புதிய தவமுறையாகும்."

உலகில் பல நாடுகளைச் சுற்றிப் பார்த்தான பிறகு இந்தியாவைப்பற்றி சுவாமி விவேகானந்தர் என்ன கருத்துக் கொண்டிருந்தார் என்னும் கேள்வி அவரிடம் கேட்கப்பட்டது. அதற்கு அவர் பதில் விடுத்தார்: "வெளிநாடுகளுக்குப் போவதற்கு முன்பு இந்தியாவிடம் எனக்கு அத்தியந்த

பக்தியிருந்தது. அதற்கேற்ற காரணங்களும் உண்டு. உலகில் பல நாடுகளைச் சுற்றிப் பார்த்தான பிறகு இப்பொழுது இந்தியாவினிடத்துச் சாமானியமான பக்திமட்டுமன்று, இந்தியாவை நான் வணங்கும் தெய்வமாக வைத்துள்ளேன். இந்நாட்டிலுள்ள ஒவ்வொரு தூசியும் புனிதம் வாய்க்கப்பெற்றது." இந்தியாவைப்பற்றி இன்னும் சில கருத்துக்களை அவர் தெரிவித்திருக்கிறார். உலகில் உள்ள மற்ற நாடுகளெல்லாம் போக பூமி; ஆனால் பரதகண்டமோ ஞானபூமி. ஜன்ம சாபல்யமாவதற்கு ஏற்ற பரிபாகம் அடைந்துள்ள ஆத்மாக்களெல்லாம் இந்தப் புண்ணிய பூமியில் வந்து பிறந்தாக வேண்டும். உலகுக்கு ஞானத்தை எடுத்து வழங்கும் தனிச் சிறப்பு இந்தியாவினுடையது. இப்படியெல்லாம் இந்நாட்டை அவர் சிலாகித்துப் போற்றிவந்துள்ளார்.

மற்றோர் அரிய கருத்தை விவேகானந்தர் வெளியிட்டுள்ளார். உலகிலுள்ள மிகப் பழைய நாகரிகங்களில் ஒன்று இந்தியாவின் நாகரிகம். பண்டைக்காலத்தில் பண்பாடு அடைந்திருந்த நாடுகள் பல அப்போதைக்கப்போது மறைந்துபட்டுப் போயின. மிகப் பழைய பண்பை இப்பரத கண்டம் உடைத்திருக்கிறது எனினும் அது இன்றைக்கும் புத்தம் புதியதாய் இருக்கிறது. அதற்கேற்ற உள்வலிவு இந்நாட்டினுள் உளது. இயற்கைத்தாய் எப்பொழுதும் எழில் வாய்ந்த இளமையோடு கூடியிருப்பது போன்று இந்திய நாடும் பழையதில் மிகப் பழையதாகவும் புதியதில் மிகப் புதியதாகவும் இருந்து வருகிறது. இதற்கெல்லாம் மூலகாரணம் இந்தியத் தேசிய வாழ்வு ஆத்ம ஞானத்தை அடிப்படையாகக் கொண்டிருப்பதேயாம்.

---

13. எளியாரோடு இணக்கம்

விசுவமனது படைத்திருந்தது ஸ்ரீ ராமகிருஷ்ண பரம ஹம்ஸரது தனிச் சிறப்பு. விசுவமனது என்று மொழியுமிடத்து அது எத்தனையெத்தனை உயிர்களோடு இணக்கம் கொள்ளுகிறதோ அத்தனை யத்தனை நல்லியல்புகளை எடுக்க வல்லது அம்மனது. ஆதலால் விசுவமனது படைத்திருப்பவர்க்கு உலகில் யாருமே வேற்றார் ஆக முடியாது. முதல் தடவை அவரைச் சந்தித்து இணக்கம் கொள்ளும்பொழுதே மிகப் பழைய நண்பனோடு மீண்டும் தொடர்வு கொள்வது போன்று இருக்கும் அவ்விணக்கம். அந்தப் பேரியல்பு விவேகானந்தரிடத்திலும் இருந்தது. யாரோடெல்லாம் அவர் ஒட்டி உறவாடினாரோ அவர்களெல்லாருக்கும் அவர் நொடிப் பொழுதில் ஆப்த நண்பர் ஆவார். மனபரிபாகமே அதன் மூலகாரணமாகிறது.

பக்தர்களிடத்துப் பரமஹம்ஸதேவருக்கு அலாதி அனுராகம் இருந்ததுபோன்று எளியவர்களிடத்து சுவாமி விவேகானந்தருக்கு அலாதியான அன்பும் அனுதாபமும் இருந்து வந்தது. அதன் அறிகுறி அவர் சின்னஞ் சிறுவனாயிருந்தபொழுதே வெளியாயிற்று. இளம் நரேந்திரன் ஒரு ராஜகுமாரன் போன்று வளர்ந்து வந்தான். விலையுயர்ந்த குதிரை வண்டி ஒன்று அவன் பிதாவுக்குச் சொந்தாயிருந்தது. அவ்வண்டியில் பலப்பல இடங்களுக்கு நரேந்திரன் அழைத்துச் செல்லப்படுவான். பெரியவன் ஆனபொழுது தானும் ஒரு வண்டிக்காரன் ஆகவேண்டுமென்று அவன் மனக்கோட்டை கட்டியிருந்தான். வசதி வாய்த்தபொழுதெல்லாம் தங்கள் வீட்டு வண்டிக்காரனோடு உறவாடுவதற்கு அவன் குதிரைலாயத்துக்குப் போவான். வண்டிக்காரனோடு

அவன் அளவளாவிப் பலப்பல விஷயங்களைப் பற்றிப் பேசிக் கொண்டிருப்பான். எனவே அவனுக்கும் அவர்கள் வீட்டு வண்டிக்காரனுக்கும் இடையில் உண்டாகிய நட்பு தந்தைக் கும் மகனுக்கும் இடையிலுள்ள நட்புப் போன்றது. எஜமான னுடைய குமாரன் என்று வண்டிக்காரன் நரேந்திரனைக் கருதவில்லை. தன் சொந்தச் செல்வன் என்றே நரேந்திரனை அவன் கருதி வந்தான். அதற்கெல்லாம் காரணம் அவ் விளைஞன் அத்தியந்த அன்போடு அவ் வண்டியோட்டுபவ னோடு உறவாடியதேயாம். தன் மகனுக்குப் புத்தி புகட்டு வதுபோன்று நரேந்திரனை மடியில் வைத்துக்கொண்டு அந் தச் சாரதி இளைஞனுக்கு ஏதேதோ விஷயங்களை எடுத்துச் சொல்லிக்கொண்டிருந்தான். அவன் பேசிய பல பேச்சுக் களுக்கிடையில் விவாகம் பண்ணிக்கொள்வது கூடவே கூடாது என்பது ஒன்றாகும். விவாகம் பண்ணிக்கொள்ளுகிற மனிதன் தன் காலில் விலங்கிட்டுக்கொள்கிறான். தன் சுதந் தரத்தை இழக்கிறான். சுயநலம் ஏராளமாக அவனுக்கு வருகிறது. பிறகு வாழ்க்கையில் அவன் படுகிற துன்பத் துக்கோ எல்லையில்லை. இப்படியெல்லாம் வண்டியோட்டு பவன் விளம்பியது நரேந்திரன் துறவியாவதற்கு முதல் காரணமாயிற்று. சமுதாயத்தில் வேலைக்காரர்கள் போன்று கீழான அந்தஸ்தில் இருப்பவர்களைக் கீழோர் என்று விவே கானந்தர் ஒருநாளும் கருதியது கிடையாது. மனிதனோடு மனிதன் கண்ணியமாகவும் சம அந்தஸ்து வைத்தும் பழகிவர வேண்டும். அதுவே விவேகானந்தர் தமது வாழ்நாளெல் லாம் பழகிவந்த சீரிய பழக்கமாம்.

துறவறம் பூண்டு பரிவ்ராஜக பரமஹம்ஸராக சுவாமி விவேகானந்தர் பரத கண்டம் முழுதையும் சுற்றிப் பார்த்துக் கொண்டு வந்தபொழுது எளியவர்களோடு அவர் நெருங்கிய

இணக்கம் வைத்து வந்தார். அதற்கேற்ற சந்தர்ப்பங்கள் ஏராளமாக அவருக்கு உண்டாயின. ராஜமாளிகைகளில் இருந்தபொழுது அவர் அவ்வளவு இன்புற்றிருக்கவில்லை. எளியவர்களுடைய குடிசைகளில் இருந்தபொழுது சொந்த வீட்டில் இருப்பதுபோன்று அவர் உணரலாயினர். அதி விரைவில் ஒவ்வோர் ஏழை மகனோடும் அவர் நெருங்கிய உறவை உண்டுபண்ணுவார். இவர் தம்மை முற்றிலும் அவ் ஏழை மகனுக்கு உரியவராகச் செய்துகொண்டதனால் அந்த ஏழை மகனும் முற்றிலும் இவருக்கு உரியவன் ஆனான். ஏழையர்களோடு இணக்கம் கொள்ளுவதைச் சான்றோர் களோடு இணக்கம் கொள்ளுவதற்கு நிகராக அவர் கருது வார். ஏழை மகன் ஒருவன் தமக்கு வார்க்கிற கூழைத் தேவாமிர்தமாகக் கருதி அவர் பருகுவதுண்டு. பிறகு இர வில் நெடுநேரம் அக்குடும்பத்தாரோடு பேச்சு நடக்கும். தங்களுடைய சுக துக்கங்களையெல்லாம் தங்குதடையின்றி சுவாமிகளிடம் அவர்கள் தெரிவிப்பார்கள். சந்நியாசி ஒருவ ரோடு பேசுகிறோம் என்பதை அவர்கள் மறந்துவிடுவார்கள். தங்கள் உற்றார் யாரோ ஒருவருடன் பேசுவது போன்றே அவர்கள் உணர்வார்கள். எளியவர்களுடைய கஷ்டநஷ்டங் களையும் சுகதுக்கங்களையும் முற்றிலும் தம்முடையவைகளா கவே சுவாமிகள் ஏற்றுக்கொள்வார். அதன் விளைவாக அவ் எளிய குடிமக்களுக்கு ஆறுதல் மிக உண்டாயிற்று. பண்டைக்காலத்து ரிஷிகள் இரவில் நெடுநேரம் பாரமார்த் திக விஷயங்களைப்பற்றி அமைதியாக உரையாடிக்கொண் டிருப்பார்கள். அவர்களுடைய அத்யாத்மிக வாழ்க்கையி லேயே அப்படி உரையாடிக் கொண்டிருப்பது மிக இனிய தொரு பகுதியாகும். அதே விதத்தில் இக்காலத்தில் தோன்றியுள்ள ரிஷி ஒருவராகிய விவேகானந்தருக்கு ஏழை

மக்களோடு அளவளாவிப் பேசிக் கொண்டிருப்பதில் பரமானந்தம் மிக உண்டாகும்.

ஏழை மகன் ஒருவன் எப்படி உழைத்து ஜீவனத்துக்கு வழிதேடிக்கொள்கிறுன் என்னும் கேள்வியைப் பல பேச்சுக்களுக்கிடையில் விவேகானந்தர் கிளப்புவார். அவரோடு உரையாடிய கூலியாளோ தன் உள்ளத்திலிருப்பதை யெல்லாம் உள்ளபடி எடுத்துரைப்பான். கபடமோ வஞ்சகமோ சிறிதேனும் அவன் உள்ளத்தில் இடம் பெறுவதில்லே. நேர்மையான மனப்பான்மை எளியவன் ஒருவனிடமிருப்பது சுவாமிகளுக்கு எல்லேயில்லா இன்பத்தை ஊட்டியது. தான் உழைத்துப் பாடுபட்டதைப் பற்றியும் தனக்குக் கிடைத்த கூலியைப் பற்றியும் உள்ளவாறு அவ் ஏழை மகன் எடுத்துரைப்பான். இவ்வளவு அல்பக்கூலி உனக்குப் போதுமா, என்று சுவாமிகள் கேட்பார். கடவுள் தனக்கு எவ்வளவு அளந்து வைத்திருக்கிருரோ அதைக்கொண்டு திருப்தியடைந்திருப்பதுதானே தன் கடமை என்று அம்மனிதன் மொழிவான். அப்படியானுல் நீ மட்டும் ஏன் நெற்றிவியர்வை நிலத்தில் விழ அவ்வளவு அதிகமாக உழைத்து வேலே செய்யவேண்டும், என்று அம்மனிதனிடம் மீண்டும் சுவாமிகள் வினவுவார். உழைப்பில் வஞ்சகம் செய்யலாகாது. தன் சக்திக்கேற்றவாறு பாடுபடுவதே தர்மம். அதில் தான் பிழை போய் விடலாகாது என்று கல்வி கேள்வியில்லாத அம்மனிதன் மேலும் எடுத்துரைப்பான். இப்படி அவன் பேசுவதையெல்லாம் ஹிதோபதேசம் கேட்பது போன்று சுவாமி விவேகானந்தர் தம் கருத்தில் வாங்கி வருவார். இந்தியப்பண்பு காலமெல்லாம் அழிந்துபட்டுப் போகாதிருப்பதற்குப் பொதுமக்களது இச்சீரிய மனப்பான்மையும் நேர்மையான வாழ்க்கையுமே மூலகாரணமாகும் என்று சுவாமிகள் தம்முள் ஓர்ந்து

கொள்வார். இவ்வாறு பாமரர்களோடு பழகுவதன் மூலம் இந்தியாவின் ஜீவநாடியையே தாம் அறிந்துகொண்டதாக விவேகானந்தர் உணர்வார்.

ஏழையர்கள் வீடுகளுக்கு சுவாமி விவேகானந்தர் அதிதியாய்ப் போனதை அவர்கள் ஆர்வத்தோடும் உள்ளன் போடும் வரவேற்றனர். பொதுவாக வறிஞர்களின் வீடுகளில் அவருக்கு வாய்த்த வரவேற்பு செல்வர்களின் வீடுகளில் வாய்க்கவில்லை. செல்வர்களுள் அன்புடனும் ஆதரவுடனும் வரவேற்றவர்களும் உண்டு; உதாசீனர்களாக இருந்தவர் களும் உண்டு; தடைபுரிந்தவர்களும் உண்டு. பணம் படைத் திருப்பவர்களுக்கிடையில் பலவிதமான மனப்பான்மைகள் இருந்தன. பலவிதமான முறைகளில் துறவியர்களை அவர் கள் பொருள்படுத்தினர். ஆனால் ஏழையர்களோ எப் பொழுதுமே இனிய முகத்துடனும் கனிந்த அன்புடனும் துறவியர்களைத் தங்கள் இல்லங்களுக்கு வரவேற்றனர். விருந்தோம்புதல் இந்தியப் பண்புகளில் ஒன்று. உலகில் உள்ள நாடுகளில் இந்தியா ஒன்றில்தான் கையில் பணம் தொடாது துறவி ஒருவன் நாடு முழுதிலும் நன்கு தீர்த்த யாத்திரை செய்ய முடியும். துறவி ஒருவன் தகைசான்ற வனாய் இருக்கலாம்; அல்லது தகையற்றவனாய் இருக் கலாம். பொதுவாக அவனுக்கு நாடெங்கும் உள்ள எல்லா வீடுகளிலும் உணவுக்கு உரிமை உண்டு. உணவு இல்லையென்று எம் மனிதனும் பண்டை நாட்களில் இப்பரத கண்டத்தில் வீடுகளினின்று புறக்கணிக்கப்படுவ தில்லை. அப்பண்பு அதிவிரைவில் மறைந்து வருவதை விவேகானந்தர் தாமே அனுபவித்துப் பார்க்கலாயினர். அத்தகைய சீரிய இயல்பு விரைவில் மறைந்து வருவதற் கிடையில் ஏழைகளிடத்திலேயே அழிந்துபட்டுப் போகாது

அது ஓரளவு நிலைத்திருக்கிறது. பலப்பல ஏழையர்கள் வீடுகளில் பசித்தார் முகம் பார்க்கும் பண்பு நன்கு விளங்கிக் கொண்டிருந்தது. விவேகானந்தர் ஒருவருக்கு உணவு அளிப்பதை முன்னிட்டு வீட்டில் இரண்டொருவர் பட்டினிகிடக்க நேரிடும்; அல்லது அவர் ஒருவருக்கு வயிறார வழங்குதற்கு ஏற்ற அளவுதான் உணவு ஆக்கப்பட்டிருக்கும். அதை முழு மனதோடு அவருக்கு எடுத்து வழங்குவார்கள். வழங்க முன் வந்தவர்களது வசதியை முன்னிட்டு அவர் தமக்கு அளிக்கப் பட்ட பிக்ஷான்னத்தை ஏற்க மறுப்பாராகில் ஏழைமக்கள் அதைக்குறித்துப் பெரிதும் துன்புறுவார்கள். தங்கள் வீடு தேடி வந்த துறவியர் ஒருவருக்கு வயிறார உணவு அளிக்கா விட்டால் தங்களுடைய வாழ்க்கையே அனர்த்தமாய்ப் போகும் என்று அவர்கள் உணர்வார்கள். எனவே இல் வாழ்ந்திருந்த எளியார்களைத் திருப்திப் படுத்துதல் பொருட்டு அவர்கள் அளித்த அல்ப உணவை அவர் மகிழ்வோடு ஏற்றுக்கொள்ளுவார். ஏழையர்களுடைய பரந்த மனநிலையைக் குறித்து அவருக்கு மகிழ்ச்சி. உள்ளன்போடு அவர்களை அப்பரம புருஷர் ஆசீர்வதித்தார். ஆனால் நாட்டின் வறுமைநிலையைக் குறித்து அவர் தம்முள் மனம் நொந்து கொண்டிருந்தார். அப்படித் தாம் பட்ட துயரத்தை ஏழை மக்களிடம் அவர் காட்டிக்கொள்ளவில்லை. வறியோர்க்கு அழகு வறுமையில் செம்மை. அச்சிறப்பு நம்நாட்டு மக்களிடம் நன்கு விளங்கிக்கொண்டிருக்கிறது. ஆதலால்தான் அவர்களுடைய மனநிலையைக் கெடுத்துவிடாது, அவர்களுடைய பக்தி விசுவாசத்தைக் கெடுத்துவிடாது, அவர்களுடைய தயாள குணத்தைக் கெடுத்துவிடாது பொதுமக்களுக்கிடையில் பொருளாதாரத்தில் முன்னேற்றம் மிக வாய்க்கவேண்டும் என விவேகானந்தர் ஆழ்ந்து உணரலாயினர். பொது

மக்களுக்கு ஏராளமாகச் செல்வம் சேரவேண்டிய அவசியம் இல்லை. ஒரு வேளை மிகைபட்ட செல்வம் அவர்களுடைய சீரிய மனப்பான்மையைக் கெடுத்து விடக்கூடும். ஆனால் வயிறுர அருந்துதற்கு உணவும், உடலுக்குப் போதியவளவு உடையும் வாய்த்திருந்தால் அது அவர்களுக்குப் பெரிய வாய்ப்பாகும். அவர்கள் அரைப்பட்டினி, கால்பட்டினி கிடந்ததும், மேனியை மூடுதற்குப் போதிய துணி இல்லா திருந்ததும் விவேகானந்தர் மனதில் பெருந்துயரத்தை உண்டு பண்ணியது. மகாபாரதத்தில் அரியதொரு நிகழ்ச்சி இந்தியப் பண்புக்கு மூலாதாரமாக அமைந்திருக்கிறது. தர்மராஜன் யுதிஷ்டிரன் நிகழ்த்திய ராஜசூய யாகத்தை விடச் சிறந்தது, ஓர் ஏழை ஆசிரியன் உண்ணுதற்கிருந்த உணவை யெடுத்து வந்த விருந்தினனுக்கு வழங்கிவிட்டு உயிர் துறந்த நிகழ்ச்சி. அந்த ஆசிரியன் புரிந்த வேள்வியே தர்மனது ராஜசூய யாகத்தைவிட மேலானதென்று கீரிப் பிள்ளை ஒன்று அறிஞர்களுக்கு எடுத்து விளக்கியது. இந்தியாவின் சிறந்த நாகரிகத்துக்கு எடுத்துக் காட்டாக அவ்வரலாறு அமைந்திருக்கிறது. விவேகானந்தர் அதை ஞாபகத்துக்குக் கொண்டுவந்தார். அந்த ஏழை ஆசிரியன் போன்ற நல்ல மனம் படைத்த, தியாகபுத்தி படைத்த ஏழை யர்கள் இன்றைக்கும் இந்தியாவில் ஆங்காங்கு அமைதியாக வாழ்ந்திருக்கிறார்கள் என்பதை விவேகானந்தர் நேரில் கண்டறிந்தார். ஆதலால்தான் அவர்கள் பொருட்டுத் தமது வாழ்வை ஒப்படைக்கவேண்டும் என்று அவர் தீர்மானிக்க வேண்டியதாயிற்று.

ஏழைமக்களோடு சுவாமி விவேகானந்தர் அளவளாவிப் பேசிக்கொண்டிருந்த பொழுது அவர்களுடைய லௌகீகப் பழக்க வழக்கங்கள் பலவற்றை மாற்றியமைத்துக் கொண்

டால் நலமாயிருக்குமே, என்று அவர் எடுத்துப்பேசுவார். அப்பேச்சுக்கு ஏழைமக்கள் அன்போடும் ஆதரவோடும் செவிசாய்ப்பார்கள். ஆனால் தலைமுறை தலைமுறையாகத் தாங்கள் பழகி வந்திருந்த வாழ்க்கை முறையை மாற்றி யமைப்பது ஒவ்வாது என்று அவர்கள் எடுத்துரைப்பார்கள்; அது தர்மத்திற்கு முற்றிலும் முரண்பட்டது என்றும் அவர் கள் எடுத்து மொழிவார்கள். அவற்றையெல்லாம் கேட்டுவந்த விவேகானந்தர் பொதுமக்களுக்கிடையில் நல்ல முறையில் கல்வி வழங்குவது ஒன்றே சில பொருந்தாத பழக்க வழக் கங்களை மாற்றியமைப்பதற்கு உற்ற உபாயம் என உணர்ந் தார். ஜாதியில் கீழோர் எனப்படுபவரிடத்தே ஜாதிவேற் றுமையும் ஜாதிப்பிரிவினையும் ஆழ்ந்து ஊறிக்கிடக்கிறது என்பதைத் தமது தேச சஞ்சாரத்தின் பொழுது அவர் அறிந்துகொண்டார். இமயமலையின் சில பகுதிகளில் திபேத்துப் பக்கத்திலிருந்து வந்து குடியேறியவர்களுக் கிடையில் ஒரு மனைவிக்குக் கணவர்கள் பலர் இருக்கின்ற புல்லிய பழக்கத்தை விவேகானந்தர் காணலாயினர். அப் பழக்கம் பண்புடையோர்க்குப் பொருந்தாதே என்று அவர் எடுத்துரைத்த பொழுது அம்மலைவாசிகள் விடுத்த விடை விவேகானந்தரைத் திகைத்திடச் செய்தது. சுயநலமற்றி ருக்க வேண்டிய மனிதன் பெண்ணோடு கூடிவாழ்தலில் மட் டும் ஏன் அவ்வளவு சுயநலம் படைத்தவனாக இருக்கவேண் டும் என்பது அம்மலை மனிதன் கொண்டுவந்த விடையாகும். அவ்வினத்தார்க்கிடையில் ஆண்பாலர் ஜனத்தொகை பெண் பாலரது தொகையைவிடப் பன்மடங்கு அதிகம். எனவே ஒரு மனைவிக்குக் கணவர்கள் பலர் வாய்ப்பதைத் தவிர வேறு உபாயம் இல்லை. ஆதலால் உலகில் மக்களுக்கிடையில் இருந்துவரும் பல விபரீதமான பழக்க வழக்கங்களை அன்

புடனும் அனுதாபத்துடனும் ஆராய்ந்து பார்த்தால் புல்லிய வைகளாகத் தென்படுகின்ற பழக்க வழக்கங்கள் பல, உண்மையில் புல்லியவைகள் அல்ல என விளங்கும். இப்படி யெல்லாம் சமுதாயத்தின் நிலைமைகளைச் சரியாக அறிந்து கொள்ளுதற்கு எளியவர்களோடு விவேகானந்த சுவாமிகள் வைத்த இணக்கம் நன்கு உதவியது.

---

14. போலீசாரோடு சந்திப்பு

வாழ்க்கையைப் பற்றிய ஒரு விஷயம் யோக சாஸ்திரத் தில் சொல்லப்பட்டிருக்கிறது. அதாவது ஒரு மனிதன் தீவிர மாக யோக சாதனங்களை அனுஷ்டிக்க ஆரம்பிக்கிறபொழுது தேவர்களே அதற்குத் தடை போடுகின்றனர். ஏனென்றால் தாங்கள் அடைந்துள்ள பெருநிலைக்கு மற்றவர்கள் வரக் கூடாது என்னும் மனப்பான்மை மக்களுக்கு மட்டுமன்று, தேவர்களுக்கும் உண்டு. இனி, நல்வழியில் செல்கிறவனுக்கு உலகத்தவர் இடும் இடுக்கண் நமக்குக் கண்கூடாகத் தெரி கிறது. ஒருவன் தெய்வத்தை அடையத் துறவறம் பூண்டால் உற்றார், உறவினர், நண்பர் எல்லாரும் அதற்கு ஆட்சேபம் செய்வார்கள். பின்பு துறவறம் பூணுதற்குப் பதிலாக ஒருவன் சூதிலும், வாதிலும், கூடா நட்பிலும், கூடா ஒழுக் கத்திலும் கீழிறங்கும் பொழுது அதற்குத் தடை போடுவார் மிகச் சிலரே. ஸ்ரீ ராமகிருஷ்ணருடைய இளம் சிஷ்யர்கள் குருதேவர் காலமான பிறகு துறவறத்தை மேற்கொண்டனர். அப்பொழுது அவர்களுக்கு உண்டான தடை இவ்வளவு அவ்வளவு அல்ல. தந்தையர் ஒருவர் தனயன் துறவறம்

பூண்டதை முன்னிட்டு அவனைக் கொலை செய்யவே கிளம்பி வந்தார். மற்றொருவர் தன் மகன் மாண்டு போயிருந்தால் தமக்கு அவ்வளவு வருத்தம் வந்திராது என மொழிந்தார். இதுவே உலகத்தவர்களது போக்கு. அறியாமையினால் அவர்கள் உண்டுபண்ணுகிற இடைஞ்சல்களை யெல்லாம் மீறி தெய்வ நெறியில் செல்லுகிற ஆத்ம சாதகர்கள் மிகச் சிலரேயாவார். ஸ்ரீ ராமகிருஷ்ணரின் சந்நியாசி சிஷ்யர்கள் அப்படி முட்டுக்கட்டைகளை யெல்லாம் பொருள்படுத்தாது தங்கள் சீரிய லட்சியத்தில் இறங்கினர்.

ஆரம்பதசையில் அவ்வாலிபத் துறவியர்களுக்குத் துணை புரிய யாரும் முன்வரவில்லை. அவர்களுக்கு அக்காலத்தில் மடாலயம் என்பது ஒன்றுமில்லை. பாழும் கட்டடம் ஒன்று அவர்களுக்கு அகப்பட்டது. அதில்தான் அவர்கள் குடியிருந்து கொண்டு தீவிரமாக ஆத்ம சாதனங்களில் ஈடுபட்டனர். அந்நாட்களில் அவர்களுக்கு உண்பதற்குப் போதிய அளவு உணவு அகப்படவில்லை. எளிதில் அகப்பட்ட அரிசியைக்கொண்டு அவர்கள் அன்னம் சமைப்பார்கள். அத்துடன் காட்டுக் கீரையைக்கொண்டு பதார்த்தம் ஏதாவது பக்குவப்படுத்திப் பசியைத் துடைத்துவிட்டுத் தங்கள் மேலாம் கருமத்திலேயே கண்ணும் கருத்துமாயிருப்பர். Man shall not live by bread alone—மனிதன் உணவைக்கொண்டு மட்டும் உயிர் வாழ்பவன் அல்லன். அருள் நாட்டம் என்னும் மற்றொரு பெரியநிலை அவனது உயிரை ஓம்பி வருகிறது என்பது வாழ்வைப் பற்றிய மேலாம் தத்துவம். அத்தத்துவத்துக்கு ஒப்ப இந்த இளம் துறவியர்கள் உடலைப்பற்றியோ அதை ஓம்புதலைப் பற்றியோ கவலை ஒன்றும் கொள்ளாது சாதனங்களில் ஆழ்ந்து ஈடுபட்டு வந்தனர். அவர்கள் புரிந்த சீரிய சாதனங்களும் எண்ணிய உயர்ந்த எண்ணங்

களும் அவர்களுக்கு அருள் உணவாய் அமைவனவாயின. அந்தப் போக்கில் அவர்கள் ஆனந்தமாக உயிர் வாழ்ந்து வந்தார்கள். உலகத்தவர்கள் புசித்துவந்த நல்லுணவுக்கும் அவர்களுக்கும் வெகுதூரம்.

அந்த வாலிப சந்நியாசிகளுக்குத் தலைவராகத் திகழ்ந்தவர் சுவாமி விவேகானந்தர். ஸ்ரீ ராமகிருஷ்ண பரமஹம்ஸர் தேகவியோகம் ஆன பிறகு இளம் துறவியர்களில் சிலர் தங்கள் கல்லூரிப் படிப்பைப் பூர்த்தி பண்ணிய பிறகு ஆத்ம சாதனத்துக்குத் திரும்பலாம் என்றெண்ணி அவரவர் வீடு சென்றனர். ஆனால் விவேகானந்தர் அதற்கு ஆமோதிப்புத் தரவில்லை. அவர்கள் தீர்மானித்திருந்த மேலாம் லட்சியத்தில் உற்சாக மூட்டி அவர்களையெல்லாம் திரட்டிக்கொண்டு வந்து அக்குடிபோன வீட்டில் வாழ்ந்திருக்கச் செய்தார். அவர் செயலைக்குறித்துப் பெற்றோர்கள் பலருக்கு அவர்மீது வருத்தம் மிக இருந்தது. அதையெல்லாம் விவேகானந்த சுவாமிகள் பொருள்படுத்தவில்லை. ஒருநாள் கல்கத்தாவில் சந்தடி நிறைந்த வீதி ஒன்றில் போலீஸ் உத்தியோகஸ்தர் ஒருவர் சுவாமி விவேகானந்தரைச் சந்தித்தார். அவரோடு சில வார்த்தைகள் பேசித் தம்மை அறிமுகப்படுத்தினார். பள்ளிப் பிள்ளையாக இருந்தபொழுதே அந்த நரேந்திர நாதனைத் தாம் பார்த்திருந்ததாகவும் காலம் சென்ற அவருடைய தந்தை விசுவநாத தத்தருக்கும் தமக்கும் நெருங்கிய நட்பு இருந்தது என்றும் அவர் தெரிவித்துக் கொண்டார். அன்று இரவு தம் வீட்டுக்கு விவேகானந்தர் விருந்துக்கு வர வேண்டும் என்று அழைத்தார். அவரோடு உரையாடுவதற்கு எத்தனையோ விஷயங்கள் இருந்தனவென்றும் போலீஸ் இன்ஸ்பெக்டர் தெரிவித்துக் கொண்டார். அவர் அழைப்புக்கு விவேகானந்தரும் சம்மதம் கொடுத்து அவர் வீட்டு விலாசம் வாங்கிக்கொண்டார்.

அன்று இரவு சுமார் எட்டு மணிக்கு சுவாமி விவேகானந்தர் போலீஸ் இன்ஸ்பெக்டர் வீட்டுக்கு விருந்தினராய்ப் போய்ச் சேர்ந்தார். மகிழ்வுடன் அவர் வரவேற்கப்பட்டார். இன்ஸ்பெக்டரும் இந்த இளம் துறவியும் தனியாக ஓர் அறையில் அமர்ந்து கொண்டு உரையாட ஆரம்பித்தனர். போலீஸ் உத்தியோகஸ்தர் நரேந்திரநாதரின் தந்தையோடு தொடர்வு கொண்டிருந்ததை மிகச் சுருக்கமாகச் சொன்னர். அதைப்பற்றி அதிகமாக விசாரித்துத் தெரிந்துகொள்ள விவேகானந்தருக்கு மனம் வரவில்லை. ஏனென்ருல் பூர்வ வரலாறுகளை யெல்லாம் அறவே மறந்துவிடுவது யதிதர்மம். சந்நியாசி ஒருவன் பாரமார்த்திக வாழ்வில் புதிய பிறவி எடுத்துக்கொண்டதற்குச் சமானம். மற்ற மனிதர்களுக்கு முற்பிறவிகளைப் பற்றி ஒன்றும் தெரியாது. சரீரத்தை மாற்றியமைத்ததன் வாயிலாக முற்பிறவிகளின் விருத்தாந்தங்களெல்லாம் மறைத்து வைக்கப்பட்டிருக்கின்றன. பின்பு சந்நியாசி ஒருவன் பூர்வாசிரம விஷயங்களையெல்லாம் முற்பிறப்புக்கு உரியவைகள் போன்று முற்றும் மனதினின்று துடைத்து விடவேண்டும். அந்த லட்சியத்துக்கு ஒப்ப விவேகானந்தர் போலீஸ் இன்ஸ்பெக்டரிடம் பழைய தொடர்பைப் பற்றி வினு ஒன்றும் போடவில்லை. வாழ்க்கைக்குப் பயன்படுகிற நல்ல விஷயங்களைப் பேசுதற்கென்றே சுவாமிகள் அங்குச் சென்றிருந்தார். போலீஸ் உத்தியோகஸ்தர் பேச்சுக்களை வளர்த்துக் கொண்டே போனர். துப்பு அறிதலில் தமக்கு வாய்த்திருந்த திறமைகளைப்பற்றி மிக விரித்து உரைத்தார். உற்சாக மூட்டக்கூடிய கட்டுக் கதைகள்போல் அவர் பேச்சின் பல பகுதிகள் தென்பட்டன. இப்பொழுது இரவு மணி பத்து ஆயிற்று. உணவு அருந்தியான பிறகு பாக்கிப் பேச்சை வைத்துக் கொள்ளலாம்

என்று விவேகானந்தர் தாம் அழைக்கப்பட்டிருந்ததன் முக்கியமான நோக்கத்தை இன்ஸ்பெக்டருக்கு ஞாபகமூட்டினர்.

இப்பொழுது போலீஸ் உத்தியோகஸ்தர் திடீரென்று தமது சொருபத்தை மாற்றிக் கொண்டார். அதிதிபதியாக இருக்கவேண்டியவர் ஒரு நீதிபதிபோன்றும், பிரதிவாதியை எதிர்த்துப் போராடுகிற வாதி போன்றும், தமது பொறுப்பான பணியை முறை பிறழாது நடாத்தி வருகிற போலீஸ் உத்தியோகஸ்தர் போன்றும் மனப்பான்மை பூண்டார். தமது பேச்சையும் அதற்கேற்ற பிரகாரம் மாற்றிக்கொண்டார். அதிகாரத் தோரணையில் அவர் வினவுவராயினர். "நல்லது நரேந்திரா, உன்னை நான் இங்கு வரவழைத்ததன் நோக்கத்தை உனக்குத் தெரிவித்தாக வேண்டும். உனது போக்கும் உனது சகாக்கள் போக்கும் எனக்குப் பிடிக்கவில்லை. உன் தந்தையிடம் நான் வைத்திருந்த அபிமானத்தை முன்னிட்டு உன்னிடத்தில் சிறிது பட்சமாகவே நான் நடந்து கொள்கின்றேன். உன் கூட்டத்தின் அந்தரங்கத் திட்டங்களெல்லாம் எனக்கு நன்கு தெரியும். அவையாவும் மறைக்காது என்னிடம் மொழிந்துவிடு. உனக்கோ, உன் கூட்டத்தாருக்கோ ஆபத்து ஒன்றும் வாராத வழியைப் பிறகு நான் உனக்குக் காட்டித் தருகிறேன். அப்படியல்லாது உனது சூழ்ச்சியை நீ மறைத்து வைக்க முயலுவாயாகில் உன்னை நான் விடப் போவதில்லை. விஷயம் முழுதும் வெளியாவதற்கு முன்பு இந்த அறையை விட்டு நீ வெளியே போக முடியாது."

வியப்போ, அச்சமோ, பதைபதைப்போ சிறிதேனும் கொள்ளாதவராக விவேகானந்தர் மறுத்துக் கேட்டார். "நீங்கள் பகர்வது எனக்கு ஒன்றும் புரியவில்லை. நீங்கள்

என்னைப் பற்றியோ, என் கூட்டத்தாரைப் பற்றியோ என்ன கருத்துக் கொண்டிருக்கிறீர்களோ அதை ஒளிவு மறைவின்றித் தெளிவுற எடுத்து இயம்புங்கள். நான் பொய்யோ, பித்தலாட்டமோ பேசுபவன் அல்லன். நீங்கள் கூறுவதில் உண்மை ஏதாவது இருக்குமாகில் அதை முற்றும் ஒத்துக் கொள்கிறேன். மாறுபட்டுள்ள கருத்து ஏதேனும் இருக்குமாகில் அதற்கும் பொருத்தமான மறுமொழி கூறி உங்கள் ஐயத்தை அகற்றி வைக்கிறேன்."

போலீஸ் இன்ஸ்பெக்டர்: நரேந்திரா, உன் பிதாவுக்கு இத்தகைய பிள்ளையாக நீ வந்து வாய்ப்பாயென்று நான் எதிர்பார்க்கவில்லை. அதைக் குறித்து நான் மிக வருந்துகிறேன். உன் தந்தையார் என்மீது வைத்திருந்த விசுவாசத்தை முன்னிட்டு நான் உனக்கு ஏற்படப் போகிற விபத்தைக் கூடியவரையில் குறைக்கிறேன். அத்துடன் அரசாங்கத்துக்கும் நான் கடமைப்பட்டவனாக இருக்கிறேன். ராஜவிசுவாசத்தினின்று நான் இம்மியளவும் பிசகேன். உன்னுடைய போக்கிரிக் கூட்டத்தையோ, உன்னையோ நான் சும்மா விடப்போவதில்லை. உங்களுடைய சூழ்ச்சிகளையெல்லாம் பற்றிய புள்ளி விவரங்கள் எனக்குக் கிடைத்திருக்கின்றன. ஆங்கிலேய அரசாங்க உத்தியோகஸ்தர்களை ஒழிப்பதற்கு நீங்கள் சதியாலோசனை பண்ணிக்கொண்டிருக்கிறீர்கள். கொலைபாதகர்களாவதற்கு நீங்கள் விரதம் பூண்டிருக்கிறீர்கள். உங்களை நான் விடப் போவதில்லை. என் கையில் நீங்கள் எல்லோரும் அகப்பட்டு விட்டீர்கள். உள்ளதையெல்லாம் உள்ளபடி உரைப்பாயாகில் நீ தப்பிப்பதற்கு நான் ஏதாவது வழி தேடப் பார்க்கிறேன்.

விவேகானந்தர் வீராவேசம் பூண்டவராக இப்பொழுது தென்பட்டார். அமைதியாக இரண்டடி பின்வைத்துக்

கதவை உட்பக்கம் தாழ்போட்டுக்கொண்டார். வீராவேசத்துக்கிடையில் மன உறுதியுடனும், அமைதியுடனும் போலீஸ் ஆபீஸர் அருகில் வந்தார். அவருடைய வலக்கரத்தைத் தமது இடக்கரத்தால் பற்றிப் பிடித்தார். அப் பிடியின் உறுதியை போலீஸ் ஆபீஸர்தான் அறிந்திருப்பார்! வேறு யாருக்கும் அந்த விஷயம் எட்டவில்லை. பிறகு இன்ஸ்பெக்டரை முகத்தில் ஏறிட்டுப் பார்த்து வலக்கையை உயர்த்திப் பிடித்துக்கொண்டு விவேகானந்தர் உரைப்பாராயினர். "போலீஸ் இன்ஸ்பெக்டரே, உம் போன்ற நான்கு பேர் ஒன்றுகூடி வந்தாலும் அந்த நான்குபேரையும் தட்டி மாய்க்கும் உடல் வலிவு எனக்கு உண்டு. நீர் கூறுகிறபடி நான் ஒரு போக்கிரி என்றால் இந்த க்ஷணத்தில் உம்மைக் கூற்றுவனுக்கு இரையாக்கும் வாய்ப்பு எனக்குக் கிடைத்திருக்கிறது. நெஞ்சில் ஒரு குத்துவிடுவேனாகில் ஹிருதயம் வெடித்து ரத்தத்தைக் கக்கிக்கொண்டு இந்த இடத்திலேயே ஒழிந்துபட்டுப் போவீர். இரண்டாவது குத்துக்கு அவசியம் ஏற்படாது. நீர் எண்ணியபடி நான் போக்கிரி அல்லன் என்பதை என் செயலால் நிரூபிக்கிறேன். உம்மை மன்னிக்கிறேன்; பிழைத்துப் போம்"—இங்ஙனம் அதட்டிவிட்டு விவேகானந்தர் கதவைத் திறந்துகொண்டு தம் போக்கில் போய்விட்டார். போலீஸ் ஆபீஸர் கிளப்பிய குற்றச்சாட்டு அங்ஙனம் முடிவு பெற்றது! பிறகு சுவாமி விவேகானந்தரிடம் அந்தப் போலீஸ் இன்ஸ்பெக்டர் ஜன்மத்திலும் எட்டிப் பார்க்கவில்லை. அவர் துப்பறிதல் முயற்சி அப்படி முற்றுப் பெற்றது.

விவேகானந்த சுவாமிகள் பரிவ்ராஜக பரமஹம்ஸராக இந்தியா முழுதிலும் சஞ்சாரம் செய்து கொண்டிருந்தபொழுது மத்தியப் பிரதேசத்தில் எதிர்பாராத நிகழ்ச்சி

ஒன்று நேர்வதாயிற்று. அப்பொழுது நாட்டினுள் தென்பட்டுக் கொண்டிருந்த சூழ்நிலை ஒன்றே அதற்கு முகாமையாயிற்று. அந்தச் சூழ்நிலையோ 1857ஆம் ஆண்டில் நிகழ்ந்த சிப்பாய்க் கலகத்தை ஞாபகமூட்டுவதற்கு ஏதுவாயிற்று. மக்களுள் ஒருபகுதியினர் அப்பொழுதிருந்த ஆங்கிலேய அரசாட்சி யின் மீது அதிருப்தி கொண்டிருந்தனர். அந்த அதிருப்தியை அண்மையில் மகாத்மாகாந்தி விளக்கியதுபோன்று பகிரங்க மாக அவர்கள் அரசாங்கத்துக்குத் தெரிவிக்கவில்லை. சிப்பாய்க் கலகத்திற்கு முன்னேற்பாடாக, துறவியர்கள் வேடம் பூண்டுகொண்டு ஒரு கூட்டத்தார் பல இடங்களுக் குச் சென்று தங்களது கலகத் திட்டத்தையெல்லாம் மறை முகமாக ஆயத்தப்படுத்தினர். வெளித் தோற்றத்துக்கு மதப் பிரசாரம் செய்பவர் போன்றும் தெய்வீக விஷயங் களைப்பற்றியே பேசுபவர்கள் போன்றும் அவர்கள் தென் பட்டார்கள். ஆதலால் அவர்கள் மீது அரசாங்கம் சந் தேகப்படவில்லை. அடக்குமுறை எதையும் கையாள வில்லை. தடையெதுவுமின்றித் தங்கள் திட்டத்தையெல்லாம் அவர்கள் ஒழுங்குபடுத்தினர். திடீரென்று சிப்பாய்க் கலக மும் கிளம்பியது. அது அரசாங்கத்தையே கவிழ்த்து விடக் கூடிய அவ்வளவு வலிவு வாய்ந்திருந்தது. ஆயினும் பெரு முயற்சி யெடுத்துக்கொண்டு தங்கள் ஆற்றல்களை யெல்லாம் துரிதமாகக் கையாண்டு அக்கிளர்ச்சியை ஆங்கிலேய அரசாங்கத்தார் அடக்கினர்கள். பிறகு அக்கிளர்ச்சி உரு வெடுத்த முறையை யெல்லாம் அவர்கள் கூர்ந்து ஆராய்ச்சி பண்ணினர். துறவியர் வேடம் பூண்டிருந்தவர்களே அதற்கு மூலகாரணமாவர் என அறியலாயினர். அந்நிகழ்ச் சியை அரசாங்கத்தார் மறந்துவிடவில்லை. கிட்டத்தட்ட அதற்கு ஒத்த நிகழ்ச்சி ஒன்று விவேகானந்த சுவாமிகள்

தேசசஞ்சாரம் செய்தபொழுது நிகழ்ந்துகொண்டிருந்தது. மஞ்சள் துணிகளில் போட்ட முடிச்சுக்கள் ஆங்காங்கு மாமரங்களில் தொங்கிக்கொண்டிருக்கும். அவைகளை அரசாங் கத்தார் மிகக் கவனமாக ஆராய்ச்சி செய்து பார்த்தார்கள். அம் முடிச்சுக்களுள் காகித மடிப்புக்கள் அடங்கியிருந்தன. அக்காகிதங்களுள் ஏதேதோ வடிவங்களும், விளங்காத எழுத்துக்களும், அடையாளங்களும் வரையப் பெற்றிருந் தன. நிபுணர்கள் அந்த எழுத்துக்களையெல்லாம் கூர்ந்து ஆராய்ச்சி பண்ணிக்கொண்டிருந்தனர். இங்குமங்கும் சஞ் சாரம் செய்கிறவர்களுள் எந்தக் கூட்டத்தார் அதிகம்பேர் என்பதும் கவனிக்கப்பட்டது. போலீஸ் உத்தியோகஸ்தர் களுக்கு அரசாங்கத்தார் பூரண அதிகாரம் கொடுத்திருந்தார் கள். யாரையெல்லாம் பற்றி போலீசார் சந்தேகப்படுகிறார் களோ அவர்கள் மீது போலீசார் நேராக நடவடிக்கை யெடுத்துக்கொள்ளலாம். அப்படி ஏற்பட்டிருந்த நெருக் கடியை முன்னிட்டு எங்கும் பரபரப்பு நிறைந்திருந்தது. மக்கள் போலீசாரைக் குறித்து அஞ்சினர். போலீசார் பொது மக்கள் மீது சந்தேகம் மிகக் கொண்டனர். எங்கே னும் ஒரு சிறு கூட்டம் என்றால் அதன் அடிப்படை நோக்கம் யாதோ என்று போலீசார் ஆவல் மிகக் கொண்டிருந்தனர்.

நாட்டின் நிலைமை இங்ஙனம் இருந்தபொழுது சுவாமி விவேகானந்தர் ஓர் ஊர் வழியாகத் தம்போக்கில் போய்க் கொண்டிருந்தார். போலீஸ் சிப்பந்திகள் இருவர் பின்புற மிருந்து சப்தமிட்டனர். சுவாமிகள் திரும்பிப் பார்த்தார். ஆங்கு நிற்கும்படி அவருக்குச் சைகை காட்டிவிட்டு போலீஸ் சிப்பந்திகள் சுவாமிகளை அணுகினர். 'என்ன விஷயம்?' என்றார் வழியில் நின்றவர். 'உங்களை அழைத்து வரும்படி இன்ஸ்பெக்டர் உத்தரவிட்டிருக்கிறார்' என்றனர் கான்ஸ்

டேபிள்கள். சுவாமிகளும் அமைதியாக அவர்களுடன் சென்றார். சிறிது நேரத்துக்குள் போலீஸ் ஸ்டேஷன் போய்ச் சேர்ந்தார்கள். இன்ஸ்பெக்டர் முன்னிலையில் விவேகானந்தர் நிறுத்தப்பட்டார். 'என்னை அழைத்ததன் காரணம் யாதோ?' என வந்தவர் வினவினர். 'உமக்குத் தடை யுத்தரவிடுகிறேன். எங்குச் செல்லுதற்கும் உமக்கு அதிகாரம் இல்லை. இங்கு நீர் இப்பொழுது காவலில் வைக்கப்படுகிறீர்,' என அதிகார தோரணையில் போலீஸ் இன்ஸ்பெக்டர் உத்தரவிட்டார். கான்ஸ்டேபிள் இருவரிடம் கைகாட்டினர். அவர்கள் சுவாமிகளைப் பக்கத்து அறைக்கு அழைத்துச் சென்று அடைத்து வைத்துவிட்டனர். அவ்வறையினுள் ஒரு நீண்ட நாற்காலி. சுவாமிகள் அதன்மீது அமைதியாக அமர்ந்துகொண்டார். சிறிது நேரத்திற்குள்ளாக இன்னும் இருவர் அச்சிற்றறையினுள் இழுத்துவரப்பட்டனர். சுவாமிகளின் இருபக்கமும் அந்த இரண்டு மனிதர்களை உட்கார வைத்துவிட்டுப் போலீசார் பழையபடி இரும்புக்கம்பிக் கதவை மூடி, பூட்டுப் போட்டனர்.

இக்காட்சியை நாம் ஒருவாறு யூகிக்கலாம். கிட்டத்தட்ட இரண்டாயிரம் வருஷங்களுக்கு முன்பு ஏசுநாதர்மீது குற்றம் சாட்டப்பட்டது; சிலுவை ஏற்றுதற்கு உத்தரவு பிறந்தது. உத்தரவு செயலாகப் பரிணமித்தது. சிலுவையில் உலக ரக்ஷகர் ஏற்றப்பட்டார். அதே வேளையில் அவருக்கு இருமருங்கிலும் வேறு இரண்டு குற்றவாளிகள் சிலுவையில் ஏற்றப்பெற்றனர். கிட்டத்தட்ட அக்காட்சிக்கு ஒத்ததாக இருந்தது ஈண்டு இச்சிற்றறையினுள் அடைக்கப்பெற்றிருந்த மூவரும் கொடுத்த காட்சி. நிகழ்ந்தவற்றையெல்லாம்பற்றிச் சிறிதும் கவலையற்றவராக விவேகானந்தர் ஒரு நீண்ட நாற்காலியின் நடுவில் உட்கார்ந்துகொண்டிருந்தார்.

அவருக்கு இருமருங்கிலும் இருவர் பயந்து நடுங்கிக்கொண்டு உட்கார்ந்திருந்தனர். தங்கள் கதி என்னகுமோ என்னும் திகில் அவர்கள் உள்ளத்தில் குழம்பிக்கொண்டிருந்தது. அதன் அறிகுறியும் அவர்கள் முகத்தில் வெளியாய்க்கொண்டிருந்தது.

இரண்டு மூன்று மணிநேரம் கடந்து போயிற்று. பிறகு கதவைத் திறந்துகொண்டு போலீஸ் இன்ஸ்பெக்டர் அவ்வறையினுள் வந்தார். கையில் பிரம்பு பிடித்திருந்தார். மருண்டு போயிருந்த மனிதர் இருவரிடம் சீறுபுலிபோல் பாய்ந்து கேள்விகள் சில கேட்டுக்கொண்டிருந்தார். அந்தப் பயங்கரக் காட்சியைப் பற்றிச் சிறிதும் கவலையற்றவராய் சுவாமி விவேகானந்தர் நாற்காலியின்மீது அமர்ந்திருந்தார். அவர் உட்கார்ந்திருந்த கோலமே போலீஸ் இன்ஸ்பெக்டருக்குச் சிறிது எரிச்சலூட்டியது. அதிகாரம் செலுத்துகிறவர்களுடைய அதிகாரத்தைப் பொருள்படுத்தாது அநாயாசமாய் அமர்ந்திருப்பவர்மீது மிகைபட்ட சினம் மூள்வது தானே இயல்பு! ' ஓய் சந்நியாசியாரே! உம்மையும் நான் எளிதில் விடப்போவதில்லை,' என்று அதிகாரத் தோரணையிலும் அதற்கிடையில் சிறிது மரியாதை காட்டியும் அவர் பேசினர். அவர் மரியாதை காட்டியதற்குக் காரணம் வேறு ஒன்றுமன்று. குற்றம் சாட்டி அறையில் அடைத்து வைத்தவர்களிடம் மரியாதையாகப் பேசும் இயல்பு போலீசார் உலகில் இல்லை. ஆனல் இங்குத் தம்மை யறியாது அவர் சிறிது மரியாதையாகப் பேசியதற்குக் காரணம் விவேகானந்தரிடமிருந்து பொலிந்துகொண்டிருந்த பொலிவேயாம். ஹஸ்திஞபுரத்திற்குத் தூது வந்த கிருஷ்ணனை அவமானப்படுத்தவேண்டும் என்று கௌரவர் கருதியிருந்தனர். ஆனல் கண்ணபிரானைக் கண்டதும் தங்களையறியாது அவர்கள் எழுந்து நின்றனர். விவேகானந்தர் வடிவில் இலங்கிய தெய்விகப்

பொலிவுக்குப் போலீஸ் இன்ஸ்பெக்டர் தம்மையறியாது மரியாதை கொடுக்க வேண்டியதாயிற்று. "என்னை எவ்வளவு காலம் இங்கே பிடித்துவைத்திருக்கப் போகிறீர்கள்?" என்று சாந்தமாக சுவாமிகள் வினவினர். "ஓ, விரைவில் நீர் வெளியேகிப் போகலாம் என்று எண்ணவேண்டாம். பத்து நாளோ, பதினைந்து நாளோ, ஒரு மாசமோ உம்மை அடைத்து வைக்கப்போகிறோம்" என்றார் இன்ஸ்பெக்டர். "ஒரு மாசம் தானா? அதற்குமேல் என்னை உங்களோடு வைத்திருக்கமாட்டீர்களா?" எனச் சிறிது ஆவல் கொண்டவர் போன்று விவேகானந்தர் எடுத்துக்கேட்டார். அத்தகைய கேள்வியை போலீஸ் இன்ஸ்பெக்டர் எதிர்பார்க்கவில்லை. "ஏன்? அதிக நாள் சிறையில் அடைப்பட்டுக்கிடக்கச் சம்மதமோ?" என்றார் அவர். "ஆம், என்னை நெடுநாளைக்குக் காவலிலேயே வைத்துவிடுங்கள்" என்றார் விவேகானந்தர். "அப்படி ஏன் அடைபட்டுக்கிடக்க நீர் விரும்புகின்றீர்?" என இன்ஸ்பெக்டர் மறுத்துக்கேட்டார். "நான் ஒருவேளை உணவுக்கு வீடுவீடாய் அலைந்து திரியவேண்டியதாய் இருக்கிறது. உங்கள் காவலில் நான் இருந்தால் நாள் ஒன்றுக்கு இரண்டுவேளை உணவு தானாக என்னைத்தேடி வந்து சேரும். நானோ கவலையற்றுக் கடவுள் சிந்தனையில் ஈடுபட்டிருக்கலாம்" என சுவாமி விவேகானந்தர் தமக்கு வாய்த்த இடுக்கணைச் சிறந்த வசதியெனப் பொருள்படுத்தினர். இப்படியும் ஒரு மனிதர் இருப்பாரோவென்று போலீஸ் இன்ஸ்பெக்டர் சிறிது வியந்து நின்றார். போலீஸ் கான்ஸ்டேபிள் இருவரைக் கூப்பிட்டார். "இவரை இப்பொழுதே வெளியில் ஓட்டுங்கள்" என்று உத்தரவு போட்டார். விவேகானந்த சுவாமிகளோ அரசாங்கத்தாரிடமிருந்து ஒருவேளை உணவு கூடப்பெறாது வெளியேக வேண்டியதாயிற்று.

இந்தியர்களைச் சாந்த முறையில் சுதந்தரத்துக்காகப் போராடும்படி தூண்டியவர் மகாத்மா காந்தி. சிறைச்சாலையைத் தவச்சாலையாக மாற்றிக்கொள்ள வேண்டும் என்று சுதந்தரப்போர் புரிந்தவர்களுக்கு அவர் பயிற்சியளித்திருந்தார். அத்தகைய பெரு நிகழ்ச்சி இருபதாம் நூற்றாண்டில் நிகழ்வதாயிற்று. ஆனால் பத்தொன்பதாம் நூற்றாண்டின் இறுதியிலேயே சிறிது நேரத்துக்காவது சிறைச்சாலையைத் தவச்சாலையாக மாற்றியமைத்தவர் சுவாமி விவேகானந்தர். இங்குக் காலத்தைப்பற்றிய தத்துவம் ஒன்றைக் கருத்தில் வாங்கிக் கொள்வது அவசியமாகிறது. கணப்பொழுதும் கற்பகாலமும் தத்துவத்தில் ஒன்றே. மனிதன் அடைந்துள்ள பரிபாகத்துக்கு ஏற்பக் கணப்பொழுதைக் கற்பகாலமாக்கலாம்; கற்பகாலத்தைக் கணப்பொழுதாக்கலாம். சுதந்தரத்துக்காகப் போராடிய தேசாபிமானிகள் வருஷக்கணக்காகச் சிறைவாசம் செய்ய வேண்டியதாயிற்று. அதில் மகாத்மா காந்தி கைதேர்ந்தவர். சிறைவாசத்தை அவர் சீரிய காரியங்களுக்குப் பயன்படுத்தினார். சுவாமி விவேகானந்தர் சில மணி நேரம்தான் சிறையில் அடைபட்டிருந்தார் எனினும் அச்சிறிய நேரத்தை நெடுங்காலத்துக்கு நிகராகக் கருதிக்கொண்டு அதை ஈசுவர சிந்தனைக்கு நன்கு பயன்படுத்தினார்.

16. பாதிரிமார்களோடு பிணக்கு

கிறிஸ்துவமதம் தொடங்கிய காலம் தொட்டு அது இந்தியாவுக்குள் ஏதேனும் ஒரு வடிவெடுத்து வந்துகொண்டிருந்தது. அதற்கு இந்தியாவில் தங்கியிருப்பதற்கு ஹிந்துமதமும் இந்திய சமுதாயமும் மனமுவந்து இடங்கொடுத்து வந்தது. ஆங்கிலேயர்கள் இந்நாடு முழுதையும் கைப்பற்றிக் கொண்ட பிறகு இம்மதத்தைத் தீவிரமாக இந்தியாவினுள் புகுத்தத் திட்டம் போட்டிருந்தனர். மூன்று துறைகளில் இந்தியாவை வெல்லுதற்கு அமைத்திருந்த திட்டமாகும் அது. அரசியல் வெற்றி (Political conquest) முதலில் நிகழ்ந்தது. அடுத்தபடியாக (Economic conquest) பொருளாதாரத் துறையில் நாட்டை ஒடுக்கி முற்றிலும் தங்கள் கைவசத்தில் வைத்திருக்க அவர்கள் திட்டம் போட்டிருந்தனர். மூன்றாவதாக (Social conquest) சமூகத்திலிருந்தவர்களில் பெரும் பகுதியைக் கிறிஸ்து மதத்தின் வாயிலாக மேல் நாட்டு நாகரிகத்துக்கு உட்படுத்த அவர்கள் முயன்றனர். முதல் துறையில் வெற்றி பூர்த்தியாய்விட்டது. பாக்கி இரண்டு துறைகளில் ஆட்சி முறை பெரிதும் வலிவு பெற்று வந்தது.

மதம் மாற்றுதலில் ஹிந்துமதம் ஒரு பொழுதும் ஈடுபடுவதில்லை. ஏனென்றால் எல்லா மதங்களும் மக்களைக் கடவுள் பால் எடுத்துச் செல்ல வல்லவைகள் என்னும் எண்ணத்தில் ஹிந்துமதம் ஊறியிருக்கிறது. ஆனால் சீர்கேடு அடைந்துள்ள கொள்கைகளைத் திருத்தியமைப்பதில் ஹிந்துமதம் எப்பொழுதும் ஈடுபடுகிறது. அதில் அம்மதம் கையாளுகிற முறையோ அலாதிச் சிறப்பு வாய்ந்தது. ஏதேனும் ஒரு கொள்கைக் காரர்களைத் திருத்தியமைக்க வேண்டிய அவசியம்

ஏற்பட்டால் அக்கொள்கையை உடைத்திருப்பவர்களுக் கிடையில் தலையாய மனிதனைத் திருத்தியமைக்க ஹிந்துமத ஆசாரியர் முயலுவர். அவனைத் திருத்தியமைத்துவிட்டால் பின்பு அவனைப் பின்பற்றுகிறவர்களை யெல்லாம் அத்தலை வன் திருத்தியமைத்துக் கொள்வான். கிறிஸ்து மதத்தை இந்தியாவினுள் பரப்புவதற்குப் பாதிரிமார்கள் தீவிரமாக முயற்சி யெடுத்துக்கொண்டனர். ஆனால் ஹிந்து சமுதாயத் தில் பண்பாட்டில் மேல் நிலையில் இருந்தவர்களை அசைக்க அப்பாதிரிமார்களுக்கு இயலவில்லை. அவர்கள் புகட்ட வந்த மதத்தை Not true சரியான மதம் அன்று என ஹிந்துக்களில் மேலோர் புறக்கணித்தனர். தங்கள் மதத்தை யுக்திபூர்வமாக இன்னும் சிறந்த முறையில் கற்றறிவாளர்களுக்கிடையில் அப்பாதிரிமார்கள் வழங்க முயன்றபொழுது Not new- நீங்கள் புகட்டுவதில் புதுமை ஒன்றுமில்லை; அத்தத்துவங் களெல்லாம் ஹிந்து மதத்தில் ஏற்கனவே அமைந்துள்ளன என்று ஹிந்துக்கள் கிறிஸ்து மதத்தைப் பற்றிப் பாராமுக மாக இருக்கலாயினர். பின்பு கிறிஸ்து மதத்தை அனுஷ்டிப் பதில் தனிச் சிறப்பு ஒன்று இருக்கிறது என்று அப்பாதிரி மார்கள் ஹிந்து கற்றறிவாளர்க்கிடையில் காட்டித்தர முயன் றனர். அதற்கு மறுமொழியாக ஹிந்து அறிஞர் Not you— இந்தக் கோட்பாடுகளை சரியாக அனுஷ்டித்து வருகிறவர் கள் நீங்கள் அல்லர்; நாங்களே என முடிவு கட்டி விட்டனர். ஆக, ஹிந்து சமுதாயத்தில் மேலோர்க்கிடையில் கிறிஸ்தவ மதம் இடம் பெற இயலாது போயிற்று.

பிறகு கிறிஸ்தவப் பாதிரிமார்கள் தங்கள் மதத்தை ஆங்கிலேய அரசாங்கத்தின் ஆதரவை வைத்துக்கொண்டு இந்தியக் கீழ் மக்களுக்கிடையில் விரைந்து பரப்ப முயன் றனர். கீழ் மக்களது அறியாமையையும் வறுமையையும்

மேன் மக்களால் அவர்கள் ஒதுக்கி வைக்கப்பட்டிருந்த குறைபாட்டையும் நன்கு பயன்படுத்திக் கொண்டனர். நாற்சந்தி வீதிகளிலும், சந்தைக் கடைகளிலும், பொது இடங்களிலும் கிறிஸ்துமதப் பிரசாரம் ஏராளமாக நடைபெற்று வந்தது.

சுவாமி விவேகானந்தர் பள்ளிக்கூடத்து மாணக்கனயிருந்தபொழுது பள்ளியினின்று ஒரு நாள் மாலே வீட்டுக்குத் திரும்பிப் போய்க்கொண்டிருந்தார். வீதிகள் பல சந்திக்கிற ஓர் இடத்தில் கிறிஸ்துமதப் பிரசாரகராகிய பாதிரி ஒருவர் பிரசங்கம் பண்ணிக்கொண்டிருந்தார். ஹிந்து மதத்திலுள்ள ஊழல்களேயெல்லாம் சாங்கோபாங்கமாக அவர் சாமர்த்தியமாக எடுத்து விளக்கிக்கொண்டு போனர். இளைஞன் நரேந்திரனும் வீதியில் நின்று கொண்டு அப்பிரசங்கத்தைக் கேட்டு வந்தான். "கல்லே நீங்கள் கடவுள் என்று வைத்துக் கும்பிடுகிறீர்கள். அது எவ்வளவு மௌட்டியம் என்பதை நீங்கள் எண்ணிப் பார்ப்பதில்லே. கல்லால் ஆன உங்கள் கடவுளுக்கு இந்தப் பிரம்பால் நான் நாலடி கொடுத்தால் உங்கள் கல் கடவுள் என்ன பண்ணமுடியும்?" என்று கேட்டார். அவர் கூற்றைப் பொதுக்கூட்டம் வாய்பொத்திக் கேட்டுக்கொண்டிருந்தது. "நான் கேட்கும் இக்கேள்விக்குத் தக்க விடையை எடுத்துச் சொல்ல உங்களில் யாருக்காவது இயலுமா?" என்று மேலும் கேட்டார். அதற்கும் மறுமொழி வரவில்லே. ஆனல் சிறிது நேரத்திற்குள் இளம் நரேந்திரன் அருகில் போய் நின்று, "பரலோகத்திலிருக்கும் உங்கள் தெய்வத்தை நான் வாய்க்கு வந்தபடி திட்டுகிறேன். அந்தத் தெய்வம் என்ன பண்ணமுடியும்?" என்று இச்சிறுவன் கேட்டான். "ஓ, நீ செத்தபின் பரமபிதா உன்னே நரகத்தில் போட்டு இடர்ப்படுத்துவார்," என்ருர் பாதிரியார். "நீங்கள் செத்த பிறகு எங்கள் கல் தெய்வம்

உங்களைக் கல்குழியில் போட்டுக் கசக்கித் துன்புறுத்தும் என்றான் நரேந்திரன். இப்படி அவன் சின்னஞ்சிறுவனாக இருந்த பொழுதே கிறிஸ்துவ மதத்துக்கு முட்டுக்கட்டை போடும் மேலாம் பணியில் அனாயாசமாக ஈடுபட்டான்.

மக்களுக்கிடையில் மதப்பிரசாரம் செய்கிற பொழுது அவர்களை, "ஓ பாபிகளே!" என்று விளிப்பது கிறிஸ்துவ மத மரபு. ஏனென்றால் மக்கள் எல்லாம் பாபிகளாகப் பிறந்திருக்கிறார்கள். ஏசுநாதரை நம்புவதன் மூலமாகவே அவர்களுக்குப் பாப விமோசனம் ஆகும் என்பது அந்த மதத்தின் அடிப்படைக் கொள்கைகளுள் ஒன்று. ஆனால் விவேகானந்த சுவாமிகள் அமெரிக்காவில் தெளிந்தெடுத்த அறிஞர் கூட்டங்களில் शृण्वन्तु सर्वे अमृतस्य पुत्राः Listen ye children of immortal bliss. 'அமிர்தத்துக்கு உரிமையாளர்களான செல்வர்காள்! இச்சீரிய செய்திதைக் கேளுங்கள்' என்று உரைத்தபொழுது அமெரிக்க அறிஞர்களுக்கு உள்ளத்தில் ஊற்றெழும்பி உண்டான ஆனந்தத்துக்கு ஓர் அளவில்லை. ஏனென்றால் அவர்களுடைய நிஜ சொரூபம் அவர்களுக்கு ஞாபக மூட்டப்பட்ட பொழுது இயல்பாகவே ஆனந்தம் பெருக்கெடுத்தது. மனிதன் பாபி என்னும் கிறிஸ்துவ மதக் கோட்பாடு உண்மையோடு ஒத்ததன்று. அதைக் கேட்கும் பொழுதே மக்கள் மனம் குறுகுகிறது பேரானந்தப் பேற்றினுக்குப் பிள்ளைகாள்! என்னும் ஹிந்துமதச் செய்தியோ மக்கள் அனைவரையும் இயல்பாக இந்த நன்னெறிக்குக் கவர்ந்திழுக்கிறது. இப்படி விவேகானந்தர் விடுத்த வேதாந்த செய்தியை அமெரிக்க உலகம் ஆதரிக்க ஆரம்பித்தது.

கொஞ்சம் பரந்த பான்மையுடைய ஒரு சில பாதிரிமார்கள் சுவாமி விவேகானந்தரோடு சற்றுப் பொறுமையாகவும் தங்களுக்கு எட்டிய யுக்தி பூர்வமாகவும் விவாதிக்க வந்தனர்.

உலகை உய்விக்க வந்தவர் ஏசுநாதர். அவர் இறைய வனுரின் ஏக புத்திரன். அவரிடம் சரணடைந்தாலொழிய உலகத்தவர்களுக்கு உய்வு இல்லை. அப்படிச் சரணடைகின்ற வர்களே இம்மையிலும் மறுமையிலும் சிறப்பு எய்துவர். இந்தப் போக்கில் பாதிரிமார்கள் தங்கள் மதத்தையெடுத்து சுவாமிகளுக்குப் புகட்டினர். அதற்கு அமைதியாக சுவாமி கள் விடைவிடுக்கலாயினர்: "நீங்கள் கூறுவது உண்மையாகில் ஏசுநாதரைப் பின்பற்றுகிற கிறிஸ்துவ நாடுகளில் கலகங்கள் இருக்கலாகாது; சிறுமை ஒன்றும் இருக்கலாகாது; தெய் விகப் பெற்றியே பொலிந்திருக்க வேண்டும். ஆனால் உல கிலே உள்ள கிறிஸ்துவ நாடுகளில் அத்தகைய மேன்மை கள் மிளிர்கின்றனவா? கிறிஸ்தவர்கள் உலகில் தானே சண்டை சச்சரவுகளும், போராட்டங்களும், பொருமைகளும், போக்கிரித்தனங்களும் அதிகரித்திருக்கின்றன."– இங்ஙனம் புள்ளி விவரங்களோடு கிறிஸ்தவர்கள் கூற்றுக்கு மாறுபட் டுள்ள காட்சிகளை அவர் விளக்கிக் காட்டினர். ஏசுநாதரு டைய கோட்பாடுகளைக் கிறிஸ்துவர்களும் இன்னும் சரியாக நடைமுறையில் கொண்டு வரவில்லை; அதற்கேற்ற முயற்சி களையும் கிறிஸ்தவர்களில் பெரும்பான்மையோர் எடுத்துக் கொள்ளவில்லை. இவ்வாறு அவர்கள் தங்கள் கொள்கைக்கு மேற்பூச்சு போட்டனர். அதற்கும் தக்க மறுப்பு விவேகானந் தரிடமிருந்து வெளி வருவதாயிற்று. அவர் இயம்பியதாவது: "மனிதன் மேன்மையுறுவது மனித முயற்சியைப் பொறுத் திருக்கிறது என்பதை மறைமுகமாக நீங்கள் ஒத்துக் கொள்கிறீர்கள். முயற்சி யெடுத்துக் கொள்ளவேண்டியவன் மனிதன். அம்முயற்சியில் விளைந்த பெருமையை யெடுத்துக் கொடுப்பது கிறிஸ்துநாதரிடம்! இத்தகைய பாசங்கு எதற்காக?" இப்படி இவர் விஷயத்தை உள்ளவாறு விமர்

சனம் செய்தது பாதிரிமார்களுக்குப் பிடிக்கவில்லை. ஆயினும் அமெரிக்காவில் உள்ள அறிஞர் விவேகானந்தர் வழங்கிய வேதாந்த தரிசனத்துக்கு ஆதரவு மிகக்கொடுத்தனர். கிறிஸ்தவர்களுடைய குறுகிய கொள்கைக்கும், குருட்டு நம்பிக்கைக்கும் அவர்கள் ஆதரவு கொடுக்கவில்லை.

வேறு சில கிறிஸ்தவப் பாதிரிமார்கள் இன்னும் பரந்த பாங்கைப் படைத்திருந்தனர். தங்களிடத்து ஐதிகமாக வந்துள்ள கிறிஸ்துவமதக் கொள்கைகள் ஏதோ சில இருக்கின்றன வென்றும் அவைகளைக் காலத்துக்கேற்றவாறு திருத்தியமைத்து மக்களிடத்துப் பரப்பவேண்டும் என்றும் அன்னவர்கள் கருதிவந்தனர். அப்படிப் பரந்த மனப்பான்மை படைத்திருந்தவர்கள் சிற்சில இடங்களில் சுவாமி விவேகானந்தரைத் தங்களது தேவாலயங்களில் வந்து தெய்விக விஷயங்களைப் பற்றி உபதேசங்கள் செய்யவேண்டும் என்று அன்புடனும் ஆதரவுடனும் அழைத்தனர். எனவே பாதிரிமார்கள் எல்லாரிடத்திலிருந்தும் சுவாமி விவேகானந்தருக்கு ஏகோபித்து எதிர்ப்பு வந்ததென்று நாம் கருதலாகாது.

கேள்வியிலும், ஆராய்ச்சியிலும் மிகக் கீழ்நிலையிலுள்ளவர்கள் பலர் கிறிஸ்தவ மதப்பிரச்சாரத்துக்காக நியமிக்கப்பெற்றிருக்கின்றனர். அவர்களிடத்து மதவெறி மிகஉண்டு. புறமதங்களிலுள்ள சிறப்பு ஒன்றும் அவர்களுக்குத் தெரியாது. தங்கள் சொந்த மதத்தைச் சிலாகித்துப் பேசுவது ஒன்றில் மட்டும் குருட்டுப் போக்கில் பயிற்சி பெற்றிருக்கின்றனர். தங்கள் கொள்கைகளையும் யுக்திபூர்வமாகவோ, அறிஞர் உலகுக்கு ஏற்புடைய முறையிலோ எடுத்து வழங்க அவர்களுக்குத் தெரியாது. அந்தப் புல்லிய கூட்டத்தைச் சேர்ந்த பாதிரியார் ஒருவருடன் விவேகானந்த

சுவாமிகள் கப்பல் பிரயாணம் செய்ய நேர்ந்தது. சந்தர்ப் பம் வாய்த்தபொழுதெல்லாம் ஹிந்துக்களையும் ஹிந்து மதத் தையும் தூஷித்துப் பேசுவதிலேயே அவர் ஈடுபட்டிருந்தார். அந்தக் கப்பலில் பிரயாணம் செய்தவர்களிடம் தம்போக்கில் அப்பாதிரியார் பிரசாரம் செய்து வந்தார். ஹிந்துக்களுக் கிடையில் விவாகம் என்பது அடிமைத் தனத்திலும் மிகக் கொடியதாக இருந்து வருகிறது. அடிமைத்தனத்துக்கு அறிகுறியாக மணப்பெண்ணின் கழுத்தில் மணமகன் தாலி கட்டுகிறான். அத்தகைய தாலி ஒன்றையும் அவர் மாதிரிக்கு எடுத்துக்காட்டினர். பெண்பாலர்க்கு எந்தவிதமான சுதந் தரமும் இல்லை. கடவுள் வணக்கம் செய்யவேண்டிய அவசியமும் அவர்களுக்கில்லை.

தெய்வம் தொழாள் கொழுநன் தொழுதெழுவாள்
பெய்எனப் பெய்யும் மழை

என்பது ஹிந்துக்களுக்கிடையில் குருட்டு நம்பிக்கை செறிந்த சாஸ்திரம். இப்படியெல்லாம் அவர் பேசிவந்தார். அவர் பேச்சுக்குச் செவிசாய்த்தவிவேகானந்தர் அவர் கருத்துக்களை யெல்லாம் திருத்தியமைக்க முயன்றார். ஆனால் தாம் கொண் டிருந்த கருத்து ஒன்றைத் தவிர வேறு எந்தக்கருத்தையும் ஏற்றுக்கொள்ள மாட்டாதவராய் அப் பாதிரியார் இருந் தார். "மேலாம் கருத்துக்களை ஏற்க உம்மால் இயலாவிட் டால் பிறர் மீது உமது அல்ப எண்ணங்களைத் திணித்து உபத்திரவப்படுத்தாது இருப்பது நலம்" என விவேகானந் தர் எடுத்துச் சொன்னர். பாதிரியார் அதற்கும் ஒத்துக் கொள்ளவில்லை. தமது கருத்துக்களையே திரும்பத் திரும்ப மற்றவர்களிடம் திணிக்க முயன்று வந்தார். அத்தகைய சந்தர்ப்பம் ஒன்றில் விவேகானந்தர் தமது ருத்ராம்சத்தைக் கொஞ்சம் வெளிப்படுத்தினர். "வாய் பொத்திச் சும்மா

விருக்கின்றீரா, அல்லது உம்மை நான் கடலினுள் தூக்கி வீசி எறிவதா?'' என்று பயமுறுத்திக்கொண்டு அவர் கழுத்தைப் பிடித்து மேலே தூக்கினர். பாதிரியாரோ கெஞ்சிக் கூத்தாடி ''இல்லை, இனி நான் பேசமாட்டேன். என்னை விட்டுவிடுங்கள்" என்றார். இத்தகைய நிகழ்ச்சியும் ஒன்று நேர்வதாயிற்று.

அமெரிக்காவில் மதவெறி பிடித்திருந்த பாதிரியார் ஒருவரைக் கிட்டத்தட்ட ஒவ்வொரு நாளும் சுவாமி விவேகானந்தர் சந்திக்கவேண்டிய சூழ்நிலை ஒன்று உண்டாயிருந்தது. முதல் நாள் சந்திப்பிலேயே ''நீ ஒரு பாபி'' என்றார் விவேகானந்தரைப் பார்த்த பாதிரியார். ''ஏன் என்னைப் பாபி என்கின்றீர்'' என்று விவேகானந்தர் கேட்டார். ''மனிதன் உய்வு அடைவதற்கு ஏசுநாதரைத் தவிர வேறு உபாயம் உண்டு என்று நீர் புகட்டி வருகின்றீர். ஆதலால் நீர் ஒரு மகாபாபி,'' என்று அவர் முடிவு கட்டினர். ''அப்படி நான் பாபியாயிருப்பதால் வரும் விபத்துத்தான் என்ன?" என்று விவேகானந்தர் கேட்டார். ''நீர் செத்தபின் நரகத்துக்குப் போவீர்" என்றார் பாதிரியார். ''தாங்களோ'' என விவேகானந்தர் மறுத்துக்கேட்டார். ''நான் சொர்க்கத்துக்குப் போவேன்'' என்னும் பதில் அவரிடமிருந்து வந்தது. ''நல்லது, நீங்கள் சொர்க்கத்துக்குப் போங்கள்! நான் நரகத்துக்குப்போகிறேன்" என்று விவேகானந்தர் பேச்சை முடிவுக்குக் கொண்டுவந்தார். ஆனல் அத்துடன் அந்த வியவகாரம் முடியவில்லை. நாள்தோறும் அப்பாதிரியாரைப் பார்க்கும்பொழுதெல்லாம், "நல்லது, நான் நரகத்துக்குப் போகிறேன்'' என்று விவேகானந்தர் நவிலுவார். நாள்தோறும் அதைக் கேட்பது பாதிரியாருக்கு நரகவேதனையாயிருந்தது. மனிதன் ஒருவன் பிறர்க்கு எதையெடுத்து வழங்குகிருனே அது தனக்கே உரியதாகிறது.

பாதிரிமார்களுடைய புல்லிய போக்கை சுவாமி விவே கானந்தர் கடிய வேண்டியதாயிற்று எனினும் ஏசுநாத ரிடம் அவர் வைத்திருந்த பக்தி இவ்வளவு அவ்வளவு அல்ல. Christ The Messenger—ஏசுநாதரின் சந்தேசம், என்று அவர் பேசியுள்ள பிரசங்கம் ஒன்றில் அவர் கிறிஸ்து நாத ரிடம் எத்தகைய பக்தி வைத்திருந்தார் என்பது விளங்கும்.

---

17. வேதாந்தத்துக்கு விளக்கம்

ஒரு சார்பில் வைத்து ஆராயுமிடத்து உலக மக்கள் அனைவரும் ஆங்காங்குள்ள மதங்களைச் சிறிது சிறிதாகப் புறக்கணித்து வருகின்றனர். ஏனென்றால் நவீன சூழ்நிலை யில் வாழ்க்கையில் பெரிய மாறுதல்கள் உண்டாகி வருகின் றன. அந்த மாறுதல்களுக்கு ஒத்தவைகளாய் மதங்கள் இல்லை. ஆதலால் அறிந்தோ அறியாமலோ அவைகள் மீது வைத்துள்ள ஆர்வத்தை மக்கள் கொஞ்சங் கொஞ்சமாக இழந்து வருகின்றனர். ஆனால் இந்நிகழ்ச்சியை சுவாமி விவேகானந்தர் வேறு ஒருவிதத்தில் பொருள்படுத்துகிறார். மனிதன் எப்பொழுதுமே மதத்தைப் புறக்கணிக்க முடியாது வாழ்க்கையில் மனிதன் பற்றுதல் வைத்திருக்கும் வரையில் மதத்தினிடத்தும் அவன் பற்றுதல் வைத்தாக வேண்டும். ஏனென்றால் மதம் என்பது வேறொன்றும் அல்ல. வாழ்க் கைக்குரிய மேலாம் கோட்பாடுகளை நடைமுறையில் கொண்டு வருவது மதம். அப்படி மேலாம் தத்துவங்களை அனுஷ்டா னத்துக்குக் கொண்டுவரும் விதங்களில் மதங்களுக்கிடையில் வேற்றுமையிருக்கிறது. இந்த வேற்றுமைகளை முன்னிட்டு

மதங்களிடத்து மக்கள் பராமுகமாயிருக்கின்றனர். ஆனால் மேன்மையடையும் விஷயத்தில் எல்லார்க்கும் ஊக்க முண்டு.

எதிர்காலத்தில் உலக முழுதுக்கும் பொதுவாக ஏதே னும் ஒரு மதம் வாய்த்து நிலைத்திருக்குமாகில் அது வேதாந் தம் ஒன்றே, என்று விவேகானந்தர் வலியுறுத்திக் கூறி யிருக்கிறார். அதற்குக் காரணங்களையும் அவர் எடுத்துரைத் திருக்கிறார். இப்பொழுது உலகிலுள்ள மதங்கள் தங்களுக் கென்று அமைந்துள்ள பெயர்களைக் குறித்துப் பிணக்கை உண்டுபண்ணி வருகின்றன. ஒரு மனிதன் தன்னை ஹிந்து என்று சொல்லிக் கொள்ளுகின்றானா? முஸ்லீம் என்று சொல் லிக் கொள்ளுகின்றானா? கிறிஸ்தவன் என்று சொல்லிக் கொள்கின்றானா? இப்படி ஒவ்வொருவனும் தான் பயின்று வரும் மதத்தின் பெயருக்கு முதன்மை கொடுக்கின்றான். பெயர் முக்கியமானதன்று; நீ பழகுவது யாது என்பதே முக்கியமானது என வேதாந்தம் சொல்லுகிறது. அடுத்த படியாக எந்த மதாச்சாரியனிடத்து மனிதன் தனிப்பற்று வைத்திருக்கிறான் என்பதும் முக்கியமானதன்று. வாழ்க் கைத் தத்துவங்களை அவன் எவ்வளவு தூரம் அறிந்திருக் கிறான், எவ்வளவு தீவிரமாக அனுஷ்டித்து வருகிறான் என் பனவே முக்கியமானவைகள். கணிதம் பயிலுகிற ஒருவன் கணித சாஸ்திரத்தில் மேன்மையுற வேண்டும். அப்படி யல்லாது எந்தக் கணித சாஸ்திரியிடத்து அவனுக்குத் தனி அபிமானம் இருக்கிறதென்பது முக்கியமானதன்று. அதே விதத்தில் வேதாந்தம் மதங்களின் பெயர்களுக்கு முதன்மை தரவேண்டாம் என்றும், மதாசாரியர்களிடத்துத் தனிப்பற்று தல் வைக்க வேண்டாமென்றும், வாழ்க்கைத் தத்துவங்களை சிரத்தையுடன் பயிலுவதிலேயே மனிதன் கருத்தைச்

செலுத்த வேண்டும் என்றும் புகட்டுகிறது. இக்காலத்து மனிதன் இப்போக்கில் தான் பக்குவமடைந்து வருகிறுன். ஆதலால் வேதாந்த அனுஷ்டானத்துக்குப் பொருத்தமான ஜன சமுதாயம் இப்பொழுது கொஞ்சங்கொஞ்சமாக உருவெடுத்து வருகிறது. இனி வேதாந்தக் கோட்பாடுகளை எத்தனை யெத்தனையோ விதங்களில் அனுஷ்டிக்கலாம். அத்தனை விதமான அனுஷ்டானங்களுக்கும் வேதாந்தம் இடங்கொடுத்து வைத்திருப்பதால் அது மக்களுக்குப் பொது மதம் ஆகிறது. ஒரு மனிதனுக்கு உற்ற சாதனம் மற்றெருவனுக்கு உற்றதாக இருக்கவேண்டியது அவசியமன்று எனவும் வேதாந்தம் புகட்டுகிறது. எனவே வேற்றுமைகளை ஒழித்துத் தீவிரமான சாதனங்களில் மனிதனை ஈடுபடச் செய்வது வேதாந்தம். ஆதலால் அது எதிர்காலத்து மக்களுக்கு உற்ற பொது மதமாயிருக்கும் என சுவாமி விவேகானந்தர் கூறியுள்ளார்.

வேதாந்தத்தின் மூலக்கோட்பாடுதான் என்ன என்னும் கேள்வி பிறக்கிறது. இக்கேள்விக்கு விடையாக

வேதாந்தம் கேட்க விரும்பிய வேதியர்
வேதாந்தம் கேட்கும் தம் வேட்கை ஒழிந்திலர்
வேதாந்த மாவது வேட்கை ஒழிந்திடும்
வேதாந்தங் கேட்டவர் வேட்கைவிட் டாரே.

என்று திருமூலர் ஒரு திருமந்திரத்தில் கூறியுள்ளார். இதைவிட இன்னும் தெளிவுபடுத்துகிற முறையில் ஒரு சுருங்கிய மந்த்ரத்தில் வேதாந்தத்துக்குத் தகுந்த விளக்கத்தை உபநிஷதம் கொடுத்திருக்கிறது.

न कर्मणा न प्रजया धनेन त्यागेनैके अमृतत्व मानशुः

ந கர்மணு ந ப்ரஜயா தனேன
த்யாகேனைகே அம்ருதத்வ மானசு:

என்பது அம்மந்த்ரமாகும். 'கர்மத்தாலன்று: சந்தானவிருத்தியால் அன்று; செல்வத்தை வளர்ப்பதால் அன்று; தியாகத்தாலேயே அம்ருதத்துவம் அடையப்பெறுகிறது' என்பது இந்த மந்த்ரத்தின் கருத்து. வேட்கையை விடவேண்டும் என்று திருமூலர் மொழிவதும், தியாகம் பண்ணவேண்டும் என்று வேதாந்த சாஸ்திரமாகிய உபநிஷதம் கூறுவதும் ஒரே கோட்பாட்டைப் பற்றியாம். உலகப்பற்றைப் பெருக்குதற்கு மனிதன் உலகில் பிறந்துள்ளவன் அல்லன். உலகைப் பயன்படுத்தி உயர்நிலை யெய்துதற்கு மனிதன் பிறப்பெடுத்திருக்கின்றான். உலகைப் பயன்படுத்து, அதில் பற்றுதல் வைக்காதே என்பதுதான் வேதாந்தக் கோட்பாடு. மதப்பற்று, இனப்பற்று, மொழிப்பற்று, தேசப்பற்று, வாழ்க்கைப்பற்று ஆகியவைகள் மக்களுக்கிடையில் சில நன்மைகளை உண்டு பண்ணுவதற்கிடையில் வேற்றுமைகளையும் வளர்த்து வருகின்றன. இப்பற்றுக்களை யெல்லாம் கடந்து மேல்நோக்கிப் போவதற்கு ஏற்ப மக்களுக்கிடையில் ஒற்றுமை உண்டாகும்; அமைதி நிலவும்; ஆனந்தம் மேலிடும்.

உலகில் மக்களுக்கிடையில் எத்தனை யெத்தனையோ கேடுகள் இருந்து வருகின்றன. இக்கேடுகளை யெல்லாம் அகற்றுதற்கு நல்லார் பெருமுயற்சி யெடுத்து வருகின்றனர். ஆனால் இத்தீமைகளுக்கு மதங்கள் தாம் ஆதரவு கொடுத்து வருகின்றன. ஆதலால் மதங்களை யெல்லாம் ஒழித்துவிட வேண்டும் என்று அறிஞர்கள் பலர் தீவிரமாக முயன்று வருகின்றனர். மதங்கள் என அவர்கள் மொழிபவைகளெல்லாம் உண்மையாக மதங்கள் அல்ல; மதங்களிலே வந்து புகுந்துள்ள கசடுகளாம். இவ்வுண்மையை விவேகானந்தர் தெளிவுற நவீன மக்களுக்கு எடுத்துக்காட்டியுள்ளார். எங்கெல்லாம் தீமை காணப்படுகிறதோ அங்கெல்லாம் மத

அனுஷ்டானம் முறை தவறிப் போயிருக்கிறது என்பது விவேகானந்தரது முடிந்தகருத்து. மற்று எங்கெல்லாம் மனி தன் சிறிதளவாவது மேன்மையுற்றிருக்கின்றானே அங்கெல் லாம் அறிந்தோ அறியாமலோ மதக்கோட்பாட்டை மனி தன் நடைமுறையில் கொண்டு வந்திருக்கிறான் எனவும் அவர் உறுதி கூறுகிறார். மதத்தை மக்களிடத்திருந்து விலக்கி விட்டால் அவர்கள் விலங்குகளிலும் கீழ்நிலைக்குப் போவார் கள். மதங்கள் அனைத்துக்கும் அடிப்படைக் கோட்பாடுகள் பொதுவாய் இருக்கின்றன. அந்த அடிப்படைக் கோட் பாடுகளின் தொகையே வேதாந்தம் எனப்படுகிறது. அடிப் படைத் தத்துவங்களைச் சரியாக அனுஷ்டித்து இதுவரை யில் மனிதன் ஒருநாளும் கெட்டுப்போகவில்லை; இனியும் கெட்டுப்போகமாட்டான். ஆனால் அடிப்படைத் தத்துவங் களை அவன் கைநழுவ விட்டுவிடுவானாகில் மனிதன் தனக்குக் கேடு சூழ்ந்துகொள்பவன் ஆவான். இப்படி விவேகானந்த சுவாமிகள் மானுடவர்க்கத்துக்கு எச்சரிக்கை மிகச் செய் திருக்கிறார்.

எதிர்கால மனிதனுக்கு வேதாந்தக் கோட்பாடுகளை யுக்தி பூர்வமாக வழங்குதற்கு நவீன பௌதிக விக்ஞானம் அரியதொரு கருவியாக வந்து வாய்த்திருக்கிறது. வேதாந்த தத்துவங்களின் எதிரொலிகளாகவே பௌதிக விக்ஞான தத்துவங்கள் அமைந்துள்ளன. மதங்களை அழிப்பதற்கு பௌதிக விக்ஞானம் தோன்றியுள்ளது எனச் சில மதவாதி கள் ஐயம் அடைகின்றனர். உண்மையில் மதங்களை அழிப் பதற்குப் பௌதிக விக்ஞானம் வந்துள்ளதன்று; மதங்களில் புகுந்துள்ள கேடுகளையும், குருட்டு நம்பிக்கைகளையும் ஒதுக் கித் தள்ளுதற்கென்றே பௌதிக விக்ஞானம் முன்னேறி வருகிறது என சுவாமி விவேகானந்தர் விளக்கியுள்ளார்.

உண்மையை உள்ளவாறு அறிந்து கொள்ளுதல் பௌதிக விக்ஞானத்துக்கும் வேதாந்தத்துக்கும் பொதுவாகும். உண்மையோ மனிதனை ஒழித்துவிடாது; உண்மையானது மனிதனை உய்விக்கும். உலகைப்பற்றிய உண்மை, மனிதனைப்பற்றிய உண்மை, அடிப்படைப் பொருளைப் பற்றிய உண்மை— இங்ஙனம் உண்மையை நாடிச் செல்லுதற்கேற்ப மனிதன் மேன்மையுறுகிறான். உண்மைக்கு ஒப்ப வாழுமிடத்து மனிதன் மேலோன் ஆகின்றான். உண்மையை முற்றிலும் அறிந்து கொள்ளுகிறவன் மெய்ஞ்ஞானியாகின்றான். இப்படியெல்லாம் விவேகானந்த சுவாமிகள் கூறியுள்ளார். உலகைப் பற்றிய உண்மையையே பௌதிக விக்ஞானம் துருவி ஆராய்ந்து வருகிறது. மூலப்பொருளைப் பற்றிய உண்மையையே வேதாந்தம் நெடுநாளைக்கு முன்பே ஆராய்ந்து அறிந்திருக்கிறது. ஒரு நிலையிலுள்ள உண்மை இன்னொரு நிலையிலுள்ள உண்மையோடு ஒரு பொழுதும் முரண்படாது. உண்மைக்கு உண்மை அனுசரணையாகிறது. முடிந்த முடிவில் பௌதிக விக்ஞானம் கண்டு பிடிக்கிற உண்மையும் வேதாந்தம் கண்டு பிடித்திருக்கிற உண்மையும் ஒன்றுபட்டு விடுகின்றன. நவீன மனிதன் பௌதிக விக்ஞானத்தில் பெரும் பற்றுதல் வைத்திருக்கிறான். உண்மை நாட்டத்தில் அவன் பற்றுதல் வைத்திருக்கிறான் என்பது அதன் பொருளாகும். பௌதிக விக்ஞானத்தைச் சரியாக அறிந்துகொள்ளுகிறவன் வேதாந்தத்துக்கு அண்மையில் வருகின்றான். இறுதியில் பௌதிக விக்ஞானி வேதாந்தியாகிறான். அதைவிட்டு அவன் தப்பித்துக்கொள்ள முடியாது. ஆகையினால்தான் எதிர்கால உலகுக்கு வேதாந்தம் பொதுமதமாக இருக்கப் போகிறது என்று சுவாமி விவேகானந்தர் பகர்ந்துள்ளார்.

பௌதிக விக்ஞானம் கண்டறிந்துள்ள உண்மைகளைச் சரியாகப் பயன்படுத்துவதற்கேற்ப இவ்வுலக வாழ்க்கையை

வசதிமிக நிறைந்ததாகச் செய்து கொள்ள மனிதனுக் இயலுகிறது. நவீன மனிதன் அதைச் செய்தும் வருகிறான். அதேவிதத்தில் வேதாந்த தத்துவங்களைச் சரியாக அனுஷ்டிப்பதற்கு ஏற்ப மனிதன் மேலோன் ஆகிறான். மக்களுக்கிடையில் நல்லிணக்கம் ஓங்குகிறது. இகலோக வாழ்வு இனிமை மிக நிறைந்ததாகும். ஆக்கம் அதில் அதிகரிக்கும். பாரமார்த்திகப் பெரு நிலைக்கு மனிதன் தகுதியுடையவன் ஆகிறான். இச்சிறப்புகளெல்லாம் மனிதனுக்கு வாய்க்காவிடில் அவன் வேதாந்த தத்துவங்களைச் சரியாக வாழ்க்கையில் பழக்கத்தில் கொண்டு வரவில்லை என முடிவு கட்ட வேண்டும். இக்காலத்தில் இந்தியாவைப் பிடித்துள்ள கீழ்மைகளுக்கெல்லாம் மூலகாரணம் பலர் கருதுவது போன்று மதம் அன்று; மதத்தை அல்லது வேதாந்த கோட்பாடுகளைச் சரியாக அனுஷ்டிக்கத் தவறியதே கீழ்மைக்கு மூலகாரணமாகும். வேதாந்தத்தைச் சரியாக அனுஷ்டிக்கும் விதத்தை இக்காலத்தவர்களுக்கு ஸ்ரீ ராமகிருஷ்ண பரமஹம்ஸரும், அன்னை சாரதா தேவியாரும், சுவாமி விவேகானந்தரும் தங்களுடைய ஜீவிதங்களின் வாயிலாக நன்கு விளக்கியிருக்கிறார்கள். வேதாந்தம் வெறும் வாய்ப்பேச்சுக்குரியதன்று, விவாதத்துக்குரியதன்று, பாண்டித்தியத்தை எடுத்துக் காட்டுதற்கு உரியதன்று. ஆனால் வாழ்க்கையைச் செப்பனிட்டு அதைச் சீரியது ஆக்குதற்கென்றே உரியது என்பதை இக்காலத்தில் அவதரித்து வந்துள்ள இம் மும்மூர்த்திகளும் உலகுக்குக் காட்டியிருக்கின்றனர். அவர்களின் வாழ்க்கை வரலாறுகளைச் சரியாக அறிந்து கொள்ளுவதே வேதாந்தத்தை அறிந்து கொள்ளுதற்கு உற்ற உபாயமாகும். அடிப்படைத் தத்துவங்கள் சிலவற்றை ஈண்டுக் கருத்தில்வாங்கிக் கொள்வோம். ஸ்ரீ ராமகிருஷ்ண பரமஹம்ஸர் கடவுள் வழி

பாடே உருவெடுத்து வந்தவர். கடவுள் நாட்டம் கொண்டுள்ளவர்கள் எல்லாரும் அவருக்குச் சொந்தம். செயற்கையான வேற்றுமை எதையும் முன்னிட்டு மனிதரோடு அவர் வைக்கின்ற இணக்கத்தைத் தவிர்க்கவில்லை. நல்லிணக்கத்தை அவர் உண்மையில் உறுதிப்படுத்தினர். மனிதனைக் கண்ணியப்படுத்தத் தெரியாதவன் மானுடப்பண்பை அறியாதவனுகிருன். ஆதலால் வேதாந்தத்துக்கும் அவனுக்கும் வெகு தூரம். உயிர்கள் அனைத்தையும் பரம்பொருள் சொரூபமாகப் பாராட்டுபவனே வேதாந்தி. உயிர்கள் அனைத்தையும் தனக்குச் சொந்தம் என்றும் தன்னை உயிர்கள் அனைத்துக்கும் சொந்தம் என்றும் உணர்ந்து பரஸ்பர ஒற்றுமையை வளர்ப்பவனே வேதாந்தி. ஸ்ரீ ராமகிருஷ்ணருடைய வாழ்க்கையின் தொடக்கத்தினின்று முடிவு பரியந்தம் இப் பேருண்மை நன்கு புலனுகிறது.

இப்படிப் பரமஹம்ஸர் வாழ்ந்த வேதாந்த வாழ்க்கைக்கு அனுசரணையாக அன்னை சாரதா தேவியாரின் வாழ்க்கை அமைந்திருந்தது. உலகிலுள்ள உயிர்கள் அனைத்தையும் தம் குழந்தைகளாகக் கருதி அவர்களோடு இணக்கம் கொள்ளுமாறு பரமஹம்ஸதேவர் அன்னை சாரதா தேவியாருக்குப் புகட்டியிருந்தார். அப்போதனைக்கு ஒப்ப அவர் பெருவாழ்வு வாழ்ந்து வந்தார். தமது நித்திய வாழ்க்கையில் வைதிக நெறியினின்று அன்னை சாரதா தேவியார் இம்மியளவும் பிசகியவர் அல்லர். அதற்கிடையில் உலக மக்களோடு அவர் வைத்திருந்த இணக்கமே வேதாந்தத்துக்கு நல்ல விளக்கமாகிறது. அவர் வாழ்ந்து வந்த வங்காளத்தில் ஹிந்துக்களுக்கும் முஸ்லீம்களுக்கும் இடையில் வேற்றுமை மிக உண்டு; ஒற்றுமைக்கு இடமில்லை. ஒரு கூட்டம் மற்றெரு கூட்டத்தினின்று முற்றிலும் விலகியிருப்பதே

மாகாணத்தின் போக்கு. ஆனால் அன்னை சாரதா தேவியார் அப்புல்லிய பழக்கத்துக்கு உடந்தையாகவில்லை. அப்புல்லிய பழக்கம் வேதாந்தத்துக்கு ஒவ்வாதது. அன்னையாரிடம் பக்தி பூண்டு பழகியவர்களுள் அம்ஜித் என்னும் முஸ்லீம் ஒருவன். அந்த அம்ஜித்தை அன்னையார் வேற்றானைக் கருதவில்லை. தம் சொந்த ஞானச் செல்வர்கள், செல்வி களுள் அவனும் ஒரு செல்வனாக இடம் பெற்றிருந்தான். அப்படி அன்னையார் செய்ததே அனுஷ்டான வேதாந்த மாகும். அது வெறும் நூல் வேதாந்தமன்று; வாய் வேதாந்த மன்று. வாழ்வைப் பெரு வாழ்வாக உயர்த்துவதற்கான வேதாந்தம் அது.

பரமஹம்ஸதேவர் கட்டளைப்படி சுவாமி விவேகானந்தர் வேதாந்தம் என்னும் வாழ்க்கைத் தத்துவங்களை எடுத்து வழங்குவதற்கு மேல் நாடுகளுக்குச் சென்றிருந்தார். ஆங்கு அவர் வதிந்திருந்த பொழுது அப்பக்கங்களிலிருந்த மக்க ளுக்கு அவர் முற்றிலும் சொந்தமாயினர். அங்கிருந்த மக்க ளெல்லாம் அவருக்குச் சொந்தமானார்கள். அன்பிலும், அறநெறியிலும், ஞான நிலையிலும் அவர்களுக்கிடையில் ஐக்கியமே நிலவியது. வேற்றுமைக்கு இம்மியளவும் இட மில்லை. ஞானி ஒருவனுக்கு स्वदेशो भुवनत्रयम् ஸ்வதேசோ புவனத்ரயம் என்பது வேதாந்தக் கோட்பாடு. அதை அப் படியே வாழ்க்கையில் அமைத்து அனுஷ்டித்தவர் சுவாமி விவேகானந்தர். மேல் நாடுகளில் அவருக்கு வாய்த்த சிஷ் யர்களையும் சிஷ்யைகளையும் தமது சொந்த சொரூபமாக ஏற்றுக்கொண்டவர் சுவாமி விவேகானந்தர். அவருடைய சிஷ்யைகளில் முதன்மை வகித்தவர் சகோதரி நிவேதிதை. அப்புனிதவதியை இந்தியாவுக்குப் பணிவிடை செய்வதற் கென்றே இங்கிலாந்தினின்று சுவாமி விவேகானந்தர் தாய்

நாட்டுக்கு அழைத்து வந்தார். அப்படி அழைத்து வந்தவர் அக்கன்னிகையை அன்னை சாரதாதேவியாரிடம் ஒப்ப டைக்க வேண்டியதாயிற்று. ஆனால் ஐதிகமாக இந்திய சமுதாயத்தில் அமைந்துள்ள கட்டுப்பாடான வாழ்க்கைக்கு எடுத்துக்காட்டாக இருந்த அன்னை சாரதா தேவியார் மேல் நாட்டு மாது ஒருத்தியைத் தமது திருக்கூட்டத்தில் இருந்த பாங்கிமார்களோடு சேர்த்துக் கொள்ளுவாரோ அல்லது ஒதுக்கிவைத்துப் பழகி வருவாரோ என்னும் ஐயம் ஒரு சிறிது விவேகானந்தர் உள்ளத்திலிருந்தது. அந்த ஐயப் பாட்டுடன் அவர் அன்னையார் முன்னிலைக்கு வந்தார். வீழ்ந்து வணங்கினர்; பணிவுடன் எழுந்து நின்றார்; விண் ணப்பம் ஒன்றைச் சமர்ப்பித்தார். "தாயே, மேல்நாட்டு மிலேச்சப் பெண்ணொருத்தியைத் தங்களிடம் சமர்ப்பிக்க நான் அழைத்து வந்திருக்கிறேன். அந்த வனிதையை நீங் கள் என்ன விதத்தில் ஏற்பீர்களோ, அவளோடு நீங்கள் எத்தகைய இணக்கம் வைக்கத் திருவுளம் கொண்டிருக் கிறீர்களோ, நான் அறியேன்." இதுவே அவர் விடுத்த விண்ணப்பம். அமைதியும் இனிமையும் உருவெடுத்து வந் துள்ள அன்னை சாரதா தேவியாரிடமிருந்து அவருக்கு வந்த விடையாவது: "அக்கன்னிகை உனக்கும் எனக்குமா மிலேச்சப் பெண்!" வேதாந்தக் கோட்பாடு இதில் அடங்கி யிருக்கிறது. வேதாந்தத்துக்கு முடிவான விளக்கமும் இந்த ஒரு வாக்கியத்தில் அடங்கியுள்ளது. வேற்றுமை பாராட்டு கிறவன் விபரீத புத்தியுடையவன்; ஒற்றுமை பாராட்டுகிற வன் வேதாந்தி. அன்னை சாரதா தேவியாருக்கு உலக மக்கள் எல்லாரும் சொந்தம். சுவாமி விவேகானந்தருக்கும் உலகமக்கள் எல்லாரும் சொந்தம். இந்த ஞானச் செல் வத்தை இவர்கள் இருவரும் ஸ்ரீ ராமகிருஷ்ண பரமஹம்ஸ

ரிடமிருந்து அடையப் பெற்றவர்கள். வேதாந்தம் என்பதும் இதுவே. மக்கள் எல்லாரும் ஓரினம்; அவர்கள் அனைவருக்கும் அடிப்படையாயிருப்பது ஒரு பரம்பொருள்; அவர்கள் அனைவரும் கொண்டுள்ள நாட்டம் ஒன்று; அவர்கள் அனைவர்க்கும் உரியதாயிருக்கும் அடிப்படை இணக்கத்தை உறுதிப்படுத்துவது யோகம்.

உலகிலுள்ள மதங்கள் இதுகாறும் சாதித்துள்ள நலன்களையும் தவறிப்போயுள்ள குறைபாடுகளையும் சுவாமி விவேகானந்தர் நன்கு சீர்தூக்கிக் காட்டியிருக்கிறார். கிறிஸ்தவர்கள் எல்லாரும் பரமனது வணக்கத்துக்காக ரோமாபுரியில் கூடுவது அற்புதக் காட்சி; ஆனால் கிறிஸ்துவர்கள் அல்லாதவர்களை அங்குக் கண்ணியமாக மதிப்பதில்லை. மதீனா, மக்காவில் ஆண்டுதோறும் முஸ்லீம்கள் ஆயிரக்கணக்கில் கூடுகின்றனர். ஆங்கு அவர்களுக்கிடையில் ஐக்கிய உணர்வு மிளிர்கிறது; ஆனால் முஸ்லீம் அல்லாதவர்கள் அக்காட்சியைக் காணச் சென்றால் பேராபத்தில் போய் முடியும். இந்தியாவில் உறைபனிக் கட்டிக்கிடையிலிருக்கும் பதரிகா ஆசிரமத்திலும், சுடுமணலில் அமைக்கப்பெற்றிருக்கும் ராமேசுவரத்திலும், விதவிதமான நடை, உடை, பாவனை, மொழிகளையுடைய ஹிந்துக்கள் இறைவன் வழிபாட்டுக்காகக் கூடியிருப்பதைக் காணலாம். ஆனால் ஹிந்துக்கள் அல்லாதவர்களுக்கு ஆங்குச் செல்ல அனுமதியில்லை. இப்படிக் கடவுளின் பெயரால் பெரும் கூட்டங்கள் ஆங்காங்குக் குழுமுகின்றன. பிரிவினைகளையும் சேர்ந்தாற் போன்றே அம்மதங்கள் வளர்த்து வருகின்றன. நவீன பௌதிக விக்ஞானம் மக்களுக்கிடையிலே உண்டுபண்ணுகிற ஒற்றுமையும், இணக்கமும் பாராட்டுதற்குரியவைகளாகின்றன. அவரவர் தேவாலயங்களுக்குப் போகிற பொழுது வேற்று மதத்தார் பிரித்து

வைக்கப்படுகின்றனர். ஆனால் பணம் கொடுத்து இருப்புப் பாதை வண்டிகளில் பிரயாணம் பண்ணும்பொழுது மனிதன் எம்மதத்தைச் சேர்ந்தவன் என்பது முக்கியமானதன்று; எவ்வளவு பணம் கட்டி எத்தகைய பிரயாண வசதியைத் தனக்குத் தேடியிருக்கிறான் என்பதே முக்கியமானது. அவ்வண்டிப் பயணத்தில் பொதுவாக மனிதனோடு மனிதன் நன்கு உறவாடுகிறான். உடன் வரும் பிரயாணி என்பது மனதில் முன்னணியில் இருக்கிறது. அவனுடைய மதம் முதலியவைகளெல்லாம் பின்னணிக்குப் போகின்றன. இனி, பல நாட்களுக்குத் தொடர்ந்து கப்பல் பிரயாணம் பண்ணும்பொழுது அதில் இருப்பவர்களெல்லாம் ஓரூர் வாசிகள் போன்று ஒத்திருக்கின்றனர். ஆகாய விமானத்தில் போகும்பொழுது ஒற்றுமை இன்னும் அதிகரிக்கிறது. பௌதிக விக்ஞானம் தந்துள்ள பிரயாணச் சாதனங்கள் மக்களுக்கிடையிலே உண்டுபண்ணுகிற ஒற்றுமையை மதங்கள் இதுவரையில் செய்யக் கிடையாது. இனி நவீன வியாபாரம், கைத்தொழில், யந்திரத் தொழிற்சாலை ஆகியவைகளின் செயல்கள் அற்புதமானவைகளாக இலங்குகின்றன. வியாபாரத்தின் பொருட்டும், பொருள்களை உற்பத்தி பண்ணுதல் பொருட்டும் மக்களுக்கிடையில் வருகிற இணக்கம் பாராட்டுதற்குரியதாகிறது. முறையாக வியாபாரம் பண்ணுபவர்களுக்கிடையில் சகோதார பாவனையும் ஒற்றுமையும் வேண்டியவாறு வளர்கின்றன. நவீன முறையில் கலாசாலைகளில் கல்வி கற்பதற்கு உலகில் வெவ்வேறு நாடுகளிலிருந்து மாணாக்கர்கள் வந்து கூடுகின்றனர். அவர்களுக்கிடையிலும் நிலைத்த நட்பும் ஒற்றுமையும் வளருகிறது. இவற்றிற்கெல்லாம் மேலாகப் பௌதிக விக்ஞானிகள் ஆராய்ச்சி செய்து கண்டறிகிற இயற்கைத் தத்துவங்களை சீர்தூக்கிப் பார்ப்ப

தற்கு அவர்களுக்கிடையில் உண்டாகிற இணக்கம், பரஸ்பர உதவி, மாருத நட்பு முதலியன பாராட்டுதற்குரியனவாகின் றன. இனித் தேசத்தோடு தேசம் நல்லிணக்கம் வைப்பதற்கு ஸ்தானிகர்கள் வெவ்வேறு நாடுகளிலிருந்து வந்து கூடுகின் றனர். உறவாடுதலிலும், உரையாடுதலிலும். சேர்ந்திருந்து உணவு அருந்துதலிலும் அவர்களுக்கிடையிலிருக்கும் ஒற்று மையை வேறு எங்கும் காணமுடியாது. இங்ஙனம் நிகழ்ந்து வருகிற நவீன வாழ்க்கை முறைகள் அனைத்தும் மக்களைப் பெரிதும் ஒன்று திரட்டி வருகின்றன. ஆனல் மத அனுஷ் டானம் முன்னணிக்கு வருகிறபொழுது மக்கள் தங்களையறி யாது பிரிந்து போகின்றனர். இன்றைக்குப் பௌதிக விக் ஞானம் மானுட ஒற்றுமைக்குப் பண்ணுகிற பேருதவி மிகப் பெரியது. அப்பெரிய பணிவிடையை இதுகாறும் மதங்கள் செய்து வைக்கவில்லை.

மதத்தின் பெயரால் மக்களுக்கிடையில் வளர்ந்து வரு கிற வேற்றுமைக்கு நல்ல எடுத்துக்காட்டுகளை எடுத்துக் கூறுவது அவசியமாகிறது. சுவாமி விவேகானந்தர் பரிவ் ராஜக பரமஹம்ஸராக இந்தியா முழுதையும் சுற்றிப் பார்த்த பொழுது ஆங்காங்குள்ள மடாலயங்களையும் சென்று பார்த் தார். இக்காலத்தில் அவைகள் நடைபெற்று வருகிற போக்கு சுவாமிகளுக்குத் திருப்தியளிக்கவில்லை. அவை களில் பல உலர்ந்து போன நதிகளுக்கு நிகர் என அவர் கூறுவாராயினர். பண்டொரு காலத்தில் ஜீவ நதிகளாக இருந்தவைகள் இன்றைக்கு வெறும் மணல் தரைகளாக வறண்டு கிடக்கின்றன. அன்று இவ்வழியோடிய நதி இன்று இடம் மாறி வேறொரு வழியில் ஓடிக்கொண்டிருக் கிறது. மடங்கள் பல அக்கதியை அடைந்திருக்கின்றன. பழைய பெருமையை முன்னிட்டு அவைகளுக்கு மதிப்பும்

மரியாதையும் தர நாம் கடமைப்பட்டிருக்கிறோம். ஆனால் இன்றைக்கு அவைகள் உயிர்ததும்பும் ஸ்தாபனங்கள் அல்ல; சீரிய வாழ்க்கைத் திட்டமோ, அதிவிரைவில் மாறியமைந்து வருகிற உலக நாகரிகத்துக்கு வலிவு தரும் ஆற்றலோ, அலுவல் திட்டங்களோ அப்பழைய மடாலயங்களில் இல்லை. பழைய பொருள்களைக் காட்சிக்கு வைத்திருக்கும் காட்சி சாலையைப் பார்வையிடுகின்றோம்; பார்வைக்குரிய பொருள் கள் என்று அவைகளை மதிக்கிறோம். ஆனால் அன்றாட வாழ்க்கையில் கையாளுதற்கு அவைகள் உதவமாட்டா. அந்த நிலையில் தான் பண்டொரு காலத்தில் உலகுக்குப் பயன்பட்டு வந்த மதஸ்தாபனங்கள் இன்றைக்கு வெறும் கண்காட்சிக்கு உரியவைகளாக இருந்து வருகின்றன.

பிரசித்தி பெற்றுள்ள வேதாந்தமடம் ஒன்றுக்குப் பரிவ் ராஜக பரமஹம்ஸராகிய விவேகானந்தர் அந்நாளில் புறப் பட்டுப் போனார். மடாலயங்களில் துறவியர்களைப் பரிச்சயம் பண்ணுவது அன்றும், இன்றும், என்றும் ஒரு வழக்கமா யிருந்து வருகிறது. அத்தகைய பரிச்சயத்தின் மூலம் வந் துள்ள துறவியின் கொள்கை, சம்பிரதாயம், குரு சிஷ்ய பரம்பரை ஆகியவைகள் விளங்குகின்றன. அவையாவை யும் அறிந்துகொள்ளுதல் மிக நன்று. அதன் மூலம் விதவித மான சம்ப்ரதாயங்களுக்கும், தரிசனங்களுக்கும், பாரமார்த் திக வாழ்க்கை முறைக்கும் தக்க ஆதரவு தரப்படுகிறது; அத்துடன் பலப்பல கொள்கைகளுக்கும் கோட்பாடுகளுக் கும் அங்கீகாரமும் தரப்படுகிறது. சுவாமி விவேகானந்தர் சங்கரர் பரம்பரையில் வந்துள்ள தசநாமிகள் என அழைக் கப்பெறும் பத்துக் கூட்டத்தாருள் "புரீ" என்னும் கூட்டத் தைச் சேர்ந்தவர். அவர் பார்க்கப்போயிருந்த வேதாந்த மடத்தில் பரிச்சயம் முறையாகக் கிளம்பியது. கேள்விகளுக்

கெல்லாம் சுவாமிகளும் விடை கொடுத்துக்கொண்டு வந்தார். தொடர்ந்து வந்த கேள்விகளுக்கிடையில் வருணம் என்ன என்னும் கேள்வி வந்தது. பரமஹம்ஸ சந்நியாசி என்னும் ஐதிகத்துக்கு ஒப்ப சுவாமி விவேகானந்தர் ருத்ரவருணத் துக்கு உரியவர் என விடைகொடுத்தார். அதுவரையில் பிரச்னையும் உத்தரமும் முறையே நிகழ்ந்தன. அடுத்தபடி யாகப் பூர்வாசிரமத்தில் வருணம் என்ன, என்னும் கேள்வி பிறந்தது. ஆனால் சந்நியாச ஆச்ரமத்தில் அத்தகைய கேள் விக்கு இடமில்லை. அக்கேள்விக்கு விடை கொடுப்பதகுப் பதிலாக சுவாமி விவேகானந்தர் தாம் வந்த வழியில் திரும் பிப் புறப்பட்டுப் போனார். "வந்தவர் ஏன் போகின்றீர்கள்?" என்று மடாலயத்தில் இருந்தவர்கள் கேட்டார்கள். "இங்கு நான் வேதாந்திகளைக் காண வந்தேன். ஆனால் வேதாந்தி களுக்குப் பதிலாக லௌகிகர்கள் குழுமியிருக்கின்றனர். அவர்களோடு எனக்கு வேலையில்லை" என இயம்பி விட்டு விவேகானந்தர் திரும்பிப்போய் விட்டார். இந்நிகழ்ச்சி அவ ருடைய ஜீவிய சரித்திரத்தில் இடம் பெறவில்லை. ஆனால் அவருடைய குரு சகோதரர்கள் சிலர் அவரிடமிருந்து இந் நிகழ்ச்சியைப் பற்றிக் கேள்விப்பட்டிருந்தனர். அது இப் பொழுது இப்புத்தகத்தில் இடம் பெறுகிறது.

சமயங்களைப் பாதுகாப்பதற்கும் வளர்ப்பதற்கும் என்று அமைந்துள்ள மடாலயங்களின் அடிப்படைக் கொள்கை களுக்கு இந்த நிகழ்ச்சி நல்லதொரு சான்று ஆகிறது. மக்கள் எல்லாரையும் நாராயண சொரூபமாக அல்லது பரமேசுவர சொரூபமாகக் கருதவேண்டும் என்னும் கோட் பாடு பேச்சளவில் இருக்கிறது. மடாலயங்களில் நிகழ் கின்ற அத்யாத்மிக விஷயங்கள் வானளாவும் மேலான கருத்துக்கள் உடையனவாக இருக்கும். அப்பேச்சுக்களெல்

லாம் பேச்சு மேடையுடன் நின்றுவிடுகின்றன. பிறகு மனிதனை மனிதன் உபசரிக்க ஆரம்பிக்கும்பொழுது விவேகானந்த சுவாமிகள் பகர்ந்துள்ளபடி, மடைப்பள்ளியே தேவாலய மாகிறது; சமையல் பாத்திரம் வழிபடு தெய்வமாகிறது; மக்கள் இனம் இனமாகப் பிரிந்திருந்து உணவருந்துவது ஆத்மசாதனமாகிறது! இந்திய ஏழை மக்களுக்கிடையி லுள்ள பரந்த மனப்பான்மை எங்கே? மடாதிபதிகளிடத்தி லிருக்கும் குறுகிய மனப்பான்மை எங்கே, என்று சுவாமி விவேகானந்தர் தமக்குள்ளேயே இந்தியாவின் இக்காலத்திய கதியைப் பற்றிச் சீர்தூக்கி அறிந்துகொண்டார். இந்தியா உய்வு அடைந்து மீண்டும் உயர்நிலையெய்துதற்கு இம் மடாலயங்கள் உதவமாட்டா எனவும் அவர் முடிவுகட்டினர். பௌதிக விஞ்ஞானம் உலக மக்களை யெல்லாம் ஒரு குடும்ப மாகக் கவர்ந்திழுத்து இணைப்பது போன்று சமயங்களை வளர்ப்பதற்கென்று அமைந்துள்ள இப்பழைய மடாலயங் கள் உதவமாட்டா என்பது அவரது துணிபு.

மேல் நாடுகளில் அறிஞர் கூட்டங்களில் விவேகானந்த சுவாமிகள் வேதாந்த தத்துவங்களை எடுத்துப் புகட்டிய பொழுது அத்தத்துவங்கள்தாம் தங்களை உய்விக்க வந்துள்ள அருட்பேறு ஆகும் என அவ்வறிஞர்கள் உணர்ந் தார்கள். அச்சீரிய தத்துவங்களை யெல்லாம் மக்களுக் கிடையில் பரப்புதற்கு உற்ற உபாயம் யாது என்று அவர் கள் சுவாமிகளிடம் வினவினர். “வேதாந்தத் தத்துவங் களுக்கு ஏற்ப வையகத்தில் வாழ்ந்து வருவதே அவ்வேதாந் தத் தத்துவங்களை மக்களுக்கிடையில் பரப்புதற்கு உற்ற உபாயமாகும்” என்பது அவர் கொடுத்த அரிய மறுமொழி யாகும். வேதாந்தம் முற்றும் வாழ்க்கைத் தத்துவம், ஆத லால் வாழ்க்கையின் மூலமாக அதை விளக்குவதே சரியான விளக்கமாகும்.

விவேகானந்த சுவாமிகள் நிறுவியுள்ள வேதாந்த ஸ்தாபனங்களில் மதவேற்றுமைகளுக்கு இடமில்லை. உலகிலுள்ள மதங்கள் அனைத்தையும் அவ்வவைகளுக்கேற்ற இயல்புகளுடனும், கிரியைகளுடனும், அனுஷ்டான முறைகளுடனும், ஐதிகங்களுடனும் காப்பாற்ற வேண்டும். அதற்கிடையில் வேதாந்தம் என்னும் தாய்மதத்தில் அம்மதங்கள் பெறுகிற ஸ்தானங்களையும் சரியாக அறிந்துகொள்ள வேண்டும். மக்களுக்கிடையில் எக்காரணத்தை முன்னிட்டும் உண்ணும்பொழுதோ, உறவாடும் பொழுதோ, தொடர்வுகொள்ளும் பொழுதோ வேற்றுமை பாராட்டலாகாது. உலக மக்கள் அனைவரும் இறைவனுக்குச் சொந்தமாயிருப்பது போன்று துறவியர்களுக்கும் சொந்தமாகவேண்டும். மக்களிடத்திருந்து மக்களைப் பிரித்து வைப்பவர்கள் ஒருநாளும் துறவியர்கள் ஆகமாட்டார்கள்; அன்னவர் வேதாந்திகளும் ஆகமாட்டார்கள். மக்களோடு மக்கள் வைக்கிற தெய்வீக நல்லிணக்கத்துக்கு அறிகுறியாக மூன்று துறைகளில் கைங்கரியம் செய்வது அவசியமாகிறது. அத்துறைகளை முறையே அன்னதானம், அறிவுதானம், ஆத்மதானம் எனப் பாகுபடுத்தலாம். உணவுக்கு உயிர்கள் அனைத்துக்கும் உரிமை உண்டு. துறவியர்கள் தங்களைப்போன்றே மற்றவர்களையும் உணர்ந்து உணவருந்தும் விஷயத்தில் அவர்களுடன் சமனாயிருப்பது அனுஷ்டான வேதாந்தமாகும். அப்படிச் செயலில் உண்டாகிற ஒற்றுமை வெறும் வாய் உபசாரத்தால் உண்டாகாது. நல்லறிவு மக்களிடத்து ஓங்குமளவு ஆயுள்காலம் முழுதும் அது அவர்களுக்குப் பயன்படுகிறது. நல்லறிவினின்று நல்லிணக்கமும் நேருகிறது. இனி, ஆத்மஞானத்தை எல்லார்க்கும் எடுத்து வழங்குதலின் வாயிலாக அவர்களின் பிறப்புரிமை அவர்களுக்கு வழங்கப்படுகிறது. இக்கடமைகளையெல்லாம் முறையாகச் செய்து உலகம் முழுதையும் உயர்நிலைக்கு எடுக்க அடிகோலியவர் விவேகானந்தர்.

18. நாட்டுக்கு உகந்த கல்வி

ஆங்கிலேய அரசாட்சி இந்தியாவில் ஸ்தாபிக்கப்பெற்ற பிறகு அந்த அரசாங்கத்தால் வகுத்து வழங்கப்பட்ட கல்வி முறை அன்று முதல் இன்றுவரை நம் நாட்டில் கையாளப்பட்டு வருகிறது. இந்தியாவுக்குப் பிரிட்டிஷ் சாம்ராஜ்யத்தினின்று விடுதலை வருவதற்கு முன்பு தேசியக் கல்வி நாடெங்கும் வழங்கப்படவேண்டும் என்ற கிளர்ச்சி இருந்து வந்தது. மேடைகளில் அதைப் பற்றிப் பேசுவதும், பத்திரிகைகளில் அதைப்பற்றி எழுதுவதும் ஓயாது நிகழ்ந்து வந்தது. பிரிட்டிஷ் அரசாங்கத்தாரோடு ஒத்துழைக்க மறுத்தவர்கள் பலர் தங்கள் சிறுர்களுக்கு இப்பொழுது நடைமுறையிலிருக்கும் கல்வியைக் கொடுக்க மறுத்துவிட்டனர். தங்கள் போக்கில் ஏதோ ஒருவித தேசியக் கல்வியை அச்சிறுவர்களுக்குக் கொடுத்து வந்தார்கள். ஆனுல் சுதந்தரத்தைப் பெற்றுன பிறகு அந்த இயக்கம் தானுக மறைந்து போயிற்று. தேசியக் கல்வியைப் பற்றி இப்பொழுது பேசுவாரில்லை. ஆங்கிலேயர்கள் கொடுத்த கல்வி முறையே நாளுக்கு நாள் உறுதிபெற்று வருகிறது. நம் தேசமக்களுக்கு தேசியக் கல்வியைப் பற்றிய தெளிந்த கருத்து ஒன்றுமில்லையென்பது இதினின்று வெளியாகிறது. சுதந்தரப் போராட்டத்தின்பொழுது ஆங்கிலேய அரசாட்சியின்மீது குறைகூறுதற்கு ஏதேதோ காரணங்களை எடுத்துக்கொள்ள வேண்டியிருந்தது. இக்கல்வித் திட்டம் சரியானது அன்று என்பதும் ஒரு காரணமாக அன்று எடுத்துக்கொள்ளப்பட்டது. பின்பு ஆட்சிமுறை மாறியதும் அந்தப் பிரச்னை அடியோடு மறைந்து போயிற்று.

நமக்கு எத்தகைய கல்வி வேண்டும் என்பதைப்பற்றி ஸ்ரீ ராமகிருஷ்ணரிடத்திருந்தும், அன்னை சாரதா தேவியாரி

டத்திருந்தும், சுவாமி விவேகானந்தரிடத்திருந்தும் நாம் கற்றுக்கொள்ள வேண்டிய விஷயங்கள் பல இருக்கின்றன. ஸ்ரீ ராமகிருஷ்ண பரமஹம்ஸர் சிறுவனுயிருந்தபொழுது நாட்டு மக்கள் வழக்கத்தை அனுசரித்து அவரும் பள்ளிக் கூடத்துக்கு அனுப்பப்பட்டார். அதன்படி அவரும் பள்ளிக் குச் சென்று கல்வி பயின்று வந்தார். ஆனல் இரண்டு வருஷங்களுக்குள்ளாக இக்கல்வி தமக்குப் பயன்படாது என்பதை அவர் முற்றும் அறிந்துகொண்டார். மூன்ருவது வருஷத்தில் மூன்ருவது வகுப்பில் படித்துக்கொண்டிருந்த பொழுது பள்ளிக்கூடத்துக்குப் போவதும் போகாததுமாக இருந்து பின்பு இக்காலத்திய நவீனப் படிப்பை அவர் அறவே நிறுத்தி விட்டார். இந்தக் கல்வியின் நோக்கமெல் லாம் ஜீவனேபாயத்துக்கு உற்றதாக இருக்கிறதே யொழிய மனிதனுடைய வாழ்வைச் செப்பனிடுவதற்கும், மனதைப் பண்படுத்துதற்கும் இது உதவுவதில்லை; ஆதலால் இக்கல்வி தமக்கு வேண்டாம் என்று ஸ்ரீராமகிருஷ்ணர் அதை ஒதுக்கி வைத்தார். அவர் காலம் தொட்டு இன்று வரை கல்வித் துறையிலுள்ள இக்குறைபாடு மாறியமையவில்லை. கணக் கற்றபேர் எழுதப் படிக்கத் தெரிந்துகொள்கின்றனர். மேற் படிப்புக்குப் பலர் போகின்றனர். உயர்நிலைப்பள்ளிகளிலும் பிறகு கல்லூரிகளிலும் ஆயிரக்கணக்கான பேர் கல்வி பயின்று பட்டதாரிகள் ஆகின்றனர். ஆனல் அதை முன் னிட்டு அவர்களுக்கு நல்ல மனபரிபாகம் வாய்த்திருக்கிறது என்று சொல்வதற்கில்லை. பெரும்பாலோர் மேல் படிப்புக் குப் போவதற்கேற்ப சுயநலத்திலும் ஆழ்ந்து மூழ்குகின் றனர். சமுதாயத்துக்குத் தாங்கள் கடமைப்பட்டிருப்பதைப் பற்றி அவர்கள் சிறிதும் கருதுவதில்லை. மற்று, திருந்தி யமையப்பெற்ற வாழ்க்கை முறைக்கும், நவீன கல்விமான்

களுக்கும் வெகுதூரம். அடக்கம் பழகுதல், ஒழுக்கத்தில் நிலைநிற்றல் ஆகியவைகளில் அவர்களுக்கு எந்த விதமான பயிற்சியும் இல்லை. ஒவ்வொரு மனிதனும் தனக்குத் தோன்றியவாறு வாழ்க்கையை நடாத்திக்கொள்ளலாம். அதில் ஒழுங்குப்பாடு அமையாவிடின் அதனால் தோஷம் ஒன்றுமில்லை. இதுவே கல்வி கற்றவர்களின் மனப்பான்மை. ஏதோ ஒரு போக்கில் அவர்கள் உலகில் வாழ்ந்து வருகின்றனர். ஆனால் வாழ்வில் மேன்மையுறுதலைப் பற்றியும், தங்கள் வாழ்வு உலகுக்குப் பயன்படுவதைப் பற்றியும் கல்விமான்கள் சிறிதும் சிந்தனை கொள்வதில்லை. இக்குறைபாட்டைச் சின்னஞ்சிறு வயதிலேயே அறிந்துகொண்ட ஸ்ரீ ராமகிருஷ்ணர் இக்கல்வி வலையினின்று விலகிக் கொண்டார். தம் போக்கில் தமது வாழ்வை அலாதியாகக் கடவுள் வழிபாட்டிலேயே திருப்பினர். அதன் விளைவாக அவர் ஒரு பரமஹம்ஸர் ஆனர். நவீனக் கல்வி அதற்குத் தேவையில்லாது போயிற்று. அவர் ஒரு பரமஹம்ஸர் ஆனதின் விளைவாக உலகுக்கு அருள் விருந்து வேண்டியவாறு கிட்டுவதாயிற்று.

அன்னை ஸ்ரீ சாரதா தேவியார் ஒரு குக் கிராமத்தில் பிறந்தவர். பெண் கல்வியைப் பற்றிய பேச்சு அக்காலத்தில் சிறிதும் கிடையாது. ஆனல் தாய் தந்தையர்கள் கொடுத்து வந்த வாழ்க்கைப் பயிற்சியை அன்னை சாரதா தேவியார் வேண்டியவாறு பெற்றார். அவர் ஆறு வயதுச் சிறுமியாயிருந்தபொழுது அப்பொழுது கதாதர சட்டர்ஜி என்று அழைக்கப்பெற்ற ஸ்ரீ ராமகிருஷ்ணருக்கு மணம் முடிக்கப் பெற்றார். அவரை மணந்து கொண்ட பிறகு சில ஆண்டுகளுக்கு ஒரு தடவை தம் கணவனைச் சந்திக்கும் சந்தர்ப்பம் ஸ்ரீ சாரதா தேவியாருக்கு வாய்க்கும். அப்படிச் சந்தித்த

பொழுதெல்லாம் பாரமார்த்திகப் பெருவாழ்வைப் பற்றிய கருத்து இரண்டொன்றை ஸ்ரீ சாரதா தேவியாருக்கு ஸ்ரீ ராம கிருஷ்ணர் எடுத்துரைப்பார். அக்கருத்துக்களெல்லாம் அன்னையாரின் மனதில் ஆழ்ந்து பதிந்தன. அக்கருத்துக் களுக்கு ஏற்ப அவரது வாழ்வு அதிவிரைவில் தெய்விகப் பெற்றியைப் பெறுவதாயிற்று. அன்னை சாரதா தேவியா ருக்கு எழுதப் படிக்கத் தெரியாது. ஆனால் இந்தியப் பெண் ணொருத்தியின் தகைமைகள் அனைத்தும் அவரிடத்துத் திகழ் வனவாயின. அதுமட்டுமன்று; ஸ்ரீ ராமகிருஷ்ணர் அருளால் அவர் உலகுக்கு ஞானத்தாய் ஆனார். அன்னை சாரதா தேவி யார் போன்று இந்தியப் பெண் மக்களின் பெரும்பான்மை யோர் அக்காலத்தில் கல்வி ஒன்றும் பயிலாதிருந்தார். அதை முன்னிட்டு இந்தியப் பெண்மக்களைப் பண்பாடடையா தவர்கள் என்று பகரலாகாது. பண்பாட்டில் அவர்கள் பொதுவாகத் தலை சிறந்திருந்தனர். ஒழுக்கத்துக்கும், நெறி யான வாழ்க்கைக்கும் அவர்கள் எடுத்துக் காட்டாக இலங் கினர். தெய்வீக விஷயங்களைப் பற்றியும், லௌகீக விஷயங் களைப் பற்றியும் கேள்வியின் வாயிலாக அவர்கள் ஏராள மாகத் தெரிந்திருந்தனர். எனவே நவீனக் கருத்துக்கொப்ப இந்திய மாதர் சிறிது காலத்துக்கு முன்பு கல்வி கல்லாதவர் களாக இருந்தார்கள் எனினும் தரத்திலும் தகைமையிலும் உலகில் எந்த நாட்டு மாதர்களுக்கும் இந்திய மாதர்கள் பின் வாங்கியவர்கள் அல்லர். இந்தியப் பண்பைச் சரியாகப் பெறு வதே அவர்களுக்கேற்ற கல்வியாயிற்று. ஆனால் இக்காலத் திய சிறுமிகள் ஏராளமாகக் கல்வி பயிலுதற்கிடையில் பண் பிலும், தகைமையிலும் தங்கள் கல்லாத தாய்மார்களுக்கு நிகர் ஆவார்கள் என்று நவில முடியாது. எனவே இன்று நம் நாட்டுப் பெண்களது கல்வி ஏதோ ஒரு போக்கில்

போய்க்கொண்டிருக்கிறது; நாட்டின் நாகரிகத்துக்கு அது முற்றிலும் ஒத்திருக்கிறது என்று இயம்ப முடியாது.

இனி, சுவாமி விவேகானந்தர் நரேந்திரநாதனயிருந்த பொழுது நவீனக் கல்வியை வேண்டியவாறு பயின்று வந்தார். ஆதியோடந்தம் அவர் ஒரு தலைமாணுக்கராகவே திகழலாயினர்; உடற்பயிற்சியை நன்கு அடையப்பெற்றவர்; விளையாட்டுக்கள் பலவற்றில் வல்லவர்; இசையையும் தம் போக்கில் பயின்றவர்; உயர்நிலைப்பள்ளியிலும் கல்லூரியிலும் பெறக்கூடிய கல்விகளையெல்லாம் அவர் ஏராளமாகப் பெற்று வந்தார். கல்கத்தா சர்வகலாசாலை ஆயத்தப் படுத்திய மேலான கல்விமான்களில் ஒருவராக அவர் விளங்கினர். பி. ஏ. பட்டதாரியானர். பி. எல் பட்டம் பெறுதற்குக் கல்லூரியில் படித்துக்கொண்டிருந்தபொழுது வாழ்க்கையில் தலைசிறந்த ஒரு செயலின் பொருட்டுப் பாக்கியிருக்கிற கல்லூரிப் படிப்பை அவர் நிறுத்தவேண்டியதாயிற்று. நவீனக் கல்வியில் அவர் கரைகண்டவர் எனக் கூறுவது மிகையாகாது.

நாம் இப்பொழுது கற்றுவரும் கல்வியிலுள்ள குறைபாடுகளைச் சரியாக விளக்கிக் காட்டியர் சுவாமி விவேகானந்தர். அதைச் சரியாக விளக்கிக்காட்டும் தகைமை அவரிடமிருந்தது. அவர் கூறியதாவது: "கடந்த ஐம்பது வருஷங்களாக இந்தியாவில் மூன்று ராஜதானிகளில் சர்வகலாசாலைகள் கணக்கற்ற பட்டதாரிகளை உண்டுபண்ணியிருக்கின்றன. ஆனல் அவர்கள் எல்லோரும் புள்ளி விவரங்களையும் தகவல்களையும் ஏராளமாகத் தங்கள் மூளையில் திணித்தவர்களாவர். எத்தனை யெத்தனை விஷயங்களை புஸ்தகங்களிலிருந்தும், ஆசிரியர்களிடமிருந்தும் மாணுக்கர்கள் ஏற்றுத் தங்கள் ஞாபகத்தில் வைத்திருக்கிருர்கள்

என்பதைப்பரீட்சை செய்வதற்கே இந்தச் சர்வகலாசாலைகள் அமைந்திருக்கின்றன. மாணுக்கர்கள் புஸ்தகங்களிலிருந்து படித்தவைகளைப் பரீட்சை பண்ணிப்பார்க்கும் குழுக்களாகக் கலாசாலைகள் அமைந்திருக்கின்றன. ஆதலால்தான் இந்த ஐம்பது வருஷங்களுள் மூல அறிவில் மேலோங்கிய நுண் ணறிவாளன் ஒருவனையுங்கூட இச்சர்வகலாசாலைகள் உண்டுபண்ணவில்லை. சுயபோதமும், நுண்ணறிவும் வாய்க் கப் பெற்றவர்கள் ஒரு சிலர் நாட்டிலே தென்படுகிறுர்கள் என்றுல் அவர்கள் இந்தப் பேரியல்பை வேறு எங்கேயோ இருந்தும், பழங்காலத்துப் பெருமக்களிடத்திருந்தும் பெற்ற வர்கள் ஆயினர்.'' இப்படிச் சுவாமி விவேகானந்தர் பகர்ந்த தற்குத் தக்க காரணம் இருந்தது. வெளிநாடுகளில் சென்று கற்றவர்களுக்கே ஓரளவு தகைமையும் மூல அறிவும் வாய்ப் பனவாயின. பிறகு தமக்கே வந்தமைந்த தகைமை சர்வ கலாசாலைப் படிப்பை முன்னிட்டன்று; பழங்காலத்துப் பெரி யோர்கள் மரபில் வந்துள்ள ஸ்ரீ ராமகிருஷ்ண பரமஹம்ஸரை அணுகி அவரிடமிருந்து பெற்ற மெய்ஞ் ஞானத்தாலே அது வாய்ப்பதாயிற்று.

இக்காலத்திய கல்வி எதிர்மறைக் கல்வி என்று விவே கானந்தர் அதைக்குறித்துப் பெரிதும் குறைகூறியிருக்கின் றுர். அக்காலத்தில் இருந்தது போன்று இக்காலத்தி லிருக்கிற கல்வி அவ்வளவு முழு மோசமான எதிர்மறைக் கல்வியன்று. ஆயினும் இன்றைக்கும் அது பெரிதும் எதிர் மறைக் கல்வியாகவே இருந்து வருகிறது. அக்குறைபாட்டை அவர் எப்படி விளக்கிக் காட்டினுர் என்பதை ஆராய்ந்து பார்ப்போம். இந்திய இளைஞர் ஐரோப்பியர்களால் எழுதிய இந்திய சரித்திரங்களைக் கற்று வருகின்றனர். புஸ்தகங்கள் வாயிலாகவும், கல்லூரி போதனைகள் வாயிலாகவும் மாணுக்

கர்களுக்குப் புகட்டப்படுவது இந்தியாவின் சிறுமைகளைப் பற்றிய புள்ளி விவரங்களேயாம். இந்தியாவின் பெருமையைப்பற்றிய புள்ளி விவரங்கள் அவர்களுக்குப் புகட்டப் படுவதில்லை. தங்களிடத்தும் தங்கள் முன்னோர்களிடத்தும் சிறுமைகளும், அறிவின்மையுமே நிறைந்து கிடந்தனவென்று எண்ணி வருகிறவர்கள் சிறுமையில் ஊறியவர்கள் ஆகிறார்கள். பெருங்காரியங்களுக்கு அவர்கள் உதவமாட்டார்கள். ஆங்கிலேயர்களுக்கு அடிமைகளாக இருந்து குமாஸ்தா வேலை பார்ப்பதற்காகவே கற்றவர்களில் பெரும்பாலோர் ஆயத்தப்படுத்தப் பட்டனர். மற்ற நாடுகளில் இருந்த வீரர்களைவிடப் பன்மடங்கு அதிகமான வீரர்களையும், தீரர்களையும், மகாமேதாவிகளையும் நம் நாடு ஏராளமாக உண்டு பண்ணியிருக்கிறது. இப்பெருமக்களைப் பற்றிப் பெருமை பாராட்டிப் படிக்கின்ற அளவு மாணாக்கனுடைய மனதும் பெருநிலையையே நோக்கி மேலோங்குகிறது. அத்தகைய வாய்ப்பு நம் நாட்டு இளைஞர்களுக்கு நவீனக் கல்வியின் மூலமாக உண்டாகவில்லை. வெளிநாட்டு மேன்மக்களைப் பற்றி அவர்கள் அறிந்திருக்கிற அளவு, தாய்நாட்டு மேன் மக்களைப்பற்றி அவர்கள் அறிந்துக்கொள்ளக் கிடையாது, அவர்கள் அறிந்துகொள்ளாதபடி அதையெல்லாம் மறைத்து வைப்பதே இக்காலத்தியக் கல்வித் திட்டமாக இருக்கிறது. ஆதலால்தான் நவீனக் கல்வியின் விளைவாகச் சுயநம்பிக்கையும், தேசீய உணர்வும் வாய்க்கப் பெற்றவர்களைக் காண்பது மிக அரிதாய்விட்டது.

கல்வி எப்பொழுதுமே சிரத்தையை அடிப்படையாகக் கொண்டிருக்க வேண்டும். சிரத்தைக்கு ஓர் அளவில்லை. வேண்டியவாறு உள்ளத்தினின்று அது ஓங்குதற்கான சூழ்நிலையைச் செய்துவைக்கலாம்.

வெள்ளத் தனைய மலர்நீட்டம் மாந்தர்தம்
உள்ளத் தனையது உயர்வு

என்னும் பொய்யா மொழி கல்விக்கென்றே அமைந்துள்ள தாகும். மாணக்கர் உள்ளத்தில் ஊக்கம் ஓங்குமளவு அவர்கள் மேன்மக்களாவார்கள். சிரத்தைக்கு எடுத்துக்காட்டாக நசிகேதன் இலங்குகின்ருன். மரணத்தையே சந்தித்து மேலான ஞானத்தைப் பெறுதற்கான சிரத்தை அவனிடம் இருந்தது. சிரத்தையை ஓங்குவிப்பது பழங்காலத்துக் கல்வியாய் இருந்தது. புள்ளி விவரங்களை மண்டையில் திணித்து வைத்திருந்து அவைகளைப் பரீட்சைக்குப் பயன் படுத்துவது இக்காலத்திய கல்விமுறையாகிறது. ஆதலால் இக்காலத்திய இளைஞர் மேலாம் காரியம் எதற்கும் உதவுவதில்லை. எப்படியோ உயிர் வாழ்ந்திருப்பதிலும், தாங்கள் மிகைபடப் பெருக்கி வருகிற குடும்பத்தைப் போஷிப்பதிலும் அவர்கள் திருப்தியடைந்திருக்கின்றனர். இத்தகைய புல்லிய போக்கு நமக்கு உதவாது.

இந்தியாவானது மீண்டும் பழங்காலத்துக் கல்வி முறைக்குப் போயாக வேண்டும். அப்படிப் போவதால் பௌதிக விக்ஞானம் முதலியவைகள் புறக்கணிக்கப்படும் என்பதல்ல; பௌதிக விக்ஞானத்தை இந்தியர்கள் ஏராளமாகக் கற்கவேண்டும். அத்துறைகளில் ஆராய்ச்சிகள் செய்யவேண்டும். யந்திரங்களைப் பொறிக்க நம்மவர் கற்ருக வேண்டும். யந்திரங்களின் துணைகொண்டு தொழிலையும், பொருள்களை உண்டுபண்ணும் முறைகளையும் அதிகப்படுத்த வேண்டும். இத்தகைய நவீனமேன்மைகளை நன்கு பயன்படுத்துவதற்கிடையில் கல்வியானது முற்றிலும் பழங்காலத்து முறைக்குத் திரும்பிப் போயாக வேண்டும். குருகுலவாசம் என்பது பழங்காலத்து முறை. வாழ்வில் பண்பாடடைந்

துள்ள பேராசிரியனுக்கே மாணுக்கர்களிடத்துப் பண் பாட்டை உண்டுபண்ண முடியும். தூய பெருவாழ்வு வாழு கின்ற பேராசிரியர்களோடு அல்லும் பகலும் வாழ்ந்து வருகிற மாணுக்கர்களுக்குத் தூய வாழ்வு தானுக வந்தமைகிறது. புஸ்தகத்தில் படித்து ஒரு மனிதனுக்குத் தூய்மையும், பெரு வாழ்வும் வாய்க்காது. மனதை நன்கு பண்படுத்திப் பெரு வாழ்வில் உறுதியாக நிலைத்திருக்கும் பேராசிரியர்களை நேரில் பார்த்து அவர்களோடு கூடி வாழ்ந்திருப்பதன் வாயி லாகவே இயல்பாக மாணுக்கர்களின் மனது பெருநிலைக்கு எடுத்துச் செல்லப்படுகிறது. குருகுலவாசம் எனப்படுவது இதுவே. பண்டைக்காலத்து இந்தியாவின் பண்புக்கு மூல காரணமாயிருந்தது குருகுல வாசம்·திரும்பவும் நாட்டினுள் நாம் அதை வருவித்தாலொழிய நமக்கு உய்வு இல்லை.

இயற்கையின் புனிதத்துக்கும், இக்காலத்திய கல்வித் திட்டத்துக்கும் தொடர்வு ஒன்றும் இல்லாது போய்விட்டது. கல்விச்சாலைகளைப் பழங்காலத்தில் ஆரண்யங்களிலும், நதிக்கரை யோரங்களிலும், மலைப்பள்ளத்தாக்குகளிலும் அமைத்திருந்தனர். இயற்கை என்னும் நூலை நன்ருகக் கற்றறிதற்கு அக்காலத்தில் வாய்ப்பு இருந்தது. இயற்கை யின் நடைமுறையில் புனிதமும், ஒழுங்குப்பாடும், இனிமை யும் மிளிருகின்றன. இயற்கை என்னும் நூல் அழியாத நூல். அது இறைவனுல் இயற்றப்பெற்றது. இயற்கை யோடு முறையாகத் தொடர்வு கொள்ளுகிறவனுக்கு சுய போதமும், நுண்ணறிவும் தானுக வளர்கிறது. அப்படி நல்லறிவு வாய்க்கப்பெற்றவன் இயற்கையிலுள்ள ஒவ்வோர் உயிரும் தனக்கு உயர்நிலை புகட்டுவதாக உணருகிருன். இயற்கைக்கு மூலகாரணமாயிருக்கின்ற ஐம்பூதங்களும் தனக் குப் பெரும்பாடம் புகட்டுவதாக உணருகிருன். கல்வியில்

பழங்காலத்து ரிஷிகள் கையாண்ட முறை இது. அம்முறையைப் புறக்கணித்து நாம் கீழ்மையடைந்திருக்கிறோம். அம்முறைக்குத் திரும்பிப் போகுமளவு நாம் மறுபடியும் மேன்மையுறுவோம் என சுவாமிகள் கூறியுள்ளார்.

இக்காலத்திய கல்விமுறை வெவ்வேறு கலைகளைப் பற்றிய செய்திகளை மாணுக்கனுக்கு எடுத்தோதுவதில் கருத்தைச் செலுத்துகிறது. அப்படிச் செய்வது அவசியம். ஆனால் அதற்கெல்லாம் மேலாக மாணுக்கனது வாழ்க்கையை மேலானதாகத் திருத்தியமைக்க வேண்டும். வாழ்க்கையைத் திருத்தியமைக்கும் செயலை நவீனக் கல்வி அறவே மறந்துவிட்டது.

ஒழுக்கம் விழுப்பம் தரலான் ஒழுக்கம்
உயிரினும் ஓம்பப் படும்

என்னும் கோட்பாடு இலக்கியத்துறையில் நின்றுவிடுகிறது. வாழ்க்கையோடு இதை இணைக்க நவீன உலகம் மறந்து போயிற்று. ஆகையால் மனிதன் படிப்படியாகத் தன் தரத்தில் கீழ்மையடைந்து வருகின்றான். நெறியான வாழ்க்கையில் மேலோங்குதற்கேற்ப மனிதன் மேலோன் ஆகிறான். புஸ்தகங்கள் பல படிப்பதால் அவன் மேலோங்குவதில்லை. அடக்கமும் ஒடுக்கமும் பழகுதற்கேற்ப மாணுக்கன் உயர்நிலை எய்துவது திண்ணம். மாணுக்கன் ஒருவன் பயிலுகிற ஒழுக்கம் முதியோர்களுக்குப் பணிவிடை பண்ணுவதாக வடிவெடுக்கிறது. தாய் தந்தையர்களுக்கும் குருவுக்கும் பணிவிடை புரிதற்கு ஏற்ப ஒழுக்கம் ஓங்குகிறது. குற்றேவல் புரிந்து பழகாதவனுக்கு நல்லியல்பு மேலோங்குவதில்லை. தன்னையறியாது சுயநலமும், இறுமாப்பும் அவன் உள்ளத்தில் இடம் பெறுகின்றன. கல்வித்துறையில் உள்ள குறை

பாட்டால் இக்கேட்டுக்கு இளைஞர் ஆளாகின்றனர். பண்டைக் காலத்துக் கல்வித் திட்டத்தில் காலையிலும் மாலையிலும் தியானத்தின் வாயிலாக மனதை ஒருமுகப்படுத்திப் பழகுதல் சிறந்ததொரு பயிற்சியாயிருந்து வந்தது. தேகப் பயிற்சியைச் சரியாகச் செய்வதன் மூலம் உடலைக் கட்டுடைய தாக்குகிறோம். உடற்பயிற்சியின் பயன் கண்கூடாக நமக்கு விளங்குகிறது. மனம் குவிந்திருந்து பழகுதல் உடல் பயிற்சியிலும் மேலானது. நவீன மனிதனுடைய மனது மேலும் மேலும் சிதறடைந்து வருகிறது. சூழ்நிலை மனதைச் சிதறடையச் செய்கிறது. பழங்காலத்துக் கல்வித் திட்டத்தில் மனதை ஒருமுகப்படுத்துவது முக்கியமான பயிற்சியாய் இருந்து வந்தது. இக்காலத்து இந்திய சமுதாயம் அதை அறவே மறந்துவிட்டது. பழைய பண்பை அனுசரித்து ஸ்ரீ ராமகிருஷ்ண பரமஹம்ஸரும் சுவாமி விவேகானந்தரும் சின்னஞ்சிறு வயதிலிருந்து தியானம் பழகி வந்தனர். அதன் விளைவு அவர்கள் வாழ்வில் வெளியாயிற்று.

19. சமுதாய சீர்திருத்தம்

சமுதாயத்தைப் பற்றியும், அதன் உற்பத்தியைப் பற்றியும் அதன் குறிக்கோளைப் பற்றியும் சுவாமி விவேகானந்தர் கொண்டிருந்த கருத்துக்களை நாம் அறிந்து கொள்வது அவசியமாகிறது. சமுதாய வாழ்க்கைக்கும், சமுதாய சேவைக்கும், ஆத்ம ஞானத்துக்கும் அவருடைய கருத்துக்கள் நன்கு பயன்படும்.

உயிர் வகைகள் ஒன்றுகூடி ஒழுங்காகவும் திட்டம் வகித்தும் வாழுமிடத்து அது சமுதாய வாழ்வு எனப்படு

கிறது. ஜீவர்களுக்குச் சமுதாய வாழ்வு தொடக்கத்தில் இல்லை. அது இடையில் வந்து வாய்க்கிறது; இறுதியில் ஞான நிலையை எய்துங்கால் ஞானி சமுதாய வாழ்க்கையைக் கடந்து அதீதத்துக்குப் போகவேண்டும். ஆகவே சமுதாய வாழ்வு சாசுவதமானதன்று. இடையில் தோன்றி ஜீவர்களைப் பெரிதும் பக்குவப்படுத்தி விட்டு இடைவழியில் அது நிற்கிறது. ஆதலால் ஆத்ம சாதகர்கள் சமுதாய வாழ்க்கையில் மிகைபட்ட பற்றுதல் வைக்கலாகாது; சமுதாய வாழ்க்கையில் கட்டுண்டும் இருக்கலாகாது.

மனிதன் எவ்வளவுதான் முயற்சியெடுத்து எத்தகைய சீர்மையில் சமுதாய வாழ்க்கையை அமைத்து வைத்தாலும் அதில் ஏதேனும் ஓர் இடத்தில் ஓரளவுக்குக் குறைபாடும் இருக்கும். குற்றமில்லாத நிறை சமுதாயம் எக்காலத்திலும் எந்த நேரத்திலும் இருந்ததுமில்லை; இனி இருக்கப்போவதுமில்லை. ஒரு சமுதாயத்துக்குரிய மக்களிடத்து ஆற்றலும், அறிவும் அதிகரித்திருக்குமாகில், அவர்களுடைய ஆற்றலுக்கு ஏற்ப அவர்கள் தீவிரமான வாழ்க்கை வாழ்ந்து வருகிறார்கள். அப்பொழுது அவர்களிடத்தில் குற்றம் அதிகம் தென்படாது. ஓர் உபமானத்தைக்கொண்டு அதை இயம்பலாம். ஆற்றுப் பெருக்கெடுத்து நீர் வேகமாக ஓடிக் கொண்டிருக்கும் பொழுது அதனிடத்து மாசுபடிவதில்லை. ஆனால் நீரின் வேகமும் அளவும் குறைந்து, அது தேங்கி நின்று பாயும்பொழுது மாசு அதனிடத்து ஏராளமாகப் படிகிறது. சமுதாயம் அதுபோன்றது. உள்வலிவு குறையும் பொழுது கேடுகள் பல சமுதாயத்தில் தோன்ற ஆரம்பிக்கின்றன. வலிவற்ற சமுதாயம் ஒன்றுக்கு எவ்வளவுதான் சீர்திருத்தங்கள் கொண்டுவந்தாலும் அது மேன்மையுறாது.

மீண்டும் வலிவுபெறுவது ஒன்றே அது சீர்பெறுதற்கு உற்ற உபாயமாகும்.

சமுதாய சீர்திருத்தத்தைப் பற்றிய அடிப்படைக் கோட்பாடு ஒன்றை சுவாமி விவேகானந்தர் கூறியுள்ளார். சமுதாயத்திலிருக்கும் கேடு கீல்வாதம் போன்றது. கீல்வாத நோயைச் சரீரத்தில் ஓரிடத்திலிருந்து ஓட்டினல் மற்ருேரிடத்தில் அது தோன்றும். அடியோடு அதை அகற்ற முடியாது. ஒரு வடிவில் தோன்றுகிற கேட்டைச் சமுதாயத்தினின்று நீக்கினல் மற்ெருரு வடிவத்தில் அது தலையெடுக்க ஆரம்பிக்கும். எனவே பூரண சீர்திருத்தத்தை யாருமே சாதிக்க முடியாது. ஒரு காலத்தில் நலனுயிருக்கின்ற சமுதாய ஏற்பாடு ஒன்று, மற்ெருரு காலத்தில் கேடாக மாறுகிறது. அத்தகைய கேடு நிலைத்திருப்பதற்கு இடந்தராது சூழ்நிலையை மாற்றியமைத்தால் கேடும் தானுக மறைந்து பட்டுப் போம்.

சமுதாயம் ஒன்றில் கேடுகள் பல தோன்றும்பொழுது சீர்திருத்தக்காரர்களும் முன் வருகின்றனர். இந்தச் சீர்திருத்தக்காரர்களைப்பற்றிய அடிப்படைக் கோட்பாடு ஒன்றை அறிவுடையோர் ஞாபகத்தில் வைத்திருப்பது அவசியமாகிறது. சீர்திருத்தக்காரர்கள் பெரும்பாலும் வெறிபிடித்தவர்களாக இருப்பார்கள். சமுதாயத்தைத் தாங்கள் விரும்புகிற முறையில் திருத்தியமைக்க அவர்கள் தீவிரமாக முயலுகின்றனர். அவர்களைப் பிடித்திருக்கும் வெறியின் விளைவாக ஒரு சிறிய அளவு நலன் செய்வதற்கிடையில் பெருங்கேட்டையும் தங்களையறியாது சமுதாயத்தினுள் வேறு ஏதேனும் ஒருவிதத்தில் அவர்கள் புகுத்திவிடுவர். ஆகவே பொதுவாக வெறி பிடித்த சமுதாய சீர்திருத்தக்காரர்கள் உலகுக்கு நலன் செய்பவர்கள் போன்று தென்படுவர்; உண்மை

யில் கேட்டையே அவர்கள் பெரிதும் விளைவித்து விடுகின்றனர். தங்களையறியாது மற்றொரு பெரிய தீமையை அவர்கள் உலகில் பரப்புகின்றனர். சமுதாயத்தில் இருக்கிற கேடுகளைப்பற்றி மேடைகளின் மீதிருந்துகொண்டு பெருமிதமாகப் பேசுகின்றனர். தீமைகளை நினைப்பதற்கு ஏற்றவாறு அத்தீமைகளை அப்படி நினைப்பவன் மேலும் வளர்க்கிறான். இது வாழ்க்கையைப்பற்றிய தத்துவம். ஆனால் இது அவர்களுக்கு விளங்குவதில்லை. உலகில் உள்ள தீமைகளைப்பற்றி ஏராளமாகப் பிறர்க்கெடுத்துப் பேசுவதற்கேற்ப அத்தீமைகளைப் பிறர் உள்ளங்களிலும் அவர்கள் வளர்த்து வருகிறார்கள்.

வேதாந்த வாழ்க்கைக்கும் சமுதாய சீர்திருத்தத்துக்கும் எந்த விதமான தொடர்வும் இல்லை. சமுதாயத்தில் சீர்திருத்தங்கள் செய்ய முயன்று வருகின்றவர்கள் வேதாந்திகள் ஆவதில்லை. மற்று, வேதாந்திகளோ சமுதாய சீர்திருத்தத்தைப்பற்றி ஒன்றும் நினைப்பதில்லை. அப்படி உதாசீனர்களாய் நடந்துகொள்வதால் சமுதாயத்துக்கு வேதாந்திகள் பயன்படாது போகிறார்களா, என்னும் கேள்வி பிறக்கிறது. இல்லை, சமுதாய சீர்திருத்தக்காரர்களைவிட வேதாந்திகளே சமுதாயத்துக்கு நன்கு பயன்படுகின்றனர். சீர்திருத்தம் என்கிற எண்ணத்தைச் சிறிதேனும் தங்கள் உள்ளத்தில் வரவழைத்துக்கொள்ளாது அரும்பெரும் சீர்திருத்தங்களை அப்பெருமக்கள் உலகில் தற்செயலாய் நிகழும்படி செய்து வைத்து விடுகின்றனர். ஸ்ரீ ராமகிருஷ்ண பரமஹம்ஸர் அதற்கு நல்ல எடுத்துக்காட்டு ஆவார். உலகில் ஒரு கேட்டையும் அவர் காணவில்லை. கேடு எதையும் உலகில் காணாது இருந்ததன் வாயிலாக எத்தனையெத்தனையோ நலன்களை உலகினுள் அவர் வழங்குவாராயினர்.

சமுதாய சீர்திருத்தக்காரர்கள் பலர் சுவாமி விவேகானந்தர் காலத்தில் இந்தியாவில் ஆங்காங்குத் தென்பட்டனர். சீர்திருத்தச் சங்கங்கள் பலவற்றை அவர்கள் நிறுவியிருந்தனர். என்னென்ன சீர்திருத்தங்கள் நம் சமுதாயத்துக்குத் தேவையென்பதை மக்களுக்கிடையில் புகட்டுதற்காக அவர்கள் பத்திரிகைகள் நடாத்தி வந்தனர். பிரச்சாரங்கள் மிகச் செய்தனர். சீர்திருத்தங்களுக்குத் தேவையான கிளர்ச்சிகளையும் அவர்கள் உண்டுபண்ணி வந்தனர். தங்கள் சங்கங்களில் சேர்ந்து கொள்ளும்படி சுவாமி விவேகானந்தரையும் அவர்கள் தூண்டினர். அத்தகையவர்களுக்குத் தக்க முறையில் சுவாமி விவேகானந்தர் விடைகொடுத்தார்: "சமூக சீர்திருத்தக்காரர்களுக்கு நான் சொல்லுதற்கு ஒன்று உண்டு. நானும் ஒரு சீர்திருத்தக்காரனே. அவர்களை யெல்லாம்விட நான் மிகப்பெரிய சீர்திருத்தக்காரன். ஆங்காங்குச் சிறிய பகுதிகளைத் திருத்தியமைக்க அவர்கள் விரும்புகின்றனர். நானோ சமுதாயத்தின் சொரூபம் முழுதையும் திருத்தியமைக்க விரும்புகிறேன். அப்படித் திருத்தியமைப்பதற்கு அவர்கள் கையாளுகிற முறை வேறு; நான் கையாளுகிற முறை வேறு. தாக்குதல் மூலமாகவும், தகர்த்தெறிவதன் மூலமாகவும் சீர்திருத்தம் பண்ண அவர்கள் முயலுகின்றனர். ஆனால் நானோ ஆக்கத் துறையில் உழைக்க முயலுகிறேன். சீர்திருத்தம் என்னும் முறையை நான் கையாளுவதில்லை. அதில் எனக்கு நம்பிக்கையுமில்லை. மனிதன் வளர்ந்து மேல் நிலைக்கு வரவேண்டும் என்பதில் நான் நம்பிக்கை வைத்திருக்கிறேன். சர்வேசுவரனுடைய ஸ்தானத்தில் என்னை வைத்துக்கொண்டு உலக மக்களைப் பார்த்து "இம்முறையில் நீங்கள் நடந்து கொள்ளுங்கள்; அம்முறையில் நடந்துகொள்ள வேண்டாம்" என்று ஆக்ஞாபிக்க

நான் துணிந்து முன்வரமாட்டேன். என்னால் இயலுகிற பணிவிடையைப் பணிவுடன் செய்ய நான் ஆயத்தமாயிருக்கிறேன். நமது சமுதாயம் என்னும் விசுவ கர்மா எத்தனையோ யுகங்களில் நன்கு வினையாற்றி வந்திருக்கிறது. நமது சமுதாயத்தின் ஜீவிதம் ஜீவநதி போன்று நம் கண்ணெதிரே ஓடிக்கொண்டிருப்பதைப் பார்க்கிறோம். இப்பழைய சமுதாயத்துக்கு எது நல்லது; அது எப்படி எப்படி நடந்துகொள்ளவேண்டும் என்று ஆணையிடத் துணிந்து முன் வருபவன் எவன்? ஆயிரக்கனக்கான சூழ்நிலைகளுக்கிடையில் நமது சமுதாயம் தன்போக்கில் வாழ்ந்து வளர்ந்து வந்திருக்கிறது. சிலவேளைகளில் அது செயலற்றுத் தூங்கிக்கொண்டிருப்பது போன்று தென்படுகிறது; வேறு சிலவேளைகளில் ஆர்வத்தோடு பல அலுவல்களில் அது ஈடுபடுகிறது. அதன் போக்கு எப்படியிருக்க வேண்டுமென்று கட்டளையிடத் துணிபவன் எவன்? அதற்குப் பணிவிடை செய்வது நமக்குக் கிடைத்துள்ள வாய்ப்பு. செடிக்கு எருவிட்டு, நீர் பாய்ச்சுவது போன்று இப்பொழுது நம் சமுதாயத்துக்குத் தேவையாயிருப்பவைகளை எடுத்து வழங்குவது நம் கடன். அதன் போக்கை மாற்றியமைக்க நமக்கு இயலாது. அதனிடத்துத் தீமைகள் பல இப்பொழுது மலிந்து கிடக்கலாம். ஆனால் அவையாவையும் களைந்து விட்டு மேல்நிலைக்கு வரும் உள் வலிவு நம் சமுதாயத்தில் இருக்கிறது. அதன் கதி என்னுகுமோ என்று அதைக் குறித்து நம்மில் யாருமே வருந்தவேண்டிய அவசியமில்லை.'' சுவாமிகள் சமுதாய சீர்திருத்தக்காரர்களுக்கு இங்ஙனம் எச்சரிக்கை செய்திருக்கிறார். சமுதாயத்துக்கு நல்ல முறையில் சேவை செய்து வாருங்கள். சீர்திருத்தம் என்பது தானாக நிகழும் என அவர் கூறியுள்ளார்.

நலிந்து கிடக்கும் சமுதாயம் ஒன்று புத்துயிர் பெற்று ஆற்றல் நிறைந்த நல் வாழ்வில் ஈடுபடும்பொழுது அதனிடத்துள்ள பல கேடுகள் தாமாகத் திருந்தியமைகின்றன. நோய் வாய்ப்பட்டுள்ள உடல் மீண்டும் நலன் பெறுவதற்கு நிகர் அது. அடுத்தபடியாக சூழ்நிலை மாறியமையுங்கால் அதற்கேற்றவாறு வாழ்க்கையை மாற்றியமைக்கும் மனப்பான்மையும் வருகிறது. சந்தர்ப்பங்களுக்கும், நெருக்கடிகளுக்கும் ஏற்றூற்போன்று வாழ்க்கையை மாற்றியமைக்கும் நிர்ப்பந்தம் தானுக வருகிறது. மூன்ருவதாக நல்ல முறையில் சமுதாயத்துக்குக் கல்வியை எடுத்து வழங்குங்கால் அதற்கேற்றபடி மனப்பான்மையும் திருந்தியமைகிறது. ஆக புத்துயிர் பெறுதல், சூழ்நிலைக்கு ஒத்துப்போதல், திருந்திய மனப்பான்மையைப்பெறுதல் ஆகிய மூன்று முகாமைகளும் சேர்ந்து அமையுமிடத்துத்தேவையாயிருக்கிற சீர்திருத்தங்களெல்லாம் தாமாகவே நிகழ்ந்துவிடுகின்றன. பின்பு அவைகளையெல்லாம் பற்றி பிரசாரம் செய்வதற்கும், பத்திரிகைகளில் எழுதுவதற்கும் தேவையேற்படாது. ஹிந்து சமுதாயம் விழித்து எழும் காலம் விரைவில் வந்துகொண்டிருக்கிறது. புதிய ஆற்றலையும் நாடு பெற்று வருகிறது. மனப்பான்மையும் நல்லதாகி வருகிறது. இதன் விளைவாக நம்மிடத்துள்ள கீழ்மைகளெல்லாம் தாமாக மறைந்துபோம். புதிய நலன்கள் பல நம் சமுதாயத்தில் தோன்றுவனவாகும் என விவேகானந்தர் கூறியுள்ளார்.

நம் நாட்டில் இதுகாறும் இருந்து வந்த தீண்டாமை என்னும் நோயைக் குறித்து அவர் பெரிதும் வருந்தியிருக்கிருர். சமய அனுஷ்டானத்துக்கும், தீண்டாமைக்கும் எந்தவிதமான தொடர்வும் இல்லை. பின்பு சமுதாய முன்னேற்றத்துக்கு அது ஒருபோதும் உதவாது. தீண்டாமை என்னும் கொடிய நோய் யாது காரணத்தாலோ நாடெங்கும் புகுந்

துள்ளது. தென்திசைக்கு வர வர அதன் கொடுமை அதி கரிக்கிறது. தீண்டாமை கேரளத்தில் உச்சநிலையை எட்டி யிருக்கிறது. ஒருவன் ஹிந்துவாக இருக்கும்பொழுது தீண் டத்தகாதவன்; அணுகத்தகாதவன்; பார்க்கத்தகாதவன்—இப் படிப்பட்ட சிறுமைகளெல்லாம் மனிதன் மீது திணிக்கப்படு கின்றன. ஆனால் அதே மனிதன் புறமதத்தைத் தழுவுகிற பொழுது மரியாதையுடன் வரவேற்கப்படுகிறான். இத் தகைய பயித்தியக்காரத்தனம் நாட்டைவிட்டு விரைவில் அகன்று போதல் வேண்டும் என்று அன்று சுவாமி விவேகானந்தர் மனம் நொந்து கூறுவாராயினர். இன் றைக்கோ அது பெரிதும் நாட்டினின்று மறைந்து போய் விட்டது. எஞ்சியிருக்கும் சிறுபகுதியும் அதிவிரைவில் அழிந்துபட்டுப்போம். இனி அதைப் பற்றியப் பிரசாரத் துக்கு அவசியம் இல்லை. சூரியோதயத்தில் இருள் நீங்கு வதுபோன்று தீண்டாமை என்னும் நோய் தானாக மறைந்து போய்க்கொண்டிருக்கிறது.

விதவைகளின் மறு விவாகத்தைப் பற்றிப் பெருமிதமாக அக்காலத்தில் பிரசாரங்கள் செய்யப்பட்டன. கிளர்ச்சிகள் உண்டாயின. அதற்கென்றே சங்கங்கள் நிறுவப்பெற்றன. "விதவைப் பிரச்னை பற்றி உங்கள் கருத்து என்ன?" என்று சமுதாய சீர்திருத்தக்காரர் ஒருவர் சுவாமி விவேகானந்த ரிடம் வினவினார். அதற்கு அவர் "நான் ஒருவிதவை அல்லள். இக்கேள்வியை என்னிடம் ஏன் கிளப்புகின்றீர்?" என சுவாமிகள் மறுமொழி கூறினார். அப்படி அவர் கூறியது தமக்கு விளங்கவில்லை யென்று சீர்திருத்தக்காரர் சொன் னார். தன் பிரச்னையை விதவையொருத்தி தானே சரிப் படுத்திக்கொள்ள வேண்டும். பிறர் அதில் தலையிடலா காது. அவள் வாழ்க்கைக்குத் தேவையாயிருக்கிற நல்லறி

ணவையும், ஆற்றலையும், பொருந்திய சூழ்நிலையையும் அவளுக்கு உண்டுபண்ணித் தருவதோடு மற்றவர் கடமை முடிவடைகிறது. பிறகு தனக்குத் தோன்றியபடி தன் வாழ்க்கையை நடாத்துவது அவள் பொறுப்பு என்பது சுவாமிகளது கருத்து. அன்று அவர் கூறியபடி இன்றைக்கு விதவைப் பிரச்னையும் பெரும்பாலும் மறைந்து பட்டுப் போயிற்று. கல்வித் துறையிலும், வேறு பல தொழில்களிலும் இறங்கித் தங்கள் வாழ்க்கையை விதவைகள் தாங்களே செப்பனிட்டு வருகின்றனர்.

இக்காலத்தில் மக்கள்கொண்டுள்ள மனப்பான்மைக்குப் பாலியவிவாகம் பொருந்தாது என்று சுவாமி விவேகானந்தர் கூறியுள்ளார். சிறுவர்களுக்கும் சிறுமிகளுக்கும் நல்ல முறையில் கல்வி வழங்கவேண்டும். வாழ்க்கைப் பயிற்சியை அவர்கள் வேண்டியவாறு பெற்றுவர வேண்டும். விவாகமானது எவ்வளவுக் கெவ்வளவு ஒத்திவைக்கப்படுகின்றதோ அவ்வளவுக்கவ்வளவு சமுதாயத்தில் நலன் மிக உண்டாகும். பாலிய விவாகம் சமுதாயத்தை மெலிந்து போகச் செய்கிறது. நீண்டநாள் பிரம்மச்சரியம் சமுதாயத்துக்கு உறுதியைத் தருகிறது என்பது சுவாமி விவேகானந்தரின் கொள்கை.

ஜாதி வேற்றுமையைப் பெருக்குவது பொருந்தாது. பண்பாட்டில் ஒரே தரத்தில் இருக்கும் பல ஜாதியினர் அவரவர் கூட்டத்திலேயே மணம் முடித்துக்கொண்டு உடல் மெலிந்து போவதைவிட தங்கள் தரத்திலிருக்கும் வேற்று இனங்களுடன் கலப்புமணம் செய்து உடலை உறுதிப்படுத்துவது நலன் என சுவாமி விவேகானந்தர் கூறியுள்ளார். அத்தகைய சீர்திருத்தமும் இன்று அமைதியாகச் சிறிது சிறிதாக நிகழ்ந்து வருகிறது.

---

20. தேசத்துக்குப் புத்துயிரூட்டியவர்

பத்தொன்பதாம் நூற்றாண்டில் இந்திய தேசம் எல்லாச் சீரும் சிறப்பும் வாய்க்கப்பெற்றதாகக் காட்சி கொடுத்தது. அதற்கு முன்பு இல்லாத பாங்கில் இப்பரந்த பரத கண்டமானது ஆற்றல் படைத்த ஆங்கிலேய ஆட்சி என்னும் ஒரே அரசாங்கத்துக்கு உட்பட்டிருந்தது. ஆக்கம் மிக வாய்க்கப் பெற்றது போன்று நாடு அப்பொழுது புறத்தில் தென்பட்டது. வலிவு வாய்ந்த அந்த ஆட்சியின் கீழிருந்த நாட்டில் சண்டை சச்சரவுகளுக்கும், குழப்பங்களுக்கும் இடமில்லை. ஆங்கிலேயச் செங்கோலின் கீழ் நாட்டில் நலன்கள் அனைத்தும் மேலும்மேலும் வந்தமையும்போல் தென்பட்டது. ஆனால் இத்தகைய இனிய காட்சி புறத் தோற்றத்தில் மட்டும் இருந்தது. அடிப்படையான நிலைமையைத் துருவி ஆராய்ந்து பார்க்குமிடத்துப் பத்தொன்பதாம் நூற்றாண்டு தான் இந்துதேச சரித்திரத்தில் இருள் மிகச் சூழ்ந்திருந்த காலமெனக் கூறவேண்டும். ஏனென்றால் இந்நாட்டு மக்கள் சுயநம்பிக்கையை அறவே இழந்துவிட்டனர். தன்னம்பிக்கையை இழக்கிற தனி மனிதனோ அல்லது தேசமோ பின்பு எவ்விதத்திலும் முன்னேற்றமடையாது. மனமானது மருள் நிலையை எய்துங்கால் அதைத் தொடர்ந்து வருவது அழிவு. அத்தகைய இழிநிலையில் நாட்டு மக்களது மனநிலை அப்பொழுது இருந்தது.

பல்லாயிரம் ஆண்டுகளாக எந்த உயர்ந்த லட்சியத்துக்காக இந்தியா வாழ்ந்திருந்ததோ அந்தப் பெரு லட்சியம் இனி ஒன்றுக்கும் உதவாது என்னும் மனநிலை நவீனகல்வி கற்றிருந்தவர்களுக்கிடையில் வந்து புகுந்தது. தங்களுடைய தேசீய பழக்க வழக்கங்களெல்லாம் பயனற்றவைகள் என

மேல்நாட்டவர்களால் இந்தியர்களுக்கு வெவ்வேறு சந்தர்ப்பங்களில் எடுத்துக் காட்டப்பட்டது. ஆதலால் தாங்கள் இதுகாறும் அனுஷ்டித்து வந்திருந்த வாழ்க்கை முறைகளைக் குறித்து மேல்நாட்டவர்களிடமிருந்து மன்னிப்புக் கேட்டுக் கொள்ளும் விதத்தில் அடிமைவாய்ப்பட்ட மனநிலையில் இந்தியர் இருந்தனர். மேல்நாட்டு வாழ்க்கை முறைகளையெல்லாம் உள்ளவாறு ஏற்றுக்கொண்டாலொழிய நாட்டுக்கு விமோசனம் இல்லை என்னும் எண்ணமும் அவர்கள் மனதில் ஆழ்ந்து புகுந்தது. கிறிஸ்துவ மதத்திலோ அல்லது அதையொட்டியிருக்கிற பற்பல கோட்பாடுகளிலோ நாட்டுக்கு ஏதாவது உய்வு ஏற்படலாம் என்றும் அவர்கள் கருதி வந்தனர். இப்படி ஒரு நாட்டு மக்களிடத்துத் தங்களைக் குறித்து அவமானப்படுவதும் கீழ்மையுறுவதுமாகிய மன மாறுதல் ஏற்படுமாகில் இனி அவர்கள் தங்கள் தனி வியக்தியையும், நாகரிகத்தையும் இழக்கப் போகிறார்கள் என்பதற்கு அது முன் அறிகுறியாகும். அத்தகைய நெருக்கடியிலும் சோதனையிலும் பத்தொன்பதாம் நூற்றாண்டின் பிற்பகுதியில் இந்தியா வைக்கப்பட்டிருந்தது.

இந்த இருள் சூழ்ந்த சூழ்நிலையில் இந்தியா இருந்த பொழுது விவேகானந்தர் தோன்றிவந்தார். சாகப்போகும் தறுவாயிலிருந்தவர்களுக்குச் சாகாமருந்து அல்லது அமிருதத்தை வழங்க வந்தவர்போன்று அவர் தென்பட்டார். இந்தியாவைப்பற்றி மேல்நாட்டு அறிஞர்கள் கொண்டிருந்த மனப்பான்மையை அவர் அறவே மாற்றியமைத்ததன் விளைவாக இந்திய மக்களுக்கிடையில் சுவபோதம் உருவெடுக்கலாயிற்று. விவேகானந்தரின் வருகையை வசந்தகாலத்தின் வருகையோடு ஒப்பிடலாம். உறைப் பனிக் காலத்தில் இமயமலையில் மரம் செடி கொடிகளெல்லாம் பட்டுப்

போகின்றன. உயிரின் அறிகுறி எதையும் அவைகளிடத்துக் காணமுடியாது. வெறும் கவையாகிக் கொம்பாகி மரங்கள் நின்றுகொண்டிருக்கும். அது அவைகள் தருகிற வெளிக் காட்சி யெனினும் உள்ளே அவைகளின் உயிர்ச் சக்தி ஒடுங்கி யிருக்கிறது. பனிக்காலம் போய் இளவேனிற்காலம் அல்லது வசந்த காலம் வரும்பொழுது பட்டுப்போனவை போன்று கிடந்த மரம் செடி கொடிகள் மீண்டும் தளிர்த்துப் புத்துயிர் பெற்றுப் பொலிகின்றன. மேல் நாட்டு நாகரீகத்தின் மயக் கத்தில் மூழ்கிக் கிடந்த இந்தியர்களுக்குத் தங்கள் சொந்தப் பண்பைப்பற்றிய புத்துயிர் ஊட்டியவர் சுவாமி விவேகானந் தர். இந்தியர்கள் பண்புடன் பொலிவதற்கு மேல்நாட்டவர் களுடைய ஆதரவு ஒன்றும் தேவையில்லையென விவேகானந் தர் விளக்கிக் காட்டினர். தூங்கிக்கொண்டிருந்தவர்களைத் தட்டி யெழுப்பியது போன்று தென்பட்டது அவர் புரிந்த செயல் தூங்கும்பொழுது மனிதன் கிட்டத்தட்ட சவம் போன்று கிடக்கிறன். ஆனல் உறக்கத்தினின்று எழுந் திருந்ததும் அவனுடைய உயிர்ச் சக்தி ஒளிர்கிறது. தனக் குரிய செயலில் அவன் ஈடுபடுகிறன். அவன் புரிகிற செயலி னின்று அம்மனிதனது தரம் வெளியாகிறது. பொருளிலும் போகத்திலும் மூழ்கிக் கிடந்த மேல்நாட்டவர்களுக்கு அருள் நாட்டத்தின் மகிமையையும், இனிமையையும் விவேகானந்தர் எடுத்து விளக்கினர். அமெரிக்காவினின்று தாய் நாட்டுக் குத் திரும்பி வந்தான பிறகு இலங்கையிலிருந்து இமயம் பரியந்தம் அவர் புரிந்த திக்விஜயம் மக்களை உறக்கத்தி னின்று விழிப்பு நிலைக்குக் கொண்டு வருவதாயிற்று. திரும் பவும் சுய நம்பிக்கையையும், சுய முயற்சியையும் இந்திய மக்கள் அதிவிரைவில் பெற்று வருபவர்கள் ஆயினர். தங்கள் தேசீய வாழ்க்கை முறையைக் குறித்து அவமானப்பட்டுக்

கொண்டிருந்தவர்கள் இப்பொழுது பெருமை பாராட்ட ஆரம்பித்தனர். இந்தியர் அனைவருக்கும் அவர்களுக்குச் சொந்தமாயுள்ள பழைய பண்பை புதிய முறையில் விவேகானந்தர் எடுத்து வழங்கினர். மனிதன் தன்னை உடல் சொரூபம் அன்று, உண்மையில் ஆத்ம சொரூபம் என்று உணருதற்கு ஏற்ப அவனிடத்துப் புதைந்து கிடக்கிற உள் வலிவு ஓங்குகிறது. இது வாழ்க்கையைப்பற்றிய பேருண்மையாகும். இவ்வுண்மையைப் பழங்காலத்து ரிஷிகள் மானுடர்க்கு எடுத்து உரைத்திருக்கின்றனர். ஆத்ம பலத்தைப் பெறுதல் என்னும் இவ்வரிய செய்தியை இந்திய மக்களுக்கு இக்காலத்தில் இப்பரமாசாரியர் எடுத்துரைத்தார். உபநிஷதங்களின் அடிப்படைக் கோட்பாடுகளே அவர் எடுத்தளித்த உயிர்த்தத்துவமாகும். கோழைத்தனத்துக்கு உபநிஷதத்தில் இடம் இல்லை. ஆத்ம பலத்தையே வெவ்வேறு விதங்களில் அது மக்களுக்கு எடுத்துக்காட்டுகிறது. அத்தகைய ஆத்ம போதத்தைத் திரும்பவும் பெறுமாறு இந்திய மக்களை அவர் தூண்டினர். ஆற்றல் மிகப் படைத்தவர்களாக இருக்கும்படி அவர்களுக்கு அவர் ஞாபகமூட்டினர். அப்படி அவர் கொடுத்த புத்துயிர் இந்தியாவின் சரித்திரத்தையே மாற்றியமைத்தது. ஆத்மபோதம் அடையப் பெற்று மக்கள் தங்கள் மேலாம் தேசியப்பணியில் ஈடுபடுவாராயினர். தாங்கள் ஒன்றுக்கும் உதவாதவர்கள் என்று தங்களையே திரஸ்கரித்துக் கொண்டிருந்த தேசமக்கள் மற்ற நாட்டு மக்கள் போன்று தாங்களும் மானுடரே; தங்களிடத்தும் தனிப்பெருமையொன்று இருக்கிறது; தாங்கள் உலகில் வாழ்ந்திருப்பது வீணில் அன்று; செயற்கரிய தெய்வீகச் செயலைச் செய்து சாதிக்கும் சிறப்புத் தங்களிடத்து உண்டு என்னும் சுயநம்பிக்கையும் ஊக்கமும் அவர்கள் உள்ளத்தில் உருவெடுக்கலாயின.

இந்திய மக்களுக்குச் சிந்தனைக்குரிய மற்றொரு விஷயத்தை சுவாமி விவேகானந்தர் எடுத்துரைத்தார். இந்தியாவின்மீது ஐரோப்பியர்களில் பலர் அபிமானம் கொள்ளுகின்றனர். அவர்கள் வைத்துள்ள அன்பும், ஆதரவும் இந்திய சமுதாயத்தில் இருக்கிற வலிவையோ, சிறப்பையோ முன்னிட்டு அன்று. முன்பொரு காலத்தில் இந்நாடானது ஆற்றல் மிகப் படைத்திருந்தது. சிறந்ததொரு நாகரிகம் அந்நாளில் அதனிடத்திருந்து வெளியாயிற்று. அந்த ஆற்றலும், சீரிய நாகரிகமும் சிறிது சிறிதாகக் குறைந்து பின்னணிக்குப் போய்விட்டது. இப்பொழுது குற்றுயிர் பிடித்து, உலகிலே ஏதோ ஒரு போக்கில் வாழ்ந்திருக்கும் மானுட வர்க்கமாக இந்தியர்கள் இருந்து வருகின்றனர். ஆதலால் அவர்களிடத்து அனுதாபம் காட்டி அவர்களைப் பாதுகாத்து வைப்பது தங்கள் பொறுப்பு என அவர்கள் உணருகின்றனர். இங்ஙனம் நம்மீது தயவு காட்டுகிறவர்களுடைய ஆதரவைக் கொண்டு வாழ்ந்து வரும் சீர்கேடு உண்மையில் நம்மிடத்து வரவில்லை. க்ஷீண தசையடைந்து அடியோடு அழிந்துபட்டுப் போம் பூர்வீக இனங்கள் சில நம் நாட்டில் மலைப்பிரதேசங்களிலும் வனங்களிலும் வாழ்ந்திருக்கின்றனர். அன்னவர்கள் அறவே அழிந்துபட்டுப் போகாது அவர்களைக் காப்பாற்றி வருதற்கு அரசாங்கம் என்னென்னவோ முறைகளைக் கையாண்டு வருகின்றது. அந்த விதத்தில் பாதுகாக்கப்படும் பரிதாபகரமான நிலைக்கு இந்தியர்களாகிய நாம் வரவில்லை. பிறர் பாதுகாப்பில் குற்றுயிர் பிடித்திருப்பது வெட்ககரமான காரியம். உண்மையில் அந்தச் சீர்கேட்டுக்கு நாம் ஆளாகவில்லை. ஆற்றல் படைத்துள்ள சமுதாயங்கள் சில ஓய்வு பெற்றுக் கொள்ளுகிற முறையில் பின்னணிக்குப் போகின்றன. சில நூற்றாண்டுகளுக்குப் பிறகு மீண்டும்

விழிப்பும் ஊக்கமும் வாய்க்கப்பெற்றுப் புதிய முறைகளில் தங்கள் பழைய பெருமைகளை நிலைநாட்ட அவைகள் முயலு கின்றன. நமது சமுதாயமும் அத்தகையவைகளுள் ஒன்று. இடைக்காலத்தில் நாம் உறங்கிக் கொண்டிருந்தோம். ஒரு விதத்தில் அந்த உறக்கம் நமக்குத் தேவை. இனி, விழித் தெழுந்து நமது உள் வலிவையும் நமது சிறப்பையும் நாம் வெளிப்படுத்தவேண்டும். எனவே பிறர் காட்டுகிற பச்சா தாபத்துக்கு நாம் இலக்கு ஆகவேண்டிய அவசியமில்லை. சொந்த முயற்சியைக்கொண்டு நாம் மேன்மையுறுவோம்.

இந்தியாவின்மீது அன்பும், அனுதாபமும் காட்டி வரு கிற மற்றொரு கூட்டத்தார் மேல் நாட்டவர்களுக்கிடையில் இருக்கின்றனர். அவர்கள் தங்கள் சொந்த நாகரிகத்துக்கு நிகரானது உலகில் வேறு ஒன்றும் இல்லை என்னும் தற் பெருமையடிக்கிறவர்கள். உலகிலுள்ள ஏனைய சமுதாயங் களைத் திருத்தியமைத்து ஐரோப்பிய சமுதாயங்களுக்கு நிகரானவைகளாகச் செய்து வைப்பது தங்கள் பொறுப்பு என அவர்கள் இறுமாப்புக் கொள்கின்றனர். வாழ்க்கை முறையிலே மிகக் கீழ்மையில் இருப்பவர்களை யெல்லாம் உயர்நிலைக்கு உயர்த்திக்கொண்டு வருவது தங்கள் தனிக் கடமை என அவர்கள் கருதுகின்றனர். இகலோக சுகபோக வாழ்க்கையை மிக மேலானதென அன்னவர்கள் எண்ணு கின்றனர். இம்மண்ணுலகில் பெறக்கூடிய சுகங்களை நன்கு அனுபவித்து வருகிறவர்களே மேன்மக்கள் எனவும் அவர் கள் கருதுகின்றனர். லோகாயதத்தில் ஊறியுள்ள ஐரோப் பியர்களது செருக்கு இதுவாம். என்னென்ன முறைகளில் நாம் வாழ்ந்திருக்க வேண்டும்; என்னென்ன முறைகளில் இந்திரிய சுகங்களை நாம் பெருக்கிக்கொள்ளவேண்டும்; இப்படியெல்லாம் நமக்கு எடுத்துக் காட்டுதற்கென்று முன்

வருகிற மேல் நாட்டவர்கள் முயற்சியைக் கண்டு நாம் மயங்கி விடலாகாது. மேலாம் வாழ்க்கைத் தத்துவங்களை நமக்கு எடுத்துக்காட்டும் வாய்ப்புச் சிறிதேனும் அவர்களிடத்தில்லை. இன்று இருந்து நாளை மறைந்து பட்டுப்போம் இகலோக இன்பங்களை அவர்கள் அனுபவித்து வருவதனால் தங்களை மேன்மக்களெனக் கருதி அவர்கள் இறுமாப்புறுகின்றனர். அத்தகையவர்களிடமிருந்து நாம் பெறும் உதவி ஒன்றுமில்லை. நமக்குத் துன்மார்க்கத்தில் மையல் ஊட்டும் அசுர இயல்பு படைத்தவர்கள் என அவர்களை ஒதுக்கி வைக்க வேண்டும். சுய முயற்சியாலேயே நமது சொந்த இயல்புக்கு ஏற்ப நாம் மீண்டும் மேல்நிலை யெய்தியாக வேண்டும்.

இந்தியர்களாகிய நாம் நம்மைப்பற்றிய பேருண்மை ஒன்றை அறிந்துகொள்ளுதல் அவசியமாகிறது. உலகிலுள்ள புராதனமான சமுதாயங்களுள் நமது சமுதாயமும் ஒன்று. பழங்காலங்களில் மேன்மையுற்றிருந்த சமுதாயங்களில் பல மறைந்துபட்டுப்போயின. இன்னும் சில தாமாகக் கீழ்நிலைக்குப் போயிருக்கின்றன. மீண்டும் அவைகள் மேன்மையுறுமா என்று உறுதி கூறமுடியாது. ஆனால் நமது நிலைமை அத்தகையதன்று. அலாதியான ஆற்றல் நம்மிடத்து உண்டு. அந்த ஆற்றலுக்கு மூலகாரணம் எது என்பதை அறிந்துகொள்ளுதல் நமது முதல் கடமையாகும். பழமை மிக வாய்ந்ததாக நமது நாகரிகம் இருப்பதுபோன்று, புதுமை மிகப் பொலிந்ததாகவும் நமது நாகரிகம் இருந்துவருகிறது. இயற்கையின்கண்ணுள்ள மகிமை நமது இந்திய நாகரிகத்துக்கும் உண்டு. இயற்கையானது மிகப் பழையது; ஆயினும் என்றைக்கும் புத்தம்புதியதாகவே அது பொலிந்து கொண்டிருக்கிறது. புதியவைகளுள் மிகப் புதியது என்று

இயற்கையைத் தான் இயம்பவேண்டும். அப்படி இயற்கையினிடம் அமைந்துள்ள தெய்விக இயல்பு நமது தேசிய வாழ்விலும் அமைந்திருக்கிறது. இதற்கெல்லாம் காரணம் நமது நிஜசொரூபம் எது என்பதை நமது முன்னேய மேலோர் கண்டறிந்துகொண்டனர். அந்த நிஜ சொரூபத்துக்கு ஒப்ப நமது தேசீய வாழ்க்கையை அவர்கள் உருவாக்கினர். புறத்தோற்றத்தில் நமது தேசிய வாழ்க்கையை யுகந்தோறும் நாம் மாற்றியமைக்கலாம். ஆனல் உள்ளூற நமது யதார்த்த சொரூபத்தில் நாம் மாருது இருந்து வருகிரேம். அதை முன்னிட்டே நமது சமுதாயத்துக்கு மரணமிலாப் பெருவாழ்வு முற்றிலும் சொந்தமாகிறது. பஞ்சபூதங்களால் ஆகிய தேகம் நமது நிஜசொரூபமன்று. நாம் கையாண்டு வரும் வெறும் கருவியாக தேகமானது நமக்கு வாய்த்திருக்கிறது. உண்மையில் நாம் ஆத்ம சொரூபம். ஆத்ம சொரூபத்தை ஆயுதம் வெட்டாது; நீர் நனைக்காது; நெருப்பு எரிக்காது; காற்று உலர்த்தாது. ஆத்மசொருபத்துக்குப் பிறப்பு, இறப்பு இல்லை. அது நித்தியமாய், சாசுவதமாய் நிலைத்துள்ள பொருள். அந்த ஆத்மா நாம் என்னும் உண்மையில் ஊறியிருப்பது நமது தேசிய வாழ்வு. இந்த உணர்வை இடைக்காலத்தில் உறங்கிக்கொண்டிருந்த நிலைக்குப்போன பொழுது நாம் சிறிது மறந்திருந்தோம். இப்பொழுது விழித்தெழுந்திருந்து இதை மீண்டும் நாம் ஞாபகப்படுத்திக் கொள்ள வேண்டும். இதுவே நம்முடைய தேசியத் திருப்பள்ளி யெழுச்சியாகும். நமது நிஜசொரூபத்தை நமக்கு உள்ளவாறு ஊட்டுவது நமது அழியாப் பொக்கிஷமாகிய உபநிஷதங்கள். நமது ஆர்ஜிதமாகிய உபநிஷதங்களை உள்ளவாறு ஓர்தல் இன்றைக்கு நமது முதல் கடமையாகும். அவ் அரிய நூல்களை ஓர்தற்கு ஏற்ப ஆத்மபோதம் நம்

மிடத்து உருவெடுக்கும். ஆத்ம போதம் ஓங்குதற்கேற்ப நம்முள் புதைந்து கிடக்கும் பேராற்றல் வெளிக்கிளம்பி வியாபகமாகும். நமது பேராற்றலைப் பயன்படுத்திப் பெருவாழ்வை நமக்கு நாம் உண்டுபண்ணிக்கொள்வோம். நாம் ஆத்ம சொரூபம் என்னும் உயர் லட்சியத்திலே ஊறியிருக்குமளவு நமக்கு அழிவில்லை. அந்த உயர்நிலையில் உறுதி பெற்றிருப்பதற்கு ஏற்ப இகலோக வாழ்வும் மேன்மை மிக எய்துவதாகும். இப்பிரபஞ்சத்தில் எல்லாம் அழிந்து வருகின்றன. ஆனால் இந்திய நாகரிகம் ஒன்றுமட்டும் அழியும் தன்மையுடைய இவ்வையகத்தில் அழியாதிருக்கும். ஏனென்றால் அமர சொரூபமாகிய ஆத்ம தத்துவத்தை அடிப்படையாகக் கொண்டது நமது வாழ்க்கைமுறை. இனி நமக்கு நாம் அமைத்துக்கொள்கின்ற வாழ்க்கை முறை எத்தகையதாக இருக்க வேண்டும் என்பதைப்பற்றி பிறர் நமக்கெடுத்துக் காட்ட வேண்டிய அவசியமில்லை. உள் வலிவு படைத்து வளர்ந்து வருகிற மரம் ஒன்று தன் இயல்பையும், தன் வலிவையும் தானே விளக்குவது போன்று இந்தியர்களாகிய நாம் நமது தெய்வீக இயல்பையும், தெய்வீக ஆற்றலையும் நாமே ஓங்குவிக்கவேண்டும். இதுவே இன்றைக்கு நாம் செய்யக் கிடக்கும் தேசியத் திட்டமாகும். இதை நிறைவேற்றுவதன் மூலமாகவே நமது பழம் பெருமையையும், மகிமையையும் மீண்டும் நாம் நிலைநாட்டுவோம்.

தேச பக்தியே வடிவெடுத்தவர் சுவாமி விவேகானந்தர். ஆனால் தேசபக்தி படைத்திருப்பவர்களில் பலர் புறநாட்டவர்களைப் புறக்கணிக்கின்றனர். விவேகானந்த சுவாமிகளோ அப்படிச் செய்யவில்லை. மானுடவர்க்கம் முழுதுக்கும் வேண்டிய நலனையும் அவர் ஞாபகத்தில் வைத்திருந்தார். பண்டைப் பாரதப் பண்பை அவர் பெரிதும் போற்றி

வந்தார். அதற்கிடையில் இக்காலத்தில் நிகழ்ந்துள்ள மாறு பாடுகளையும் அவர் நன்கு ஞாபகத்தில் வைத்திருந்தார். உறுதியான உள்ளம் படைத்தவர்; அத்துடன் தயாள சிந்தையே வடிவெடுத்தவர். நுண்ணறிவு படைத்த கல்விக் கடலாகவும், தெய்விகப் பிண்டமாகவும் அவர் திகழ்ந்தார். இந்தியாவானது உலகுக்கு அரியதொரு நன்கொடையை வழங்கக்கூடிய பெரு நிலையில் இருக்கிறது என்பதை சுவாமிகள் கண்டறியலாயினர். இக்காலத்தவர்களுக்கிடையில் உருவெடுத்து வருகிற புதிய பகுத்தறிவானது இப்பரமாச்சாரியரிடத்து உச்சநிலையெய்தி யிருந்தது. பகவத் கீதையில் புகட்டியிருக்கிற தன்னலம் கருதாத் தன்மை அவரிடத்து ஊறியிருந்தது. தமது ஆயுள் முழுதையும் தாய்நாட்டின் சேவைக்கென்றே ஒப்படைத்தவர் அவர். எதிர்காலத்தில் இந்தியா பெருநிலையெய்தும் என்பதில் அவர் அளவுகடந்த விசுவாசம் வைத்திருந்தார். மகாத்மா ஒருவர் எந்தச் சங்கத்திலும் சேராது தன்னந்தனியராயிருந்துகொண்டு தம் தேசத்துக்கு எத்தகைய அரும்பெரும் தொண்டு ஆற்றமுடியும் என்பதற்கு விவேகானந்தர் நல்லதோர் எடுத்துக்காட்டு ஆவார்.

நவீன பாரதத்தை உருவாக்குதலிலும், பாரத நாடு முழுதும் ஒரே லட்சியத்தை அடிப்படையாகக் கொண்டுள்ள சமுதாயம் என எடுத்துக்காட்டி அதனிடத்து ஒற்றுமையை வளர்த்தலிலும் முன்னோடும் பெருமகனாயிருந்தவர் சுவாமி விவேகானந்தர். அமெரிக்காவினின்று திரும்பி வந்தான பிறகு இந்தியாவின் பழைய வேதாந்த தர்சனத்தைப் புதியதொரு அச்சில் அவர் அமைத்து வைத்தார். அப்படி அவர் பழைய உண்மையைப் புதிய வடிவத்தில் மாற்றியமைத்திருப்பதால் இக்காலத்தில் ஏற்பட்டுள்ள இடைஞ்சல்களை

மீண்டு சமுதாயத்துக்குத் தேவையாயிருப்பவைகளைத் தேடிக்கொள்ளுதற்கு விவேகானந்தர் வகுத்துள்ள புதிய ஏற்பாடு நன்கு பயன்படுகிறது. விவேகானந்தர் போன்ற பரமாச்சாரியர் ஒருவரை எதிர்க்கும் பாங்குடைய மாந்தர் எக்காலத்திலும் உலகில் இருப்பர்; இவர்காலத்திலும் சிலர் இருந்தனர். ஆனால் அத்தகைய எதிரிகளும் ஒருவிஷயத்தில் விவேகானந்தர் திறமை மிக வாய்க்கப்பெற்றவர் என்பதை ஒத்துக்கொண்டனர். பாரத சமுதாயம் முழுதையும் திருத்தியமைப்பதில் கைதேர்ந்தவர் விவேகானந்தர் என்பது அவ்விஷயமாகும். வேதாந்த தர்சனத்துக்கு விவேகானந்த சுவாமிகள் பண்டைக்காலத்துப் போக்கில், சாஸ்திரிகளும் பண்டிதர்களும் கையாண்ட முறைகளில் விளக்கம் தரவில்லை. இக்காலத்திய மக்களுக்குத் தேவையாயுள்ள முறையில் அந்த தர்சனத்தை அவர் விளக்கியுள்ளார்.

மத அனுஷ்டானமானது ஆற்றல் மிகப் படைத்ததாக இருக்கவேண்டும் என்பதும் இந்திய தேசம் முற்றிலும் ஒன்றுபட்டிருக்க வேண்டும் என்பதும் விவேகானந்தரது அடிப்படைக் கொள்கையாகும். எத்தனையெத்தனையோ மொழிகளுக்கிடையிலும், நடையுடை பாவனைகளுக்கிடையிலும் நமது பண்டையப் பாரமார்த்திக ஐதிகங்கள் நம் அனைவருக்கும் பொது உடைமை என்பது அவருடைய கோட்பாடு. இதை ஞாபகத்தில் வைத்துக்கொண்டே இப்பரந்த பரதகண்டம் ஓர் ஐக்கியநாடாக இருந்து வரவேண்டும் என்று அவர் பறைசாற்றினார். வெவ்வேறு சமயங்களாகவும் சம்ப்ரதாயங்களாகவும் சிதறடைந்து கிடக்கின்ற ஆத்மீக இயக்கங்கள் எல்லாம் இந்திய தேசிய இயக்கத்தில் ஒன்றுபட்டிருக்கவேண்டும் என்பது அவருடைய திட்டம். ஆத்மீகம் என்னும் இசையை அடிப்படையாகக்கொண்டு இந்திய

சமுதாயம் ஒலித்துக்கொண்டிருக்க வேண்டும் என்பது அவர் கொள்கை. ஆத்மீகப் பெருவாழ்வு என்பதோடு ஒப்பிடுமிடத்து அரசியல் மிகக் கீழ்நிலையில் நின்றுபோம். இந்திய நாட்டின் ஜீவநாடி ஆத்மீகத்தை அடிப்படையாகக் கொண்டது. அத்தகைய ஆத்மீகம் தழைத்து ஓங்குங்கால் ஏனைய துறைகளில் நாடு முன்னேற்றம் அடைவது திண்ணம்.

இந்திய சமுதாயம் என்னும் உணர்வு சுவாமி விவேகானந்தர் மனதில் ஆழ்ந்து படிந்திருந்தது. ஆனால் அரசியல் துறையில் உயர்நிலையெய்துதல் என்பதற்கு அவர் முதன்மை கொடுக்கவில்லை. மனிதனுக்கு உரிய உரிமைகளையும் வாழ்க்கை வசதிகளையும் தேடிக்கொள்ளுதலிலும் அவர் கருத்தைச் செலுத்தவில்லை. தேசிய அரசாங்கத்தில் ஒவ்வொரு மனிதனுக்கும் வாக்குரிமை இருக்கவேண்டும் என்றும் அவர் நினைக்கவில்லை. உயர்ந்ததொரு லட்சியமே மக்கள் உள்ளத்தில் சர்வகாலமும் துடித்துக்கொண்டிருக்க வேண்டும் என்பது அவருடைய கொள்கை. மனிதனாகப் பிறந்தவன் 'ஆதர்ச புருஷ'னாக இருக்கவேண்டும் என்பதே அவரது குறிக்கோள். மனிதனை மேன்மகனாக ஆக்குவதே தமது தனிக்கடமை என்றும் அவ்வரிய செயலில் தாம் ஆழ்ந்து பணியாற்றி வரவேண்டும் என்றும் அவர் பகர்ந்துள்ளார். ஆதலால்தான் தேசியப் பேரமைப்பில் அரசியல் இயக்கங்களினின்று அவர் முற்றிலும் விலகியிருந்து கொண்டார். பாரத சமுதாயம் என்று அவர் அரசியல் கொள்கைக்கு ஒப்ப எங்குமே இயம்பியது கிடையாது. ஆனால் இந்தியப் பாரமார்த்திகப் பண்பு எனும் கோட்பாட்டை அவர் யாண்டும் வற்புறுத்திக் கூறியுள்ளார். மக்களது உள்ளம் பாரமார்த்திகத்தின் பண்பில் ஊறியதாக இருக்கவேண்டும்.

பாரமார்த்திகப் பண்புக்கு சுவாமி விவேகானந்தர் தகுந்த விளக்கம் கொடுக்கிறார். வலிவு, துணிவு, அஞ்சாமை,

பணிவிடை, தெய்வ பக்தி ஆகிய பண்புகளே உண்மையான ஆண்மைக்கும், உண்மையான பெண்மைக்கும் அறிகுறிகள் ஆகும் என சுவாமி விவேகானந்தர் இயம்பியுள்ளார். ஆண்மையிலே தெய்வீகம் அனைத்தும் புதைந்திருக்கிறது என்பது இப்பரமாச்சாரியர் விளக்கிக்காட்டியுள்ள அரிய தொரு கோட்பாடு ஆகும். வாழ்வு அனைத்தையுமே அக் கோட்பாடு நன்கு விளக்குகிறது. மனிதனிடத்து இருக்க வேண்டிய பேரியல்புகள் அனைத்தும் அதில் அடங்கியிருக் கின்றன. ஆண்மை படைத்திருக்கிறவனுக்கு அரும்பெரும் செயல்களைச் சாதிக்க முடியும். ஆண்மையே தெய்வப் பெற்றி என்னும் பொக்கிஷத்தை இந்திய மக்களுக்கு விளக்கிக் காட்டியவர் விவேகானந்தர். ஆண்மையையே தர்மம் எனவும் அவர் கூறுகிறார். வாழ்க்கையில் எல்லாச் சந்தர்ப்பங்களிலும் பயன்படுவது ஆண்மை அல்லது தர்மம். எது உண்மைக்கு ஒத்ததாக இருக்கிறதோ, எது மனிதனை உயர்நிலைக்கு உயர்த்துகிறதோ அதை அஞ்சாத உறுதி யுடன் கடைப்பிடிப்பது ஆண்மை, அதை அப்படிக் கடைப் பிடிப்பது தர்மம். மனிதன் தன்னைப் புல்லியன் என்றோ, வலிவற்றவன் என்றோ, மூடவன் என்றோ பகர்ந்து கொண்டு கீழ்மையில் உழல்வது ஒருநாளும் ஒவ்வாது. அதற்கு நேர்மாறாகச் சிங்கம் போன்று பேராற்றலுடன் மனி தன் எழுந்திருக்க வேண்டும். எதையும் சாதிக்கும் திறன் தன்னிடத்திருக்கிறதென்ற தளராத தன்னம்பிக்கை படைத் தவனாக அவன் இருக்கவேண்டும். பெறுதற்கரிய பெரு நிலையைப் பெறுகிற திறன் தன்னிடத்திருக்கிறதென்றும் அவன் உறுதி கொண்டிருக்கவேண்டும். இந்திய மக்களுக்கு விவேகானந்தர் கொடுத்துள்ள அரிய செய்தி இதுவேயாம். இந்திய மக்களும் சிறிது சிறிதாக இப்பாரமார்த்திகப்

பேருணர்வில் ஊறியவர்களாக விழித்தெழுந்திருக்கின்றனர். ஆண்மையுடன் அரும்பெரும் செயல்களைச் சாதிக்க அவர்கள் முயன்று வருகின்றனர்.

புத்துயிர்பெற்று விழித்து எழுந்திருக்கும் இந்தியா திரும்பவும் பண்டைக் காலத்திய நிலைமைக்குத் திரும்பிப் போகவேண்டும் என்பதன்று சுவாமி விவேகானந்தர் வகுத்து வைத்துள்ள தேசியத் திட்டம். பண்டைக் காலத்திலிருந்த அமைப்பு இக்காலத்துக்கு உதவாது. பனையோலை தீப்பற்றி எரியுங்கால் அது விரைவில் சாம்பலாகிறது. அதேவிதத்தில் பண்டைக்காலத்திய இந்தியாவின் அமைப்பு திரும்பி வந்தால் விரைவில் மறைந்துபட்டுப்போம். இக்காலத்திய சூழ்நிலையோ முற்றிலும் அலாதியானது. இத்தகைய சூழ்நிலையில் இந்தியாவானது சீரழிந்து போகாதிருக்கும்படி பார்த்துக்கொள்ள வேண்டும். பண்டைக் காலத்தில் இருந்தது போன்று பாரமார்த்திகப் பெருவாழ்வில் அது வலிவும் ஆற்றலும் மிகப் படைத்திருக்க வேண்டும். அதே சமயத்தில் நாட்டின் ஒவ்வொரு பகுதியிலும் ரஜோகுணத்தினின்று கிளம்பி வருகிற வலிவானது எங்குமே வியாபகமாகவேண்டும். மின்சக்தியானது விசை மிக வாய்க்கப்பெற்றதாகக் கம்பிகளின் வாயிலாகப் பாயும்பொழுது, அது வெவ்வேறு கருவிகளின் வாயிலாக வெவ்வேறு விதங்களில் வெளிக்கிளம்பி வினையாற்றுகிறது. அங்ஙனம் இக்காலத்துக்கேற்ற பலப்பல துறைகளில் நம் தாய்நாட்டின் பேராற்றல் தோற்றத்துக்கு வரவேண்டும். நாட்டிலே பலப்பல கொள்கைகளும் பழக்க வழக்கங்களும் இருந்து வருகின்றன. அவைகளை இருக்கிறபடி பாதுகாத்து வைக்கவேண்டும் என்றோ, அல்லது புதிய வடிவெடுக்கும்படி சீர் திருத்தம் செய்ய வேண்டும் என்றோ முயற்சிகள் எடுத்துக்கொள்ள வேண்டிய

அவசியம் இல்லை. லட்சியத்தைத் தீவிரமாகக் கடைப் பிடிக்க வேண்டும். பின்பு அந்த லட்சியமானது பழைய போக்கிலோ புதிய முறையிலோ தோன்றிக்கொள்ளட்டும். அத்தகைய சுதந்தரத்தில் புதிய பெரு வாழ்வு உருவெடுத்து வரவேண்டும். தேசிய வாழ்வில் எவை எல்லாம் தளர்வுற்றும் சீர்கேடடைந்தும் இருக்கின்றவோ அவையெல்லாம் தானாக அழிந்துபட்டுப்போம். அப்படி அவை அழிந்து பட்டுப் போகாது நிறுத்தி வைக்க யாருக்குத்தான் இயலும்? எவையெல்லாம் உண்மைக்கு ஒத்ததாக இருக்கின்றனவோ அவை யாண்டும் நிலைத்திருக்கும். அவற்றை யார் தான் அழித்து ஒழித்துவிட முடியும்? சமுதாய அமைப்பையோ, சமய ஸ்தாபனங்களையோ மாற்றியமைக்கவேண்டும் என்று முயலவேண்டியதில்லை; ஆனால் நவீனப் பிரச்னைகளை யெல்லாம் தேசியப் பண்புக்கு ஒப்ப நீக்கிவைப்பதற்கான நல்ல சூழ்நிலையில் சமுதாயத்தையும், சமய ஸ்தாபனங்களையும் பொருத்திவைப்பது முறைமை.

இந்தியாவின் நலத்துக்காக சுவாமி விவேகானந்தர் திட்டம் வகுத்துத் தொண்டு ஆற்றத்தொடங்கியது போன்று வேறு பல தலைவர்களும் தத்தம் போக்கில் தேசத்துக்குத் தொண்டுபுரிய முன்வந்தனர். அப்படி அவர்கள் சேவை செய்ய முன்வந்ததை சுவாமிகள் பெரிதும் பாராட்டினர். ஆனால் தமது போக்குக்கும், அவர்கள் போக்குக்கும் இடையிலுள்ள வித்தியாசத்தை அவர் நன்கு விளக்கிக் காட்டினர். முன்பிருந்த பழைய குருட்டு நம்பிக்கைகளையே மீண்டும் மக்களுக்கிடையில் எடுத்துப் பரப்புவது பொருந்தாது என்பது சுவாமிகளின் கோட்பாடு. பண்டைக்காலத்தில் இந்தியாவானது இப்படியிருந்தது, அப்படியிருந்தது என்று யார் யாரோ என்னென்னவோ எழுதிவைத்திருக்கின்றனர். அந்நிலைமை

களை மீண்டும் வருவிப்பது நமக்கு ஒவ்வாது. முதன் முதல் நாடானது வலிவுமிகப் பெறவேண்டும். இவ்வலிவு இக் காலத்துக்கேற்றவாறு வாழ்வாகப் பரிணமித்தல் வேண்டும். செயற்கையாக அதனுள் எதையும் புகுத்தலாகாது. தன் உள் வலிவைக்கொண்டு செடிவளர்வது போன்று நாடானது தன் உள்வலிவைக்கொண்டு வளரவேண்டும்.

நம் தாய்நாட்டுக்குப் புத்துயிர் ஊட்டுதற்கு சுவாமி விவேகானந்தர் உபநிஷதங்களில் அடங்கியுள்ள அடிப் படைத் தத்துவம் ஒன்றை முகாமையாக வைத்துக்கொண் டார். உபநிஷதங்களிலிருந்தே அவர் திரும்பத் திரும்ப தமது கோட்பாட்டுக்குப் பிரமாணம் காட்டியுள்ளார். ஆத்ம பலம் ஒன்றே அவ்வரிய நூல்களின் அடிப்படைக் கோட்பாடு ஆகும். வேத வேதாந்தங்களின் சாரம் ஆத்மபலத்தில் அடங்கியிருக்கிறது. உபநிஷதங்கள் பல உள. அவையாவை யும் தொகுத்து நூற்றெட்டு உபநிஷதங்கள் என வழங்கி வருகின்றனர். அவையாவும் வேதங்களின் சிகரங்கள் ஆகின்றன. அவைகளுள் எப்பகுதியை எடுத்து ஆராய்ச்சி செய்து பார்த்தாலும் ஆத்மபலத்தைப்பற்றிய செய்திஒன்றே அவைகளினின்று வெளியாகின்றது. மனிதன் தன்னை உடல் சொரூபமாக எண்ணி வருவது அவன் அடையும் கீழ்மை களுக்கு முகாமையாகிறது. உடலைத் தான் என்று உணர்வ தினின்று கேடுகள் பல உதிக்கின்றன. உடல் உணர்வி னின்று மெலிவும் தளர்வும் வருகின்றன. உடல் உணர்வு மரணத்தில் கொண்டு சேர்க்கிறது. ஆத்ம போதமோ அதற்கு நேர்மாறானது. ஆத்ம போதம் உள்ளத்தில் ஓங்கு தற்கு ஏற்ப புதிய உயிர் பிறக்கிறது; புதிய வலிவு உரு எடுக்கிறது; சுயநம்பிக்கை தானாக வருகிறது; எதையும் செய்து சாதிக்கும் திறன் தன்னிடத்திருப்பதாக மனிதன்

உணர்கிறுன். நாடு முழுதும் தளர்வுற்றுக் கிடக்கின்ற இந் நாளிலே உபநிஷதங்களின் சீரிய போதனையைப் புதுப்பிப் பது ஒன்றே நாட்டை உயர்நிலைக்கு உயர்த்துவதற்கு உற்ற உபாயம் என சுவாமி விவேகானந்தர் உணர்ந்தார். உலகம் அறிந்துள்ள நூல்களுள் மிகப்பழையது உபநிஷதம். மனி தனிடத்து மறைந்து புதைந்து கிடக்கும் தெய்விகத்தைத் தட்டி எழுப்புதற்கு உற்ற உபாயமாயிருப்பது உபநிஷதம். சமயங்களுக்கெல்லாம் பொதுவாய் உள்ள அடிப்படை தத் துவங்களை விளக்கிக்காட்டுவது உபநிஷதம். ஆதலால்தான் உபநிஷதங்களை ஆதாரமாக வைத்துக்கொண்டு சுவாமி விவேகானந்தர் நம் தாய்நாட்டுக்குப் புத்துயிர் ஊட்டவும் புதிய வலிவை நல்கவும் முன் வந்தார்.

இடைக்காலத்தில் தோன்றி வந்திருந்த புத்ததேவர் அஹிம்ஸா தர்மத்தைச் சிறப்பித்துப் புகட்டியுள்ளார். அது பாராட்டுதற்குரிய நன்னெறியாகிறது. ஆனல் அதன்கண் புகுந்துள்ள குறைபாடு ஒன்றைச் சுவாமி விவேகானந்தர் தெளிவுற விளக்கிக் காட்டியிருக்கிருர். அஹிம்சை என்னும் கோட்பாடு ஹிம்சை செய்யாதிருப்பது என்னும் எதிர் மறைக் கோட்பாடாக அமைந்திருக்கிறது. ஹிம்சை செய் வதைப் பற்றிய எண்ணம் மெலிந்து தளர்ந்து கிடக்கும் ஒருவன் உள்ளத்தில் தோன்றுகிறது. வலிவு படைத்திருக் கும் ஒருவன் ஹிம்சை செய்வதைப் பற்றியோ செய்யப்படு வதைப் பற்றியோ சிந்திப்பதில்லை. இதற்குச் சான்று ஒன்று எடுத்துக் கொள்வோம். கடலினின்று உருண் டோடி வருகிற பேரலையினின்று நீர்த்துளி ஒன்று சிதற டைந்து கடற்கரையில் வந்து விழுகிறது. அப்படி விழுகிற நீர்த்திவலை கடற்கரையோரம் நின்றுகொண்டிருக்கும் நம் மீது படியக்கூடும். ஆனல் நாம் அதைப் பொருட்படுத்துவ

தில்லை. ஆனால் அதே நீர்த்திவலையானது கடற்கரையோரம் மணலின் மீது உட்கார்ந்திருக்கும் கொசு ஒன்றிற்கு ஆபத்து மிக விளைவிக்கக் கூடியதாகிறது. கொசுவுக்கு ஆபத்து விளைவிக்கிற நீர்த்துளியை மக்கள் பொருள் படுத்துவதில்லை. ஏனென்றால் அதைப் புறக்கணிக்கும் உடல்உறுதி மக்களுக்கு உண்டு. மெலிந்த உயிராகிய கொசுவுக்கு அத்தகைய திறன் இல்லை. ஆதலால் நீர்த்துளியினின்று தப்பித்து ஓட அது முயலுகிறது. இனி, இந்த மெல்லிய உயிராகிய கொசுவானது நோயாளி ஒருவனைக் கொட்டுமாயின் அவன் பெரு வேதனை அடைகின்றான். ஆனால் எண்ணிறந்த கொசுக்கள் ஒன்றுகூடி யானை ஒன்றின் மீது அமர்ந்திருந்து அதைக் கொட்ட முயன்றால் அச் செயலையெல்லாம் யானை பொருள் படுத்துவதில்லை. ஏனென்றால் கொசுக்கள் திரள் திரளாக வந்து யானையின்மீது அமர்ந்து அதைக் கொட்ட எடுத்துக் கொள்ளுகின்ற முயற்சிகளெல்லாம் பயனற்றுப்போம். யானை படைத்திருக்கிற உறுதியான உடலும் தடித்துக் கனமாயிருக்கும் தோலுமே அதற்குக் காரணமாகிறது. வலிவு படைத்திருக்கிற யானையைத் துன்புறுத்தக் கொசுவுக்கு இயலாது. பின்பு அந்த யானையோ கொசுக்களால் ஒரு பொழுதும் துன்புறுத்தப்படுவதில்லை; யானை கொசுவுக்கு ஹிம்சை செய்வதுமில்லை; கொசுவால் ஹிம்சை செய்யப்படுவதுமில்லை. வலிவின் மகிமை அத்தகையது. வலிவுகளுள் ஆத்ம வலிவுக்கு நிகரானது எதுவுமில்லை. மனிதனுக்கு ஆத்ம வலிவு அதிகமாவதற்கு ஏற்ப எல்லாத் துறைகளிலும் அவன் முன்னேற்றமடைகிறான். தற்பாதுகாப்புத் தாமாக அவனுக்கு வாய்க்கிறது. பிறரைத் துன்புறுத்துவதைப் பற்றிய எண்ணம் வலிவு படைத்துள்ள வீரனுக்கு வருவதில்லை. பிறரை ஆதரிக்கும் எண்ணமே அவன் உள்ளத்தில்

வருகிறது. அஹிம்ஸா தர்மமாகிய எதிர்மறை சீலத்தைக் கையாண்டதன் விளைவாக இடைக் காலத்தில் இந்திய தேசம் சிறிது சிறிதாக நலிவுறுவதாயிற்று. இனி, ஆத்ம பலம் என்னும் பழங்காலத்து வைதிக நன்னெறியை மீண்டும் புதுப்பித்து மக்களை அதில் ஊன்றியிருக்கச் செய்வது எதிர்கால இந்தியாவின் தேசியத் திட்டமாகும் என விவேகானந்த சுவாமிகள் கூறியிருக்கிறார்.

அல்லும் பகலும் மனிதன் தனது ஆத்ம போதத்தைப் பற்றியே உணர்ந்திருக்க வேண்டும். ஆத்ம போதத்தையே மற்றவர்களுக்கும் எடுத்து வழங்கவேண்டும். ஆத்ம போதம் ஓங்குதற்கேற்ப வேற்றுமைகள் தாமாக மறைந்து பட்டுப் போகின்றன. ஒரே பரமாத்மன் எண்ணிறந்த கிரணங்களாக, ஜீவாத்மாக்களாக அமைந்துள்ளான் என்னும் ஐக்கிய உணர்வு ஆத்ம போதத்தில் வருகிறது. ஓர் உடலிலிருக்கும் அவயவங்கள் எவ்வாறு ஒன்றோடொன்று முரண்படுவதில்லையோ அங்ஙனம் ஆத்ம போதத்தில் திளைத்திருப்பவர்கள் மக்களுக்கிடையில் வேற்றுமையை உண்டுபண்ணுவதில்லை. மக்களுக்கிடையில் உயர்வு தாழ்வைக் கற்பிப்பதில்லை. மக்களுக்கிடையில் போட்டியையோ பொறாமையையோ கிளப்புவதில்லை பரஸ்பர உதவி ஆத்ம பலத்தினின்று வருகிறது. பரஸ்பர நட்பும் விசுவாசமும் ஆத்ம பலத்தினின்று வருகின்றன. ஆதலால் எதிர்கால இந்தியா உயர்நிலை யெய்துதற்கு உபநிஷதத்தைக் கடைப்பிடித்துக் கொண்டு தாம் ஆத்ம சொரூபம் என்னும் பேருண்மையில் நாட்டு மக்கள் ஊறி வளரவேண்டும் என்னும் சீரிய கோட்பாட்டைச் சுவாமி விவேகானந்தர் வழங்கியுள்ளார்.

மனிதன் கொடையாளியாயிருப்பது ஆத்ம முன்னேற்றத்துக்கு முற்றிலும் முகாமையாகிறது; ஆத்ம போதம்

படைத்திருப்பவனே நல்ல கொடையாளி ஆகிருன். கடைநிலையிலிருக்கும் விலங்குகள் ஒன்ருேடொன்று போட்டி போட்டுக்கொண்டு, போராடிக்கொண்டு உயிர் வாழ்ந்து வருகின்றன. அது கீழ்த்தரமான வாழ்க்கைத் திட்டமாகும். இடைநிலையிலிருக்கும் மக்கள் சமுதாய வாழ்க்கை வாழ்ந்து பழகுகின்றனர். சமுதாய வாழ்க்கையில் பரஸ்பர உதவி முன்னணிக்கு வருகிறது. போட்டிப்போடும் விலங்கியல் பின்னணிக்குப் போகிறது. இனி, இதற்கு மேல் ஆத்ம போதத்தை அடிப்படையாகக் கொண்டிருப்பது தியாக வாழ்வு. தன்னிடத்திருப்பதைப் பிறர்க்கெடுத்துக் கொடுப்பதால் தன் செல்வம் குறைந்து பட்டுப்போம் என அறிவிலி எண்ணுகிருன். ஆனல் மனமுவந்து பிறர் நலனுக்காகத் தன்னிடம் இருக்கும் நலனை வழங்குதற்கு ஏற்ப அந்த நலன் மேலும் தன்னிடத்து வளர்கிறது. வாழ்க்கையைப் பற்றிய இந்த மேலாம் கோட்பாடு தியாக புருஷனுக்கு விளங்குகிறது. இடைக்காலத்தில் இந்தியா தியாகம் பண்ண மறுத்துவிட்டது. தன்னிடத்து இருக்கும் நலனைத் தனக்கென்றே பிரத்தியேகமாகப் பாதுகாத்து வைக்க முயன்று நாடானது சீர்கேடு அடையலாயிற்று. தேசிய வாழ்வை உறுதி படைத்ததாக இனி புதுப்பிப்பதற்குக் காயத்தால் செய்யும் கைங்கரியம் அதிகரிக்கவேண்டும். பிறர்க்குக் கைங்கரியம் செய்வதற்கு ஏற்ப தனது வாழ்வு பெருவாழ்வு ஆகிறது. மக்கள் சிறு சிறு கூட்டங்களாகப் பிரிந்திருந்து சுயநலத்தில் ஊறிவந்த சீர்கேட்டை இனி உதறித்தள்ள வேண்டும். நாட்டு மக்கள் எல்லாரையும் ஒரே குடும்பமாகக் கருதும் பரந்த மனப்பான்மை வளரவேண்டும். பிறர்க்குக் கைங்கரியம் புரிவதற்கு ஏற்பப் புதிய உயிர் தன்னிடத்துத் தோன்றுகிறது; புதிய பேராற்றல் தன்னிடத்து வருகிறது. தனக்குரிய வாழ்வை மக்களுக்குரிய வாழ்வாக மாற்றியமைப்

பதே தியாகமாகிறது. இத்தகைய தியாகத்தால் நாடு மேலோங்கி வரவேண்டும். தியாகமும் திருத்தொண்டும் ஆகிய இரண்டு கோட்பாடுகளில் சுவாமி விவேகானந்தர் நம் நாட்டின் முன்னேற்றத்துக்கு விதை விதைத்திருக்கிறார். இவ்விரு சீரிய கோட்பாடுகளை நன்கு கடைப் பிடிப்பது மக்கள் எல்லாருடைய கடமை ஆகிறது. வெளிநாடுகளி னின்று இந்திய தேசம் இடைக்காலத்தில் விலகியிருந்தது. அது சீர்கேடு அடைவதற்கு மற்றொரு முகாமை ஆயிற்று. புற நாடுகளிலிருக்கும் மக்களோடு தொடர்வு கொள்ளலா காது என்னும் புல்லிய மனப்பான்மை ஆற்றல் படைத்திருப் பவர்க்கு வருவதில்லை. நோயாளி ஒருவன் தற்பாதுகாப்புக்கு வகை தேடுகின்றான். உடல் திட்பம் படைத்திருப்பவனோ தற்பாதுகாப்பைப் பற்றி நினைப்பதில்லை. தனது வாழ்வை மற்றவர்களுக்குப் பயன்படும் நல்வாழ்வாக மாற்றி அமைப் பதிலேயே தன் கருத்தைச் செலுத்துகிறான். வெளி நாட்டவர் களுக்கு இந்தியா வழங்குதற்கு இருக்கின்ற அரிய கொடை ஒன்று உளது. மனிதன் உடல் சொரூபமன்று; ஆத்ம சொரூ பம் என்னும் சீரிய செய்தி மக்களை அடியோடு மாற்றியமைப் பதற்கானதாம். தானங்களுள் சிறந்தது வித்தியாதானம். வித்யாதானத்திலும் ஆத்ம வித்யாதானம் ஒப்புயர்வு அற்றது. இந்த மேலாம் தானத்தைச் செய்யும் தனிச் சிறப்பு இந்தியாவுக்கு உண்டு. உலகிலுள்ள வெவ்வேறு நாடுகளுக்கு ஆத்ம ஞானம் வாய்க்கப்பெற்ற இந்தியர்கள் சென்று அந்த அருள் கொடையை வழங்க ஆரம்பிக்க வேண்டும். அதை வழங்குதற்கு ஏற்ப ஆத்மீகத்துறையில் நாம் மேலும் முன் னேற்றமடைவோம். கரவாது பிறர்க்கெடுத்து நலனை வழங் குதற்கு ஏற்ப அந்த நலன் மேலும் மேலும் நம்மிடத்து ஓங்கு கிறது. இந்தச் சீரிய கோட்பாட்டை மறந்ததாலும், அதைக் கையாள மறுத்ததாலும் இடைக்காலத்தில் நாம் சீர்கேடு

அடைந்தோம். இனி அதைப் புதுப்பிப்பதற்கேற்ப புதிய திறனும் சீரும் சிறப்பும் நம்மிடத்து உருவெடுக்கும். உலகில் மற்ற நாடுகளோடு நாம் வைக்கும் இணக்கம் இத்தகையதாக வேண்டும். அது அருள் துறையில் நிலைபெற்றிருக்க வேண்டும் என சுவாமி விவேகானந்தர் நமக்கு வழிகாட்டியுள்ளார். பிறர்க்குக் கொடுக்க மறுப்பது ஒருவிதக் கேடு ஆகும். பிறரிடமிருக்கும் நலனை ஏற்க மறுப்பது மற்றொரு விதக் கேடு ஆகும். இடைக்காலத்து இந்தியா கொடுக்கவும் மறுத்தது. ஏற்கவும் மறுத்தது. இனி எதிர்கால இந்தியாவோ தன்னிடத்திருக்கும் நலனைப் பிறர்க்கு எடுத்து வழங்கவும், பிறரிடமிருக்கும் நலனைத் தான் மகிழவுடன் ஏற்கவும் பழக வேண்டும். மேல்நாட்டவர்கள் இக்காலத்தில் பௌதிக விஞ்ஞானத்துறையில் மிக மேன்மையுற்று விளங்குகின்றனர். பௌதிக விக்ஞானத்தில் அவர்கள் அடைந்துள்ள முன்னேற்றங்களை யெல்லாம் தத்தம் சமுதாய நலன்களுக்குப் பயன்படுத்தி வருகின்றனர். அந்த முன்னேற்றத்தை நாம் அவர்களிடமிருந்து பேருக்கத்துடன் கற்றுக்கொள்ள வேண்டும். இப்படிப் பரஸ்பர உதவி பண்ணுவதில் கீழ்மையும் இல்லை; சிறுமையும் இல்லை. சமத்துவமும் சகோதர பாவனையுமே ஓங்கி வளரும். மேல்நாட்டவர்களிடமிருந்து பௌதிக விக்ஞானத்தை ஏற்று நாம் அத்துறையில் தகைமை மிக வாய்க்கப்பெற்று, நம் நாட்டில் பொருளாதாரத்துறையிலும் சமுதாய வாழ்க்கையிலும் முன்னேற்றங்கள் பலவற்றை உண்டுபண்ணிக் கொள்ளவேண்டும். ஐக்கிய வாழ்வும் பௌதிக முன்னேற்றமுமே மேல்நாட்டவர்களுடைய மேன்மைக்கு முகாமைகளாகின்றன. அம்மேலான முகாமைகளை நாம் அவர்களிடமிருந்து கற்று அவையாவையும் நம் நாட்டுக்கு ஏற்ற முறையில் நமக்கிடையில் அமைத்துக்கொள்வது நமது கடமையாகும். இங்ஙனம் இந்தியாவின் முன்னேற்றத்துக்குச் சுவாமி விவேகானந்தர் வழிகாட்டியிருக்கிறார்.

தபோவனத் தொடர் 97

प्रज्ञानं ब्रह्म

ஸ்ரீ ராமகிருஷ்ண தபோவனம்
திருப்பராய்த்துறை-639 115
திருச்சி ஜில்லா

விலை ரூ. 7-50